வெளியீடு 19-8-2005

Issued 19-8-2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT


**செவ்வாய்க்கிழமை, மார்ச் 29, 2005—தொகுதி 77—எண் 1**

**Tuesday, the 29th March, 2005 —Volume 77—No. 1**

*பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Assembly Secretariat, Chennai - 600 009**



D
V211,31' POS
POS. N.1
226618


**[Price Rs. 3.00**

338/2005

**29-3-2005**

**உள்ளடக்கம்**


| | | பக்கங்கள் |
|---|---|---|
| | ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vii |
| | Governor and Council of Ministers | ix-xii |
| | பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xiii-xv |
| | பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xvii-xxvii |
| 1. | **இரங்கற் குறிப்பு—** | |
| | முன்னாள் உறுப்பினர் மறைவு | 1-2 |
| 2. | **வினாக்கள்–விடைகள்—** | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 2-40 |
| 3. | **பேச வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென திரு. மு. அப்பாவு கோரிக்கை—** | 40-41 |
| 4. | **விதி 110–ன்கீழ் அறிக்கை—** | |
| | கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் - மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 41-44 |
| 5. | **சில எதிர்க்கட்சிகள் அவைக்கு வராமல் புறக்கணிப்பு செய்திருப்பது – மாண்புமிகு முதலமைச்சர் கருத்து—** | 44-50 |

| | பக்கங்கள் |
|---|---|
| **6. கவன ஈர்ப்பு—** | |
| தளி தொகுதி, அக்கொண்டப்பள்ளி—அனுசோனை மற்றும் கெலமங்கலம்—தேன்கனிக்கோட்டை தார்ச் சாலைகளை உடனடியாகச் செப்பனிட வேண்டிய அவசியம் | 50-52 |
| **7. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) அரசு உறுதிமொழிக் குழு | 52 |
| (ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | 53 |
| **8. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (அ) **கோரிக்கை எண் 13— எரிசக்தித் துறை**<br>(ஆ) **கோரிக்கை எண் 24—உள்துறை- இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம்**<br>(இ) **கோரிக்கை எண் 46— போக்குவரத்துத் துறை** | 53-114 |
| மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் | 53,56,59, 62-63,64-66, 81,98-114 |
| *திரு. ஜெக. வீரபாண்டியன் | 63-64, 66-70 |
| திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன் | 70-76 |
| திரு. லா. சந்தானம் | 55,58,61, 76-81 |
| டாக்டர் சி. விஜயபாஸ்கர் | 81-92 |
| *திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி | 92-97 |
| **9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 114-115 |




## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

**2. பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

**3. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

நிதி, திட்டமிடல், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

**4. சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல்.

**5. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:**

உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு, புள்ளியியல் மற்றும் கூட்டுறவு.

**6. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

**7. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

**8. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

**9. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

226618
சென்னை-600 008



**10. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதி திராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

**11. போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

**12. தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

**13. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

**14. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.

**15. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:**

கால்நடை பராமரிப்பு.

**16. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

**17. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**18. கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டோர் மற்றும் வணிக வரிகள்.

**19. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

**20. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

**21. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம்.

**22. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.



**23. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வஃக்பு.

**24. செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

**25. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.

- - -

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:**<br>Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | .. | **The Hon. Thiru O. Panneerselvam:**<br>Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. **Minister for Finance** | .. | **The Hon. Thiru C. Ponnaiyan:**<br>Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. **Minister for Law and Information Technology** | .. | **The Hon. Thiru D. Jayakumar:**<br>Law, Courts and Information Technology. |
| 5. **Minister for Food and Co-operation** | .. | **The Hon. Thiru Pollachi V. Jayaraman:**<br>Food, Civil Supplies, Consumer Protection, Price Control, Statistics and Co-operation. |

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments.

7. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. P. Vijayalakshmi Palanisamy:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

8. **Minister for Health** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Health, Medical Education and Family Welfare.

9. **Minister for Rural Industries** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries and Khadi & Village Industries Board.

10. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru C. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

11. **Minister for Transport and Electricity** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Electricity and Non-conventional Energy Development.

12. **Minister for Industries** .. **The Hon. Thiru Nainar Nagenthran:**

Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.



13. **Minister for Agriculture** .. **The Hon. Thiru K. Pandurangan:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

14. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities.

15. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodhiran:**

Animal Husbandry.

16. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Forests & Environment and Pollution Control.

17. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

18. **Minister for Education and Commercial Taxes** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees, Evacuees and Commercial Taxes.

19. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

| | | |
|---|---|---|
| 20. Minister for Handlooms and Textiles | .. | **The Hon. Thiru V. Somasundaram:** Handlooms and Textiles. |
| 21. Minister for Fisheries | .. | **The Hon. Thiru M. Radhakrishnan:** Fisheries. |
| 22. Minister for Tourism | .. | **The Hon. Thiru A. Miller:** Tourism and Tourism Development Corporation. |
| 23. Minister for Labour | .. | **The Hon. Thiru P. Annavi:** Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs. |
| 24. Minister for Information & Publicity and Local Administration | .. | **The Hon. Thiru K.P. Anbalagan:** Information & Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural indebtedness, Urban and Rural Water Supply. |
| 25. Minister for Sports and Youth Welfare | .. | **The Hon. Thiru Inbathtamilan:** Sports and Youth Welfare. |

- - -



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

### மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. இராஜரெத்தினம்

திரு. அ. அன்வர் ராஜா

திருமதி சி.எம். சூரியகலா

திரு. லா. சந்தானம்

டாக்டர் தே. குமாரதாஸ்

முனைவர் செ.கு. தமிழரசன்

### செயலாளர்

திரு. வெ. இராசாராமன்

---

# 2-2-2005 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. குழு அலுவலர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. குழு அலுவலர் |



| | |
|---|---|
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | .. பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கே.எஸ். சந்திரசேகர், பி.எஸ்சி. | .. சார்புச் செயலாளர் |
| திரு. ச. ஆறுமுகம், பி.எஸ்சி. | .. சார்புச் செயலாளர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. அ. நவாப்ஜான், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |

## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | .. தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆகு.சீ. | .. பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. வேடசந்தூர் |

20. ஆறுமுகம், திரு. கே. .. செங்கல்பட்டு
21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
31. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. .ப. .. பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத்தமிழன், திரு. .. ஸ்ரீவில்லிபுத்தூர்



42. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ)
43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
48. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
50. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
51. கணேசன், திரு. வி. .. மங்களூர் (செ.வ.)
52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
58. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
61. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்

65. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2
66. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
72. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்



89. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
90. சாமி, திரு. ஆர். .. மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
103. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
104. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
105. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
106. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
107. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
108. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
109. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி
110. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
111. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்
112. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்

113. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்
114. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
115. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்
116. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்
118. தமிழரசன், முனைவர் செ.கு. .. நன்னிலம் (செ.வ.)
119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்
120. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்
121. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்
122. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
123. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)
124. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்
125. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
126. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்
127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி.. பேராவூரணி
128. துரைமுருகன், திரு. .. காட்பாடி
129. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
130. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு
131. நடராசன், திரு. வது. .. இளையான்குடி
132. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்
133. நடராஜன், திரு. எஸ். .. நாட்ராம்பள்ளி
134. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்
135. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி



136. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு
137. நளினி மனோகரன், திருமதி .. போளூர்
138. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
139. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு
140. நீலமேகவர்ணம், திரு. லெ. .. சாத்தான்குளம்
141. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்
142. பச்சைமால், திரு. கே.டி. .. குளச்சல்
143. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்
144. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-I
145. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
146. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)
147. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை
148. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
149. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்
150. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
151. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
152. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு
153. பாப்பாசுந்தரம், திரு. அ. .. குளித்தலை
154. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)
155. பாரிமோகன், திரு. கி. .. தருமபுரி
156. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி
157. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். .. தொண்டாமுத்தூர்

158. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. .. ஸ்ரீரங்கம்
159. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்
160. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி
161. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி
162. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
163. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
164. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
165. பூவராகமூர்த்தி, திரு. ஏ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
166. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திகுளம்
167. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு... பொள்ளாச்சி
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்னம்பலம், திரு. டி.பி. .. சமயநல்லூர் (செ.வ.)
170. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
171. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
172. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)
173. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
174. மஹேஸ்வரி, திருமதி எ.எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
175. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
178. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை
179. மல்லிகா சின்னசாமி, திருமதி .. முசிறி
180. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி



181. மில்லர், திரு. அ. .. கூடலூர்
182. முரளிதரன், திரு. கே.வி. .. தளி
183. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
184. முருகேசன், திரு. ஆ.கு. .. ஆத்தூர்
185. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்
186. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
187. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
188. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
191. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிப்பாளையம்
192. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
193. ராதாரவி, திரு. .. சைதாப்பேட்டை
194. ராமசாமி, திரு. பி.சி. .. மொடக்குறிச்சி
195. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்
196. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்
197. ராஜகோபால், திரு. ஆ. .. சிவகாசி
198. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி
199. ராஜா, திரு. எச். .. காரைக்குடி
200. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்
201. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம்
202. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்
203. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. .. பேரூர்

| | | |
|---|---|---|
| 204. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 205. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | .. | அரவக்குறிச்சி |
| 206. வடிவேல், திரு. ஆர். | .. | வாணியம்பாடி |
| 207. வளர்மதி, திருமதி பா. | .. | ஆலந்தூர் |
| 208. வளர்மதி ஜெபராஜ், திருமதி | .. | மதுரை மேற்கு |
| 209. வள்ளல் பெருமான், டாக்டர் பி. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 210. வாசுதேவன், திரு. பெ. | .. | மதுராந்தகம் |
| 211. விசுவநாதன், திரு. இரா. | .. | நத்தம் |
| 212. வில்வநாதன், திரு. இரா. | .. | சோளிங்கர் |
| 213. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | .. | பூங்கா நகர் |
| 214. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. | புதுக்கோட்டை |
| 215. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | .. | பனமரத்துப்பட்டி |
| 216. வீரபாண்டியன், திரு. ஜெக. | .. | மயிலாடுதுறை |
| 217. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 218. வெங்கடாஜலம், திரு. செ. | .. | சேலம்-I |
| 219. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 220. வேலு, திரு. எ.வ. | .. | தண்டராம்பட்டு |
| 221. வேலுசாமி, திரு. செ.ம. | .. | பல்லடம் |
| 222. வேல் முருகன், திரு. தி. | .. | பண்ருட்டி |
| 223. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 224. வைத்திலிங்கம், திரு. ஆர். | .. | ஒரத்தநாடு |
| 225. ஜீவானந்தம், திரு. இரா. | .. | நாகப்பட்டினம் |



| | | |
|---|---|---|
| 226. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | .. | ஆரணி |
| 227. ஜெயக்குமார், திரு. கு. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 228. ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 229. ஜெயலலிதா, செல்வி ஜெ | .. | ஆண்டிப்பட்டி |
| 230. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 231. ஹக்கீம், திரு. எம்.ஏ. | .. | மதுரை மத்தி |
| 232. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 233. (வெற்றிடம்) | .. | காஞ்சிபுரம் |
| 234. (வெற்றிடம்) | .. | கும்மிடிப்பூண்டி |
| 235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | .. | (நியமனம்) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. என்.ஆர். சந்திரன் | .. | மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் |

- - -

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### பங்குனி 16, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

### 2005 மார்ச் 29, செவ்வாய்க்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும்".

ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிப் பல துன்பங்கள் வந்தபோதிலும், அவற்றைக் கண்டு மனங்கலங்காதவரை, அடைந்த துன்பம், தானே துன்பப்பட்டு மறைந்தொழியும்.

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான திரு. நா. பெருமாள் அவர்கள் 25–3–2005 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. பெருமாள் அவர்கள் பெரம்பலூர் மாவட்டம், வரகூர் தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, 1977 முதல் 1980 வரை மற்றும் 1980 முதல் 1984 வரை சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2005 மார்ச் 29

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா எண் 221, திரு. ப. இளவழகன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**221—**

### தடுப்பணை

***946—திரு. ப. இளவழகன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூரிலிருந்து 6 கி.மீ. தொலைவில் உள்ள மருதை ஆற்றின் குறுக்கே வாரணவாசி — புதுப்பாளையம் அருகே தடுப்பணை கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருதை ஆறு, உப்பிலியாபுரம் தொகுதி பச்சைமலையில் தோன்றி, கொள்ளிடம் ஆற்றில் சென்று இணையக்கூடிய ஆறு ஆகும். ஒரு நாள் பெருமழை பெய்தாலே, பல நாள் வெள்ளப் பெருக்கெடுத்து இந்த ஆற்றின் மூலமாக நீர் ஓடி, கொள்ளிடம் ஆற்றில் வீணாகக் கலக்கின்றது. இந்த ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி, அந்த நீரைச் சுக்கிரன் ஏரி என்கின்ற, சுமார் 525 ஏக்கர் பரப்பளவுள்ள அந்த ஏரிக்கு, அந்த நீரைத்



2005 மார்ச் 29]

திருப்பிவிட்டால், அதன்மூலம் சுமார் 7,000 ஏக்கர் பாசன வசதி பெறக்கூடிய திட்டமாகும். இந்த வினாவில் கண்ட இடத்தில் தடுப்பணை அமைத்தால், சில இயற்கை ரீதியான இடையூறுகள் ஏற்படும் என்கின்ற காரணத்தால், பொறியாளர் வல்லுநர்கள், மாற்றுத் தல ஆய்வு மேற்கொண்டு, இடையத்தான்குடி ஊராட்சி, ஆரனூர் என்கின்ற கிராமத்தின் அருகே தடுப்பணை அமைத்து பணி மேற்கொண்டால் நல்ல பயனுடையதாக இருக்கும் என்று அரசுக்கு அறிக்கை அனுப்பியுள்ளார்கள். மேலும், சுக்கிரன் ஏரி, மருதை ஆறு—திட்டத்தின்மூலம் பயன் அடையக்கூடிய பகுதியாகக் கண்டறியப்பட்டுள்ள நிலப்பரப்பு, புள்ளம்பாடி கால்வாய்மூலமாகப் பாசன வசதி பெறக்கூடிய பகுதியாகும். பல ஆண்டுகளாக வறட்சியின் காரணமாக இந்த புள்ளம்பாடி கால்வாயில் நீர் வரத்து குறைந்து போவதால், இந்தப் பகுதியிலே சுமார் 10,000 ஏக்கர் பாசனம் பெற முடியாத ஒரு சூழ்நிலை தொடர்ந்து இருந்து வருகிறது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால், ஒரு நாள் மழை பெய்தாலே, இந்த 10,000 ஏக்கரும் பாசனம் பெறக்கூடிய மிகச் சிறந்த திட்டமாகும். எனவே, இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இத்திட்டத்தை, இந்த ஆண்டே மேற்கொண்டு பணி முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்பொழுது மாற்றுத் திட்டமாக ஆரனூர் கிராமம், சுக்கிரன் ஏரிக்குப் பாசன வசதிக்காக மருதை ஆற்றின் குறுக்கே ஒரு அணைக்கட்டு கட்டுவது குறித்து இங்கே குறிப்பிட்டுக் கொண்டிருக்கின்றார். ஆகவே, காவிரி ஆற்றின் மேலணைக்கு மேற்பகுதியில் பிரியும் புள்ளம்பாடி கால்வாயிலிருந்து சுக்கிரன் ஏரிக்கு நீர் வரத்து உள்ளது. ஆனால், சமீப காலமாக மேட்டூர் அணையின் நீர் மட்டம் தேவையான அளவு இல்லாததாலும், மற்றும் பருவநிலை மாற்றம் காரணமாகவும், புள்ளம்பாடி கால்வாயில் தேவையான அளவு நீர் வரத்து இல்லாததால், சுக்கிரன் ஏரிக்குப் பாசன வசதிக்கு நீர்ப் பற்றாக்குறையாகவுள்ளது. எனவே, சுக்கிரன் ஏரிக்கு நீர் வரத்து ஏற்படுத்தும்பொருட்டு இத்திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டிருக்கின்றது. இத்திட்டத்தின்மூலம் 1,714.68 எக்டேர் பாசன உறுதியும், மேலும் 385.55 எக்டேர் புதிய பாசன நிலங்களும் பயன்பெறும் என்று ஆய்வு அறிக்கை கூறுகிறது. இத்திட்டத்தின் தற்போதைய 2005–2006 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு, தோராயமாக ரூ.275 இலட்சங்கள் ஆகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றது.

[2005 மார்ச் 29

மாவட்ட ஆட்சியரின் ஒத்திசைவு கிடைத்தவுடன் மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதி பெற்று, இத்திட்டம் வரும் நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10–05*

**திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்ட மக்கள்மீது தனி அக்கறை கொண்டு, பல்வேறு நலத் திட்டங்களை ஆற்றிவரும் இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லரசிற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் விவசாயப் பெருங்குடி மக்கள் சார்பாக நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 222, திரு. என். நன்மாறன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**222—**

## தூர் வாரும் பணி

***42180—திரு. என். நன்மாறன்:**

*மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மதுரை கிழக்கு தொகுதி, அனுப்பானடி கால்வாயைத் தூர் வாரி சுத்தம் செய்ய அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய பணி தற்சமயம் ஆய்வில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரம் சிறப்பாகவும், தூய்மையாகவும், சுகாதார நிலையோடு



2005 மார்ச் 29]

இருக்க வேண்டுமென்பதற்காக அந்த நகரத்தைப் பொறுத்த அளவிலே எல்லா ஆக்கிரமிப்புகளும் அகற்றப்பட்டு, சாலைகள் எல்லாம் நல்ல விதத்திலே இருக்கின்ற இந்த நேரத்தில், இந்த அனுப்பானடி கால்வாயின் மூலம் சுற்றுப்புறச் சூழல் கெடுகின்ற நிலை, சுகாதாரக் கேடுகள் விளைகின்ற நிலை இருக்கின்ற காரணத்தால், இந்த ஆண்டு எப்படியாவது அரசு இதனைப் பரிசீலித்து, அந்தக் கால்வாயைத் தூர் வாருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுப்பானடி கால்வாய் வைகை ஆற்றின் வலது கரையில் இரயில்வே பாலத்திற்கு மேல்புறம் புட்டுத்தோப்பு அருகில் பிரிகிறது. இதன் மொத்த நீளம் 3,017 மீட்டர் ஆகும். இதன்மூலம் அனுப்பானடி பெரிய கண்மாய் மற்றும் சின்னக் கண்மாய் நீரைப் பெறுகிறது. இதற்கு நேரடிப் பாசனம் இல்லை. இதன்மூலம் பயன்பெறும் கண்மாய்களின் பாசனப் பரப்பு 880 ஏக்கர். அனுப்பானடி கால்வாய் பிரியும் இடத்தில் ஆற்றின் கரையின் மட்டம் மிகவும் பள்ளமாக உள்ளது. இதனால் இந்தக் கால்வாயில் கடந்த சில ஆண்டுகளாகத் தண்ணீர் செல்வதில்லை. நாளடைவில் இதன் பாசன நிலங்கள் குடியிருப்புகளாக மாறத் தொடங்கிவிட்டன. மேலும் இந்த வாய்க்கால் மதுரை மாநகராட்சிக்குள் செல்வதால், அப்பகுதிவாழ் மக்கள் தத்தம் வீட்டின் கழிவு நீரை வாய்க்காலுக்குள்விட்டும், குப்பையைக் கொட்டியும் தூர்ந்து போகச் செய்துவிட்டனர். இக்கால்வாய் தூர்ந்து போய்விட்டதால் தண்ணீர் செல்வதற்கு வாய்ப்பே இல்லாததால், அனுப்பானடி பெரிய கண்மாய், வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே இக்கால்வாயில் தூர் வாரும் பணிகளைத் தற்சமயம் மேற்கொள்வதற்கு வாய்ப்பு இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுற்றுப்புறச் சூழ்நிலையைக் கருதி, இந்தக் கால்வாயைத் தூர் வாருகின்ற பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஆகவே, அந்தக் கால்வாய் மீண்டும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் விரைந்து செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. லா. சந்தானம்:** அமைச்சருக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வளர்மதி ஜெபராஜ், எதுவும் இதிலே கேட்கவில்லையா?

[2005 மார்ச் 29

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சந்தானம் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இது மதுரை மாநகரிலுள்ள அத்தனை மக்களுக்கும் மகிழ்ச்சி தரக்கூடிய செய்தி. அதுமட்டுமல்ல. தொடர்ச்சியாக எங்களுடைய மேற்குத் தொகுதியிலும், கோரிப்பாளையத்தையொட்டி சாக்கடை போய்க் கொண்டிருக்கிறது, அடைப்பு ஏற்படுகிறது. அதையும் சேர்த்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தூர் வாருவார்களா என்பதைக் கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரையே தூர் வாரச் சொல்கிறீர்களா? (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய சாக்கடை நீர்ப்பாசனத் திட்டத்தில் இருக்கிறதா என்ற கேள்வியை நான் அவரிடம் திரும்பக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், சொல்லுங்கள்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அதிலே தண்ணீர் போய்க்கொண்டிருந்தது. இப்பொழுது மக்கள் சாக்கடையை அந்தக் கால்வாயிலே கொண்டுபோய் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அதன்மூலமாக சுற்றுப்புறச் சூழல் கெட்டுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சந்தானம் அவர்கள் சொன்னதைப்போல, சுற்றுப்புறச் சூழல் கெட்டுக்கொண்டு, பன்றிகள் எல்லாம் போய்க் கொண்டிருக்கிற சூழ்நிலை இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளிடத்திலே கலந்தாலோசித்து, மதுரை மாநகரைத் தூய்மைப்படுத்துவதற்கு இந்தப் பணியையும் ஏற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதைக் கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 223, திரு. எம். சுப்பையா பாண்டியன், மாண்புமிகு நிதி அமைச்சர்.



2005 மார்ச் 29]

**223—**

### சார்நிலைக் கருவூலம்

***1026அ—திரு. எம். சுப்பையா பாண்டியன்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூரில் சார்நிலைக் கருவூலம் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் பகுதியில் சார்நிலைக் கருவூலம் அமைக்கின்ற கருத்துரு தற்போது அரசிடம் இல்லை.

முற்பகல் 10–10

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தற்சமயம் சார் கருவூலம் அமைக்க கருத்துரு இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த அரசை என்னுடைய தொகுதி மக்கள் எப்படி நம்பியிருக்கிறார்கள் என்பதற்கு ஓர் உதாரணம் — உயிரும், உடம்பும்; நரம்பும், யாழும்; பூவும், மணமும்; தேனும், இனிப்பும்; சிரிப்பும், மகிழ்வும்; திங்களும், குளிரும்; கதிரும், ஒளியும்; மீனும், புனலும்; விண்ணும், விரிவும்; வேப்பும், தோற்றமும்; வேலும், கூறும்; ஆனும், கன்றும்; ஆறும், கரையும்; அம்பும், வில்லும்; பாட்டும், உரையும்; அவளும், நானும்; அமிழ்தும், தமிழும்; அறமும், பயனும்; அலையும், கடலும்;

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பையா பாண்டியன், அவள் என்பது யார் என்பது தெரியவில்லை.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** அது என்னுடைய துணைவியார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** தவமும், அருளும்; தாயும், சேயும்; தாரும், சீரும்; வேரும், மரமும்; அவலும், இடியும்; ஆலும், நிழலும்; அசைவும், நடிப்பும்; அணியும், பணியும்; அவையும், துணிவும்; உழைப்பும், களைப்பும்; ஆட்சியும், உரிமமும்; அளித்தலும், புகழ்தலும்; அம்மாவும், கழகமும்போல் என்னுடைய தொகுதி மக்கள் இந்த அரசை அவ்வளவு இணைத்திருக்கிறார்கள்.

[2005 மார்ச் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பையா பாண்டியனும், கவிதையும்போல்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி. மாண்புமிகு நம்முடைய நிதி அமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு போர்ப் படைத் தளபதியாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அதை மறுபரிசீலனை செய்து, என்னுடைய தொகுதிக்கு இந்த ஆண்டே சார் கருவூலம் அமைத்துத்தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் பிரச்சினை இருக்கிறது. காரணம், கடையநல்லூரில் ஒரு சார் கருவூலம் அமைக்க வேண்டுமென்றால், அதற்குத் தேவையான வேலைப் பளு இருக்க வேண்டும். அது இல்லை. ஓய்வூதியம் பெறுவோருடைய, பயனாளிகளின் எண்ணிக்கை போதிய அளவு இருக்க வேண்டும். அதுவும் இல்லையென்ற நிலை. கணினிமயமாக்கப்பட வேண்டும் சார்புக் கருவூலங்கள் என்ற ஒரு நடைமுறையும் இருந்து வருகிறது. இவையெல்லாம் அதற்குத் தடையாக இருக்கின்றன. இருப்பினும், ஆங்கு கருவூலத்தை அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதேனும் உண்டா என்பதை அரசு ஆய்ந்து பார்க்கும்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆய்வு செய்யும் என்றதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 224, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**224—**

## புதிய கட்டடம்

***71186—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

*மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*புதுக்கோட்டை அரசு மன்னர் கல்லூரியில் இடிந்து விழுந்துள்ள பழம்பெரும் நூலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*



2005 மார்ச் 29]

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை அரசு மன்னர் கலைக் கல்லூரியில் இடிந்துள்ள நூலகத்தைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் உள்ளது என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதுக்கோட்டை அரசு மன்னர் கல்லூரி என்பது 1880 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட கல்லூரி. இன்னும் சொல்லப் போனால், பேரறிஞர் அண்ணா அவர்கள் 1968–ல் முதலமைச்சராக இருந்தபோது, Historian of History என்ற ஒரு வரலாற்றுப் புத்தகத்தை, 7 volumes உள்ள அந்தப் புத்தகத்தைத் தேடி இருக்கின்றார். தேடியபொழுது அந்தப் புத்தகம் சென்னை கன்னிமாரா Library-யிலும் கிடைக்கவில்லை. அதற்குப் பின்னர் பிரிட்டிஷ் Library-யிலே தேடியிருக்கிறார். அங்கேயும் கிடைக்கவில்லை. அதற்குப் பின்னாலே, அது புதுக்கோட்டை Library-லேயிருந்து பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு—முதலமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதாக வரலாறுகள் இருந்திருக்கின்றன. அந்த நூலகம், பழம்பெரும் நூலகம், இன்றைக்கு இடிந்துவிட்டது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், புதுக்கோட்டை மன்னர் கல்லூரி மாணவர் பேரவை விழாவிற்கு வந்தபோது, தாங்களே அது இடிந்திருந்த நிலைமையை நேரிலே வந்து பார்த்து, நிச்சயமாக நான் ஆவன செய்கிறேன் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சொல்லியிருக்கிறீர்கள். ஆகையால், எவ்வளவு விரைவாக அந்தப் பணிகள் துவக்கப்படும்? 5 இலட்சம் ரூபாய் செலவில் எவ்வளவு விரைவாக அந்தப் பணிகள் முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை நகரில் அமைந்துள்ள மாமன்னர் அரசுக் கல்லூரி புதுக்கோட்டை மன்னருக்குச் சொந்தமான பாரம்பரியமிக்க கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்கட்டடத்தின் ஒரு பகுதியில் கல்லூரி நூலகம் இயங்கி வந்தது. பழைமை வாய்ந்த கட்டடம் என்பதால், அதன் கூரையின் ஒரு பகுதி 4–11–2003 அன்று இடிந்து விழுந்துள்ளது. இதனால் யாருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பாதுகாப்புக் கருதி அக்கட்டடம் உடனடியாக மூடப்பட்டது. இதனைச் சரி செய்வது குறித்து ஆய்வு

மேற்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் இக்கட்டடத்தின் பழைமை மாறாமல் புதுப்பிக்க ரூ. 28 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் கருத்துரு பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது.

முற்பகல் 10-15

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனையிலுள்ள இந்தத் திட்டத்தை, நடப்பு நிதியாண்டிலேயே நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, நன்றி சொல்லி அமர்கின்றேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைமைக்கேற்ப இந்த ஆண்டிலேயே அதை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரிகளுக்குப் புதிய கட்டடம் கட்டுவதற்குப் பெற்றோர்-ஆசிரியர் கழகம் மற்றும் பொது மக்கள் சார்பாக 25 சதவிகிதம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.

வினா எண் 225, திரு. கோ. இரவிராஜ், மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**225—**

### ஆசிரியர் நியமனம்

***71482—திரு. கோ. இரவிராஜ்:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி, அரசு கலைக் கல்லூரியில், போதிய ஆசிரியர்கள் இல்லாமல், மாணவர்கள் படிப்பு பெரிதும் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஆசிரியர் பணியிடங்கள் எப்போது நிரப்பப்படும்?



**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) திருத்தணி, அரசுக் கலைக் கல்லூரியில் காலியாக உள்ள விரிவுரையாளர் பணியிடங்களில், 2004-2005 ஆம் நிதியாண்டில் 18 கௌரவ விரிவுரையாளர்கள் பணியமர்த்தப்பட்டு, பணிபுரிந்து வருகின்றனர். எனவே, மாணவர்களின் படிப்பு பாதிக்கப்படவில்லை. (ஆ) கேள்வி எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை.

வினா எண் 226, திரு. க. முருகவேல் ராஜன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

**226—**

### பால் குளிரூட்டும் நிலையம்

***1498—திரு. க. முருகவேல் ராஜன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதியில் உற்பத்தி செய்த பாலைச் சேமித்து வைப்பதற்கு, பால் குளிரூட்டும் நிலையம் வந்தவாசி பகுதியில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) பால் உற்பத்தியாளர்களுக்கு நிலுவைத் தொகையினைப் பட்டுவாடா செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) வந்தவாசி பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை. (ஆ) பால் உற்பத்தியாளர்களுக்குப் பால் பணம் பட்டுவாடா நிலுவையின்றி 20-3-2005 வரை வழங்கப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

[2005 மார்ச் 29

வினா எண் 227, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

**227—**

### பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்

***41932—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், தேசிய பால் வள வாரியத்தில் பெற்றுள்ள கடன் எவ்வளவு?

(ஆ) அது இலாபத்தில் இயங்குகிறதா?

(இ) நட்டத்தில் இயங்கினால், அதனை ஈடுகட்ட எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) காஞ்சிபுரம் திருவள்ளூர் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம், தேசிய பால் வள வாரியத்திடமிருந்து பெற்றுள்ள கடன் தொகை ரூ. 110,70,000/–. (ஆ) மற்றும் (இ) இந்த ஒன்றியம் இலாபத்தில் இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வினா எண் 228, திரு. எஸ். தாமோதரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**228—**

### சுற்றுலா மையம்

***36035—திரு. எஸ். தாமோதரன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2005 மார்ச் 29]

விருதுநகர் ஒன்றியம், கோல்வார்பட்டி அணையைச் சுற்றுலா மையமாக அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் ஒன்றியம், கோல்வார்பட்டி அணையைச் சுற்றுலா மையமாக அமைப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். தாமோதரன், இருக்கையில் இல்லை. திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் ஒன்றியம், கோல்வார்பட்டி அணையைச் சுற்றுலா மையமாக அரசு அறிவிக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றலாத் துறை எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம், தங்கத் தாரகை, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, சுற்றுலாத் தலங்களுக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கணக்கில் கொண்டு, கழிப்பிட வசதி, சாலை வசதி, உணவகம், குடிநீர் வசதி, பொருள்கள் பாதுகாப்பு அறை, மின் விளக்குகள் வசதி, தங்கும் விடுதி, போக்குவரத்து வசதி, சிறுவர் பூங்கா போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன. விருதுநகர் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் கோல்வார்பட்டி அணை உள்ளது. சாத்தூரிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவிலும், விருதுநகர் தேசிய நெடுஞ்சாலையில் சிவகாசியிலிருந்து 22 கிலோ மீட்டர் தொலைவிலும் இந்த அணை அமைந்துள்ளது. இந்த அணை, விருதுநகர் மாவட்டத்தில், அர்ஜுனா ஆற்றின்மீது கட்டப்பட்டுள்ளது. இந்த ஆற்றில், மழைக் காலத்தில் மட்டுமே போதுமான அளவு நீர் இருக்கும். இந்த அணைப் பகுதிக்கு ஆண்டுதோறும் சுமார் ஐயாயிரம் உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். கடந்த 2001–2002 ஆம் ஆண்டில், 15 மாவட்டங்களிலுள்ள சுற்றுலா மையங்களில் அடிப்படை வசதிகளைச் செய்ய ரூபாய் 5 கோடி தமிழக அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், பிளவக்கல் அணையின் மேம்பாட்டுப் பணிகள் செய்வதற்கு ரூ. 20 இலட்சம் அனுமதிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம், பூங்கா மேம்பாடு, குடிநீர் வசதி மற்றும் கழிப்பறை போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிந்துள்ளன. பிளவக்கல்

[2005 மார்ச் 29

அணை மற்றும் குள்ளூர் சந்தை அணை ஆகியவை மாவட்ட உலாத் தலங்களாகத் தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 229, திரு. அ. சிவபெருமாள், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**229—**

**சுற்றுலா மையம்**

***51635—திரு. அ. சிவபெருமாள்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கயத்தாறு அகிலாண்டேஸ்வரி அம்மன் கோயிலையும், வீரபாண்டிய கட்டபொம்மன் சிலையினையும் இணைத்து சுற்றுலா மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கயத்தாறு அகிலாண்டேஸ்வரி அம்மன் கோயிலையும், வீரபாண்டிய கட்டபொம்மன் சிலையினையும் இணைத்து சுற்றுலா மையம் அமைப்பது தொடர்பான எந்தவிதச் செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகில உலகமே வியந்து போற்றும் உன்னதத் தலைவியே! சுனாமி என்னும் கொடிய அரக்கனை விரட்டியடித்து வெற்றிகொண்ட நம் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, வீரத்தின் விளைநிலமாய், வெள்ளையர்களின் சிம்ம சொப்பனமாய், சுதந்திர வேட்கையைத் தமிழர்களுக்கு மட்டுமன்றி, இந்தியர்கள் அனைவருக்கும் உருவாக்கிய வீரத் தமிழன் வழிபட்ட அகிலாண்டேஸ்வரி அம்மன் திருக்கோயிலும், வீரபாண்டிய கட்டபொம்மனைத் தூக்கிலிட்ட இடத்தில் அமையப்பெற்ற திருவுருவச் சிலையும், இரண்டும் அருகருகிலே அமைந்திருக்கின்றன. இந்த இரண்டும் அருகருகில் அமைந்திருப்பதே ஒரு சாலச் சிறந்த சிறப்பாகும். இது எண்ணற்ற பக்தர்களும், ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளும் ஒன்று சேர்ந்து வரக்கூடிய வரலாற்றுச் சிறப்புமிக்க இடமாகும். ஆகவே, ஆலயத்திற்கு வழிபட வரும் பக்தர்களையும், சுற்றுலாப் பயணிகளையும் ஒன்றிணைத்து,



2005 மார்ச் 29]

அங்கே ஒரு சிறப்பான சுற்றுலாத் தலம் அமைக்க, இந்த ஆண்டு இல்லையென்றாலும், வரும் ஆண்டிலாவது ஆலோசனை செய்யப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம், தங்கத் தாரகை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, சுற்றுலாத் தலங்களுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கணக்கில், கொண்டு அவர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன. கயத்தாறு அகிலாண்டேஸ்வரி அம்மன் கோயில் பற்றிய வரலாற்றுச் சிறப்பு, வனவாசத்தின்போது இராமபிரான் சீதையோடும், தம்பி இலக்குமணனோடும் வழிபாடு செய்த சிறப்புடையது. காசி, இராமேஸ்வரத்திற்கு அடுத்தபடியாக பிரசித்தி பெற்ற புண்ணியத் தலமாக அகிலாண்டேஸ்வரி அம்மன் கோயில் விளங்குகிறது. இராமர்யணத்தில் கூறப்படும் கூற்றுப்படி, இராமன் சீதையுடன் வனவாசம் சென்ற காலத்தில் சீதாப் பிராட்டிக்குத் தாகம் எடுத்ததால் இத்திருக்கோயில் அருகே சென்று ஆற்றுப் படுகையில் நீர் எடுத்துப் பருகியபோது, அது கசப்பான உப்பு நீராக இருந்ததால், ஸ்ரீராமன் தனது வில் அம்பினைக் கொண்டு ஆற்றுப் படுகையில் நீர்ப் பிரிவினைச் செய்து சீதாப் பிராட்டிக்குத் தாகம் தீர்க்க நல்ல தண்ணீர் ஏற்படுத்திக் கொடுத்ததாகவும், அங்கு இராமன் வந்து சென்ற அடையாளமாக இக்கோயில் ஆற்றுப் படுகையில் இராமர் கால் பதித்த தடம் தற்போதும் வழிபட்டு வரும் இடமாக உள்ளது. எனவேதான், இவ்வூருக்குக் கசத்த ஆறு எனப் பெயரிட்டு, பின்னர் காலப்போக்கில் கசத்தாறு என மாறி, தற்போது கயத்தாறு என அழைக்கப்படுகிறது.

கயத்தாறு அகிலாண்டேஸ்வரி அம்மன் கோயிலுக்குத் தோராயமாக ஒரு மாதத்திற்கு 3,000 முதல் 5,000 வரை சுற்றுலாப் பயணிகள், பக்தர்கள் வந்து செல்கின்றனர். தற்போது இங்குள்ள கட்டமைப்பு வசதி, பக்தர்கள் தங்குவதற்கான விசாலமான இரு மண்டபங்கள் உள்ளன. இங்கு பக்தர்கள் வசதிக்காகக் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. இத்திருக்கோயில், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின்கீழ் கோவில்பட்டி அருள்மிகு பூர்ணநாதசுவாமி திருக்கோயில் செயல் அலுவலரின் நேரடி நிர்வாகத்தில் உள்ளது.

[2005 மார்ச் 29

வீரபாண்டிய கட்டபொம்மன் சிலை பற்றிய வரலாற்றுச் சிறப்பு விளக்கம்: ஆங்கிலேய ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்தில் இந்திய சுதந்திரத்திற்காக 'வெள்ளையனே வெளியேறு' என முதன்முதலில் வீர முழக்கமிட்ட மாவீரன் வீரபாண்டிய கட்டபொம்மன். பாஞ்சாலங்குறிச்சியில் ஆட்சி செய்து வந்த காலத்தில் பிரிட்டிஷ் அரசுக்கு வரி செலுத்தாத காரணத்தால், அக்காலகட்டத்தில் கட்டபொம்மனின் கோட்டையை முற்றுகையிட்டு, பிரிட்டிஷ் அரசு கட்டபொம்மனைக் கைது செய்து, தூத்துக்குடி மாவட்டம், கயத்தாற்றில், சர்வே எண் *3771* கொண்ட இடத்திலேயே நெடுஞ்சாலை ஓரத்தில் அமைந்துள்ள புளிய மரத்தில் அவர் தூக்கிலிடப்பட்டு வீரமரணம் அடைந்தார். இங்கு வருகை புரிந்த சுற்றுலாப் பயணிகளின் வருகை கடந்த ஐந்து ஆண்டுகளில் மிக அதிகமாக உள்ளது என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. தற்போது–சிலை அமைந்திருந்த இடம் பொதுப் பணித் துறைமூலம் பராமரிக்கப்பட்டு வந்தது. பின்னர், கயத்தாறு சிறப்பு ஊராட்சி மன்றத் தீர்மானம்மூலம் மேற்படி சிலை பராமரிப்பினை, கயத்தாறு சிறப்பு ஊராட்சி நிர்வாகம் மூலம் மேற்கொள்ள தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிந்துரைமூலம் அரசுக்குக் கோரிக்கை அனுப்பப்பட்டு, அதன்படி தற்போது சிலை பராமரிப்புப் பணிகளை கயத்தாறு சிறப்பு ஊராட்சி நிர்வாகமே செய்து வருகிறது. மேலும், தற்போது கட்டபொம்மன் நினைவிடத்தில் மரங்கள் வைக்கப்பட்டு, பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. இந்த நினைவிடம், மதுரை–கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்போது, சுற்றுலாப் பயணிகளுடைய எண்ணிக்கையைக் கணக்கில் கொண்டு இங்கு கழிப்பறை, தங்கும் வசதி, ஒளிவிளக்குகள், சிற்றுண்டி வசதி, குளியல் அறைகள், குடிநீர் வசதி மற்றும் பல வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று கூறினார்கள். அவர்கள் கூறியதுபோல, கோயிலிலே அந்த மண்டப வசதிகள், தண்ணீர் வசதிகள் இருக்கின்றன. ஆனால், கட்டபொம்மன் சிலை அமைந்திருக்கும் இடத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகின்றார்கள். அது தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே கூறினார்கள். கட்டபொம்மன் சிலை அமைந்த அந்த இடத்திற்கு வருகின்ற பக்தர்கள் ஒரு tea கூடக் குடிக்க முடியாத சூழ்நிலையில் அங்கு இருக்கிறார்கள். ஆகையினால் இந்த நிதியாண்டிலே இந்த அடிப்படை வசதிகளையாவது



2005 மார்ச் 29]

கட்டபொம்மன் சிலை அருகிலே அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களது கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் மேலான பார்வைக்குச் சமர்ப்பித்து, அம்மா அவர்களுடைய ஆலோசனைக்கு ஏற்ப, இந்த ஆண்டு நிதிநிலைக்கு ஏற்ப அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கயத்தாறு சிறப்பு ஊராட்சியில் வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடத்திற்கு, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கூறியதுபோல, பல்வேறு சுற்றுலாப் பயணிகள் வந்து சென்று கொண்டிருக்கிறார்கள். போதுமான அடிப்படை வசதி இல்லாத காரணத்தினால், தற்சமயம் கயத்தாறு சிறப்பு ஊராட்சியே அந்தச் சுற்றுலா மையப் பணிகளை மேற்கொள்ளக் கூறியிருக்கிறார்கள். தமிழகத்தில் சிறப்பு ஊராட்சிகளைப் பொறுத்த அளவில், போதுமான நிதி இல்லாத நிலைமை இருக்கின்ற காரணத்தினால், வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடத்தில் compound சுவர் அமைத்து, அதனைப் பராமரிக்க, சுற்றுலாத் துறையின்மூலமோ அல்லது பொதுப் பணித் துறையின்மூலமோ நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10–25*

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து நான் ஏற்கெனவே பதிலுரையில் கூறியிருக்கின்றேன். மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் மேலான பார்வைக்குச் சமர்ப்பித்து, அம்மா அவர்களின் ஆலோசனையைப் பெற்று, இந்த ஆண்டு நிதிநிலைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *230*, திரு. எம். சக்திவேல் முருகன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[2005 மார்ச் 29

**230—**

## தரம் உயர்த்துதல்

***8741—திரு. எம். சக்திவேல் முருகன்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) அம்பாசமுத்திரம் தொகுதி, சிவந்திபுரம் ஊராட்சியை இரண்டாகப் பிரிக்கவோ அல்லது பேரூராட்சியாக உயர்த்தவோ அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அம்பாசமுத்திரம் தொகுதி, சிவந்திபுரம் ஊராட்சியை இரண்டாகப் பிரிக்கவோ அல்லது பேரூராட்சியாக உயர்த்தவோ திட்டம் ஏதும் இல்லை. (ஆ) வினா எழவில்லை.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நான் குறிப்பிட்டிருக்கின்ற இந்த சிவந்திபுரம் ஊராட்சி தமிழ்நாட்டிலே மிகப் பெரிய ஊராட்சி. அதிலும் ஊராட்சிகளிலே பெரிய ஊராட்சியான முதல் ஊராட்சி என்ற பெருமையைப் பெற்றது அந்த ஊராட்சி. மொத்தம் 11 ஊர்கள் அடங்கிய ஊராட்சி சிவந்திபுரம். கஸ்தா, வேல்முத்தன்பட்டி, புலவன்பட்டி, அம்பலவாணபுரம், வரதாபுரம், ஆரும்பட்டி, எம்.ஜி.ஆர். தங்க நகர், சக்தி நகர், அகஸ்தியர்பட்டி, அன்னை நகர் ஆகிய 11 ஊர்கள் அடங்கிய ஊராட்சி. சுமார் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை அடங்கிய ஊராட்சி. சுமார் 6,500 வீடுகள் உள்ள ஊராட்சி. சுமார் 7 இலட்சம் ரூபாய் அளவிற்கு அந்த ஊராட்சியினுடைய வருட வருமானம் இருக்கிறது. அந்த ஊரிலே இரண்டு ஒன்றியக் கவுன்சிலர்கள் ஒரே ஊராட்சியிலே இருக்கின்ற ஒரு மிகப் பெரிய ஊராட்சி. அந்த ஊராட்சியிலே எழுத்தர் ஒருவரும், வரித் தண்டலர் ஒருவரும், சுகாதார மேஸ்திரி ஒருவரும், சுகாதாரச் சிப்பந்திகள் 11 பேரும், குடிநீர்ப் பணியாளர்கள் 5 பேரும், 15 வார்டு மெம்பர்களும் கொண்ட ஒரு பேரூராட்சிக்குரிய அனைத்து அந்தஸ்துகளையும் கொண்டிருக்கின்ற ஒரு பெரிய ஊராட்சி.



2005 மார்ச் 29]

தற்போது பேரூராட்சிகள்கூட சிறப்பு நிலை ஊராட்சிகளாக மாறியிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், நான் அமைச்சரிடம் அறிந்துகொள்ள விரும்புவது—இந்த ஊராட்சியில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே, நான் சுருக்கமாக அமைச்சரிடம் கேட்டுக்கொள்வது—இங்கே இருக்கின்ற அந்தப் பணியாளர்களை, ஒன்று, முழுநேரப் பணியாளர்களாக மாற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டும்; அல்லது இந்த ஊராட்சியை இரண்டாகப் பிரிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்தால், இந்த ஊராட்சியை நிர்வகிக்க முடியும்; அல்லது இந்த ஊராட்சியை சிறப்பு நிலை ஊராட்சியாகத் தரமுயர்த்தி, அங்கே பணிபுரிகின்றவர்களை முழுநேரப் பணியாளர்களாக மாற்றியமைத்துக் கொடுத்தால், இந்த ஊராட்சியை நிர்வகிக்க வசதியாக இருக்கும். இது அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை. எனவே, அமைச்சர் அவர்கள் இதை அருள்கூர்ந்து மீண்டும் பரிசீலனை செய்து, அம்மா அவர்களுடைய ஆட்சியில் அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு ஆவன செய்வார்களா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சியைப் பிரிக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டார். ஊராட்சிகளுக்கான தேர்தல் 2001 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16 மற்றும் 18 ஆகிய தேதிகளிலே நடந்து முடிந்தன. தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்களது பதவிக் காலம் 5 ஆண்டுகளாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், உறுப்பினர்கள் உள்ள நிலையில் ஊராட்சி பிரிக்கப்பட்டால், அவ்வாறு பிரிக்கப்பட்ட ஊராட்சியில் உள்ள தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் தொடர்ந்து செயல்படவோ அல்லது புதிதாகத் தேர்தல் நடத்தவோ தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் வழிவகை இல்லை. மேலும், ஊராட்சிகளைப் பிரிப்பதாக இருந்தால், ஏற்கெனவே உள்ள ஊராட்சி மற்றும் பிரிக்கப்பட்ட ஊராட்சி ஆகியவற்றின் வார்டுகளின் எல்லைகள், உறுப்பினர்களது எண்ணிக்கை மற்றும் இட ஒதுக்கீடுகள் ஆகியவற்றில் மாற்றம் ஏற்படும். மேலும், அரசாணை எண் 10.55, பொதுத் துறை, நாள் 28–11–2002–ல் சட்டமன்ற மற்றும் பாராளுமன்றத் தொகுதிச் சீரமைப்பு ஆணையத்தின் அறிவிப்பின்படி, 1–8–2002 முதல் தொகுதிச் சீரமைப்புப் பணி முடியும் வரையில், ஊராட்சி அமைப்புகளின் எல்லைகளைச் சேர்க்கவோ, பிரிக்கவோ அல்லது மாற்றம் செய்யவோ கூடாது என்றும் ஆணையிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, ஊராட்சியைப் பிரிப்பதற்கு வாய்ப்புகள் இல்லை.

[2005 மார்ச் 29

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சியைப் பேரூராட்சியாக, மாற்றவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டார். பேரூராட்சி என்ற வகைப்பாடு மாற்றப்பட்டு, 30,000 மக்கள் தொகைக்கு மேலுள்ள பேரூராட்சிகளை மூன்றாம் நிலை நகராட்சியாகவும், அதற்குக் குறைவாக உள்ள பேரூராட்சிகளை சிறப்பு சிற்றூராட்சிகளாகவும் 14–6–2004 முதல் வகை செய்யப்பட்டுள்ளது. முன்பு பேரூராட்சிகளாகச் செயல்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் மட்டுமே சிறப்பு சிற்றூராட்சிகளாக வகை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி, பேரூராட்சி என்ற வகைப்பாடு தற்போது நடைமுறையில் இல்லாததால், ஒரு ஊராட்சியைப் பேரூராட்சியாகவோ அல்லது சிறப்பு சிற்றூராட்சியாகவோ மாற்ற சட்ட விதிகளின்படி வாய்ப்பில்லை என்று கூறி, அமர்கின்றேன்.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலுரை கூறும்போது, அரசாணை எண் 10.5.5 பிரகாரம், பேரூராட்சியாக்கவோ அல்லது இரண்டாகப் பிரிக்கவோ முடியாது என்று அந்த அரசாணையைச் சுட்டிக்காட்டிக் கூறினார்கள். அந்த அரசாணை இருக்கின்றபடியால், அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையில், அங்கே வேலை பார்க்கின்ற பணியாளர்கள், அவர்கள் பகுதிநேரப் பணியாளர்களாக இருக்கின்றபடியால், அந்த ஊராட்சி தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய ஊராட்சியாக இருக்கின்றபடியால், அங்கே அந்தப் பகுதி மக்களுடைய அடிப்படை வசதிகளை அந்த நிர்வாகிகளால், பகுதிநேர ஊழியர்கள் என்ற காரணத்தினால், பூர்த்தி செய்ய முடியவில்லை. எனவே அமைச்சர் அவர்கள், நம்முடைய அம்மா அவர்களுடைய ஆட்சியில் அவர்களுக்கு முழுநேரப் பணி என்ற அந்த அந்தஸ்தை வழங்குவதற்கு இந்த அரசாணை தடையாக இருக்குமா? அல்லது தடையாக இருக்கவில்லை என்று சொன்னால், அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிநேரப் பணிஸ்ய முழுநேரப் பணியாக—தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய முதல் ஊராட்சி என்ற அந்த ஊராட்சிக்கு—அந்தத் தகுதியைக் கொடுத்து, அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்ற அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை ஏற்று, பகுதிநேரப் பணியாளர்களை முழுநேரப் பணியாளர்களாக நியமனம் செய்வதற்கு வாய்ப்பில்லை. இருப்பினும், அவருடைய கோரிக்கையை ஏற்று, அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்து, அமர்கின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. வில்வநாதன்.

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலுள்ள சோளிங்கர் லட்சுமி நரசிம்மசாமி கோயிலுக்கு ரூபாய் நான்கு கோடி செலவிலே Rope Car system-ஐ அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வில்வநாதன், சம்பந்தம் இல்லாதது; இன்னொரு நேரத்திலே சொல்லுங்கள்.

**திரு. இரா. வில்வநாதன்:** சரி. என்னுடைய தொகுதியில் ஊராட்சி மட்டும் இருந்தது. பேரூராட்சி மட்டும் இருந்தது. அவை இரண்டும் தற்போது சிறப்பு ஊராட்சிகளாக மாற்றப்பட்டுள்ளன. வேறு நகராட்சியோ, மற்ற பேரூராட்சிகளோ என்னுடைய தொகுதியில் இல்லை. 30,000 மக்கள் தொகை கொண்ட சோளிங்கர் சிறப்பு ஊராட்சியை, டி.வி.எஸ். மற்றும் பேருந்து வகைகள் கொண்ட சுற்றுலாத் தலமாக உள்ள சோளிங்கரை மீண்டும் நகராட்சியாக அறிவிக்க அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளை மூன்றாம் நிலை நகராட்சியாகவும், சிறப்பு சிற்றூராட்சிகளாகவும் வகைப்பாடு செய்ததில், சிறப்பு சிற்றூராட்சிகளை மூன்றாம் நிலை நகராட்சியாக மாற்றம் செய்யவும், மூன்றாம் நிலை நகராட்சிகளை சிறப்பு சிற்றூராட்சிகளாக மாற்றம் செய்யவும் சிலர் கோரிக்கைகள் விடுத்ததன் அடிப்படையிலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையை ஏற்று, 13–10–2004–ல் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின்மூலமாக 31–12–2004 வரை மனுக்கள் பெறப்பட்டன. அந்தக் குழுவிலே 57 ஊராட்சிகள் குறித்து 459 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. அப்படி மாண்புமிகு உறுப்பினர் கோரிய அந்த சிறப்பு ஊராட்சி மூலம் அந்தக் குழுவுக்கு அனுப்பப்பட்டிருந்தால், அவற்றைப் பற்றி அந்தக் குழுவானது பரிசீலனை செய்து கொண்டிருக்கும். அதிலே சாத்தியக்கூறு இருப்பின், அதை நகராட்சியாக மாற்றுவதற்கு வாய்ப்பிருந்தால், மாற்றிக் கொடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. சந்திரமோகன்.

[2005 மார்ச் 29

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். குறிப்பாக, எனது சீர்காழி தொகுதியைப் பொறுத்தளவிலே, திருமுல்லைவாசல் என்ற கிராமம் இருக்கிறது. அந்த ஊராட்சியிலே 15,000-க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். அந்த ஊராட்சியில் மூன்று கவுன்சிலர்கள் இருக்கின்றார்கள். அந்த ஊராட்சியை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கு குறிப்பிட்டதுபோல, இரண்டாகப் பிரிக்க முடியாவிட்டாலும்கூட, 15,000–க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்ற இந்தப் பெரிய ஊராட்சியை சிறப்பு நிலை ஊராட்சியாக மாற்றிக் கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–35*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளாகச் செயல்பட்டுக்கொண்டிருந்த பேரூராட்சிகள், முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட அந்தப் பேரூராட்சிகள்தான் இன்றையதினம் மூன்றாம் நிலை நகராட்சிகளாக மாற்றப்பட்டன. மீதி இருக்கின்ற 562 பேரூராட்சிகளும் சிறப்பு சிற்றூராட்சிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் கூறியது ஊராட்சி. ஆகவே இந்த வகையில் அது எதுவும் இல்லாத காரணத்தினால், அதைப் பரிசீலிக்க வாய்ப்பு இல்லை என்று கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. நடராஜன்.

**திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களை வணங்குகிறேன். நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் ஒன்றியத்தில் உள்ள கோமல் ஊராட்சி, பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்களையும், பதினைந்துக்கும் மேற்பட்ட குக்கிராமங்களையும் கொண்ட மிகப் பெரிய ஊராட்சியாக இருக்கின்றது. மேற்படி ஊராட்சியினுடைய நிர்வாக வசதி கருதி, எதிர் வருகின்ற உள்ளாட்சித் தேர்தலின்போதாவது மூன்று ஊராட்சிகளாகப் பிரிப்பதற்கு—கோமல் ஊராட்சி, செம்பியன் கோமல் ஊராட்சி, நச்சினார்குடி ஊராட்சி என்று மூன்று ஊராட்சிகளாகப் பிரிப்பதற்கு—மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்பதனைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.



2005 மார்ச் 29]

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். மகாலிங்கம்.

**திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்காமலே வாரி வழங்கும் வள்ளல் மனம் படைத்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், அவிநாசி தொகுதியில், அவிநாசி, அன்னூர், திருமுருகன்பூண்டி என்ற மூன்று பேரூராட்சிகள் உள்ளன. அவை தற்போது சிறப்பு நிலை ஊராட்சிகளாக உருவாக்கப்பட்டுள்ளன. இப்போது அவிநாசி முப்பதாயிரம் மக்கள் தொகை கொண்ட பேரூராட்சியாக இருப்பதால், நடப்பு நிதி ஆண்டில் மூன்றாம் நிலை நகராட்சியாக உருவாக்கித் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி, முப்பதாயிரம் மக்கள் தொகை கொண்ட பேரூராட்சிகள் மூன்றாம் நிலை நகராட்சிகளாக மாற்றப்பட்டன. அவற்றில் 2001 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி, முப்பதாயிரத்திற்கும் குறைந்த, ஆயிரம், இரண்டாயிரம் மக்கள் தொகை குறைந்த அளவிலே இருக்கின்றவை பற்றித்தான் இன்றையதினம் குழுக்கள் அமைக்கப்பட்டு அந்தக் குழுக்களிலே அவை பரிசீலிக்கப்படுகின்றன. அப்படி அந்தக் குழுக்களிலே மாண்புமிகு உறுப்பினர் கோரிய பேரூராட்சியானது கொடுக்கப்பட்டிருந்தால் அது அந்தக் குழுக்கள் மூலமாகப் பரிசீலனை செய்யப்பட்டால், அம்மாவினுடைய அரசானது அதை மூன்றாம் நிலை நகராட்சியாக மாற்றுவதற்கு ஆவன செய்யும் என்று கூறி, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 231, திருமதி சான்ட்ரா டான் க்ரவல், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**231—**

**கட்டட வசதி**

***18626—திருமதி சான்ட்ரா டான் க்ரவல்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 மார்ச் 29

சென்னை, அமைந்தகரையிலுள்ள ஆங்கிலோ இந்தியன் பள்ளியின் கட்டடத்தைப் பழுதுபார்ப்பதற்காக ரூ. 20.00 இலட்சத்திற்கும் குறைவாக ஒரே தடவையில் செலவு செய்ய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியைப் பயன்படுத்த அரசு அனுமதி அளிக்குமா?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004–2005 ஆம் ஆண்டுக்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டச் செயலாக்க வழிகாட்டு நெறிமுறைகளின்படி, இத்திட்ட நிதியிலிருந்து அரசு நிதி உதவி பெறும் கல்வி நிறுவனத்திற்குச் செலவு செய்ய இயலாது. எனவே, சட்டமன்ற உறுப்பினர் கோரியுள்ள பணியான, சென்னை, அமைந்தகரையிலுள்ள ஆங்கிலோ இந்தியன் பள்ளியின் கட்டடம் பழுதுபார்க்கும் செலவினை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து செய்ய வழிவகை இல்லை.

**TMT. SANDRA DAWN GREWAL:** *Hon. Speaker Sir, First I would* like to thank our Hon. Chief Minister for enhancing the M.L.A.s Constituency Development Fund to rupees one crore. (Thumping of desks) Will the Government be pleased to relax the rules for the nominated M.L.A., Constituency Development Fund, as a special case, just once, for repairs of only one School, St. George's Anglo Indian Higher Secondary School and Orphanage which is a Government aided Anglo Indian Management School and the only school consisting of an Orphanage and where 75% of the students are below the poverty line?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, அமைந்தகரையிலுள்ள ஆங்கிலோ இந்தியன் பள்ளி, அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனமாகும். மேலும் அரசுப் பள்ளிகள் மற்றும் ஊராட்சி அமைப்புகளால் நடத்தப்படும் பள்ளிகளின் கட்டடங்கள் மட்டுமே அரசுக்குச் சொந்தமானவை. அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களின் கட்டடங்கள் மற்றும் அடிப்படை வசதிகள், சம்பந்தப்பட்ட பள்ளியை நடத்தும் கல்வி நிறுவனங்களுக்கே சொந்தமானவை. எனவே, இப்பள்ளிகளின் அடிப்படை வசதிகளின்மீது அரசுக்கு எந்த உரிமையும் இல்லை. அரசு நிதி உதவி பெறும் பள்ளியின் கட்டடங்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அரசு நிதியிலிருந்து பராமரித்தல் மற்றும் பராமரிக்கப்படும் சொத்துக்களின்மீது அரசு எந்த உரிமையும் கோர



2005 மார்ச் 29]

முடியாது. இத்திட்டத்தின்கீழ் அரசு ஆணையில் அனுமதிக்கப்பட்டுள்ள சொத்துக்களைப் புதுப்பித்தல் மற்றும் தர மேம்பாடு செய்தல் போன்ற சிறப்புப் பழுதுபார்த்தல் பணிகளை அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான பள்ளிக் கட்டடங்களுக்கு மட்டுமே மேற்கொள்ள இயலும். எனவே, அரசு நிதி உதவி பெறும் கல்வி நிறுவனத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியினைப் பயன்படுத்த வழிவகை ஏதுமில்லை.

முற்பகல் 10–40

**HON. SPEAKER:** Sandra, give a request to our Amma.

வினா எண் 232, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**232—**

### தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

***11093—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், இருளப்பட்டியிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியைப் பிரித்து, எச். புதுப்பட்டியில் புதிதாகத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இருளப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியைப் பிரித்து, எச். புதுப்பட்டியில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை. (ஆ) கேள்வி எழவில்லை.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய காலை வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி

[2005 மார்ச் 29

வட்டத்திலுள்ள, எனது தொகுதியிலுள்ள இருளப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியைப் பிரித்து, புதுப்பட்டியிலே ஒரு தலைமை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்திருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதற்கு வாய்ப்பு இல்லை என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும்கூட, அந்த இருளப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி என்பது, இரண்டு வருவாய் கிராமங்களை, வருவாய் ஊராட்சிகளை உள்ளடக்கியதாகும். இவற்றில், இருளப்பட்டி, நாகலூர், மூக்காரெட்டிபட்டி, பாப்பம்பாடி, காந்தி நகர், புதுப்பட்டி, கவுண்டன்பட்டி, தோரனூர், காளிபுரம், கனடதாதன்பட்டி போன்ற பெரிய கிராமங்களை உள்ளடக்கி இந்தக் கூட்டுறவு வங்கி செயல்பட்டு வருகிறது. விவசாயப் பெருங்குடி மக்கள் அந்த வங்கிக்குச் செல்லவேண்டுமென்று சொன்னால், சுமார் 7 கிலோ மீட்டர் தொலைவு நடந்து சென்று, அந்த விவசாயப் பொருட்களை எடுத்துவரக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி என்பது, விவசாயிகளுடைய துயர் துடைக்கும் வங்கியாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதை இரண்டாகப் பிரித்து, புதுப்பட்டியிலே ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை அமைத்துக் கொடுத்தால், அந்தப் பகுதி விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மிகவும் பயனுடையதாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு, மீண்டும் இந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியைப் பிரிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி செயல்படுவதற்கு 2,000 எக்டேர் நிலப்பரப்பு பாசனப் பகுதியைப் பெற்றதாக, பயிர் செய்யும் நிலமாக இருக்க வேண்டும். இருளப்பட்டி, எச். புதுப்பட்டி ஆகிய இரண்டு வருவாய் கிராமங்களுக்கும் சேர்த்து, மொத்தம் 2,368 எக்டேர் நிலப்பரப்பு பாசனப் பகுதியுள்ள விவசாய நிலங்கள் மட்டுமே உள்ள காரணத்தினாலும், இரண்டு கிராமங்களையும் தனித்தனியாகப் பிரித்து, இரண்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை அமைக்கும்போது, இரண்டு வங்கிகளுமே அதனுடைய வாழ்திறனை இழந்துவிடக்கூடிய ஒரு சூழல் இருக்கின்ற காரணத்தினால், நபார்டு வங்கியின் வழிகாட்டுதலின்படி, இதைப் பிரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதனைக் கூறி, அமர்கின்றேன்.



2005 மார்ச் 29]

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பெரிய ஊராட்சியாக இருக்கிற காரணத்தினாலும், அங்கே தொலைதூரம் நடந்து சென்று, விவசாயிகளுக்குத் தேவையான உரம் போன்ற பொருட்களை வாங்க வேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தினாலும், தற்போது நிலைமை சரியில்லை என்று சொன்னாலுங்கூட, வருகிற நிதியாண்டிலாவது அதை மீண்டும் பிரித்து, ஒரு வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைத்துக் கொடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எச். புதுப்பட்டி வருவாய் கிராமத்தினுடைய மொத்தப் பாசனம் பெறுகின்ற நிலப்பரப்பானது 850 எக்டேர் நிலப்பரப்பு மட்டும்தான் உள்ளது. நபார்டு வங்கியின் வழிகாட்டுதலின்படி, 2,000 எக்டேர் பாசனம் பெறக்கூடிய நிலப்பரப்பு இருந்தால் மட்டுமே ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியானது தொடங்கப்படக்கூடிய சூழ்நிலை உள்ள காரணத்தினால், சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை என்கின்ற பதிலைச் சொல்லி, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 233, திரு. என்.கே. பெருமாள், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**233—**

## கூட்டுறவு பயிற்சி நிலையம்

***19575—திரு. என்.கே. பெருமாள்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில் கூட்டுறவு பட்டயப் பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் தற்போது காஞ்சிபுரம், வேலூர், தருமபுரி, சேலம், கடலூர், தஞ்சாவூர், மதுரை, சாத்தூர், திருநெல்வேலி, நாகர்கோவில், கோவை, ஈரோடு, நாமக்கல், விழுப்புரம், திருச்சி, திண்டுக்கல், சிவகங்கை, திருவாரூர், திருவண்ணாமலை மற்றும் தேனி ஆகிய 20 கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

[2005 மார்ச் 29

இந்த நிலையங்களில் கடந்த 5 ஆண்டுகளில் மாணவர்களின் சேர்க்கை குறைந்து கொண்டே வருகிறது. இந்நிலையில், தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில் கூட்டுறவு மேலாண்மை நிலையம் ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்கின்ற பதிலைக் கூறி, அமர்கின்றேன்.

*முற்பகல் 10–45*

**திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களின் ஒப்பற்ற தலைவியாய், உலக அரசியல் வரலாற்றில் உயர்ந்த கோபுரமாய், சுனாமி என்னும் கொடிய அரக்கனை ஒழித்துக் கட்டி, உலக அரங்கில் உயர்ந்து நிற்கும் இதய தெய்வம், தமிழகத்தின் முதல்வர், தங்கத் தாரகை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவை வணங்கி, என் வினாவைத் தொடங்குகின்றேன். தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டுமின்றி, தமிழ்நாட்டிலுள்ள தொகுதிகளில் மிகவும் ஏழ்மையான தொகுதி, கூலி வேலை செய்தும், கால்நடைகளை மேய்த்தும் பிழைப்பு நடத்தி வருகின்ற ஏழை மக்களைக் கொண்ட தொகுதி விளாத்திகுளம் தொகுதி, அம்மா! வானம் பார்த்த பூமியாய் விளங்கும் கரிசலாக இருக்கும் இந்தத் தொகுதியில், மழை பொய்த்துவிட்டால் மக்கள் பிழைப்பதற்கு வழியின்றி கண்ணீர் விட்டு விழி பிதுங்கும் நிலைதான் அவர்களுக்கு ஏற்படுகின்றது தாயே! வருமானம் கிட்டும் வகையில் எந்தவிதத் தொழிற்சாலையுமின்றி விவசாயத் தொழில் ஒன்றை மட்டும் ஏற்றதனால் கண்ணீரைச் சுமந்து நிற்கும் விளாத்திகுளம் தொகுதியிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் உறுதியாய் நினைத்திருப்பது தெரிய வருகிறது. அது யாதெனில், கோடானுகோடி மக்களை வாழ வைக்கும் மனிதக் கடவுளாய் அம்மா அவர்கள் எங்களை வாழ வைப்பார் என்பதுதான் அம்மா! இந்த நிலையில், எங்கள் தொகுதியிலுள்ள மக்களுக்கு கலைக் கல்லூரியோ, பொறியியல் கல்லூரியோ, தொழில்நுட்பக் கல்லூரியோ இல்லை. அவை இல்லாத நிலையில், உயர் கல்வி பயில வாய்ப்புகள் இன்றிக் கஷ்டப்படுகின்றார்கள் தாயே! கூட்டுறவு பட்டயப் படிப்புக் கல்வி பயில வேண்டுமென்றால், மதுரை அல்லது திருநெல்வேலிக்குச் சென்றுதான் படிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. விவசாய மக்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், என்னுடைய தொகுதியில் வாழுகின்ற 286 கிராம மக்களும் வெறும் விவசாயத்தை நம்பி வாழுகின்ற அந்தப் பகுதி மக்களுடைய கண்ணீரைத் துடைப்பதற்கு மீண்டும் பரிசீலனை செய்து, அந்தப் பகுதியில் ஒரு பட்டயப் பயிற்சிக் கல்லூரியை அமைப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலமாக அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.



2005 மார்ச் 29]

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களைச் செயல் எல்லையாகக் கொண்டு மேடை தளவாய் குமாரசாமி கூட்டுறவு மேலாண்மை நிலையம், திருநெல்வேலியில் செயல்பட்டு வருகிறது. 2003–2004 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் 149 பயிற்சி பெறும் மாணவர்களும், தூத்துக்குடி மாவட்டத்தில் 91 பயிற்சி பெறும் மாணவர்களும், ஆக மொத்தம் 240 பயிற்சியாளர்களும், 2004–2005 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் 60 பயிற்சி பெறும் மாணவர்களும், தூத்துக்குடி மாவட்டத்தில் 37 பயிற்சி பெறும் மாணவர்களும், ஆக மொத்தம் 97 மாணவர்களும் மட்டுமே சேர்ந்துள்ளனர். எனவே, பயிற்சி பெறும் மாணவர்களுடைய எண்ணிக்கை ஆண்டிற்காண்டு குறைந்து கொண்டே வருவதால், தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில் தனியாகக் கூட்டுறவு மேலாண்மை நிலையம் தொடங்குவதற்கு சாத்தியக்கூறுகள் தற்போது இல்லையென்கின்ற பதிலைக் கூறி, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். ராஜம்மாள்.

**திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியிலே-- எங்கள் தூத்துக்குடியானது 7 தொகுதிகளைக் கொண்ட மாவட்டம். அந்த மாவட்டத்திலே தூத்துக்குடி தலைநகரமாக இருக்கிறது. அங்கிருந்து அதிகமான மாணவர்கள் திருநெல்வேலி போய்ச் சென்று படிப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது என்று என்னிடத்தில் கோரிக்கை வைத்ததன்மூலமாக, 2001–2002–லேயே நான் இந்தக் கோரிக்கையைக் கேட்டிருக்கிறேன். ஆகையினால், நீங்கள் தூத்துக்குடியிலே இந்தப் பட்டயப் பயிற்சிப் பள்ளி ஆரம்பித்தால், அதிகமான மாணவர்கள் சேர்ந்து படிக்க வாய்ப்பாக இருக்கும். அதிக மாணவர்கள் அங்கே சென்று படிப்பதற்கு வாய்ப்பு இல்லாமல்தான்—மேலும் விவசாயக் குடும்பத்திலே உள்ளவர்கள்தான் இதைப் படிப்பார்கள்—இப்போது வேலைவாய்ப்பைத் தேடி இந்தப் படிப்பைப் படிக்க அநேகப் பிள்ளைகள் ஆர்வத்துடன் இருப்பதால், எனது தூத்துக்குடி தொகுதியிலே, அம்மா அவர்களின் ஆட்சியிலே, எல்லாவற்றையும் செய்து முடிக்கும் தங்கத் தாரகை அம்மா அவர்கள், என்னுடைய தொகுதியிலும் இந்தப் பட்டயப் பயிற்சிப் பள்ளியைத் தொடங்குவதற்குக் கண்டிப்பாக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, அம்மா அவர்களிடம் நீங்கள் அனுமதி பெற்றுச் செய்வீர்களா என்பதை நான் உங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[2005 மார்ச் 29

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளுக்கு நாள் கூட்டுறவு பட்டயப் பயிற்சி பெறும் மாணவர்கள் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகின்ற தற்போதைய சூழ்நிலையில், அது குறித்துப் பரிசீலிக்க இயலாது. மாணவர்களுடைய எண்ணிக்கை கூடுதலாகின்றபொழுது, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய ஆணையினைப் பெற்று, புதிதாக ஒரு கூட்டுறவு பட்டயப் பயிற்சி நிலையம் தொடங்குவதற்கான முயற்சியில் அரசு ஈடுபடும் என்கின்ற கருத்தினைச் சொல்லி, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு பட்டயப் பயிற்சி பெற்றவர்கள் நிறைய பேர் வேலைவாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள். கூட்டுறவு மத்திய வங்கிக் கிளைகளிலே நிறையப் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அந்த இடத்திலே அவர்களை அமர்த்துவதற்கு அரசு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்துத் தனியாகக் கேள்வி தொடுக்கும்போது அதற்குரிய பதில் சொல்லப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. சிவபெருமாள்.

*முற்பகல் 10-50*

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, தூத்துக்குடி மாவட்டத்திலே, பட்டயப் பயிற்சிப் பள்ளியை அமைப்பது சம்பந்தமான இந்த வினாவிலே, தூத்துக்குடி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், ஒட்டப்பிடாரம், விளாத்திகுளம் பகுதிகளிலிருந்து திருநெல்வேலிக்கு பட்டயப் படிப்புப் படிப்பதற்கு அதிகமான மாணவர்கள் சென்றுகொண்டிருக்கிறார்கள். அவர்கள் திருநெல்வேலியைச் சென்றடைய வேண்டுமானால், காலை 5 மணிக்கே எழுந்திருந்து, 2, 3 பஸ்கள் மாறி திருநெல்வேலி சென்று, அங்கு பட்டயப் பயிற்சிகளைப் படிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இந்தப் பகுதிகளிலே—விளாத்திகுளம், ஒட்டப்பிடாரம் பகுதிகளிலே விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகமாக வாழ்கின்ற காரணத்தினால், அங்கு இந்தப் படிப்பை விரும்பிப் படிக்கக்கூடிய மாணவர்கள் அதிகமாக உள்ளார்கள்.



2005 மார்ச் 29]

ஆகையினால், எங்களுடைய தூத்துக்குடி மாவட்டத்தினுடைய தலைமை இடமாகிய தூத்துக்குடியிலாவது—இந்தப் பட்டயப் பயிற்சிப் பள்ளி துவங்கும் காலகட்டத்திலே, போக்குவரத்து வசதிக்கு அதிகமான வாய்ப்புகள் உள்ள தூத்துக்குடி நகரிலாவது—இந்தப் பட்டயப் பயிற்சிப் பள்ளியைத் துவங்குவதற்கு, வரும் நிதியாண்டிலாவது மாண்புமிகு அம்மாவின் அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்திலிருந்து தற்போது பட்டயப் பயிற்சி பெறுகின்ற மாணவ, மாணவியர்களுடைய எண்ணிக்கை மொத்தம் 37 பேர்களாகத்தான் உள்ளார்கள். இவர்களுடைய எண்ணிக்கை அதிகமாகின்றபொழுது, தேவைக்கேற்ப மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மாவினுடைய அரசு பரிசீலிக்கும் என்கின்ற கருத்தினைச் சொல்லி, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 234, திரு. அ.இரா. மலையப்பசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**234—**

**பாதை வசதி**

*48630—திரு. அ.இரா. மலையப்பசாமி:

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலையிலுள்ள புகழ்பெற்ற அருள்மிகு முருகன் கோயிலின் மலை உச்சியில் அமைந்திருக்கும் விநாயகர் கோயிலுக்குச் செல்ல பாதை வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கபிலர்மலையில் அமைந்துள்ள முருகன் சன்னதிக்குச் செல்வதற்கும், சுவாமி தரிசனம் முடித்து மலையிலிருந்து இறங்கவும், தனித்தனியே படிக்கட்டு வசதிகள் உள்ளன. இம்மலை உச்சியிலுள்ள சிறிய விநாயகர் சன்னதிக்குச் செல்வதற்குப் படிக்கட்டு வசதிகள் உள்ளன. அவை நல்ல நிலையில் உள்ளன. எனவே, மீண்டும் விநாயகர் சன்னதிக்குச் செல்ல

[2005 மார்ச் 29

பாதை அமைக்க அவசியம் இல்லை என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை. திரு. சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலேதான் எல்லாக் கோயில் தலங்களுக்கும் வழிபடச் செல்வதற்கு நல்ல முறையிலே தரமான தார்ச் சாலைகள் இன்றைக்கு அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இரு வழிகள் இருப்பதால் பாதை அமைக்கத் தேவையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். எங்களுடைய மேலூர் தொகுதியில், அழகர்கோயிலிலே மேலே தீர்த்தத் தொட்டி இருக்கின்றது. இந்தியா முழுவதிலுமிருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகள் எல்லாம் ஒரே வழிச் சாலையில்தான் மேலே செல்ல வேண்டியிருக்கிறது. ஒரு வழிச் சாலையாக இருப்பதால் மிகவும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது. அந்தக் கோயிலிலே அதிக நிதியும் இருக்கின்றது. ஆகையால் அம்மாவினுடைய அரசு, கோயில்களுக்குப் புதிய, புதிய திட்டங்களை—தற்போது பழனியில்கூட சில மாதங்களுக்கு முன்பாக rope car வசதியைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்து கொடுத்தார்கள்; இன்னும் பல்வேறு கோயில்களுக்கு rope car விடுவதாக அறிவித்திருந்தார்கள். அந்த அடிப்படையிலே, மாண்புமிகு அமைச்சரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அழகர்கோயிலிலிருந்து மேலே தீர்த்தத் தொட்டி செல்வதற்கு, இறங்குவதற்குப் புதிதாக ஒரு வழியை அமைத்துத் தரவோ, இல்லை என்றால் பழனி ஆண்டவர் கோயிலிலே rope car வசதியை அமைத்ததுபோல, கீழே அழகர்மலையிலிருந்து மேலே தீர்த்தத் தொட்டிக்குச் செல்வதற்கு ஒரு rope car வசதி அமைத்துக் கொடுக்கவோ அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதிக்குப் பதில் சொன்னோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற கோரிக்கையின் அடிப்படையில் அங்கே மலைப் பாதையில் சாலை அமைக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்குமேயானால், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவிடத்திலே அனுமதி பெற்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.



2005 மார்ச் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 235, திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**235—**

## குடமுழுக்கு

***69490—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, வரலாற்றுச் சிறப்புமிகுந்த கல்குளம் திருநயினார் நீலகண்டசுவாமி திருக்கோயில் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளதைப் புதுப்பித்து, குடமுழுக்கு நடத்திடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பத்மநாபபுரம் தொகுதியில் வரலாற்றுச் சிறப்புமிக்க கல்குளம் திருநயினார் நீலகண்டசுவாமி திருக்கோயிலைப் புதுப்பித்து, குடமுழுக்கு நடத்திடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பத்மநாபபுரம் அரண்மனைக் கோட்டைக்குள் இருந்துவரும் வரலாற்றுச் சிறப்புமிக்க கல்குளம் திருநயினார் நீலகண்டசுவாமி திருக்கோயில் சுமார் 350 வருடங்களுக்கு முன்பாக சுசீந்திரம் தாணுமாலய சுவாமி திருக்கோயில் மாதிரி வடிவத்தில் அமைக்கப்பட்டதாகும். 2 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இக்கோயில், சிவபுராண வரலாறு தொடர்புடைய 12 சிவாலயங்களில் சிறப்புமிக்க 7–வது கோயிலாகும். திருவட்டாறு, ஆதிகேசவப் பெருமாள் கோயிலுக்கு உட்பட்ட கல்குளம் தாலுகாவிலிருந்துவரும் அனைத்துக் கோயில்களிடம் உள்ள தங்கம், வைரம் போன்ற கோடிக்கணக்கான விலை மதிப்புள்ள ஆபரணங்கள் இந்தக் கோயிலில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மிகப் பழமையான இந்தக் கோயில் கோபுரங்களில் அமைக்கப்பட்டுள்ள சிற்பங்கள் ஒவ்வொன்றாக இடிந்து கீழே விழுந்து

வருகின்றன. கடந்த 100 ஆண்டுகளுக்கு முன்பாக இந்தக் கோயில் கும்பாபிஷேகம் நடைபெற்றிருக்கலாம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் சுசீந்திரம் தாணுமாலய சுவாமி திருக்கோயிலுக்கு அடுத்தபடியாக குமரி மாவட்டத்திலே அனைத்துச் சிறப்புகளும் வாய்ந்த இந்த நீலகண்டசுவாமி கோயிலைப் பழுதுபார்த்து, குளம் தூர் வாரி, கும்பாபிஷேகம் நடத்துவது மிகவும் தேவையான ஒன்றாகும். ஆகையால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி, நடப்பாண்டிலாவது, திருநீலகண்டசுவாமி திருக்கோயிலில் கும்பாபிஷேகம் நடத்தி, அதனுடைய பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுசீந்திரம் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்களில் கல்குளம் அருள்மிகு திருநயினார் நீலகண்டசுவாமி திருக்கோயிலும் ஒன்றாகும். இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத தொகுப்பில் மொத்தம் 490 திருக்கோயில்கள் ஒரே நிர்வாகத்தின்கீழ் உள்ளன. இத்திருக்கோயிலின் மிகவும் பழுதடைந்த நிலையைக் கருத்தில் கொண்டு, கடந்த 2001 ஆம் ஆண்டில் 6 இலட்சம் ரூபாய் மதிப்பில் மேற்கூரை, தள ஓடு புதிதாக அமைக்கப்பட்டுச் சரி செய்யப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலை முழுவதும் புதுப்பித்திட சுமார் ரூ.80 இலட்சம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. சுசீந்திரம் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள் தொகுப்பு நிர்வாகத்தில் 5 திருக்கோயில்கள் மட்டுமே பிரதானமாக வருவாய் பெறுகின்றன. இத்திருக்கோயிலுக்கு நிர்வாகச் செலவினங்களுக்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ.33.70 இலட்சம் ரூபாயை அரசுமூலம் மானியமாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வழங்குகிறது. இந்நிலையில் உடனடியாகப் பெரும் செலவினத்தை மேற்கொண்டு, மேற்படி திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்ய வாய்ப்பு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் மேற்படி திருக்கோயில் திருப்பணிக்காகத் திருப்பணிக் குழு அமைத்து உபயதாரர்கள் மூலம் நன்கொடை திரட்டி, பணிகளை மேற்கொண்டால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மொத்த மதிப்பீட்டில் மூன்றில் ஒரு பங்கை வழங்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநயினார் திருநீலகண்ட சுவாமி கோயிலில் ஒவ்வொரு



ஆண்டும் 10 நாட்கள் அதனுடைய திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்று, கேரளாவிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கிறார்கள். இந்தக் கோயிலில் கமிட்டி அமைப்பதற்கு தேவஸ்வம் போர்டிலிருந்து பொறுப்பான தலைவர்களும், அமைச்சர் அவர்களும் முயற்சி செய்து, அதற்கான வசதிகளை உருவாக்கித் தருவார்களேயானால், அந்த கமிட்டிக்கு உரிய ஏற்பாடுகளைச் செய்து தரலாம் என்று அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக்கொண்டு, இந்தக் கோயிலினுடைய நிலையை உணர்ந்து, அமைச்சர் அவர்கள் இந்தக் கோயில்மீது தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று மீண்டும் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்களுடைய அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, இதுவரையிலும் சரித்திரத்திலே இல்லாத அளவிற்கு 3,800 ஆலயங்களில் திருப்பணி செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 21 ஆம் தேதி அன்று 753 ஆலயங்களுக்கு அம்மா அவர்கள் திருப்பணி செய்வதற்கு ஆணையிட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில், இங்கே தாங்கள் சொல்லிய அந்த ஆலயத்திற்குத் திருப்பணிக் குழு அமைத்து, வசதி படைத்தவர்களிடம், ஆன்மீக பக்தர்களிடத்திலே நீங்கள் வசூல் செய்து, திருப்பணி செய்வதற்கு முன்வருவீர்களேயானால், அரசின்மூலமாக மானியம் கொடுக்கப்பட்டு, அந்தத் திருப்பணி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மீண்டும் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 236, திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**236—**

## மருத்துவமனை வசதிகள்

***42347—திரு. சோ. இராசேந்திரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனையில் படுக்கைகள் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும், கூடுதல் மருத்துவர்களை நியமிக்கவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 மார்ச் 29

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும், கூடுதல் மருத்துவர்கள் நியமிக்கவும் தற்போது அரசின் பரிசீலனையில் கருத்துரு ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன், இருக்கையில் இல்லை.

*வினா எண் 237, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.*

**237—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

***50882—திரு. ஜி. பழனிசாமி:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஒன்றியம், உதயமார்த்தாண்டபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், உதயமார்த்தாண்டபுரம் கிராமத்திலே அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை.

*வினா எண் 238, திரு. கி. பாரிமோகன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.*



2005 மார்ச் 29]

**238—**

### நெல் கொள்முதல்

***2150—திரு. கி. பாரிமோகன்:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி மாவட்டம், தருமபுரி தொகுதி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் எண்ணிக்கை குறைவான நெல் மூட்டைகளை விவசாயிகள் விற்பனைக்குக் கொண்டு வந்தால், அதனைக் கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் இயங்கும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் குறைவான எண்ணிக்கையில் வேளாண் விளைபொருட்களை விற்பனைக்குக் கொண்டு வந்தாலும், விற்பனை செய்து தரப்படுகிறது என்பதைத் தங்கள் வாயிலாகக் கனிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

*வினா எண் 239, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.*

**239—**

### பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி

***30348—திரு. மு. அப்பாவு:**

*மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நெல்லை மாவட்டம், ராதாபுரம் வட்டம், பெட்டைக்குளம் ஊரில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் வாழ்வில்

[2005 மார்ச் 29

வளம் கொழிக்கும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு செயலாற்றுகின்ற வகையிலே, இந்த ஆண்டு மட்டும் 89 சதவிகிதம் அதிகமாக உயர்த்தி, கல்வித் துறையிலே மட்டும் 95 சதவிகிதம் நிதி இன்று ஒதுக்கப்பட்டு, விடுதிகளுக்கு மட்டும்--630 விடுதிகளைக் கட்டக்கூடிய உத்தரவை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தில், மாண்புமிகு உறுப்பினர் கூறிய, ராதாபுரம் வட்டம், பெட்டைக்குளம், பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளியினுடைய மாணவர் விடுதி கட்ட மாண்புமிகு அம்மாவினுடைய அரசின் பரிசீலனையில் உள்ளது.

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி உவரியில் ஒன்றும், கூட்டப்புளியில் ஒன்றும், பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி ஆவரைக்குளத்தில் ஒன்றும், பழவூரில் ஒன்றும் கட்டித் தந்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் பெட்டைக்குளம், திசையன்விளை, பணகுடி ஆகிய மூன்று ஊர்களிலும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகள் மிகவும் பரிதாபமான நிலையில், வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அவற்றில் ஒன்றைக்கூட இந்த ஆண்டில் கட்டுவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் உறுதி அளிக்கவில்லை என்பது வேதனையாக இருக்கின்றது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே பதில் அளித்தபோதுகூட, 2005–2006 ஆம் ஆண்டிற்குள் அனைத்து பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், ஆதி திராவிட மாணவ, மாணவியர் விடுதிகள் கட்டி முடிக்கப்படும் என்று இதே அவையில் ஒரு வாக்குறுதி அளித்தார்கள். அதை மனதில் வைத்து, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் உள்ள பெட்டைக்குளம், ராதாபுரம், பணகுடி ஆகிய மூன்று பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளும் வாடகைக் கட்டடங்களில் இயங்குவதைக் கருத்தில் கொண்டு, அவற்றிற்கு இந்த ஆண்டு கட்டடம் கட்டித்தர முன்வருவார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



2005 மார்ச் 29]

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் குறிப்பிட்டேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 972 மாணவர் விடுதிகளில் மாணவர்கள் அடிப்படை வசதிகள் இல்லாமல் மிகவும் வேதனைப்பட்டிருந்த நிலைமையை மனித நேயத்தோடு அணுகி, நிதிநிலைமை சீர் இல்லாவிட்டாலும்கூட, 770 விடுதிகளில் 630 விடுதிகளுக்கு உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். அதிலே நீங்கள் கூறிய அந்தக் கட்டடம் வருகின்றது. அந்த ஊரில் சர்வே எண் 306/4–ல் 10 எக்டேர் நிலம் தேர்வு செய்யப்படுகிறது என்பதைத்தான் நான் இந்த ஆண்டு பரிசீலனையில் உள்ளது என்று குறிப்பிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்லாமல், அனைத்து விடுதிகளுக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கட்டடம் கட்டிக் கொடுக்கவேண்டுமென்ற நோக்கோடுதான்—இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு வரலாறு படைக்கின்ற வகையிலே—இன்று பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருடைய கல்விக்காக 95 சதவிகிதம் நிதி ஒதுக்கப்பட்டு, 630 விடுதிகளுக்கு கட்டடங்கள் கட்டப்படவிருக்கின்றன (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைப் பணிவோடு இந்த அவைக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** இன்னும் ஒரு கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஞ்சிய கேள்வி பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு) பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்... (குறுக்கீடு) அப்பாவு, கேளுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரம் முடிந்துவிட்டது என்றீர்கள். கேள்வி கேட்கவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேளுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** என்னுடைய பெட்டைக்குளம் அரசு மாணவர் விடுதி வாடகைக் கட்டடத்திலே இயங்குகிறது. அதற்கு இந்த ஆண்டு கட்டடம் கட்டித் தரப்படும் என்று சொன்னார்கள். அதேபோன்று, பணகுடி, ராதாபுரம் ஆகியவற்றிற்கும் இந்த ஆண்டில் கட்டடம் கட்டித் தருவதற்கு, அந்த 630 மாணவர் விடுதிகளில் இவையும் சேர்க்கப்பட்டிருக்கின்றனவா என்பதையும் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

[2005 மார்ச் 29

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கும் உண்டு. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவு வழங்கியிருக்கிறார்கள் என்பதைப் பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. பேச வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென திரு. மு. அப்பாவு கோரிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110—ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அப்பாவு, உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தத் தமிழகச் சட்டமன்றத்தில் சுயேச்சை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றேன். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து உட்காருங்கள். அப்பாவு பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. மு. அப்பாவு:** மூன்று வருடங்கள் ஆகிவிட்டன, என்னைப் பேச விட்டு. இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலாவது என்னைப் பேச விடுவீர்களா? 20, 30 தடவைகள் உங்களிடம் வந்து கேட்டு விட்டேன். எந்தவிதமான...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. ஏற்கெனவே கட்சிகளின் சார்பாகப் பேசுவதற்கு நிறைய பேர்கள் தங்கள் பெயர்களைத் தந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நேரம் ஒதுக்கியதற்குப் பிறகுதான், சுயேச்சை உறுப்பினரான உங்களுக்கு நேரம் ஒதுக்க முடியும். அதுதான் என்னுடைய நிலைமை. தயவுசெய்து உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2005 மார்ச் 29] முற்பகல் 11-05

**திரு. மு. அப்பாவு:** சுயேச்சை உறுப்பினர் பேசுவதற்கு வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் கிடைக்கின்றபோது நிச்சயமாக வாய்ப்புத் தருகின்றேன், உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** 20, 30 தடவைகள் கேட்டுவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் கிடைக்கின்றபோது நிச்சயமாக ஒதுக்கித் தருகின்றேன், உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** **

(திரு. மு. அப்பாவு நின்று கொண்டு ஏதோ கூறிக்கொண்டிருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிக்கை முடியட்டும். பிறகு கேட்கலாம். பேரவை விதி 110-ன்கீழ் (குறுக்கீடு) மற்றவற்றை அறையிலே வந்து கேளுங்கள். திரு. அப்பாவு, அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடு) என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். திரு. அப்பாவு, தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் வேண்டுமென்றே பண்ணுகின்றீர்கள் என்பது தெரிகின்றது. உங்களுக்கு மீதம் வைத்துவிட்டுப் போயிருக்கின்றார்கள்போல் இருக்கிறது, உட்காருங்கள். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்காதீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. அப்பாவு, அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்காதீர்கள், உட்காருங்கள்.

(திரு. மு. அப்பாவு அவையிலிருந்து வெளியேறினார்.)

## 4. விதி 110—ன்கீழ் அறிக்கை

### கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் - மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை அளித்தல். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2005 மார்ச் 29

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாடு வளர்ச்சி பெறவும், உயர்நிலை அடைந்திடவும் உறுதுணையாக இருப்பவர்கள் தொழிலாளர்கள். தாங்கள் பிறந்த பொன்னாடு மேன்மை அடைந்திட தங்களது இரத்தத்தை வியர்வைத் துளிகளாக்கி, நல் உழைப்பை நல்குபவர்கள் தொழிலாளர்கள். புது உலகை உருவாக்கும் கரங்களுக்குச் சொந்தக்காரர்கள் தொழிலாளர்கள். அத்தகைய தொழிலாளர்களில் பெரும் பகுதியினர் அமைப்புசாராத் தொழிலாளர்களாகவே உள்ளனர். இத்தகைய அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு ஒரு சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்தித் தருவது அரசின் கடமையாகும்.

நாடு நலம் பெறுவதற்காகத் தங்களது உடல் உழைப்பை நல்குகின்ற தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தவும், அவர்களது பணி நிலைமைகளை மேம்படுத்தி, அவர்களது வாழ்வு வளம் பெற்றிடவும்; சமுதாயத்தில் அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளித்திடவும், இந்தியாவிலேயே முதன்முறையாக, 1982 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்தபோது, தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம் என்ற ஒரு முழுமையான சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்தில், உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கு நலத் திட்டங்களை உருவாக்கவும், அவற்றைச் செயல்படுத்துவதற்கு வாரியத்தினை அமைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது, 1994 ஆம் ஆண்டில் கட்டுமானத் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கும்பொருட்டு, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தை உருவாக்கினேன். மேலும், 1994 ஆம் ஆண்டே தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டம் என்ற ஒரு திட்டத்தையும் உருவாக்கினேன். இத்திட்டத்தின்கீழ், கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில், 1995 ஆம் ஆண்டு மே மாதம் முதல் கட்டுமானத் தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றார்கள். தற்போது 6,30,812 நபர்கள் இந்த வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். கட்டுமானத் தொழிலாளர்கள் நலத் திட்டத்தின்கீழ் கட்டுமானத் தொழிலாளர்கள் விபத்தில் உயிர் இழக்கும்போது, அவர்களது குடும்பங்களுக்கும், விபத்தில் நிரந்தர முடக்கமோ அல்லது உடல் உறுப்புகள் இழப்போ ஏற்படும்போது அத்தகைய தொழிலாளர்களுக்கும் காப்பீட்டுத் தொகை வழங்க வழிவகை செய்யப்பட்டது.



2005 மார்ச் 29] [செல்வி ஜெ ஜெயலலிதா]

1994 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட கட்டுமானத் தொழிலாளர்கள் நலத் திட்டத்தில் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான வழிமுறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2001 ஆம் ஆண்டு நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, கட்டுமானத் தொழிலாளர்கள் நலத் திட்டத்தின் அடிப்படையில், கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க நான் முடிவு எடுத்தேன். 2001–2002 ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் நலத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பில், கட்டுமானத் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் தொய்வின்றி, தொடர்ந்து செயல்படுத்தப்படுவதற்கு ஏதுவான வழிமுறைகளைக் கண்டறிய, ஓய்வூதிய நிபுணர் ஒருவர் (Actuary) நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் சிறப்புப் பணிப் பிரிவு, அதாவது, Task Force ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. அந்த சிறப்புப் பணிப் பிரிவு அறிக்கையின் அடிப்படையில் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த நான் தற்போது முடிவு எடுத்துள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–10

இதன்படி, 60 வயது நிரம்பிய கட்டுமானத் தொழிலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் தொடர்ந்து ஐந்து வருடங்களாவது பதிவுபெற்ற உறுப்பினராக இருப்பாராயின், அவருக்கு மாதந்தோறும் 200 ரூபாய் ஓய்வூதியமாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

60 வயதுக்கு முன்னரேயே நிரந்தர உடல் முடக்கம் ஏற்பட்டாலோ, அல்லது உடல் நலக் குறைவால் பணி செய்ய இயலாத நிலை ஏற்பட்டாலோ, அவர்களும் மாதந்தோறும் 200 ரூபாய் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர் ஆவர். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு வழங்கப்படும் ஓய்வூதியத்தை, மேற்சொன்ன தகுதிகளின் அடிப்படையில் 2000 ஆம் ஆண்டு முதலே, அவரவர் தகுதிபெற்ற தேதியிலிருந்தே வழங்கவும் நான் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இத்திட்டத்தின்படி, நாளது தேதி வரை, 60 வயது நிரம்பிய 3,021 கட்டுமானத் தொழிலாளர்கள் ஓய்வூதியம் பெறுவார்கள். இதற்கு ஏற்படும் செலவு 1.46 கோடி ரூபாய் ஆகும். மேலும், அடுத்த ஆண்டு, அதாவது 2005–2006 ஆம் ஆண்டு ஓய்வூதியம் பெறத் தகுதி அடையும்

1,752 நபர்களுக்கான ஓய்வூதியத்தையும் சேர்த்து, 4,773 நபர்களுக்கு, வரும் நிதி ஆண்டுக்கு 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவாகும்.

கட்டுமானப் பணியில் ஈடுபடுகின்ற தொழிலாளர்கள் உறுதியான தங்களது உடல் திறனின் அடிப்படையிலேயே அப்பணியை மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் வயது முதிர்ந்த நிலையிலும், நிரந்தர உடல் முடக்கம் மற்றும் உடல் நலக் குறைவு ஏற்படும்போதும், எந்தப் பணியும் செய்ய இயலாத நிலை ஏற்பட்டு, ஒரு அவநம்பிக்கையுடன் வாழ வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகின்றனர். அத்தகையோர் வாழ்க்கையில் ஒரு நம்பிக்கையைப் பெறும் வகையிலும், ஒட்டுமொத்த கட்டுமானத் தொழிலாளர் வர்க்கமும் வாழ்க்கையில் ஒரு பிடிப்பைப் பெறுகின்ற வகையிலும், அவர்களுக்கு ஒரு சமூகப் பாதுகாப்பை இந்தப் புதிய ஓய்வூதியத் திட்டம் வழங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 5. சில எதிர்க்கட்சிகள் அவைக்கு வராமல் புறக்கணிப்பு செய்திருப்பது – மாண்புமிகு முதலமைச்சர் கருத்து

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் சில கருத்துகளைத் தெரிவிப்பது அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இப்போது நான் வெளியிட்டது மிக முக்கியமான ஓர் அறிவிப்பாகும். இந்த நேரத்தில் எதிர்க்கட்சி வரிசைகள் காலியாக உள்ளன. இது மிகவும் வருந்தத்தக்க ஒரு விஷயமாகும். இப்படி சட்டப் பேரவைக்கு வராமல் புறக்கணித்தால், அதனால் எதிர்க்கட்சிகளுக்குத்தான் நஷ்டமே தவிர, எங்களுக்கு, இந்த அரசுக்கு எந்தவிதமான நஷ்டமும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் உண்மையான நஷ்டம் யாருக்கு என்று சொன்னால், இந்த எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாக்களித்து, அவர்கள்மீது நம்பிக்கை வைத்து, அவர்களைத் தேர்ந்தெடுத்து இந்தச் சட்டமன்றத்திற்கு அனுப்பி வைத்தார்களே அவர்களது தொகுதியைச் சார்ந்த வாக்காளப் பெருமக்கள், அவர்களுக்குத்தான் உண்மையிலேயே இதனால் நஷ்டம். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு முன்னால் பேசிய சுயேச்சை உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள், ** என்று மாண்புமிகு பேரவைத் தலைவரைப் பார்த்துச் சொன்னார். எதிர்க்கட்சி உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வெளியேற்றவில்லை. நேற்று ஒரு நாள்தான், அவர்கள் இங்கே தொடர்ந்து

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





அவை நிகழ்ச்சிகளுக்கு இடையூறு விளைவித்துக்கொண்டிருந்ததால், எந்தவிதமான ஆணைக்கும் அவர்கள் கட்டுப்படாததால், நேற்று மட்டும்தான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், அவர்களை வெளியேற்றினார். அப்போதுகூட, நாள் முழுவதும் அவர்கள் இந்த அவையிலிருந்து நீக்கப்படுகிறார்கள் என்று பேரவைத் தலைவர் அறிவிக்கவில்லை. அவர்கள் விரும்பியிருந்தால் உடனேயே, சில நிமிடங்களுக்குப் பிறகு இந்த அவைக்குத் திரும்பி வந்திருக்கலாம். இந்த அவை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டிருக்கலாம். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. மாறாக, அவர்கள் வெளியே சென்று, ஒரு கூட்டம் நடத்தி, ஒரு அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். அந்தக் கூட்டணியிலுள்ள கட்சிகள் எல்லாம் ஒரு வார காலத்திற்கு இந்தச் சட்டமன்றத்தைப் புறக்கணிக்கப் போவதாக அவர்களாகவே அறிவித்திருக்கிறார்கள். நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல், இப்படி இந்த அவையைப் புறக்கணித்தால் அந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தனிப்பட்ட முறையில் வேண்டுமானால் எந்த நஷ்டமும் இல்லாமல் இருக்கலாம். ஆனால், அவர்களை நம்பி வாக்களித்து, இந்த அவைக்கு அனுப்பி வைத்தார்களே, அந்த மக்களுக்கு நஷ்டம், அந்த மக்களுக்கு அவர்கள் செய்கின்ற துரோகம் இது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–15

எண்ணிப் பார்க்க வேண்டும். நாள்தோறும் எத்தகைய முக்கியமான அறிவிப்புகளை இந்த அவையில் வெளியிட்டு வருகிறேன். நான் செய்கின்ற இந்த அறிவிப்புகளால் இலட்சக்கணக்கான மக்களுக்கு நலன்கள் கிடைக்கின்றன. இலட்சக்கணக்கான மக்கள் சலுகைகளைப் பெறுகிறார்கள். இலட்சக்கணக்கான மக்களுக்குப் பயனுள்ள நற்பயன்கள் கிடைக்கின்றன. இன்றையதினம் கட்டுமானத் தொழிலாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றி வைத்தேன். நேற்றையதினம் தமிழகத்திலுள்ள 86 இலட்சம் ஏழை நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் பயன்பெறும்வண்ணம் அவர்களுக்கு ஊதிய உயர்வை அறிவித்தேன். அதற்கு முன்னால், சில நாட்களுக்கு முன்பு, ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் அத்தனை பேருக்கும் இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படும் என்று அறிவித்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றையெல்லாம் எதிர்க்கும் சட்டமன்ற உறுப்பினர்கள், இவற்றை எல்லாம் புறக்கணிக்கும் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் ஒன்றை மறந்துவிடக் கூடாது. அரசு அறிவித்துள்ள இந்தத் திட்டங்களால் அந்த

எதிர்க்கட்சி சட்டமன்றத் தொகுதிகளில் வாழ்கின்ற மக்களும் பயன்பெறுகிறார்கள் என்பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்தகைய மக்களுக்கு வழங்கப்படும் நலன்களை இந்த அரசு அறிவிக்கக் கூடாது, மக்களுக்கு இத்தகைய உதவிகள், சலுகைகள் கிடைக்கக் கூடாது என்று இந்த எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் தடை செய்யப் பார்த்தார்களானால், அவர்கள்மீது அவர்கள் தொகுதி மக்களே கோபப்படுவார்கள், ஆத்திரப்படுவார்கள் என்பதை அவர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றன்பின் ஒன்றாக இந்த அவையில் நான் வெளியிட்டு வரும், இதுவரை வெளியிட்டுள்ள அறிவிப்புகளால் மக்கள் மனம் குளிர்ந்து போய் இருக்கிறார்கள். மக்கள், எங்கள் வயிற்றில் பால் வார்த்தீர்கள் என்று கூறுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள், எங்கள் வயிற்றில் பால் வார்த்தீர்களே என்று வாழ்த்துகிறார்கள். ஆனால் எதிர்க்கட்சி உறுப்பினர்களோ, மக்களுக்கு நன்மைகள் கிடைப்பதைப் பார்த்து வயிறு எரிகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தகைய திட்டங்களை யாராவது வேண்டாம் என்று சொல்வார்களா? ஆனால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சொல்கிறார்கள்.

நேற்றையதினம் தொலைக்காட்சியில் அனைவருமே பார்த்து இருப்பார்கள். ஒரு மூத்த உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், விதி 110–ன்கீழ் முதலமைச்சர் இத்தகைய அறிவிப்புகளை வெளியிடுவதே தவறு என்று வாதாடினார். கிட்டத்தட்ட 30 நிமிடம் நேற்று திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் நான் வெளியிட்ட மிக முக்கியமான அறிவிப்பை வெளியிடவிடாமல் தடுத்துப் பார்த்தார். நேற்றையதினம் இந்தக் காட்சிகளைப் பார்த்த 86 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களின் வயிறு எரிந்திருக்காதா? (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு நான் செய்த உதவியை, அவர்களுக்கு நான் கொடுக்க விரும்பிய நலன்களைத் தடுக்கப் பார்த்தாரே திரு. எஸ்.ஆர்.பி., அந்த 86 இலட்சம் ஏழையெளிய நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் எஸ்.ஆர்.பி. அவர்களை சபித்திருக்கமாட்டார்களா? (மேசையைத் தட்டும் ஒலி)

நேற்றையதினம் அனைவருமே தொலைக்காட்சியில் பார்த்திருப்பார்கள். ஏறக்குறைய 30 நிமிட நேரம் திரு. எஸ்.ஆர்.பி. இந்த அவையில் நின்று பேசினாரே, கூச்சல் போட்டாரே, சத்தம் போட்டாரே, அவர் தொகுதியைப் பற்றி ஏதாவது பேசினாரா? என் தொகுதிக்காக இதைச் செய்து கொடுங்கள், அதைச் செய்து கொடுங்கள் என்று ஏதாவது ஒரு கோரிக்கையை அரசுக்கு எடுத்து வைத்தாரா? என் தொகுதி மக்களுக்காக இதைச் செய்து கொடுங்கள் என்று ஏதாவது ஒரு பயனுள்ள கோரிக்கையை வைத்தாரா? இல்லையே!



2001–ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின்போது திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் எங்கள் கூட்டணியில் நின்றுதான் வெற்றி பெற்று இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது தேர்தல் பிரச்சாரத்தின்போது திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இனிக்க, இனிக்கப் பேசினார். என் பிரச்சார வாகனத்திற்குப் பின்னால் ஓடோடி வந்தார். ஓடோடி வந்து, ஓடி வருகிறாரே என்று வண்டியை நிறுத்தி, என்னவென்று கேட்டால், அம்மா, எனக்காக இன்னும் ஒரே ஒரு இடத்தில் வந்து நீங்கள் வாக்கு சேகரித்து விட்டுப் போங்கள். இன்னும் ஒரே ஒரு இடத்திற்கு வந்து பேசிவிட்டுப் போங்கள் என்று கேட்பார். அவர் கேட்கிறாரே என்று நானும் சென்று, அவர் கேட்கின்ற இடங்களில் எல்லாம் நானும் பேசினேன். அவரும் தேர்ந்தெடுக்கப்பட்டார். எம்.எல்.ஏ. ஆனார். இந்தச் சட்டமன்றத்திற்கு வந்தார். இன்றையதினம் திரு. எஸ்.ஆர்.பி. அதையெல்லாம் மறந்துவிட்டார்.

முற்பகல் 11–20

“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு”

என்று சொல்வார்கள். இன்றையதினம் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் அதையெல்லாம் மறந்துவிட்டார். நான் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. தனிப்பட்ட முறையில் எனக்கு அவர் காட்டவேண்டிய நன்றியைக் காட்டவில்லையே என்று நான் வருத்தப்படவேயில்லை. ஏனென்றால், திரு. எஸ்.ஆர்.பி. போன்றவர்களுக்கு இது வாடிக்கை. தேர்தல் நேரத்தில் கூட்டணியிலிருக்கும்போது இனிக்க, இனிக்கப் பேசுவார்கள். அந்த நேரத்தில் தேர்தலில் வெற்றிபெற வேண்டுமென்பதற்காக எப்படி வேண்டுமானாலும் அவர்கள் பேசுவார்கள். வெற்றி பெற்ற பிறகு, இந்த அவைக்கு வந்ததும் எல்லாவற்றையும் மறந்துவிடுவார்கள். ஆகவே, இதெல்லாம் எனக்குப் பழகிப்போன விஷயம்தான். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் எனக்குக் காட்டவேண்டிய நன்றியை மறந்துவிட்டாரே என்று நான் ஒருபோதும் கவலைப்பட்டதில்லை, கவலைப்படவும் மாட்டேன். ஆனால், தனக்கு வாக்களித்து, இந்தச் சட்டமன்றப் பேரவைக்கு அனுப்பி வைத்தார்களே, அவருடைய தொகுதி மக்கள், அவர்களுக்குக் காட்டவேண்டிய நன்றியை, (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமையை திரு. எஸ்.ஆர்.பி. மறந்துவிட்டாரே! எனக்கு நன்றி காட்டவேண்டாம். ஆனால், அவர்மீது நம்பிக்கை வைத்து, வாக்களித்து, அவரைச் சட்டமன்ற உறுப்பினராக்கி, தங்களுக்காக எதுவும் செய்வார் என்று நம்பி இந்த அவைக்கு அனுப்பி

வைத்தார்களே, அந்த வாக்காளப் பெருமக்களுக்கு திரு. எஸ்.ஆர்.பி. காட்டுகின்ற நன்றி இதுதானா? அவர்களுக்கு அவர் ஆற்றுகின்ற கடமை இதுதானா? ஆகவே, இந்த நேரத்தில் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்று இந்த அவையைப் புறக்கணிக்கும் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருமே இந்தப் பேரவையைப் புறக்கணிக்கவில்லை. அவர்கள் தொகுதி மக்களை, வாக்காளப் பெருமக்களைப் புறக்கணிக்கிறார்கள் என்றுதான் அர்த்தம். (மேசையைத் தட்டும் ஒலி) அதை அவர்கள் நினைவில் கொள்ளவேண்டும்.

பொதுவாக, அரசியல்வாதிகள் யாராகயிருந்தாலும், எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாகயிருந்தாலும், மக்களுக்கு நன்மைகள் கிடைக்கிறபோது, அரசால் மக்களுக்குப் பல சலுகைகள், உதவிகள் கிடைக்கின்றபோது மகிழ்ச்சி அடைய வேண்டும், நெஞ்சார வாழ்த்த வேண்டும், வாழ்த்தவில்லையென்றாலும், பேசாமலாவது இருக்க வேண்டும். எங்கள் தொகுதி மக்களுக்கும் இத்தனை நன்மைகள் கிடைக்கின்றனவே என்று அவர்கள் மனதுக்குள்ளேயாவது சந்தோஷப்பட வேண்டும். ஆனால், மாறாக நாம் பார்க்கின்ற காட்சி, இத்தகைய அறிவிப்புகளை நான் செய்கின்றபோது, பொறுத்துக்கொள்ள முடியாமல் எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.–க்கள் வயிறு எரிகிறார்கள், அதைத் தடுக்கப் பார்க்கிறார்கள். இந்த அவையையே புறக்கணிப்போம் என்கிறார்கள். இத்தகைய அரசியல்வாதிகளை இதுவரை நான் பார்த்ததேயில்லை. எந்தக் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினராகயிருந்தாலும் தன்னுடைய தொகுதி மக்களுக்கு சில நன்மைகள் கிடைக்கின்றன என்றால் மகிழ்ச்சி அடைவார். ஆனால், அந்த மகிழ்ச்சியையே இவர்களிடம் காணோமே!

திரு. கருணாநிதி அவர்களைப் பொறுத்த வரையில், அவர் எப்போதுமே மக்கள் விரோத அரசியல் நடத்துபவர். திரு. கருணாநிதி அவர்களின் தி.மு.க. கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் தலைமைக்குக் கட்டுப்பட்டாக வேண்டும். ஆகவே, திரு. கருணாநிதி அவர்கள் இந்தச் சட்டப் பேரவைக்குச் செல்லவேண்டாம் என்று சொன்னால், அவர்களுக்கு வேறு வழியில்லை. கட்டுப்பட்டுத்தான் ஆகவேண்டும். ஆகவே, தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தலைவர் பேச்சைக் கேட்டு, தங்கள் தலையில் தாங்களே மண்ணை அள்ளிப் போட்டுக்கொள்கிறார்கள். ஆனால், காங்கிரஸ் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகள், இவர்களும் திரு. கருணாநிதி அவர்களின் தவறான வழிகாட்டுதலின்பேரில், தங்கள் தலையில் மண்ணை அள்ளிப்



போட்டுக்கொள்கிறார்களே! (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) எல்லாம் தெரிந்த இவர்கள், கண்ணிருந்தும் குருடாக இருக்கின்றவர்கள், திரு. கருணாநிதி அவர்கள் விரிக்கின்ற வலையில் தாங்களாகப் போய் விழுகிறார்களே! (மேசையைத் தட்டும் ஒலி) திரு. கருணாநிதி தோண்டியுள்ள புதைகுழியில் தாங்களாகப் போய் விழுகிறார்களே! (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அவர்கள் என்ன திரு. கருணாநிதியின் அடிமைகளா? திரு. கருணாநிதிதான் அவர்களுக்குக் கட்சித் தலைவரா? திரு. கருணாநிதி சொல்கிறார் என்பதற்காக, காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும், பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்களும், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் தங்கள் மனசாட்சியைக் கொன்று ஏன் இந்த அவையைப் புறக்கணிக்க வேண்டும்? தங்கள் தொகுதி மக்களுக்கு ஏன் இவ்வாறு துரோகம் இழைக்க வேண்டும்?

கம்யூனிஸ்ட் கட்சிகள் நாள்தோறும் வாய் கிழிய விவசாயத் தொழிலாளர்களைப் பற்றிப் பேசுகிறார்களே, தொழிலாளர் பெருமக்களைப் பற்றிப் பேசுகிறார்களே, நேற்றையதினம், இந்த மாநிலத்தில் உழைக்கின்ற 86 இலட்சம் நிலமற்ற ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்களுக்காக அறிவித்தேனே சலுகைகள், அதை இன்று அவர்கள் வந்து பாராட்டியிருக்க வேண்டாமா? உண்மையிலேயே மக்கள்மீது அக்கறை கொண்ட சட்டமன்ற உறுப்பினர்கள் என்றால், இந்த அவையிலேயே இருந்து அறிவிப்பைக் கேட்டு, அந்த நேரத்திலேயே எழுந்து அரசுக்கு நன்றி தெரிவித்திருக்க வேண்டாமா? பாராட்டியிருக்க வேண்டாமா? அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கை இதுதானே? கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அடிக்கடி என்னைப் பார்த்து, இந்தக் கோரிக்கையை நிறைவேற்றி வையுங்கள் என்று எத்தனையோ முறை கேட்டிருக்கிறார்கள், இதற்கு முன்பு கேட்டிருக்கிறார்கள். ஆனால், செய்கின்ற நேரத்தில் அதைக் கேட்க அவர்களுக்கு மனமில்லை. வாழ்த்த அவர்களுக்கு மனமில்லை. ஆகவே, இதையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம், ஏதோ, யாரையோ திருப்தி செய்ய வேண்டும் என்பதற்காக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்கள் தலையில் தாங்களே மண்ணை அள்ளிப் போட்டுக்கொள்கிறார்கள் என்பதை அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்று அவர்கள் தங்கள் தொகுதி மக்களைப் புறக்கணிக்கிறார்கள். இந்த அவையைப் புறக்கணிப்போம் என்று சொல்வதால், இந்தச் சட்டமன்றத்தைப் புறக்கணிப்போம் என்று சொல்வதால் தங்கள் தொகுதி மக்களைப் புறக்கணிக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வரும் சட்டமன்றத் தேர்தலில், அடுத்த

ஆண்டில் அவர்களது தொகுதி மக்கள் அவர்களைப் புறக்கணிப்பார்கள், இது நிச்சயம் நடக்கும் என்பதைச் சொல்லி, அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

*முற்பகல் 11–25*

## 6. கவன ஈர்ப்பு

### தளி தொகுதி, அக்கொண்டப்பள்ளி—அனுசோனை மற்றும் கெலமங்கலம்—தேன்கனிக்கோட்டை தார்ச் சாலைகளை உடனடியாகச் செப்பனிட வேண்டிய அவசியம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. எச். ராஜா, திரு. கே.வி. முரளிதரன், திரு. கே.என். இலட்சுமணன், திரு. வே. கிருஷ்ணமூர்த்தி மற்றும் திரு. கே. கோபிநாத் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கே.வி. முரளிதரன்.

***திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதிக்குட்பட்ட அக்கொண்டப்பள்ளி முதல் அனுசோனை வரையிலும், கெலமங்கலம் முதல் தேன்கனிக்கோட்டை வரையிலும் உள்ள தார்ச் சாலையை உடனடியாகச் செப்பனிட வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

### அறிக்கை

**1. அக்கொண்டப்பள்ளி முதல் அனுசோனை வரை:**

கிருஷ்ணகிரி (நெ) கோட்டத்திற்குட்பட்ட இராயக்கோட்டை-- அத்திப்பள்ளி சாலை கி.மீ. 0/0–39/8 எனும் 39.80 கி.மீ. நீளமுடைய அரசு மாநில நெடுஞ்சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 15/0–27/0 வரை உள்ள சாலை ஒரு வழித்தடப் பகுதியாகும். தற்போது கி.மீ. 22/0–29/0 வரை உள்ள பகுதி 2004–2005 ஆம் ஆண்டு மாநில மற்றும் மாவட்ட நெடுஞ்சாலை உறுதிப்படுத்தும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு,



ரூ.188.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, இம்மாத இறுதிக்குள் ஒப்பந்தம் கோரப்படவுள்ளது. மீதமுள்ள கி.மீ. 15/0–22/0 வரை உள்ள பகுதி 2005–2006 ஆம் நிதியாண்டில் மாநில நெடுஞ்சாலைகள் மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்யப்படும்.

**2. கெலமங்கலம் முதல் தேன்கனிக்கோட்டை வரை:**

இச்சாலையானது, கிருஷ்ணகிரி (நெ) கோட்டத்திற்குட்பட்ட தேன்கனிக்கோட்டை– கெலமங்கலம் சாலை கி.மீ. 0/0–12/8 எனும் 12.80 கி.மீ. நீளமுடைய அரசு மாவட்ட முக்கியச் சாலையாகும். இச்சாலை மேம்பாட்டுப் பணி--2005–2006 ஆம் நிதியாண்டில் மாவட்ட முக்கியச் சாலைகளை மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்யப்படும்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றாகப் படித்துப் பார்த்தேன். 2005–2006 ஆம் ஆண்டில் இந்த இரண்டு சாலைகளும் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்கிறேன். 2004–2005–ல் ரூ.10 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சரால் அறிவிக்கப்பட்டது. அந்த நிதி எந்தெந்தச் சாலைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்குமாறு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி நெடுஞ்சாலைக் கோட்டத்திற்குட்பட்ட இராயக்கோட்டை முதல் அத்திப்பள்ளி சாலை கி.மீ. 0/0–லிருந்து 39/8 எனும் 39.80 கி.மீ. நீளமுடைய அரசு மாநில நெடுஞ்சாலைகள் அமைந்துள்ள இரண்டு ஊர்கள் அக்கொண்டப்பள்ளி மற்றும் அனுசோனை. கி.மீ. 0/0–லிருந்து இராயக்கோட்டை தொடங்குகிறது. கி.மீ. 39/8, நமது மாநில எல்லை ஒத்தகொண்டப்பள்ளி என்ற ஊருடன் முடிகிறது. அத்திப்பள்ளி கர்நாடக மாநிலத்தில் 6 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள ஊர். கி.மீ. 15/0, அனுசோனை என்ற ஊரிலிருந்து ஆரம்பிக்கின்ற சாலையாகும். கி.மீ. 23/0, அக்கொண்டப்பள்ளி அமைந்துள்ள ஊர். 22 கி.மீ. முதல் 29 கி.மீ.,--6 கி.மீ. நீளமுள்ள பகுதி 2004–2005 ஆம் ஆண்டு மாநில நெடுஞ்சாலை உறுதிப்படுத்தும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, இந்த ஒரு வழிப் பாதையை உறுதிப்படுத்த ரூபாய் 64 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. தற்போது 2005–2006 மாநிலச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் கி.மீ. 12/0 முதல் 28/0 வரை உள்ள 16 கி.மீ. தூரம், ரூபாய் 275 இலட்சத்திற்கு இரு வழிப் பாதையாக அகலப்படுத்தி

உறுதிப்படுத்த அனுமதி அளிக்கப்படவுள்ளது. கி.மீ. 0/0 முதல் 12/0, இப்பகுதி, காவேரிப்பட்டினம் தொகுதியைச் சார்ந்த ஒரு வழிப் பாதையாகவும், இப்பகுதி கடந்த 10 ஆண்டுகளாக சரிவர அதனுடைய தார் நொடிகள் சீராகப் போடப்பட்டு போக்குவரத்துக்கு ஏற்றதாக அந்தச் சாலை உள்ளது என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன். கி.மீ. 29 முதல் 39/8, இப்பகுதி ஓசூர் தொகுதியைச் சார்ந்த இரு வழிப் பாதையாகும். தற்போது அந்தச் சாலை நல்ல நிலையில் உள்ளது என்பதனையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரின் விளக்கத்திற்கு நன்றி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கிறபோது, 2004–2005–க்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த நிதி எந்தெந்தச் சாலைகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–30

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளி தொகுதியில் மட்டும் 2005–2006 நிதியாண்டில் ரூ.354 இலட்சத்திற்கு மாநிலச் சாலையையும், ரூ.553 இலட்சத்திற்கு மாவட்ட முக்கியச் சாலையையும், ரூ.728 இலட்சத்திற்கு மாவட்ட இதர சாலைகளையும் மேம்படுத்த மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் அனுமதி வழங்கப்பட உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

## 7. அறிக்கைகள் அளித்தல்

### (அ) அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல், அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல், திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2005 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து ஆறாவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.





### (ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், திருமதி வளர்மதி ஜெபராஜ்.

***திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2005 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்து ஐந்தாவது மற்றும் ஐம்பத்து ஆறாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 8. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 13 – எரிசக்தித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005–2006 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீதான விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 13—எரிசக்தித் துறை, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,093,36,73,000/–, மூலதனக் கணக்கில் ரூ.25,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.108,61,81,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2273, திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3444, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4305, திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4612, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5249, திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5777, திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6314, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6585, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7199, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7227, திரு. ஆ. ராஜகோபால், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7386, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3231, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3839, திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5619, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6496, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3965, திரு. டி. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6349, திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2795, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3272, திரு. லா. சந்தானம்.



**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,093,36,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,61,81,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2728, திருமதி டி. யசோதா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2980, திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 225, திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4146, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4589, திரு. ஆர். கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 619, திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3336, திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3154, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3203, திரு. அ. அசோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5203, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6848, திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதியில் கோட்டையூர் ஊராட்சிக்குட்பட்ட ஜுன்மானநத்தம்

[திரு. கே.வி. முரளிதரன்] [2005 மார்ச் 29

கிராமத்தில் குறைந்த மின் அழுத்தம் (low voltage) உள்ளதால் அதைச் சீர் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,093,36,73,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,61,81,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5884, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7251, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4439, திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6232, திரு. சி. சண்முகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6386, திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6148, திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

## (ஆ) கோரிக்கை எண் 24 – உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 24—உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.57,69,11,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2005 மார்ச் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2054, திரு. வி. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2092, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2819, திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3046, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3507, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4645, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5407, திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6243, திரு. சி. சண்முகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6320, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7156, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7201, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3225, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3870, திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5699, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6790, திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.57,69,11,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5210, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4486, திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4350, திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7280, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6019, திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6495, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3334, திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3266, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் வருமானத்தைப் பெருக்குவதற்கு, தனியார் பேருந்துகள் பல தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வழித்தடங்களை மாற்றிச் செல்வதைத் தடுக்க கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.57,69,11,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7293, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7507, திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4086, திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை.

## (இ) கோரிக்கை எண் 46 – போக்குவரத்துத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 46— போக்குவரத்துத் துறை, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.269,51,55,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.12,000/— ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2932, திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3676, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4201, திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6280, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5965, திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6399, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6615, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6699, திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7204, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

முற்பகல் 11–35

வெட்டுத் தீர்மானம் எண் 7295, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3286, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3779, திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5562, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2773, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7508, திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3943, திரு. டி. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6712, திரு. க. பாரமலை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4162, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6494, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6215, திரு. ப. அரசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6028, திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 6262, திரு. சி. சண்முகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6379, திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5921, திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5188, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5478, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5456, திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5451, திரு. மு.பெ. சாமிநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4573, திரு. ஆர். கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3331, திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3246, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வளர்ந்து வருகின்ற மக்கள் தொகையைக் கணக்கில் கொண்டு பேருந்து வசதிகளை மேலும் அதிகரிப்பதன் அவசியம் குறித்தும், பேருந்துப் போக்குவரத்து இல்லாத கிராமங்களே இல்லை என்ற இலக்கை எட்ட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.269,51,55,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2036, திரு. எ.வ. வேலு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1972, திரு. அன்பில் பெரியசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3076, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3242, திரு. அ. அசோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 648, திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7003, திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேன்கனிக்கோட்டை வட்டத்தில் அனைத்துப் பேருந்துகளிலும் ஊர்ப் பெயர்களைத் தெலுங்கு மொழியில் எழுத வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.269,51,55,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7210, திரு. ஆ. ராஜகோபால், இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரிசக்தித் துறை மானியக் கோரிக்கை எண் 13, உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் மானியக் கோரிக்கை எண் 24 மற்றும் போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கை எண் 46 ஆகிய மானியக் கோரிக்கைகள்மீதான கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த

@ 117 முதல் 184 வரையிலான பக்கங்களில் இணைப்புகள்-I, II மற்றும் III ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். திரு. ஜெக. வீரபாண்டியன்.

***திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேச முன்னேற்றத்தில் முக்கியப் பங்கு வகிக்கிற போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை மானியக் கோரிக்கைகளில் என்னைப் பேசப் பணித்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாமன்றத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கட்டுமானத் தொழிலாளர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, 60 வயதுக்கு மேற்பட்ட கட்டுமானத் தொழிலாளர்களுக்குப் பல்வேறு சலுகைகளை அளித்தும், அவர்கள் வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கின்ற வகையிலே, 60 வயது முதிர்ந்த பிறகு 200 ரூபாய் மாத உதவித் தொகை கொடுப்பதை உறுதி செய்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, தொழிற்சங்க நடவடிக்கைகளிலே ஈடுபாடு காட்டக்கூடியவன் என்ற முறையிலும், பாரதிய ஜனதா கட்சியின் சார்பாகவும் என் நெஞ்சார்ந்த நன்றியையும், பாராட்டுதலையும் நான் முதற்கண் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று எதிர்க்கட்சிகள் ஒட்டுமொத்தமாகச் சபைக்கு வரவில்லை. நான் நினைத்த கருத்துகளைத்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்கூட இங்கே பேசியிருக்கிறார்கள். நான் இன்றைக்குப் பத்திரிகையிலே பார்க்கின்றபோது, ஒரு வார காலம் முற்றிலும் சபையைப் புறக்கணிக்கப் போவதாகச் செய்தி வெளிவந்திருக்கிறது. சபைக்கு வராததன்மூலம் அவர்கள் எதைச் சாதிக்கப் போகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவருடைய கோபத்தைக்கூட கொஞ்சம் நியாயப்படுத்த முடியும். அவர்கள் நேரடியாக அமைச்சரோடு வாதிட்டார்கள், வெளிநடப்புச் செய்தார்கள், அவையைப் புறக்கணித்திருக்கிறார்கள். அதைக்கூட என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் மூத்த உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இந்த

அவை நடவடிக்கையை ஒரு வார காலம் புறக்கணிப்பதை ஒரு சராசரி அரசியல்வாதி என்ற முறையிலே என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. தான் மட்டும் அல்லாமல், ஒழுங்காக சபையிலே ஏதாவது பேசிக் கொண்டிருக்கிற நன்மாறன் போன்றவர்கள் சார்ந்திருக்கின்ற இயக்கங்கள், பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்தவர்களைக்கூட அவர் சேர்த்து அழைத்துச் சென்றிருப்பது எனக்கு வியப்பாக இருக்கிறது. எங்கள் ஊரிலே ஒரு பழமொழி சொல்வார்கள், "மேய்கிற மாட்டை நக்குகிற மாடு கெடுத்துவிடும்" என்று. (மேசையைத் தட்டும் ஒலி) அது மாதிரி, எஸ்.ஆர்.பி. அவர்கள் மக்கள் பணியாற்ற மறந்தது மட்டுமல்லாமல், தன்னோடு ஒட்டியிருக்கிற அத்தனை கட்சிக்காரர்களையும் அழைத்துச் செல்வதை எவ்வாறு மக்கள் புரிந்துகொள்வார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. உண்மையிலேயே முதலமைச்சர் சொல்லியதைப்போல, தனக்கு வாக்களித்து, எங்களைப் பற்றிப் பேசுங்கள் என்று இவர்களை ஆதரித்த மக்களைத்தான் அவர்கள் வஞ்சித்திருக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய கணிப்பு. ஆகவே, இப்படிப்பட்ட ஜனநாயக விரோத, மக்கள் விரோத நடவடிக்கைகளிலே ஈடுபட்டுக்கொண்டிருப்பதை, பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையிலே நமது அரசு எடுத்த சிக்கன நடவடிக்கையின்மூலமாகவும், நிர்வாகச் சீர்திருத்தத்தின் காரணமாகவும், இன்றைக்கு இந்தத் துறை இலாபகரமாகச் சென்றுகொண்டிருப்பதை அறிந்து நான் மகிழ்ச்சியடைகிறேன். இப்படிப்பட்ட சிக்கன நடவடிக்கையின் மூலமாகவும், நிர்வாகச் சீர்திருத்தமும் இலாபத்தைத் தந்திருந்தாலும்கூட, தொழிலாளர்கள் மத்தியிலே ஒரு மனக் குறை இருக்கிறது. அதை இந்த அரசு போக்க வேண்டும். ஊதியம் தொடர்பான பேச்சுவார்த்தை, அந்த settlement என்பது, கடந்த 4, 5 ஆண்டு காலமாகக் கிடப்பிலே இருக்கிறது என்று அவர்கள் முறையிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து சட்டமன்றத்திலே பல்வேறு சமயங்களில், நமது கம்யூனிஸ்ட் கட்சியினர்கூட இந்தப் பிரச்சினையை எழுப்பியபோது, நான் ஏற்கெனவே தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களும் ஏற்கெனவே தெளிவாக இதுசம்பந்தமாக அறிக்கையினை வெளியிட்டிருக்கிறார்கள். மீண்டும் உங்களுக்கு நான் அன்போடு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



நமது போக்குவரத்துத் துறையைப் பொறுத்த அளவிலே, ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை—wage settlement—இதுவரை போடாமல் இருப்பதற்குக் காரணம், அரசோ அல்லது போக்குவரத்துத் துறையோ அல்ல என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறோம். மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். காரணம், இன்றைக்கு சில போக்குவரத்துத் தொழிற்சங்கங்கள், பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று சொல்லி, நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போன்ற கம்யூனிஸ்ட் கட்சிகளினுடைய தொழிற்சங்கங்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொழிற்சங்கமும் இன்றைக்கு நீதிமன்றத்திற்குச் சென்று, ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட தொழிற்சங்கப் பிரதிநிதிகளை வைத்துத்தான் ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று ஒரு தரப்பினரும், புதியதாகத் தேர்தல் நடத்தி, அதன்மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படும் அந்தப் பிரதிநிதிகளை வைத்துத்தான் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று ஒரு பகுதியினரும், ஆனால், பதிவு பெற்ற, தேர்ந்தெடுக்கப்படாத, இதர தொழிற்சங்கங்கள் அனைத்தும், இன்றைக்கு அனைவரையும் அழைத்துப் பேச வேண்டுமென்று சொல்லி—ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தைக்கு அனைவரையும் அழைக்க வேண்டுமென்று சொல்லி—அவர்களும் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். ஆகவே, நீதிமன்றத்தில் இந்தப் பிரச்சினை இருப்பதால், பேச்சுவார்த்தை நடத்த முடியவில்லை. இருந்தாலும்கூட, இந்தச் சூழ்நிலையை அறிந்துதான், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தத் தொழிற்சங்கங்களால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அறிந்து, உடனடியாக, தாயுள்ளத்தோடு தானே முன் வந்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்தத் தொழிலாளர்களுக்கு மாதம் 250 ரூபாய் இடைக்கால நிவாரணமாக வழங்கினார்கள் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. இப்போது மீண்டும் கேட்டுக்கொள்கிறோம், அவர்கள் அந்த வழக்கு மன்றத்திலே இருக்கின்ற வழக்குகளை வாபஸ் வாங்கிவிட்டு, நாளைக்கே பேச்சுவார்த்தைக்கு வந்தாலும், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பேசுவதற்குத் தயாராக இருக்கின்றன என்பதைத் தெரிவித்து, நாங்கள் உங்கள்மூலமாக இந்த நேரத்திலே, அனைவருக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே அழைத்த விடுப்பினை மீண்டும் நினைவுபடுத்தி, அனைத்து போக்குவரத்துத் தொழிற்சங்கங்களும் பேச்சுவார்த்தைக்கு, ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தைக்கு, வழக்குகளை வாபஸ் செய்துவிட்டு வர

வேண்டும், வர வேண்டுமென்று மீண்டும் ஒரு முறை அரசின் சார்பாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தெளிவான விளக்கத்திற்கு நன்றி. இன்றைக்கு C.I.T.U. யூனியனையும், தொ.மு.ச.–வையும் தவிர மற்ற தொழிற்சங்கப் பிரதிநிதிகள் எல்லாம் பேசுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். என்றாலும்கூட, தாயுள்ளத்தோடு தமிழக முதல்வர் அவர்கள் விவசாயத் தொழிலாளர்களுக்கும், கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் பல்வேறு சலுகைகளை அறிவித்ததுபோல இவர்களுக்கும் சலுகைகளை வழங்க வேண்டுமென்று நான் உங்கள் சார்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–45*

அதைப்போல, தற்போது தமிழகத்திலே, குறிப்பாக எங்கள் பகுதியில்கூட, சாதாரண கிராமப்புற மக்கள், நகர மக்கள், நடுத்தர ஏழைக் குடும்பங்கள் எல்லாம் திருமணம் போன்ற சுப காரியங்களுக்கும், மற்ற துக்க காரியங்களுக்குக்கூட, Mahindra van போன்ற Maxi cab வேன்களைத்தான் அடிக்கடிப் பயன்படுத்துவார்கள். இன்றைக்கு அந்த Van- உடைய நடமாட்டமே மிகக் குறைவாகக் காணப்படுகிறது. காரணம், நமது அரசு 2003–ல் 9,000 ரூபாயாக இருந்த அந்த வரியை தற்போது 24,000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறது. தொடர்ந்து டீசல் விலை ஏறி வருகிறது. கடந்த ஓராண்டிலே 9 முறை டீசல் விலையை உயர்த்தியிருக்கிறார்கள். டீசல், ஆயில் மற்றும் தேய்மானச் செலவுகளுக்கு மட்டும் மொத்த வருமானத்திலே 85 சதவிகிதத்தை அந்த Van ஓட்டுநர்களே செலுத்துகின்ற ஒரு சூழ்நிலையால் கொஞ்சம்கூட அவர்களுக்கு இலாபம் கிடைப்பது கிடையாது. அதுமட்டுமல்லாமல், இப்படிப்பட்ட Van-களை எடுத்துக்கொண்டு ஆந்திர மாநிலத்திற்குச் சென்றாலோ, அல்லது கர்நாடகத்திற்குச் சென்றாலோகூட, அவர்கள் அதிக அளவிலே ஸ்தல வரி என்று சொல்லி, அதில் பயணிக்கின்ற பயணிகளுக்கும் ஒரு நபருக்கு 220 ரூபாய் வீதம் வசூலிக்கிறார்கள். ஒரு வாகனத்திற்கு ஏறத்தாழ ரூ.2,640 திருப்பி சந்தாவாகக் கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட காரணங்களால் அந்த Van ஓட்டுநர்கள் அனைவரும்—Van உரிமையாளர்கள் எல்லாம் இப்போது Van-ஐ விற்று விட்டு ஓட்டுநர்கள் ஆகிவிட்டார்கள். பல இடங்களிலே முட்டுக்கட்டை இருக்கிறது. அந்த Van-களுக்கு ஈடாகப் பணம் கடன் கொடுத்த லேவாதேவிக்காரர்கள்கூட அந்த Van-ஐ seize



பண்ணுவது கிடையாது. அந்த வேனை மட்டும் seize பண்ணுவதால் அவர்களுக்கு எந்த இலாபமும் கிடையாது என்பதனால் சொத்துக்களை ஜப்தி செய்கிற நடவடிக்கையை எடுக்கிறார்கள். இதனால் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் Mini bus உரிமையாளர்களுடைய நியாயமான கோரிக்கையை ஏற்று வரியைக் குறைத்ததுபோல, இந்த Maxi cab ஓட்டுகிற Van உரிமையாளர்களுடைய கோரிக்கையை ஏற்று, வரியைப் பாதியாகக் குறைக்கும்படி, அதாவது முன்பு இருந்ததுபோல 12,000 ரூபாயாகக் குறைக்கும்படி நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், சென்னையிலே நிறைய Call taxies ஓடிக்கொண்டிருக்கின்றன. ஒரு வகையிலே அது நல்ல சேவையைத்தான் செய்துகொண்டிருக்கிறது. ஆட்டோ மீட்டருடன் ஒரு walkie-talkie-யுடன், அழைத்த நேரத்திலே மிகச் சுலபமாக அவர்கள் சேவை செய்கின்ற அந்த நிலையை அரசு சரியாகப் புரிந்து கொண்டு அவர்களை ஒரு regulation-க்குள், அதை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல நகரத்திலே, சென்னை மாநகரம் போன்ற பெருநகரத்திலே, திருச்சி, கோயம்புத்தூர் போன்ற நகரங்களிலே pollution–ஆல் பாதிப்பு வருகிறது என்று சொல்கிறார்கள். டெல்லியிலே எல்லா வாகனங்களுக்கும் C.N.G. இருப்பதைப்போல், சென்னை மாநகரத்திலே ஓடுகிற ஆட்டோக்களுக்கும், புதியதாக வாங்கியிருப்பவர்களுக்கும், கொஞ்சம், கொஞ்சமாக, படிப்படியாக, அந்த இயற்கை வாயுவின்மூலம் வாகனங்களை இயக்கச் செய்கின்ற ஒரு நடைமுறையைக் கொண்டுவர வேண்டும். அதற்குக் கடுமையான சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, L.P.G., Indane Gas போன்ற சின்னச் சின்ன Gas Cylinder-களை வைத்துக்கொண்டு சென்னை மாநகரத்திலே, மற்ற இடங்களிலே எல்லாம் வாகனங்களை இயக்குகிறார்கள். தற்போது இப்படிப்பட்ட Gas-ஐ வைத்துக்கொண்டு வாகனம் ஓட்டினால் அபராதமும், சிறைத் தண்டனையும். இரண்டும்கூட சேர்த்து விதிப்பதாகப் பல்வேறு விளம்பரங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இதனால் ஆபத்து இல்லை என்று நான் கருதுகிறேன். சமையலுக்குப் பயன்படுத்தக்கூடிய எரிவாயுவைப் பயன்படுத்தினால் சட்டத்தின்மூலம் கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால், Commercial Gas-ஆக உள்ள

சிலிண்டரை வைத்துக்கொண்டு வாகனங்களை இயக்கினால், அதன்மூலம் pollution குறைகிறது. அதனால், இப்படிப்பட்ட நடவடிக்கையை ஊக்குவிக்க வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

முற்பகல் 11–50

என்னைப் பொறுத்த வரைக்கும், என்னுடைய தொகுதியான மயிலாடுதுறை தொகுதியிலேயுள்ள விரைவுப் போக்குவரத்துக் கழகம் கடந்த 15 ஆண்டு காலமாக எந்த ஒரு புதிய வண்டியையும் எங்களுக்கு வழங்கவில்லை. முக்கிய வழித்தடமாக இருக்கிற மயிலாடுதுறையிலிருந்து சென்னைக்கு வருகின்ற பயணிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். காரணம், மயிலாடுதுறையிலிருந்து சென்னைக்கு அகல இரயில் பாதைத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. அதனால், தாம்பரம் வரைக்கும்தான் அவர்களால் வர முடிகிறது. நான்கூட இங்கே தெளிவாகச் சொல்லிக்கொள்கிறேன். இன்றைக்குக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் இல்லை என்பது எனக்கு வருத்தமாக இருக்கிறது. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்கூட நமது மத்திய நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரத்தை வக்கில்லாதவர் என்று சொன்னார்கள். அதை எதிர்த்து அத்தனை பேரும் இன்றைக்குப்போல வெளிநடப்புச் செய்தார்கள். நான் தெளிவாகச் சொல்லிக்கொள்கிறேன், எனது தொகுதியிலே ஒரு அமைச்சர் இருக்கிறார். காங்கிரஸ் அமைச்சர், Cabinet அமைச்சர் திரு. மணிசங்கர அய்யர் அவர்கள், மூன்று முறை பாராளுமன்ற உறுப்பினராக வெற்றி பெற்றிருக்கிறார். இன்றைக்கு மத்திய அமைச்சராக இருக்கிறார். இதற்கு முன்பு ஐந்து ஆண்டு காலம் ஆளும் கட்சி உறுப்பினராக இருந்திருக்கிறார். வெள்ளைக்காரன் காலத்திலேயே முக்கிய வழித்தடமாக இருந்திருக்கிற, விழுப்புரம்–மயிலாடுதுறை–தஞ்சை வழியான main line-ஐ இன்று வரை அகல இரயில் பாதையாக ஆக்குவதற்கு வக்கற்ற ஒரு மத்திய அமைச்சரை நாங்கள் பெற்றிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் பகுதியிலே—கடலூரிலே ஒரு மத்திய அமைச்சர், மயிலாடுதுறையிலே ஒரு மத்திய அமைச்சர், main line செல்கிற தஞ்சையிலே ஒரு மத்திய அமைச்சர், புதுக்கோட்டையிலே ஒரு மத்திய அமைச்சர். ஆனால், முக்கிய வழித்தடமாக இருக்கிற மயிலாடுதுறை—விழுப்புரம், அகல இரயில் பாதையாக மாற்றப்படாமல், இன்று வரைக்கும் மிக மோசமாக நாங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறோம். தொகுதி மக்கள் வெட்கப்படுகிறார்கள், நாங்கள் வெட்கப்படுகிறோம். திரு. மணிசங்கர அய்யரை மந்திரியாக்கி இருக்கிறோம் என்று வெட்கப்படுகிறோம். எங்களுக்கு வழியில்லை அவர்களால் அகல இரயில் பாதையைக் கொண்டு வருவதற்கு. ஆனால், மாண்புமிகு



முதலமைச்சர் அவர்கள் எங்களுடைய மக்களின் கோரிக்கையை ஏற்று, சென்னைக்கும், மயிலாடுதுறைக்கும் வந்து போகிற அளவிலே கூடுதலாகப் பேருந்துகள் இயக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** 5 minutes கொடுங்கள். மயிலாடுதுறைக்கும், சென்னைக்கும் E.C.R. வழியாக ஒரு சொகுசு bus-ம், மயிலாடுதுறைக்கும், திருப்பதிக்கும் இடையே ஒரு பேருந்தையும் விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருப்பதிக்கு நேரடியாக இரயில் போக்குவரத்து கிடையாது. அதேபோல, எங்கள் மயிலாடுதுறை பகுதியிலே பேருந்து நிலையம் மிக மோசமாக, நெரிசலாக இருக்கிறது. அங்கிருந்து மணல்மேடுக்கும், அல்லது புகழ்பெற்ற ஏ.வி.சி. கல்லூரி, பூம்புகார் பேரவை கல்லூரியிலே ஏராளமான மாணவர்கள் படிக்கிறார்கள். பேருந்து நிலையத்தில் வெளியே செல்வதற்குக் காலதாமதம் ஆகிறது. மாணவர்களுக்கும், போக்குவரத்து நடத்துநர், ஓட்டுநர்களுக்கும் பலவாறு சண்டைகள் ஏற்படுகின்றன. Bus pass வைத்திருந்தால், அவர்களைப் போக்குவரத்து ஊழியர்கள் மதிப்பது கிடையாது. இதனால் சட்டம்–ஒழுங்குப் பிரச்சினை அடிக்கடி வருகிறது. உரிய நேரத்திலே, நிறுத்தத்திலே ஓட்டுநர்கள் பேருந்துகளை நிறுத்தாததன் விளைவாக, மாணவர்களுக்கும், போக்குவரத்து ஊழியர்களுக்கும் பிரச்சினை வருகின்ற காரணத்தால், முக்கிய நேரத்திலே ஏ.வி.சி. கல்லூரிக்கும், பூம்புகார் பேரவை கல்லூரிக்கும் இரண்டு பேருந்துகளை இயக்க வேண்டுமென்று நான் தொகுதி மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. திருவள்ளுவர் விரைவுப் போக்குவரத்துக் கழகத்திலுள்ள எல்லாப் பேருந்துகளிலும் முன் பக்கத்திலே மட்டும்தான் பெயர்ப் பலகை இருக்கிறது. பின்புறத்திலே பெயர்ப் பலகை கிடையாது. Bus-க்கு வருகிற பயணிகள் ஓடி, ஓடி முகப்புப் பக்கத்தைப் பார்க்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இப்போது புதியதாக வந்திருக்கிற ஒரு பேருந்திலே—புதியதாக அறிமுகப்படுத்தியிருக்கிற புதிய பேருந்துகளிலே பின்புறமும், விரைவுப் பேருந்துகளின் பின்புறமும் பெயர்ப் பலகை இருக்கிறது. அதேபோல் பெயர்ப் பலகையை எல்லாப் பேருந்துகளிலும் வைக்கவேண்டுமென்று மக்கள் சார்பாக நான் ஒரு கோரிக்கையை வைக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், தளி தொகுதியிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 20 கோடி ரூபாய்க்கு சாலை மேம்பாட்டுக்காக நிதி

ஒதுக்கியிருக்கிறார்கள். பல முறை நானும், என்னுடைய பேரன்பிற்குரிய தலைவர் திரு. கே.என். இலட்சுமணன் அவர்களும் பொதுக்கூட்டத்தில் பேச தளி சென்றிருக்கிறோம். அங்குள்ள மக்கள் bus வசதி இல்லாமல் நடந்தே வருவதை நாங்கள் பார்த்திருக்கிறோம். ஆகவே, புதிதாக நான்கு பேருந்துகளை தளி தொகுதி மக்களுக்காக ஒதுக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற கோரிக்கைகளை எழுதிக் கொடுத்து விடுங்கள், பாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** இந்த வகையில் மயிலாடுதுறைக்கும், திருப்பதிக்கும் இடையே, அதேபோல மயிலாடுதுறைக்கும், சென்னைக்கும் இடையே, மயிலாடுதுறைக்கும், பெங்களூருக்கும் இடையே புதிய பேருந்துகளை இயக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு அமைச்சரைக் கேட்டுக்கொண்டு, இந்த அளவுக்குப் பேசப் பணித்த தலைவருக்கு மீண்டும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்.

*முற்பகல் 11–55*

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பாதம் பணிந்து என்னுடைய பேச்சைத் தொடங்குகிறேன். இந்தியா கண்ட பாரதத் தாய், ஏழை மக்களின் எழுச்சிமிகு எங்கள் தாய், அன்னமிட்ட கை, அன்ன தானம் கொண்டு வந்த அருள்மிகு தாய், சேவை மனம் கொண்ட செந்தமிழ்த் தாய், நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். புரட்சித் தலைவர் கண்ட நன்முத்து, அவர்தான் நமக்கெல்லாம் பெரும் சொத்து--புரட்சித் தலைவர் கண்ட நன்முத்து, அம்மா அவர்கள்தான் நமக்கெல்லாம் பெரும் சொத்து. தமிழகம் மட்டுமல்ல, இந்தியாவே உற்றுப் பார்க்கும் உன்னதத் தாய், தங்க மனம் கொண்ட தங்கத் தாரகை, தமிழக முதல்வர் அம்மாவை வணங்கி, போக்குவரத்துத் துறை மற்றும் மின்சாரத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேச விழைகிறேன்.

தமிழக அரசுப் போக்குவரத்துத் துறை, கடந்த கால தி.மு.க. ஆட்சியிலே கலகலத்துப் போன இந்தத் துறை, இன்று புதிய பொலிவோடு வீறு நடைபோடுகிறது, வெற்றி நடைபோடுகிறது. இதை மக்கள் இன்றைக்கு



அறிந்து வைத்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல கோடி ரூபாய் நட்டத்திலே இயங்கிய போக்குவரத்துத் துறை இன்று வீறு நடைபோட்டு, 18 ஆண்டுகளுக்குப் பிறகு இலாபத்திலே இயங்குகிறது. பல முறை டீசல் விலை ஏற்றப்பட்டும், பேருந்துக் கட்டணத்தை ஏற்றாமல், இந்தத் துறை நல்ல முன்னேற்றம் கண்டிருப்பதைக் கண்டு, டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவை இந்த நாட்டு மக்கள் பாராட்டாமல் இல்லை, வாழ்த்தாமல் இல்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் முனைவர் செ.கு. தமிழரசன் தலைமை)

அதுமட்டுமல்ல, இன்றைக்கு அம்மாவின் ஆட்சியில் அனைத்துத் துறைகளிலும் நல்ல முன்னேற்றம் இருக்கிறது, படித்தவர்கள் பாராட்டுகிறார்கள். பாமர மக்களும் ஏற்றுக்கொள்கிறார்கள். Budget–மீது பேசிய தி.மு.க. உறுப்பினர், எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற காகிதப் பூ கதாநாயகன் வாரிசாக வந்த ஒருவர் சொன்னார், இந்த Budget வெறும் காகிதப் பூதான், இது மணமுள்ள பூ இல்லை என்று சொன்னார். காகிதப் பூ கதாநாயகன் மகனல்லவா! ஆகவேதான் காகிதப் பூ அவருக்கு நினைவுக்கு வந்துவிட்டது. இருந்தாலும் ஏற்றுக்கொண்டார் அம்மா அவர்கள். காகிதப் பூதான், ஏற்றுக்கொள்கிறோம், அதில் மாற்றம் இல்லை. ஆனால் இந்த மக்களுக்கு நிரந்தரமாகப் பயனளிக்கின்ற, ஒரே நாளில் சீரழியாமல் பல நாள் பாதுகாக்கின்ற காகிதப் பூவாகவே ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னார்கள் அம்மா அவர்கள். இன்றைக்கு அம்மாவின் ஆட்சியில் அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம் இருக்கிறது என்று படித்தவர்கள் பாராட்டுகிறார்கள், பாமர மக்கள் ஏற்றுக்கொண்டு வாழ்த்துகின்றார்கள். எதையும் பாராட்ட மனமில்லாதவர்கள், எடுத்தேன், கவிழ்த்தேன் என்று பேசுகிறார்கள். எழுந்து வெளிநடப்புச் செய்கிறார்கள். காலம் இவர்களுக்குப் பதில் சொல்லும். ஆனால் புரட்சித் தலைவர் கண்ட போர் வாள் நமது அம்மா. அவரை வெல்ல அவரால் மட்டுமே முடியும், வேறு எவராலும் முடியாது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, இந்தியாவிலேயே தமிழகத்திலே மட்டும் மின்சாரம் தடையின்றிக் கிடைக்கிறது. முன்பு ஆட்சி செய்தவர்கள் காலத்திலே மூன்று தினங்கள் மின்சாரமே கிடையாது. தமிழகமே இருளில் மூழ்கிக் கொண்டிருந்தது, இந்த நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும். ஆந்திராவில் பழுது, நெய்வேலியில் பழுது என்று காரணம்

காட்டினார்கள். விவசாயிகள் எல்லாம் அன்றைக்கு நலிந்து, மிகவும் மோசமான நிலையிலே கஷ்டப்பட்டார்கள். அப்படிப்பட்ட நிலையில் இருந்தது இந்த மின்சாரத் துறை. இன்றைக்கு எங்காவது தட்டுப்பாடு இருக்கிறதா? மின்சாரக் கஷ்டம் இருக்கிறதா? தி.மு.க. ஆட்சியிலே மின்சாரம் எந்த நேரத்தில் வரும், எந்த நேரத்தில் போகும் என்று மக்களுக்குத் தெரியாது. இன்றைக்கு அப்படியா நிலைமை? எங்குமே இருளில் மூழ்கியது கிடையாது. புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே தமிழகம் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மெத்தப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவிலேயே அன்றைக்கு தமிழகத்தில் மூன்று தினங்கள் இருள் சூழ்ந்திருந்தது. விவசாயப் பெருமக்கள் எல்லாம் இன்றைக்குப் பாதிப்பு இல்லாமல், சந்தோஷமாக இருக்கிறார்கள். மின்சாரத் துறையை வாழ்த்துகிறார்கள். ஒரு காலத்திலே விவசாயிகள், வியாபாரிகள் எல்லாம் பெருந்தொல்லைக்கு ஆளானார்கள். இவற்றையெல்லாம் மக்கள் மறக்கவில்லை. மின்சாரம் எப்போது வரும், எப்போது போகும் என்று தெரியாமல் இருந்தது ஒரு காலததிலே. அப்படியெல்லாம் இருந்த அவல நிலையைப் போக்கி, தமிழகத்தில் எங்கும் மின்சாரத் தட்டுப்பாடு இல்லை என்ற அளவுக்கு இன்றைக்கு அம்மாவின் ஆட்சி அருமையான முறையிலே நடந்துகொண்டிருக்கிறது.

நண்பகல் 12–00

இன்றைக்கு விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணம் அடியோடு ரத்து. வீடுகளுக்கு மின் கட்டணம் குறைப்பு. விசைத்தறியாளர்களுக்கு மின் கட்டணம் குறைப்பு என இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். இந்தியாவிலேயே தமிழக மின்சாரத் துறை முன்னோடியாக உள்ளது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

அதுமட்டுமல்ல. இங்கே எதிர்க்கட்சி உறுப்பினர் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் அன்றைக்குப் பேசினார் ஒரு கருத்தை. அதற்கு முன்பு 2002–லே இதே சட்டமன்றத்திலே என்ன பேசினார் தெரியுமா? அம்மா, உங்கள்மீது பொய் வழக்குப் போட்டார்கள் தி.மு.க. ஆட்சியிலே. அன்றைக்கு கருணாநிதி ஆட்சிக்கு வந்த பிறகு, அவர்கள்மீதிருந்த வழக்குகளை எல்லாம் வாபஸ் பெற வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வந்து அந்த வழக்குகளை ரத்துச் செய்தார்கள். அதேபோல காங்கிரசும், கம்யூனிஸ்டுகளும், பட்டாளி மக்கள் கட்சியும்— எதிர்க்கட்சிகள் ஒட்டுமொத்தமாக நாங்கள் அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறோம், உங்கள்மீது போட்ட, தி.மு.க. போட்ட, பொய்



வழக்குகளை ரத்துச் செய்ய வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வருகிறோம், அதை நிறைவேற்ற வேண்டுமென்று இதே எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்தான் அன்றைக்குப் பேசினார். அதற்குள் இன்றைக்கு என்ன ஆனது? ஏன் மாறினார்? எதற்காக மாறினார்? அதைத்தான் இன்றைக்குப் புரட்சித் தலைவி சொல்லிவிட்டார்கள். 110 என்றாலே அவர்களுக்கு வயிறு கலக்குகிறது. 110–வது விதியின்கீழ் பேச ஆரம்பித்தாலே, என்ன நடக்கப் போகிறதோ என்று அவர்கள் வயிறு தேய்ந்து கொண்டிருக்கிறது. 110 என்று சொன்னால் உங்களுக்கெல்லாம் ஞாபகம் இருக்கும். 110, 110 என்று அவர்கள் பாகம் போட்டு ஒரு தேர்தலிலே நின்றார்களே, அப்போது தோல்வி கண்டார்கள். அந்த ஞாபகத்தில்தான் 110 என்றாலே இன்றைக்கு அலறுகிறார்கள் என்பதை மறக்கக் கூடாது. இன்றைக்கு 110–க்காக அவர்கள் பயப்படுவதற்குக் காரணமே, 110 அவர்களுக்கு ராசி இல்லாதது. நமக்குத்தான் ராசி. நமக்காகத்தான் அந்த 110. அம்மா அவர்களே, தினம், தினம் நீங்கள் எழுந்து ஒவ்வொரு நாளும் 110–வது விதியின்கீழ் படிக்க வேண்டும். இந்த நாட்டு மக்கள் அனைவருமே பாராட்டுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்த்துவார்கள்.

எல்லாத் துறைகளிலும் நீங்கள் 110–வது விதியை ஒரு நாள் தவறாமல் படியுங்கள். அந்தப் பலன் உங்களுக்கு. வாக்களித்த மக்கள் இன்றைக்குத் தமிழகம் பூராவும் வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். வரலாறு படைத்த தாய், எந்த ஆசாபாசத்திற்கும் இடமில்லாமல் முறையாகச் செய்கிறார், தைரியமாகச் செய்கிறார். அப்படிப்பட்ட முதலமைச்சர் யாரும் கிடையாது. வீரப்பனைப் பிடிக்க முடியுமா, அது வீணான திட்டமென்று சொன்னார் இதே எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன். அடுத்து, வீரப்பனைப் பிடித்தே காட்டுவேன், உயிருடனோ, பிணமாகவோ பிடித்துக் காட்டுவேன் என்று சூளுரைத்தார், பிடித்துக் காட்டினார்.

அடுத்து, வீராணம் திட்டம் வீணான திட்டம்; விவசாயிகளின் கண்ணீர் தண்ணீராக வரும்; ஆனால் தண்ணீர் வராது என்று சொன்னார்கள். அந்தத் திட்டத்தை முறியடித்து, வீராணம் திட்டத்திலே இன்றைக்குத் தண்ணீரைக் கொண்டு வந்து, சென்னைக்குக் குடிநீர்ப் பஞ்சத்தைத் தீர்த்து வைத்த தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். இன்னும் என்ன செய்ய வேண்டும்? என்ன செய்யவில்லை அம்மா அவர்கள்? சொல்லுங்கள்.

2,500 கோடி ரூபாய் நஷ்டத்தில் வைத்துவிட்டுப் போன போக்குவரத்துத் துறையில், அதையெல்லாம் ஈடுகட்டி, நீங்கள் காலியாக விட்டுப் போன கஜானாவை ஈடுகட்டி, இந்த 4 ஆண்டுகளிலே இன்றைக்கு அதிகமான

முறையில் ஒரு நாளைக்கு 11 கோடி ரூபாய் வட்டியைக் கொடுத்து, நிலைமையைச் சீரமைத்து, பழையபடி நிலைமையைக் கொண்டு வந்து, தினம், தினம் இன்றைக்கு மக்களுக்குச் சாதனை படைக்கிறாரே சாதனைத் தலைவி—சொல்கிறார்களே, சாதனையாளர் விருதுகூட கொடுத்தார்களே, பார்க்கவில்லையா?—சாதனை செய்கிற தலைவி எங்கள் தலைவியைத் தவிர வேறு யாராலும் முடியாது என்பதை மெத்தப் பணிவோடு சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்தச் சட்டமன்றத்திலே நான் முதன்முதலாக வந்திருக்கிற சட்டமன்ற உறுப்பினர். பல பேரை அனுப்பி வைத்திருக்கிற பெருமை எனக்கு உண்டு. ஆனாலும், தி.மு.க. ஆட்சியிலே அவர்கள் செய்த அலங்கோலத்தையெல்லாம் பேசுவதற்கு நேரமில்லை. எனக்கு அளித்ததோ பத்தே நிமிடங்கள்தான். அதற்கு மேலே போகக்கூடாது என்று சொன்ன காரணத்தினால், எவ்வளவோ பேச வேண்டுமென்று ஆதங்கம் இருக்கிறது. அதே நேரத்தில் அம்மா அவர்கள் இல்லையே நான் பேசும்போது என்ற ஒரு ஆதங்கமும் எனக்கு இருக்கிறது. இருந்தாலும் பரவாயில்லை. அம்மா அவர்களுக்கு எல்லாம் தெரியும். ஆயிரம் கண்ணுடைய அற்புதத் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவர் எங்கு இருந்தாலும் நம்மைப் பார்த்துக்கொண்டு இருப்பார். என் பேச்சைக் கேட்டுக்கொண்டிருப்பார். ஆகவே, புரட்சித் தலைவி ஆட்சிதான், மீண்டும் எந்தத் தேர்தல் வந்தாலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் கோட்டையிலே உட்காருமே தவிர, வேறு யாருமல்ல. என்ன சொன்னார்கள்?

எல்லாப் பிள்ளைகளுக்கும் இலவசப் பாடப் புத்தகம். எந்த ஆட்சியிலே கொடுத்தார்கள்? சொல்லுங்கள். நேற்றையதினம் விவசாயக் கூலிகள், நாற்று நடுகிற, களை பறிக்கிற, ஏர் ஓட்டுகிற விவசாயிகளுக்கு, கீழே இருக்கிறவர்களுக்கு, ஞாபகத்தோடு நேற்று சலுகைகளை அளித்தாரே, அது என்ன சாதாரணத் திட்டமா? பாராட்ட வேண்டாமா? வாழ்த்துக் கூற வேண்டாமா அல்லது வரவேற்க வேண்டாமா, அல்லது பத்திரிகைகளிலேயாவது இந்தத் திட்டத்தை வரவேற்கிறோம் என்றாவது அறிக்கை விட்டீர்களா? கிடையாது. இன்றைக்குக் கட்டடத் தொழிலாளர்களுக்கு, அவர்கள் வாழ்விற்கு, மாதந்தோறும் 200 ரூபாய் அவர்கள் பெறுவார்கள் என்ற அற்புதமான திட்டத்தை அறிவித்துப் போனார்களே டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், யார் இதுவரையிலும் சீர்தூக்கிப் பார்த்தீர்கள்? எத்தனை ஆட்சிகள் இருந்தன? எவ்வளவோ பேர் இருந்தார்கள். அந்தக் கட்டடத் தொழிலாளர்களைச் சீர்தூக்கிப் பார்த்தது உண்டா? எண்ணியது உண்டா? அதைத்தான் இன்றைக்கு அளித்துச் சென்றிருக்கிறார்கள். இன்னும் நாளை, மறுதினம், தொடர்ந்து இந்தச் சட்டமன்றக் கூட்டம் நடக்கும் வரையிலே, 110-வது விதியின்கீழே அம்மா அவர்கள் தினம் ஒரு அறிக்கை விட்டுக்கொண்டே இருக்கவேண்டும். அதைச் செய்து--மக்களைக் காக்கும் உங்களை மக்கள் எல்லாம் வரவேற்கிறார்கள்; வாழ்த்துகிறார்கள் என்பதைப் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன்.





பிற்பகல் 12-05

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதிப் பிரச்சினை, அண்ணா! ஆற்காடு முதல் ஆரணி வரை, ஆரணி முதல் போளூர் வரையில் ரோட்டிலே போக முடியாத நிலையில், 1 அடி பள்ளம், 2 அடி பள்ளம் இருக்கின்றன. உங்களுக்கு ஏற்கெனவே நான் எழுத்துமூலமாகக் கொடுத்திருக்கிறேன். இந்த நிலையில், NABARD Scheme-லே அந்தத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருந்தாலும், அவை மோசமான நிலையில் இருக்கின்றன. அதைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

அதுமட்டுமல்ல. ஒன்னுபுரம்-அத்திமலைப்பட்டு என்ற கிராமங்களுக்கு இடையே ஒரு ஆற்றுப் பாலம் குறுக்கே கட்டித் தரவேண்டும். அதேபோல் ஆரணியிலே கமண்டலநாக நதியின் குறுக்கே உள்ள பாலம் ஒரு வழிப் பாலமாக இருக்கிறது. அதே வழியில்தான் வண்டிகள் போகவேண்டும், அதே வழியிலேதான் வரவேண்டும். அந்தப் பாலம் இப்போது சரியான முறையில் இல்லை. இன்னும் 5, 6 ஆண்டுகளிலே அது சரிப்படாது. ஆகவே, இரு வழிப் பாதையாகச் சென்று வருவதற்கு இன்னொரு பாலம் ஆரணி நகரத்திலே கட்டித் தரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, குன்னத்தூரிலிருந்து காமக்கூர் செல்லும் வழியில் ஆற்றுப் பாலம் ஒன்று கட்டித் தர ஏற்கெனவே கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. அண்ணா, அம்மா அவர்களுடைய ஆட்சியிலே எவ்வளவோ பேருக்கு, நம்மையெல்லாம் திட்டித் தீர்க்கிற அவர்களுக்கு எல்லாம் செய்கிறீர்கள். ஆகவே, நீங்கள் இந்த ஏழைத் தொண்டனுடைய கோரிக்கையை ஏற்று, குன்னத்தூருக்கும், காமக்கூருக்கும் இடையே ஒரு பாலம். ஆக, மூன்று பாலங்களைக் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அம்மாவினுடைய சாதனைகளைச் சொல்லிக்கொண்டு போனால், எனக்கு நேரம் போதாது. எனக்கு என்று ஒரு மேடை இருக்கிறது.

அங்குதான் பேச முடியும். இங்கே பேச முடியாது. இங்கே ஒரு வட்டத்திற்குள் நின்று பேச வேண்டிய கட்டாயம் இருப்பதால், அண்ணன் அவர்களுக்கு, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள். *(மணியடிக்கப்பெற்றது)* இரண்டே நிமிடங்கள். ஒரு second.

என்னுடைய ஆரணி தொகுதியிலே போக்குவரத்துத் துறையின் bus-கள் எல்லாம் இருக்கின்றன. சில இடங்களில் சில bus-கள் repair ஆகி நின்றுவிட்டாலும், உடனுக்குடன் அனுப்புகிறார்கள். ஆனால், புதிய bus-கள் 2,500 வாங்கியிருக்கிறீர்கள், அவற்றிலே 15 bus-களை ஆரணி பணிமனைக்கு ஒதுக்கித் தரவேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)* புதிய bus-களாக...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (முனைவர் செ.கு. தமிழரசன்):** சீக்கிரம் பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** ஆரணி–திருவண்ணாமலை, ஆரணி–ஆற்காடு, ஆரணி–சென்னை, ஆரணி–பெங்களூர், இப்படி நீண்ட தூரப் பயணம் போகின்ற bus-களை, புதியதாக 15 bus-களை ஆரணி பணிமனைக்கு ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டு, இவ்வளவு நேரம் பேச அனுமதித்த அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, உரையை முடித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (முனைவர் செ.கு. தமிழரசன்):** மாண்புமிகு உறுப்பினர் லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போது அன்றாட வாழ்க்கையில் அனைத்துப் பகுதி மக்களும் பயன்பெறுகின்ற அளவிலே செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற போக்குவரத்துத் துறை, எரிசக்தித் துறை மற்றும் உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் போன்ற மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்திலே பங்கு கொண்டு என்னுடைய கருத்துகளை முன் வைப்பதற்கு அனுமதி தந்த தங்களுக்கு என்னுடைய உள்ளபூர்வமான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னைப் பொறுத்தளவிலே, இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கின்ற விவசாயிகளும் சரி, தொழிலாளர்களும் சரி, அதுபோல மாணவர்கள் அத்தனை பேரும் பயன்பெறுகின்ற அளவிலே சேவை வழங்குகின்ற போக்குவரத்துத் துறையும், மிக முக்கியமான மின்சாரத் துறையும் சட்டமன்றத்திலே விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கின்ற இந்த



நேரத்தில், அந்தத் துறைகளிலே பயன்பெறுகின்ற கோடானு கோடி மக்களினுடைய எண்ணங்களை, கருத்துகளை, அதற்குரிய மேலான கருத்துகளை இங்கே வைப்பதற்குப் பதிலாக, எதிர்க்கட்சியிலே இருக்கின்ற நண்பர்கள் இந்தச் சட்டப் பேரவையைப் புறக்கணித்திருக்கிறார்கள் என்று எண்ணுகின்றபோது, மிகவும் வியப்பாகவும், விந்தையாகவும் இருந்து கொண்டிருக்கிறது.

*பிற்பகல் 12–10*

இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, அந்தத் தொகுதியிலே இருக்கின்ற மக்கள் எல்லாம் வாக்களித்து, நம்முடைய தொகுதி மக்களுடைய அடிப்படைத் தேவைகளை, கட்டமைப்புப் பணிகளை, போக்குவரத்துச் சாதனங்களை அபிவிருத்தி செய்தல், மின்சாரத் துறையிலே மக்களுக்குக் கிடைக்கவேண்டிய பயன்களைக் கிடைக்கச் செய்ய வேண்டியது போன்ற கருத்துகளை எடுத்து வைக்கவேண்டும். அதன்மூலமாகத் தொகுதி மக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக அனுப்பப்பட்ட நிலையிலிருந்து மாறுபட்டு, இன்றைக்கு அவர்கள் வெளியிலேயிருந்து இந்த அவை நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது ஜனநாயக மரபு கொண்ட எவரும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றுதான் என்பதை நான் இந்த அவையின்மூலம் தமிழக மக்களுக்குத் தெரிவித்துக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

போக்குவரத்துத் துறையைப் பொறுத்தளவிலே, சென்ற காலங்களில் எல்லாம் அந்தத் துறை முடமாக்கப்பட்டு, ஊனமாக்கப்பட்டு, கிராமப்புறங்களிலே சென்று வருகின்ற பேருந்துகள் எல்லாம் நடு வழியிலே, சாலைகளை அலங்கரிக்கின்ற நிலையிலே நிறுத்தப்பட்டு, அதிலே பயணம் செய்த மக்கள் எல்லாம், தாய்மார்கள், குழந்தைகளோடு, தாங்கள் வைத்திருக்கின்ற அந்தச் சுமைகளோடு நடந்து செல்கின்ற அவலமான காட்சிகளை எல்லாம் பார்க்க நேர்ந்தது. இந்தப் போக்குவரத்துத் துறை மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில், இன்றைக்கு எப்படியிருக்கிறது என்று சொன்னால், நளன் ஓட்டிச் சென்ற தேர்க் குதிரைபோல இருக்கிறது. நளன் ஓட்டிய தேரைப் பற்றிச் சொல்கின்றபோது,

> "மேலாடை விழுந்தது எடுஎன்றான், அவ்வளவில்
> நாலாறு காதம் பறந்ததுவே"

என்று குறிப்பிடுவார்கள். அந்தத் தேரிலே உட்கார்ந்திருந்த அமைச்சர், மன்னர், 'தன்னுடைய மேலாடை விழுந்துவிட்டது, எடுங்கள்' என்று

சொல்கின்ற அந்த நேரத்திற்குள்ளாக நாலாறு காதம், 24 காதங்கள் ஓடியது அந்தத் தேர் என்று வர்ணிப்பார். அதுபோல அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, இருக்கின்ற பேருந்துகள் எல்லாம், முடமாக்கப்பட்ட பேருந்துகள் எல்லாம், ரேஸ் குதிரைகளாக, (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு பயணம் செய்கின்ற அளவிற்கு, எங்கே நடு வழியிலே நின்று விடுமோ, நாம் எல்லாம் நடந்து செல்கின்ற அவல நிலை ஏற்படுமோ என்று எண்ணி, ஏங்கியிருந்த மக்கள் எல்லாம் இன்றைக்கு அவர்கள் செல்கின்ற தூரத்திற்கு முறையாகச் சென்றடைகின்ற அளவிலே, ஒவ்வொரு பேருந்தும் சரி செய்யப்பட்டிருக்கிறது என்கின்ற செய்தியைக் கேட்கும்போது, தமிழ்நாட்டு மக்கள் மிகுந்த மகிழ்ச்சியடைகிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கடந்த காலங்களில் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருந்த பேருந்துக் கழகங்கள், 2004–2005–லே ஏறக்குறைய 14 கோடி ரூபாய் அளவிற்கு இலாபத்தை ஈட்டும் என்கின்ற செய்தியைக் கொள்கை விளக்கக் குறிப்பிலே பார்க்கின்றபோது, இதை யாரும் பாராட்டாமல் இருக்கமுடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு ஏறக்குறைய 4,848 பழைய பேருந்துகள் புதுப்பிக்கப்பட்டு, வழித்தடங்களிலே சிறப்பாக ஓடிக் கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாது, ஒவ்வொரு ஆண்டும் பழைய பேருந்துகளை மாற்றிவிட்டு—கடந்த காலங்களிலெல்லாம், ஐந்து ஆண்டுகளுக்கு மேல் ஒரு பேருந்து ஓடிக்கொண்டிருந்தால், அதை மாற்ற வேண்டுமென்கின்ற ஒரு விதி இருந்தது. ஆனால், 15 ஆண்டுகள் வயது முதிர்ச்சிபெற்ற பேருந்துகள்கூட, கடந்த காலங்களிலே அனுமதிக்கப்பட்டு ஓடிக்கொண்டிருந்தன. ஆனால்—இன்றைக்கு அவையெல்லாம் மாற்றப்பட்டு, சென்ற ஆண்டு 1,300 பேருந்துகளுக்கு மேலாகவும், இந்த ஆண்டுகூட, கடந்த நான்கு நாட்களுக்கு முன்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2,000 பேருந்துகளைப் புதிதாக வாங்கி, இயக்கி வைக்கின்ற செய்தியை நாம் அறிந்து, தமிழகத்து மக்கள் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியில் இருக்கிறார்கள்.

பிற்பகல் 12–15

இங்கிருக்கின்ற நமது நண்பர்களெல்லாம் தொழிலாளர்களுடைய நலனை அடிக்கடி சொல்லிக்கொண்டு இருப்பார்கள். அவர்கள் இன்றைக்கு இங்கே இல்லை. அந்தப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் எல்லாம், ஊதிய உயர்வுப் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என்கின்ற



நிலையை அரசுக்குத் தெரிவித்தாலும்கூட, இங்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த வாரத்திலேகூட மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அரசாங்கம் எப்பொழுதும் தயாராக இருந்துகொண்டு இருக்கிறது. போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தையிலே கலந்துகொள்வதற்கு, அனைவரையும் அழைத்துப் பேசுவதற்கு இந்த அரசு எப்போதும் தயாராக இருந்துகொண்டிருக்கிறது. ஆனால், அதற்குத் தடையாக இன்றைக்கு இருக்கின்ற தொழிற்சங்கங்கள் நீதிமன்றத்தை நாடி, அந்த நீதிமன்றத்திலே வழக்குகள் எல்லாம் நிலுவையாக இருக்கின்ற நிலை காரணமாகத்தான், ஒப்பந்தப் பேச்சுவார்த்தை இன்றைக்கும் தடையிலே இருக்கிறது என்பதைக் கொள்கை விளக்கக் குறிப்பிலும் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இருந்தாலும்கூட, அந்தப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பெறாத ஒரு சூழ்நிலையில், இடைக்கால நிவாரணமாக, அந்த ஊழியர்கள் எல்லாம் பயன்பெறுகின்ற அளவிற்கு, ரூ.250 வழங்கப்படுகிறது என்ற செய்தி கொள்கை விளக்கக் குறிப்பிலே இருக்கிறது. கருணையுள்ளத்தோடு, எல்லாத் தொழிலாளர்களுக்கும்—நேற்றைக்குக்கூட விவசாயத் தொழிலாளர்கள் பயன்பெறுகின்ற அளவிலே பல்வேறு அறிவிப்புகள், அதுபோல இன்றைக்கும் கட்டடத் தொழிலாளர்கள் பயன்பெறுகின்ற வகையிலே பல்வேறு அறிவிப்புகளை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கு இல்லையென்றாலும்கூட, அருமைச் சகோதரர் ஜெமினி அவர்கள் சொன்னதுபோல, எங்கிருந்தும்கூட இந்தப் பேச்சுக்களையெல்லாம், சட்டமன்றத்திலே நடக்கின்ற நிகழ்வுகளையெல்லாம் கேட்டுக்கொண்டு இருப்பார்கள் என்கிற முறையில், இடைக்கால நிவாரணத் தொகையை ரூ.500 ஆக உயர்த்திக் கொடுத்தால், போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய குடும்பங்களிலே விளக்கேற்றி வைத்த பெருமை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சாரும் என்கின்ற முறையில், அதைச் செய்ய வேண்டுமென்று அன்போடு நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலங்களில் பல முறை–ஒரு முறையல்ல, இரு முறையல்ல, பல முறைகள்—மத்திய அரசு டீசல், பெட்ரோல் விலைகளை உயர்த்தியிருந்தாலும்கூட, இன்றைக்குக்கூட, ஒரு வாரமாக அந்தப் பேச்சுக்கள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. உலகச் சந்தையிலே எண்ணெய் விலை கூடிவிட்டது, மீண்டும் டீசல், பெட்ரோல் விலையை ஏற்றவேண்டுமென்ற நிலையை மத்திய அரசு எடுக்கின்ற ஒரு நிலையிலே இருக்கின்ற சூழ்நிலையையெல்லாம் நாம் அறிந்து கொண்டிருக்கிறோம்.

அப்படியிருக்கின்ற இந்த நேரத்தில், நமது அரசைப் பொறுத்தளவிலே, இன்றைக்குப் பல மாநிலங்களைக்கூட இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மணித்துளிகளில் முடித்துவிடுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** கேரளாவிலே, ஆந்திரப் பிரதேசத்திலே, கர்நாடகத்திலே இருக்கின்ற பேருந்துக் கட்டண விகிதங்களை ஒப்பிட்டுக் காட்டி, தமிழகத்திலேதான், இருக்கின்ற மாநிலங்களிலேயே குறைந்த பேருந்துக் கட்டணங்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு, பல தடவை டீசல் விலையை உயர்த்தியும்கூட, பேருந்துக் கட்டணத்தை உயர்த்தாமலும், அதோடுகூட பேருந்துகள் இலாபத்திலே இயங்குகின்ற நிலையையும் ஏற்படுத்தி இருக்கிறது இந்த அரசு என்று சொன்னால், இந்த அரசினுடைய நிர்வாகச் சீர்திருத்தத்தை நிச்சயமாக கிராமப்புறங்களிலே இருக்கின்ற சாதாரண மக்கள்கூட பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-20*

அதுபோல, எரிசக்தித் துறை. இன்றைக்கு எல்லோரும் மிக மகிழ்ச்சி அடைகிற ஒரு அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். இந்த எரிசக்தித் துறையிலே மொத்தத் தேவை எவ்வளவோ, அந்தத் தேவையைக் கடந்த மாதம் 23-2-2005 அன்று இந்த மாநிலம் எட்டியிருக்கிறது என்கின்ற செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். இதுவரை, கடந்த காலங்களில் எல்லாம், எங்கு பார்த்தாலும் மின் தடை. விவசாயிகளாகிய நாங்கள் எல்லாம், கிணற்றிலே நீர் இருக்கும், அதை வெளியிலே கொண்டுவருவதற்கு மின்சாரம் இல்லையே என்று ஏக்கத்தோடு காத்திருந்த காலம் எல்லாம் மாறி, இன்றைக்குப் போதுமான நீர் இல்லையே, மின்சாரம் தடையின்றி இருக்கிறதே என்று எண்ணுகின்ற அளவிற்கு எல்லாப் பகுதிகளிலும் தடையே இல்லாத அளவிற்கு மின்சாரத்தை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அதுவும் இந்த ஆட்சியினுடைய சிறப்பு. அதுபோல இந்த வட்டாரப் போக்குவரத்துக் கழகங்கள் அரசுப் பேருந்துகளை மேலும் இலாபத்தில் ஓட்டுவதற்கு சில கடமைகளை அவர்கள் ஆற்ற வேண்டும். சில இடங்களிலே தனியார் பேருந்துகள் தாங்கள் பெற்ற வழித்தடத்தைவிட்டு வழி மாறிச் செல்லுகின்ற காரணங்களினால், ஒரு உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், மதுரையிலிருந்து சோழவந்தான்



வழியாக திண்டுக்கல்லுக்குச் செல்லுகின்ற பேருந்துகள், நேரடியாக வாடிப்பட்டி வழியாக திண்டுக்கல்லுக்குச் செல்லுமேயானால், அது அரசுப் போக்குவரத்துக் கழகங்களினுடைய வருவாயைப் பாதிக்கின்ற அளவிற்கு ஆகிவிடுகிறது.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அருமை அண்ணன் சந்தானம் அவர்கள் சொல்லுகின்றபோது, சில தனியார் பேருந்துகள் குறிப்பிட்டுப் பெற்ற உரிமங்களில் அனுமதிக்கப்பட்ட வழித்தடங்களில் பேருந்துகளை இயக்காமல், தவறுதலாக அவர்கள் விருப்பம்போல் இயக்குவதாகச் சொன்னார்கள். ஒரு சில பேருந்துகளை சென்ற ஆட்சிக் காலத்தில் தொடர்ச்சியாக அப்படித்தான் இயக்கி வந்தார்கள். ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததற்குப் பின்பு அப்படிப்பட்ட தவறுகளை எல்லாம் மிகக் கடுமையாகக் கண்காணித்து, நமது போக்குவரத்துத் துறை அதிகாரிகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசு ஆணையிட்டிருக்கிறது. அதனுடைய அடிப்படையில் இப்போது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு, அப்படிப்பட்ட தவறுகள் எல்லாம் குறைக்கப்பட்டிருக்கின்றன. எங்காவது அங்கொன்றும், இங்கொன்றுமாக ஏதாவது அப்படித் தனியார் பேருந்துகள் தாங்கள் பெற்ற உரிமத்தை விட்டுவிட்டு வேற்று வழியில், மாற்று வழியில் இயக்கினால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அதன்மீது உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** அதுபோல சில இடங்களிலே van-கள் பயன்படுத்துகின்ற காரணத்தினால் நகரப் பேருந்துகளில் வருகின்ற வருவாய் எல்லாம் குறைகின்ற சூழ்நிலை இருக்கிறது. அப்படி நகர்ப்புறங்களிலே அந்த van-களை ஓட்டுகின்ற ஒரு நிலையைத் தடுப்பதற்கும் அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த மானியக் கோரிக்கைகளிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொழியும் மழையாய் கருணை, எரியும் நெருப்பாய் கர்ஜனை, உருகும் மெழுகாய் தியாகம், உருளும் பூமியாய் உழைப்பு, ஒன்றாய்ச் சேர்ந்ததோர் உயிரில், எங்கள் அம்மா என்னும் வடிவில், என்னை உருவாக்கியும்— (மேசையைத் தட்டும் ஒலி) என்னை உருவாக்கியும், எம்மைப்

போன்றவர்களை உயர்வாக்கியும், தொடர்ந்து ஆசிபுரிகின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, என்னுடைய உரையை நான் பணிவோடு துவங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறைத் தொண்டிலும் உயரியது மக்கள் தொண்டு என்றார் ஏசு பிரான். இதே கருத்தைத்தான் தென்னாட்டு காந்தி, இந்நாட்டு பெர்னாட் ஷா, நம் பேரறிஞர் அண்ணா அவர்கள், 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்று சொன்னார்கள். நம் பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்ட அந்த மக்கள் தொண்டை நம் தாய், அறிஞர் அம்மா அவர்கள் இன்றைக்கு மனதாரச் செய்து கொண்டிருக்கின்றபொழுது, அந்த மக்கள் தொண்டை சில மஞ்சள் துண்டுகள் விமர்சனம் செய்வதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. அம்மா செய்கின்ற மக்கள் தொண்டை சில மஞ்சள் துண்டுகள் மட்டுமல்ல, சிவப்புத் துண்டுகள் சின்னதாய்ச் சிரிக்கிறதைப் பற்றியும் எங்களுக்குக் கவலையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005–2006 ஆம் ஆண்டு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை மானியக் கோரிக்கைகளின் விவாதத்திலே கலந்து கொண்டு இந்த மாமன்றத்திலே பேசுகின்ற அரிய வாய்ப்பைக் கொடுத்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, நாட்டின் மிக முக்கியக் கோரிக்கையான, நாட்டினுடைய மிக முக்கியத் துறையான போக்குவரத்துத் துறையிலே, அதாவது 16,773 பேருந்துகளைக் கொண்டு ஒரு நாளைக்கு 64,84,000 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்து, ஒரு நாளைக்கு 1,66,19,000 பயணிகளைச் சுமந்து, ஏற்றி, இறக்கி, இன்றைக்கு நம்முடைய போக்குவரத்துத் துறையினுடைய 15 ஆண்டு கால வரவு–செலவுகளை நான் உற்றுநோக்குகின்றபொழுது, இந்த மாமன்றத்திலே சில கருத்துகளை நான் அழுத்தமாகப் பதிய விரும்புகின்றேன். 15 ஆண்டு கால வரலாறுகளை நான் ஆய்வு செய்கின்றபொழுது, ஒரேயொரு கருத்தை நான் அழுத்தமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 12–25*

அம்மாவின் ஆட்சிக் காலம் போக்குவரத்துத் துறைக்குப் பொற்காலம்; தி.மு.க.வினுடைய ஆட்சிக் காலம் போக்குவரத்துத் துறைக்குப் போதாத காலம் என்பதை இந்த நேரத்திலே நான் அழுத்தமாகப் பதிய வைக்க விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், 1991–லே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதன்முதலாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றபொழுது, அன்றைக்கு இந்தத் துறையிலே



இருந்த நஷ்டம் 164.13 கோடி ரூபாய் மட்டுமே. அதற்குப் பின்னாலே 1991 முதலாக 1996 வரையிலே அம்மா அவர்களுடைய ஐந்தாண்டு கால ஆட்சியிலே, இந்தத் துறையிலே நஷ்டம் வெறும் ரூ. 368.85 கோடி மட்டுமே. இதற்குப் பின்னாலேதான் போக்குவரத்துத் துறைக்குப் போதாத காலம் ஆரம்பிக்கின்றது. அதாவது, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே அமர்கின்றது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே அமர்ந்ததற்குப் பின்னாலே, நிருவாகச் சீர்கேட்டால், ஊழல் நடைமுறைகளால், தனிப்பட்ட சுய இலாபத்திற்காகத் துறையை இட்டுச் சென்ற காரணத்தினாலே, இன்னும் சொல்லப் போனால், mini bus, maximum commission என்ற வகையிலே சில செயல்பாடுகளை அவர் செய்த காரணத்தினாலே, அதற்குப் பின்னாலே இலாபம் தரக்கூடிய route-களை சில தனியாருக்குப் பங்கு போட்டு விற்ற காரணத்தினாலே. என்ன நடந்தது தெரியுமா? மார்ச் 31, 2000 ஆம் ஆண்டு அறிக்கையிலே, இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் அழகாகச் சொல்லியிருக்கிறார். இந்தப் போக்குவரத்துக் கழகங்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே 1,498.2 கோடி ரூபாய் அளவிற்கு மிகப் பெரிய நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அன்றைக்குத் தணிக்கைத் துறைத் தலைவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஆக மொத்தம், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி முடிகின்ற தருவாயிலே ஏற்பட்ட மொத்த நஷ்டம், அதாவது cumulative loss, 2,031.18 கோடி ரூபாயாகும். நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், ஐந்து வருட ஆட்சிக் காலத்திலே, போக்குவரத்துத் துறையை அதலபாதாளத்திற்கு இழுத்துச் சென்று, 2,031 கோடி ரூபாய் நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய லட்சணத்தை இன்றைக்கு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பின்னாலே, இந்தப் போக்குவரத்துத் துறைக்குப் பொற்கால ஆட்சி ஏற்படுகின்றது. ஆம். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு, அம்மா அவர்களுடைய அரசு பதவியேற்கின்றது. அம்மா அவர்கள் பதவியேற்றதற்குப் பின்னாலே, 2001–லே, 2001–2002–லே, அதாவது நம்முடைய அம்மா அவர்களுடைய ஆட்சியினுடைய முதல் ஆண்டிலேயே அந்தக் கடுமையான நஷ்டம், புரட்சித் தலைவி அம்மாவினுடைய மதிநுட்பத்தாலே, தெளிந்த நிர்வாகத்தாலே, சீரிய திறனாலே, தொலைநோக்குப் பார்வையாலே, நஷ்டம் ரூ. 98.86 கோடியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது, கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னாலே 2002–2003 ஆம் ஆண்டிலே, அதாவது நாம் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலே, ஆட்சியினுடைய இரண்டாவது ஆண்டிலே, இதே நஷ்டம் ரூ. 4.21 கோடியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[டாக்டர் சி. விஜயபாஸ்கர்] [2005 மார்ச் 29

அதற்குப் பின்னாலே, 2003-2004 ஆம் ஆண்டிலே, நம்முடைய ஆட்சியினுடைய மூன்றாவது வருடத்திலே இந்த நஷ்டம் குறைக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், இந்த நஷ்டம் கட்டுப்படுத்தப்பட்டதோடு மட்டுமல்லாமல், இந்த நஷ்டம் மாறி, போக்குவரத்துத் துறையினுடைய 18 ஆண்டு கால வரலாற்றிற்குப் பின்னாலே, முதன்முறையாக தமிழ்நாட்டினுடைய வரலாற்றிலே 2.38 கோடி ரூபாய் இலாபத்தை ஈட்டியிருக்கிறது என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நிர்வாகத் திறமைக்கு இதுதான் சான்று. 2004-2005-லே, அதாவது, நம்முடைய ஆட்சியினுடைய இந்த நான்காவது ஆண்டு காலத்திலே, கொள்கை விளக்கக் குறிப்பிலே அமைச்சர் அவர்கள் அழகாகக் கொடுத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு போக்குவரத்துக் கழகங்கள் ரூ.14 கோடி இலாபத்தை ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்.

இன்னும்கூட இதைப் பார்க்கின்றபோது, பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்லுகின்ற வாக்கியங்கள் எனக்கு நினைவுக்கு வருகின்றன. பேரவைத் தலைவர் அவர்கள் அடிக்கடிச் சொல்வார்களே! காளை மாடு கன்று ஈன்ற கதையாக, கறந்த பால் மடி புகுந்த கதையாக, கருவாடு மீனான கதையாக, இன்றைக்கு நம்முடைய தமிழ்நாடு அரசினுடைய வரலாற்றிலே போக்குவரத்துக் கழகங்கள் முதன்முறையாக, 18 ஆண்டுகளுக்குப் பிறகு வருவாய் ஈட்டியிருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. அம்மா அவர்கள் சொன்னார்களே, தமிழகத்தை இந்தியாவின் முதல் மாநிலமாக உருவாக்கிக் காட்டுவேன் என்று சொன்னார்களே, அந்த இலக்கை அடைந்திருக்கின்றோம், அந்த வெற்றியை அடைந்திருக்கின்றோம், அந்த இலட்சியத்தை அடைந்திருக்கின்றோம், அந்த வீர சபதத்தைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த இலாபம் என்ன, பஸ் கட்டணத்தை ஏற்றியதால் வந்த இலாபமா? அல்லது இந்த இலாபம் ஏதோ மத்திய அரசு டீசல் விலையைத் திடீரென்று குறைத்துவிட்டதால் கிடைத்த இலாபமா? இல்லையே! மாயமா! மந்திரமா! மாயாஜாலமா! எப்படி வந்தது இந்த இலாபம்? எண்ணிப் பார்க்க வேண்டாமா?

பிற்பகல் 12-30

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே போக்குவரத்துத் துறையிலே என்ன நடந்தது? போக்குவரத்துக் கழகத்தை அடகு வைத்து,



2005 மார்ச் 29] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் அலுவலகத்தை அடகு வைத்து, bus-களை அடகு வைத்து, அடமானம் வைத்து, மேஜை, நாற்காலியை அடமானம் வைத்து, சம்பளத்திற்குத் திண்டாடிய காலத்தை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டாமா? இன்னும் சொல்லப் போனால், 1 ஆம் தேதி கொடுக்க வேண்டிய சம்பளத்தை, 10 ஆம் தேதியல்ல, 15 ஆம் தேதிகூட கொடுக்க முடியாமல், ஒரு நாள் collection-ஐப் பகிர்ந்து எடுத்துக்கொண்ட காலம்தான், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலம். ஆனால், அப்படிக் கிடந்த அந்தத் துறையை, நொண்டியாக, முடமாக, முடங்கிப் போன அந்தத் துறையை, இன்னும் சொல்லப் போனால், நோஞ்சானாகி, நோய்வாய்ப்பட்டு, குற்றுயிரும், குலை உயிருமாய் உயிருக்குப் போராடி, ஐயோ, காப்பாற்றுங்கள் என்று அலறிய அந்தத் துறையைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கையிலே எடுத்தார்கள். அந்தத் துறையை I.C.U-விலே admit செய்து, Oxygen கொடுத்து, Glucose ஏற்றி, தட்டிக் கொடுத்து, உயிர் கொடுத்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்தி, அதைத் தயார் செய்து, ஓட்டப் பந்தயத்தில் நிற்க வைத்து தங்கப் பதக்கத்தைப் பெறுகின்ற அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு இலாபத்தை ஈட்டியிருக்கிறார் என்று சொன்னால், உலக அரசியல் வரலாற்றிலே அம்மா அவர்களைத் தவிர இந்தச் சாதனையை எந்தத் தலைவராலும் செய்ய முடியாது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்த நேரத்திலே அழுத்தந்திருத்தமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைத்தான் வள்ளுவன் சொல்லியிருக்கின்றான்:

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்று சொல்லியிருக்கிறார். சாதிக்கப் பிறந்தவர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். சோதனைகளைச் சாதனைகளாக்கி, தடைக் கற்களைத் தகர்த்தெறிந்து, போக்குவரத்துக் கழகத்தினுடைய வரலாற்றிலே இந்த வெற்றியைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்குப் பெற்றுக் கொடுத்திருக்கிறார்கள். இதைப் பார்க்கின்றபோது, German Philosopher Kathay என்பவர் சொல்லியிருக்கிறார்: "If God had another plan he would have created another man" என்று சொல்லியிருக்கிறார். அதுபோல, இன்றைக்கு இதுபோன்ற சாதனைகளை, இதுபோன்ற அபாரங்களை, இதுபோன்ற அற்புதங்களை, இதுபோன்ற திட்டங்களை, இதுபோன்ற தொலைநோக்குப் பார்வையை, இதுபோன்ற நன்மைகளையும் படைப்பதற்காகத்தான் ஆண்டவன் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் படைத்திருக்கிறான் என்பதை இந்த நேரத்தில்

அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ரூ. 2,031 கோடி நட்டம் அடைந்த இந்தப் போக்குவரத்துத் துறையை அம்மா அவர்களுடைய ஆட்சியிலே இன்றைக்கு 14 கோடி ரூபாய் அளவிற்கு இலாபம் பெறக்கூடிய அளவிற்கு உயர்த்தியிருக்கிறார்கள் என்று சொன்னால், எப்படிப்பட்ட சூழ்நிலையில் அதை உயர்த்தியிருக்கிறார்கள்? மத்திய அரசினுடைய மிகக் கடுமையான டீசல் விலை உயர்வு, இந்தியாவிலேயே மிகக் குறைந்த கட்டணம், கிலோ மீட்டருக்கு 28 பைசா. தொழிலாளர்களுக்குச் சலுகைகள் மறுக்கப்பட்டனவா? அதையும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். புதிய பேருந்துகளை வாங்கவில்லையா? தொடர்ந்து வாங்கிக் கொண்டிருக்கிறோம். இலவச bus பயணம். bus pass-ஐ நிறுத்திவிட்டோமா? இல்லை. கூடுதலாகக் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். இவ்வளவு சலுகைகளைக் கொடுத்ததற்குப் பின்னாலே, இவ்வளவு எதிர் நீச்சல் போட்டு இந்தத் துறைக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னும் நான் விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 6–12–2001–லே தமிழ்நாட்டிலே பேருந்துக் கட்டணம் உயர்த்தப்பட்டது. அன்றைக்கு ஒரு லிட்டர் டீசலினுடைய விலை 18 ரூபாய் 53 பைசா. ஆனால், அதற்குப் பின்னாலே 18 ரூபாய் என்று இருந்த டீசல் விலையை 14 முறை உயர்த்தியிருக்கிறார்கள். மத்திய அரசு 14 முறை டீசல் விலையை உயர்த்தியிருக்கிறது. இன்றைக்கு இந்த டீசலினுடைய விலை 28 ரூபாய் 84 பைசா. ஏறத்தாழ ஒரு லிட்டருக்கு 10 ரூபாய், டீசல் விலை உயர்ந்திருக்கிறது. ஒரு கணக்கு என்னவென்று சொன்னால், ஒரு லிட்டருக்கு 1 ரூபாய், டீசலினுடைய விலை உயர்ந்தாலே போக்குவரத்துக் கழகத்திற்கு ஓராண்டிற்கு 50 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும். ஆனால், 10 ரூபாய் உயர்ந்திருக்கின்றபோது, ஒரு கணக்கைப் பார்க்கின்றபோது, புள்ளிவிவரப்படி ஒரு வேளை டீசல் விலை உயராமல் இருந்திருந்தால், இன்றைக்கு இந்தப் போக்குவரத்துத் துறையினுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே 514 கோடி ரூபாய் வருவாய் வந்திருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் இந்த அவையிலே பதிய வைக்க விரும்புகிறேன் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியிலே காங்கிரஸ் ஆட்சிக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய கம்யூனிஸ்ட் இயக்கத்தைப் பார்த்து நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன், அல்லது 12 அமைச்சர்களைப் பங்கு பெற வைத்து, மத்திய ஆட்சியிலே பங்காளிகளாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தைப்



பார்த்து நான் கேட்க விரும்புகிறேன், சர்வதேசச் சந்தையிலே கச்சா எண்ணெய் விலை உயர்ந்திருக்கிறது, கச்சா எண்ணெய் விலை உயர்ந்திருக்கிறது, கச்சா எண்ணெய் விலை உயர்ந்திருக்கிறது என்று சொல்லியே, இன்றைக்கு ஓட்டலிலே வைக்கப்படுகின்ற பெயர்ப் பலகையைப்போல தினந்தோறும் விலை உயர்வு, விடிந்தால் விலை மாற்றம், இரவோடு இரவாக விலை ஏற்றுகிறவாறு 14 முறை இந்த டீசல் விலையை நீங்கள் உயர்த்தியிருக்கிறீர்கள். ஆனால், இந்தச் சுமையைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் தாங்கிக்கொண்டு, தான் உள்வாங்கிக்கொண்டு, பேருந்துகளிலே பயணம் செய்யக்கூடிய ஏழையெளியவர்கள், அடித்தளத்து மக்கள் அந்தச் சுமையை ஏற்கக்கூடாது என்பதற்காக, அந்தச் சுமையை அம்மா அவர்கள் தாங்கிக் கொண்டிருக்கிறார்கள். bus கட்டணத்தை 2001—க்குப் பிறகு உயர்த்தவேயில்லை. ஏனென்று சொன்னால், உங்கள் சிந்தையிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களுடைய சிந்தையிலே இருப்பது சர்வதேசச் சந்தை. ஆனால், அம்மா அவர்களுடைய சிந்தையிலே இருப்பது சாமானியன் அணிந்திருக்கும் கந்தை என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்குக் காவல் துறையிலே, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையிலே அம்மா அவர்கள் சில உயர்வுகளைக் கொடுத்தார்கள். அதற்கு ஒரு பெரியவர் வெளியிலேயிருந்து ஒரு அறிக்கை விடுகின்றார். காவல் துறைக்கு நான் எவ்வளவோ செய்து இருக்கின்றேன், நிறையக் கொடுத்திருக்கின்றேன், நீங்கள் கொடுத்தது போதாது, இன்னும் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று குதர்க்கமாக அறிக்கை விடுகிறார். நான் பணிவோடு கேட்கின்றேன். ஐயா, பெரியவரே, நீங்கள் சொல்வதைத்தான் சொல்கிறீர்கள், அதை ஏன் முச்சந்தியிலே நின்று அறிக்கையாகச் சொல்கிறீர்கள்? நீங்களும் இந்த மாமன்றத்தினுடைய உறுப்பினர்தானே? உங்களுக்கும் வாக்களித்து இருக்கிறார்களே, நீங்கள் தைரியமாக இந்தச் சபைக்கு வரலாமே! புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காவல் துறை மானியக் கோரிக்கையிலே கலந்து கொண்டு, உங்களுடைய ஆழமான, அழுத்தமான, கவிதைத் திறனை, புலமைத் திறனை இந்த அவையிலேயிருந்து, அம்மா அவர்களிடத்திலே நீங்கள் காண்பிக்க வேண்டியதுதானே? ஏன் முச்சந்தியிலே நின்று நீங்கள் அறிக்கை விடுகிறீர்கள் என்பதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாபெரும் தலைவர் சட்டமன்றத்திற்கு வர மறுக்கிறார். ஆனால் சாலை மறியலுக்கு ஆர்வத்தோடு வருகிறார். அதுதான் எனக்குப் புரியவில்லை. நான் கேட்கின்றேன், தண்டவாளத்திலே தலை வைத்தவர் ஏன், இந்தச்

சட்டமன்றத்திலே ஒரு கால் வைக்கக்கூடாதா? தண்டவாளத்திலே தலை வைக்கின்ற தைரியம் இருக்கின்ற அவருக்கு சட்டமன்றத்திலே கால் வைக்கின்ற தைரியம் ஏன் இல்லை என்பதுதான் எங்களுக்குப் புரியவில்லை. ஒரு வேளை border mark–லே pass செய்ததுபோல–border mark–லே திடீரென்று pass செய்ததுபோல, சொற்ப வாக்கு வித்தியாசத்திலே வெற்றி பெறச் செய்து safe ஆகச் சட்டமன்றத்திற்கு அனுப்பிய சேப்பாக்கம் தொகுதி மக்களையாவது நீங்கள் தயவுசெய்து சிந்திக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அல்லது எங்களுடைய அம்மா அவர்கள் சொன்னார்களே, இரயில் வராதபோது தண்டவாளத்திலே தலை வைத்துப் படுத்தாரே, அதுபோல எங்கள் அம்மா வராதபோது சட்டமன்றத்தினுடைய பின்பக்கமாக வந்து கையெழுத்திட்டுச் செல்கிறீர்களே? அதுதான் ஏன் என்று புரியவில்லை என்பதை இன்றைக்கு மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 12–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் காலையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பேசுகின்றபொழுதுகூட சொன்னார்கள். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி விரிக்கின்ற வலையிலே இன்றைக்கு மற்றவர்கள் விழுந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொன்னார்கள். நான் பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்படுகிறேன். நத்தையைப் பார்த்திருப்போம். நத்தை இருக்கிறதே நத்தை, அந்த நத்தை எங்கு சென்றாலும் தனியாகச் செல்லாது. ஏதோ நம்முடைய பக்கத்து வீட்டுக்காரனை நம்பாததுபோல தன்னுடைய கூட்டை, தன்னுடைய ஓட்டை முதுகிலே சுமந்துகொண்டு, எங்கே போனாலும் கூட்டிக்கொண்டே போகுமாம். அதுபோல, இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் வெளிநடப்புச் செய்கின்றபொழுது, நத்தை கூடவே தன்னுடைய ஓட்டைத் தூக்கிக்கொண்டு செல்வதுபோல, கூடவே எல்லோரையும் கூட்டிக்கொண்டு சென்றுவிட்டார்கள். ஐயோ பாவம், ஒரு வேளை விட்டால், வேறு எங்காவது சேர்ந்து விடுவார்களோ என்ற பயமா என்பது எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கொள்கை விளக்கக் குறிப்பினுடைய 12–வது பக்கத்திலே மிக அழகான ஒரு பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆந்திராவிலே ஒரு கிலோ மீட்டருக்கு 35 பைசா; கர்நாடகாவிலே ஒரு கிலோ மீட்டருக்கு .31 ரூபாய் 50 பைசா; கேரளாவிலே ஒரு கிலோ மீட்டருக்கு 42 பைசா, ஆனால் தமிழ்நாட்டிலே



ஒரு கிலோ மீட்டருக்கு 22 பைசா, அதாவது, இந்தியாவிலே இருக்கக்கூடிய அத்தனை மாநிலங்களிலுமே மிகக் குறைந்த கட்டணத்தை வசூல் செய்கின்ற துறையாக இருக்கிறது நம்முடைய போக்குவரத்துத் துறை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, இந்தச் சூழ்நிலையிலும் நாம் வெற்றியைப் பெற்றிருக்கின்றோம், இலக்கை அடைந்திருக்கின்றோம்; இலாபத்தை ஈட்டியிருக்கிறோம் என்ற என்னுடைய அந்தக் கருத்தை இங்கே அடிக்கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

நம்முடைய அம்மாவுடைய ஆட்சியிலே விபத்துக்கள், உயிரிழப்புகள்கூட கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே மிக அழகான ஒரு புள்ளிவிவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் துறையினுடைய வெற்றிக்குக் காரணம் என்ன? சிறப்பான நிர்வாகம், சிறப்பான பராமரிப்பு, கடுமையான கட்டுப்பாடுகள், கூடுதல் இயக்கத் திறன், வெளிப்படையான கொள்முதல் கொள்கை, தொழிலாளர்களுக்கு முழுமையான பாதுகாப்பு, பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகள், தரமான சாலைகள். இவை எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தத் துறையினுடைய மிகப் பெரிய வெற்றிக்குக் காரணம், அம்மா அவர்களுடைய சீரிய, சிறப்பான, தெளிந்த வழிகாட்டுதல் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு இந்தத் துறையை வெற்றியடையச் செய்திருக்கிறது. இந்தத் துறை இவ்வளவு வெற்றி பெறுகின்றபொழுதுகூட, தொழிலாளர்களுக்குச் செய்யக்கூடிய சலுகைகளை மறந்துவிடவில்லை. இன்றைக்கு ஊதிய உயர்வு, பேச்சுவார்த்தையிலே இருக்கின்றபொழுதுகூட, 250 ரூபாயை மாதத்திற்கு இடைக்கால நிவாரணமாக வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு உச்சவரம்பின்றி 8.33 சதவிகித போனஸ், 1.67 சதவிகிதக் கருணைத் தொகை சேர்த்து அத்தனை தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே G.O. 13 என்ற ஒரு உத்தரவைப் போட்டு, பட்டதாரியாக இருக்கக்கூடிய பல்வேறு— அங்கே பணிபுரியக்கூடிய அந்தப் பட்டதாரிகளை, A.M. என்று சொல்லக்கூடிய அந்தப் பொறியாளர்களைக்கூட இதுவரை பதவி உயர்வு செய்யாமல் வைத்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

அதுமட்டுமல்ல. மாணவர்களுக்கு எவ்வளவு பெரிய சலுகைகள்? தனியார் பள்ளிகளிலே 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கக்கூடிய மாணவர்களுக்குச் சலுகைகள் கொடுத்திருக்கிறார்கள். கல்லூரி மாணவர்களுக்கு 50 சதவிகித சலுகையைக் கொடுத்திருக்கிறார்கள்.

நான் பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன், தான் பெற்ற பிள்ளைக்காக ஆட்சிக் கட்டில் அமைத்துக் கொடுக்கின்ற, அமைத்துக் கொடுக்க ஆலாய்ப் பறக்கின்ற தலைவர் இந்த நாட்டிலே இருக்கின்றார். தன்னுடைய பேரப் பிள்ளைக்கு மத்திய அமைச்சர் பதவி கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார். அப்படிப்பட்ட தலைவர்கள் இந்த நாட்டிலே இருக்கின்றபொழுது, தான் பெறாத பிள்ளைக்குத் தொட்டில் குழந்தைத் திட்டம் தந்தவர்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தான் பெறாத பிள்ளைகளுக்கு, இந்த நாட்டினுடைய ஏழைப் பிள்ளைகளுக்கு, 97 இலட்சம் மாணவர்களுக்குப் புத்தகங்களை இலவசமாகக் கொடுத்தவர்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தான் பெறாத பிள்ளைக்கு இலவசமாக Bus Pass-ஐக் கொடுத்தவர்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மின் துறையிலே என்னுடைய சிறிய கருத்தை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன். மெழுகாய்த் தான் உருகி, தமிழ்நாட்டை மேம்படுத்தும் ஒப்பில்லா ஒளிவிளக்காம் எங்கள் அம்மாவுடைய ஆட்சியிலே மின் வெட்டு என்பது இன்றைக்கு அறவே இல்லை. தடையில்லா மின்சாரம் தரப்படுகின்றது. இலவச மின்சாரமும் தொடர்ந்துகொண்டிருக்கிறது. தமிழகம் இன்றைக்குப் புரட்சித் தலைவி அம்மாவுடைய தலைமையிலே பிரகாசமாய் ஒளிர்ந்து கொண்டிருக்கின்றது. ஏன் என்று சொன்னால், எங்கள் அம்மா அவர்கள் அடிப்படையிலே ஒரு ஒளிவிளக்காய் இருக்கிறார் என்பதை நான் பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 12–40*

மரபுசாரா எரிசக்தித் துறையிலே இந்த வருடம் ஒரு proposal–ஐ நம்முடைய தமிழ்நாடு அரசு மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறது. என்னவென்று சொன்னால், SPV Home lights, SPV Street lights என்று சொல்லக்கூடிய solar light-களை இன்றைக்கு முறையே 7,950, 7,500 வேண்டுமென்று கேட்டு, மத்திய மரபுசாரா எரிசக்தி அமைச்சகத்திடம் கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. எனக்கு நீண்ட நம்பிக்கை இருக்கிறது, இந்தத் துறையிலே அனுப்பப்பட்ட அந்த proposal–க்கு நிச்சயமாக அனுமதி கிடைத்து விடுமென்று. ஏனென்று சொன்னால், நல்ல வேளையாக மரபுசாரா எரிசக்தி அமைச்சகத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த எவரும் மத்திய மந்திரிகளாக இல்லை. ஆகையினாலே, நிச்சயமாக இதற்கு அனுமதி கிடைத்து விடும் என்பதை நாம் எதிர்பார்க்கலாம்.



இறுதியாக, ஒரு காலத்திலே ஊழலுக்கு மட்டும் உதவிய திட்டமாக இருந்த வீராணம் திட்டத்தை, ஊருக்கு உதவுகின்ற திட்டமாகப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்தார்கள். அண்ணன் எஸ்.ஆர்.பி. அவர்கள் எழுந்தார்கள். என்ன சொன்னார்கள்? வீராணம் திட்டம் வராது என்று சொன்னார்கள். அம்மா வரும் என்று சொன்னார்கள். சவால் விட்டார். புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சவாலே சமாளி என்று சொன்னார்கள். வீராணம் வந்ததா, இல்லையா? தண்ணீர் வந்ததா, இல்லையா? அதற்குப் பின்னாலே எழுந்தார், வீரப்பனைப் பிடிக்க முடியுமா என்று கேட்டார். முடியவே முடியாது என்று அவர் சொன்னார். அம்மா சொன்னார்கள், பிடித்துக் காட்டுவேன் என்று சொன்னார்கள். பிடித்துக் காட்டினாரா, இல்லையா? இப்படி எதற்கெடுத்தாலும் ஏட்டிக்குப் போட்டியாக, எடக்கு மடக்காக, குண்டக்க மண்டக்கவாக எதையாவது உளறிக் கொண்டிருக்கின்ற ஒரே தொழிலைச் செய்யக்கூடிய அருமை அண்ணன் எஸ்.ஆர்.பி. அவர்களைப் பார்க்கின்றபோது எனக்கு ஒரே ஒரு சிறிய கதை ஞாபகம் வருகிறது. அதைச் சொல்லி என்னுடைய உரையை முடிக்கலாம் என்று இருக்கிறேன்.

அது வேறு ஒரு கதையும் இல்லை. ஒரு ஆம்லெட் கதை. என்னவென்று சொன்னால், ஒரு கணவன் இருக்கிறார், மனைவி இருக்கிறார். ஒரு மனைவி எந்தக் காரியத்தைச் செய்தாலும் அந்த மனைவியைக் குற்றம் சொல்ல வேண்டும், குறை சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தோடு கணவன் வீட்டுக்கு வருகின்றான். வீட்டுக்கு வருகின்ற கணவனுக்கு, சாப்பிடுகிறபோது ஒரு அழகான ஆம்லெட்டை வார்த்துத் தட்டிலே வைக்கின்றார் மனைவி. உடனே கணவன் கேட்கின்றான், யாரைக் கேட்டு நீ ஆம்லெட் செய்தாய்? இன்றைக்கு நான் half-boiled அல்லவா சாப்பிட வேண்டும் என்று நினைத்தேன் என்று சொல்கின்றான். ஓ, அப்படியும் பிரச்சினையாகி விட்டதா என்று வருத்தப்பட்டார் மனைவி. அடுத்த நாள் கணவன் வீட்டுக்குச் சாப்பிட வருகின்றான். ஒரு அழகான half-boiled–ஐப் போட்டுத் தட்டிலே வைக்கிறார். உடனே அந்தக் கணவன் அடுத்த நாள் கேட்கின்றான், யாரைக் கேட்டு நீ half-boiled செய்தாய்? இன்றைக்கு நான் ஆம்லெட் அல்லவா சாப்பிட வேண்டும் என்று நினைத்தேன் என்று சொல்கின்றார். இது ஏதடா பிரச்சினை ஆகிப் போச்சே என்று பயந்த மனைவி, அடுத்த நாள் சாப்பிட வருகிறபோது, 3–வது நாள், ஒரு தட்டிலே அழகான ஆம்லெட், இன்னொரு தட்டிலே அழகான half-boiled என்று இரண்டையும் வார்த்து வைக்கிறார். அதற்குப் பின்னாலே விட்டானா, அந்த நக்கீரக் கணவன்? எஸ்.ஆர்.பி. போன்றவனாயிற்றே, கேட்டானே ஒரு கேள்வி. நீ half-boiled போட வேண்டிய முட்டையிலே ஆம்லெட் போட்டிருக்கிறாய், நீ ஆம்லெட்

போட வேண்டிய முட்டையிலே half-boiled போட்டிருக்கிறாய் என்று அப்போதும் கேட்கின்றான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்திற்கு எல்லாம் ஏதேனும் முற்றுப்புள்ளி இருக்கிறதா? இந்த விவாதத்திலே ஏதேனும் அர்த்தம் இருக்கிறதா? இந்தக் கேள்வியிலே ஏதேனும் பொருள் இருக்கிறதா? ஆக, இதுபோன்ற விவாதங்களை இந்தச் சபையிலே தொடர்ந்து நிகழ்த்திக் கொண்டிருப்பதைத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலையிலே வன்மையாகக் கண்டித்து இங்கே பேசினார்கள்.

படைப்பவர் பிரம்மா, காப்பவர் அம்மா; இப்படித் தமிழகத்தினுடைய தாயுமானவராய், தமிழ்நாட்டை, இந்தியாவின் தலைநாட்டை உயர்த்திடவே இமைமூடாப் பணி செய்யும் இந்தியப் பெருந் தலைவியே! நாளெல்லாம் உழைக்கின்ற நான் வணங்கும் தாயே! தாஜ்மஹால், தொங்கும் தோட்டம், பிரமிடுகள், சீனப் பெருஞ்சுவர், இப்படி மனிதரால் உருவாக்கப்பட்டவை அதிசயங்களாக இருக்கின்றபோது, ஒரு மனிதரே இந்த உலகத்தில் அதிசயமாக இருக்கிறார் என்று சொன்னால், அது புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) அழுத்தமாகச் சொல்லி, நாட்டிற்காகவும், நாட்டு மக்களுக்காகவும் நாளெல்லாம் நீங்கள் உழைக்கின்ற நல்ல உழைப்பு மீண்டும், மீண்டும் உங்களைக் கோட்டையிலே, கொலுவிலே வீற்றிருக்கச் செய்யும். இது சத்தியம், சத்தியம் என்பதைச் சொல்லி, வாய்ப்பிற்கு நன்றி சொல்லி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி.

***திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை இந்தியாவின் முன்னோடி மாநிலமாக உருவாக்கி, தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும், எதிர்கால இந்திய மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும், நஷ்டத்தில் இயங்கிய போக்குவரத்துக் கழகத்தை இலாபத்தில் இயக்கி ஏழையெளிய மக்களின் பாதுகாவலராகத் திகழ்ந்து வரும் தங்கத் தாரகை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, 2005–2006 ஆம் ஆண்டு போக்குவரத்துத் துறை மற்றும் மின்சாரத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுகிற வாய்ப்பை உருவாக்கித் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.



இந்தியாவில் தமிழகம் எல்லாத் துறைகளிலும் முதன்மை மாநிலமாகத் திகழ வேண்டுமென்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் 2001–ல் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்கள் திறமையற்ற ஆட்சி நடத்தியதன் விளைவாக இருண்டு கிடந்த தமிழகத்தில் மீண்டும் ஒளியேற்றி, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இன்றைக்குப் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை எடுத்ததன் காரணமாக, இந்தியாவிலேயே, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் முதன்மை இடம் பெற்றிருக்கிறது என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலே மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாட்டில் மட்டும்தான் அம்மா அவர்கள் ஆணைக்கிணங்க பேருந்துக் கட்டணம் குறைவாக வசூலிக்கப்பட்டு, அனைத்துத் தரப்பு மக்களாலும் பாராட்டப்படுகின்ற வகையிலே இன்றைக்குப் போக்குவரத்துக் கழகங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

பிற்பகல் 12–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் போக்குவரத்துக் கழகங்கள் நலிவுற்று, பொலிவு இழந்து, மிகவும் சீரழிந்து, மோசமான நிலையில் இருந்ததை இந்த நாடு அறியும். அப்போது போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த பொன்முடியின் நிர்வாகத் திறமையின்மையாலும், நிர்வாகச் சீர்கேட்டாலும், குரங்கு கையில் கொடுத்த பூமாலை போன்று அன்றைக்குப் போக்குவரத்துத் துறையைச் சின்னாபின்னமாக்கினார்கள். இத்துறையில் நடந்த ஊழல் மற்றும் சீர்கேட்டினால், கிட்டத்தட்ட கடந்த ஆட்சியாளர்கள் செய்த அந்தக் குளறுபடியினால், 2,900 கோடி ரூபாய் தமிழக அரசுக்கு நட்டமாக, நிதிச் சுமையை ஏற்படுத்திவிட்டுச் சென்றது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதை மக்கள் நன்கு அறிவார்கள்.

கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஏழையெளிய மக்களைப் பாதிக்கின்ற வகையிலே பல முறை பேருந்துக் கட்டணம் உயர்த்தப்பட்டது. ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு மத்திய அரசு பல முறை டீசல் விலை உயர்வு, பெட்ரோல் விலை உயர்வு, மண்ணெண்ணெய் விலை உயர்வு, இதுபோன்ற பல்வேறு விலை உயர்வைச் செய்தாலும்கூட, அந்த நிதிச் சுமைகளை எல்லாம் பொறுத்துக்கொண்டு, தாங்கிக்கொண்டு, நாள் ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டாலும்கூட, ஏழை, எளிய மக்கள் பயனடைகின்ற வகையிலே பேருந்துக் கட்டணத்தை உயர்த்தாமல் இன்றைக்கு அம்மா அவர்கள் போக்குவரத்துத் துறையை நல்ல முறையிலே ஆட்சி செய்து,

ஏழை, எளிய மக்களுக்காக ஒரு நல்லாட்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாட்டு மக்கள் அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பாராளுமன்றத் தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக் கட்சிகள் எல்லாம் மக்களிடத்தில், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என்று சொல்லி ஏமாற்றி, வாக்குகளைப் பெற்று, இன்றைக்கு மத்தியிலே ஆட்சி செய்து கொண்டிருக்கிற காங்கிரஸ் கூட்டணியான திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி போன்ற கூட்டணிக் கட்சிகள் இன்றைக்கு மத்தியிலே ஆட்சியிலே இருந்துகொண்டு, 10 மாதங்களுக்குள்ளாக 5, 6 முறைகளுக்கு மேலாக பெட்ரோல் விலை, டீசல் விலை போன்றவற்றை எல்லாம் உயர்த்தி, தமிழக மக்களுடைய வயிற்றிலே அவர்கள் அடித்திருக்கின்றார்கள். இப்படி எரிபொருட்களுடைய விலைகளை உயர்த்திட்டபொழுதும் மாண்புமிகு அம்மா அவர்கள் இதுபோன்ற நிலைமையில், நிர்வாகச் சீர்திருத்தத்தின் அடிப்படையிலே பேருந்துக் கட்டண உயர்வு ஏற்படாமல் இருப்பதற்காக, இன்றைக்குத் தமிழகத்திலே பேருந்துக் கட்டண உயர்வே இல்லாமல் மக்களைக் காப்பாற்றி வருகின்றார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணைக்கிணங்க தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பயின்று வருகின்ற, 12 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவர்களுக்கு இலவசப் பேருந்துப் பயணச் சீட்டு வழங்கப்பட்டும், அதேபோன்று விடுமுறை நாட்களில்கூட அந்த மாணவர்கள் பள்ளிகளுக்குச் செல்லுகின்றபோது இலவசமாகப் பயணம் செய்வதற்குப் பேருந்துப் பயணச் சீட்டை வழங்கும் திட்டத்தை இன்றைக்கு அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல், கல்லூரி மாணவர்களுக்கு அரசுப் பேருந்துகளில் பயணம் செய்வதற்காக 50 சதவிகிதக் கட்டணச் சலுகையையும் இன்றைக்கு வழங்கி, மாணவர் சமுதாயத்தின்மீதும், பெற்றோர்களுடைய நலனிலும் அக்கறை கொண்டிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களைப் பொது மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள். இச்சலுகையினால் சுமார் 24 இலட்சம் மாணவர்கள் பயனடைகின்றார்கள். இதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு, இந்தப் போக்குவரத்துத் துறைக்கு 270 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கின்றது என்பதை நாட்டு மக்கள் வரவேற்று, மகிழ்ச்சியடைகிறார்கள் என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, நடப்பு ஆண்டில் 1,325 பழைய பேருந்துகளுக்குப் பதிலாகப் புதிய பேருந்துகளும், அடுத்த ஆண்டு 2,000 புதிய பேருந்துகளும்



விடப்படும் என்று சொல்லப்பட்டிருப்பதை நாட்டு மக்கள் வரவேற்கின்றார்கள். அதேபோன்று, 4,848 பழுதடைந்த பேருந்துகளை இன்றைக்குச் சீரமைக்கின்ற வகையிலே 30.48 கோடி ரூபாய் செலவிலே சரிசெய்யப்பட்டு, புதியதாக அந்தப் பேருந்துகள் மாற்றப்பட்டுள்ளன. இதனால் அரசுப் பேருந்துகளில் பொது மக்கள் இன்றைக்கு சொகுசுப் பயணமாக அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே சென்று கொண்டிருக்கின்றார்கள் என்பதை மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத் துறைமூலம் 2005–2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலும், கொள்கை விளக்கப் புத்தகங்களிலும் பல்வேறு புதிய திட்டங்களையும், மக்களுக்குப் பயனளிக்கின்ற பல்வேறு சலுகைகளையும் மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருப்பதைத் தமிழக மக்கள் இன்று பெரிதும் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலைமை சீர்கேடடைந்து, வருவாய்ப் பற்றாக்குறை ரூ.3,000 கோடிக்கு இழப்பு ஏற்பட்டு, அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அந்த மின்சாரத் துறை மிகவும் சீர்கெட்டிருந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு மேற்கொண்ட பல்வேறு நிர்வாகச் சீர்திருத்தத்தின்மூலமாக தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலைமை தற்போது சீராக இருந்து வருகின்றது என்பதை நாட்டு மக்கள் அறிவார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைகளின் விளைவாக இந்தியாவிலேயே தமிழகம் மட்டும்தான் இன்றைக்கு மின் வெட்டே இல்லாத மாநிலமாகத் திகழ்ந்து வருகின்றது என்பதைச் சொல்லிக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் நிர்வாகத் திறமையின்மையாலும், விவசாயப் பெருமக்களைப் பற்றியும், பொது மக்களைப் பற்றியும் சிந்திக்காத கடந்த தி.மு.க. ஆட்சியில் நாள்தோறும் மின் வெட்டும், மின்சாரத் தட்டுப்பாடும் இருந்து வந்ததை இந்த நாட்டு மக்கள் நன்கறிவார்கள். ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, தமிழகத்தில் 24 மணி நேரமும் தங்குதடையின்றி மின்சாரம் வழங்கி வருகின்றார்கள். பல்வேறு நிதிச் சுமை இருந்தாலும், விவசாயப் பெருமக்களுக்கு இலவச மின்சாரத்தைத் தொடர்ந்து வழங்கி வருகின்றார்கள். இதனை நாட்டு மக்கள் நன்கு பாராட்டி வருகின்றார்கள் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12–50

நடப்பாண்டின் கொள்கை விளக்கக் குறிப்பில், 2004–2005 ஆம் ஆண்டில் வாரியம் மற்றும் தனியார் துறையால் 263 மெகாவாட் திறன் நிறுவப்பட்டுவிடும் என்றும், நடப்பாண்டிற்கான மூலதனத் திட்ட மதிப்பீடு ரூ.1,495.30 கோடியாகும் என்றும், பல்வேறு மின் அழுத்தங்களில் 60 புதிய துணை மின் நிலையங்களும், சுமார் 800 சுற்று கிலோ மீட்டர் மிக உயரழுத்த மின் கம்பிகளும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் தட்டுப்பாடில்லாத மின்சாரமும், ஏழை எளிய, விவசாயிகள் பயன்படுத்துகின்ற பம்புசெட்டுகளுக்கு முறையான மின் பகிர்வும் கிடைக்கின்றன. இதனை விவசாயப் பெருமக்களும், பொது மக்களும் பெரிதும் பாராட்டி வருகின்றார்கள்.

அதேபோன்று, இதற்கும் மேலாக, ஏழை, எளிய மக்களுக்காக குடிசைகளுக்கு ஒரு விளக்கு என்ற அந்தத் திட்டத்தில் இன்றைக்கு அந்த மக்களுக்குத் தொடர்ந்து ஒரு விளக்கு மின் இணைப்பை வழங்குவதையும், அதேபோன்று அதற்கான மின் கட்டணத்தை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசே செலுத்தி வருவதையும் நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இருந்த மின் கட்டணத்தைக் குறைத்து, இன்றைக்கு ஏழை எளிய, நடுத்தர மக்கள் போன்ற அனைத்துத் தரப்பு மக்களின் நன்மை கருதி, யூனிட்டுக்கான மின் கட்டணத்தை, மக்கள் பயனடைகின்ற வகையிலே குறைத்திருப்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்களை எல்லோரும் பாராட்டுகின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நடப்பு நிதியாண்டில் ஊரகப் பகுதிகளில் ரூ.247.52 கோடியில் தரமான மின்சாரம் கிடைக்கவும், 21 புதிய துணை மின் நிலையங்களும், 20 மின் நிலையங்களின் மின் அழுத்தங்களை அதிகரிக்கவும், 2,300 புதிய மின் மாற்றிகளை --transformer-களை --நிறுவவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டதன் அடிப்படையில், விவசாயிகளுக்கும், கிராமப்புறங்களுக்கும் தரமான மின்சாரம் தங்குதடையின்றிக் கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். விவசாய பம்புசெட்டுகளுக்கு நடப்பாண்டில் 45 ஆயிரம் புதிய மின் இணைப்பு வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்ட காரணத்தால், இன்றைக்கு இதற்காக ஏங்கிக் கொண்டிருந்த எத்தனையோ விவசாயிகளுடைய வயிற்றில் பாலை வார்த்து, 45 ஆயிரம் ஏழை, எளிய விவசாயிகள் பயனடைகின்ற வகையிலே அந்தத் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கின்றார்கள். இதை நாட்டு மக்கள் பாராட்டிக்கொண்டிருக்கின்றார்கள்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் அடங்கிய பெரியசெவலை செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் கரும்புச் சக்கையின்மூலமாக co-generation—மின்சாரம் தயாரிப்பதற்காக விவசாயிகளுடைய பங்குத் தொகையை ஆண்டுதோறும் செலுத்தி வருகின்றார்கள். ஆனால் அந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலையினுடைய நிர்வாகம் இதுவரையிலே இதைப் பற்றி யோசிக்காமல் இருந்து வருகின்றது. எனவே, மின்சாரம் தயாரிக்கின்ற அந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று மிக்க பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். செங்குறிச்சி மற்றும் மடப்பட்டு ஆகியவற்றில் ஏதேனும் ஒரு இடத்தில், விவசாய மக்களின் நன்மையைக் கருதி, துணை மின் நிலையம் அமைத்துத் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். திருநாவலூர் பகுதியில் தீயணைப்பு நிலையம் ஒன்றை அமைத்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களை வேண்டி, விரும்பிப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியில் அடங்கிய விவசாயிகளின் நீண்ட நாளைய கோரிக்கையான, சி.மெய்யூரிலிருந்து திருத்துறையூர் வரை மலட்டாறு வாய்க்கால் பிரச்சினை மிக நீண்ட நாட்களாக இருந்து வருகின்றது. இந்த மலட்டாறு வாய்க்கால் மணல்மேடிட்டுத் தூர்ந்து கிடக்கின்றது. இவற்றைத் தூர் வாரி அகலப்படுத்தினால், இரண்டு சட்டமன்றத் தொகுதி விவசாயப் பெருமக்கள், அதாவது திருநாவலூர் மற்றும் நெல்லிக்குப்பம் சட்டமன்றத் தொகுதிகளினுடைய விவசாயப் பெருமக்கள் பயனடைகின்ற வகையிலே, 40 ஆயிரம் ஏக்கர் நிலங்களும், 10 ஆயிரம் பம்புசெட்டுகளின் நிலத்தடி நீரும் உயரும் என்பதைத் தெரிவித்து, இதைச் சீர்செய்து கொடுத்தால் அந்தப் பகுதி ஏழை விவசாய மக்கள் வயிற்றில் பாலை வார்த்த ஒரு நிகழ்வாக அது இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றைக்குப் பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருகின்ற நேரத்தில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அல்லும், பகலும், ஒரு நாளைக்கு 20 மணி நேரத்திற்கும் மேலாகக் கண் துஞ்சாமல், தமிழக மக்களின் நலனுக்காகவும், இந்தியாவிலேயே தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ வேண்டுமென்பதற்காகவும் பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை மீண்டும் வணங்கி, எனக்கு போக்குவரத்துத் துறை, மின்சார வாரியத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளிலே பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, அமர்கின்றேன், நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதிலுரை. மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனிச் சுவையும், கற்கண்டு தனிச் சுவையும், அமுதூறும் தமிழ் மொழியாய்ப் பொங்கியெழும் பிறப்பிடமே! இல்லையென்று வருவோருக்கும் அள்ளித் தந்து மகிழ்வதிலே எந்தக் கால வள்ளலுக்கும் இணையற்ற இலக்கணமாய், தங்க குணம் கொண்டவராய், தரணி போற்றும் நல்லவராய், இறை உருவாய், அருள் உருவாய், தீந்தமிழ்த் தேன் உருவாய், தமிழகத்தை ஆளுகின்ற இன்முகத்தைக் கொண்டவரே, எங்கள் அம்மா!

நதிகளிலே நீர் இல்லை, நாட்டிலே மழை இல்லை. ஆனாலும் தமிழகத்தில் மின்சார வெட்டில்லை என்றதொரு அற்புதத்தை இயற்றுகின்ற பேரறிவே! போக்குவரத்துக் கழகங்கள் அனைத்திற்கும் புத்துணர்ச்சி தந்து புது வலிமை தந்தவரே! எதிரியாய் வந்துவிட்டால் எதிர்த்திட இயலாது என்று அக்கினி வடிவில் வந்த அனலையும், வறட்சியையும் அகமேற்ற மக்களையே--அம்மா உங்களை அகம் ஏற்ற மக்களையே அண்டிடாமல், தீண்டிடாமல், ஆற்றல்மிக்க ஆளுமையால் அழகாகக் காத்தீர் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

பொல்லாங்கு மனம் கொண்ட பொறாமை வேள்வித் தீயில் தொடுத்திட்ட அம்புகளை முறித்திட்ட அம்மா திறம் கண்டு, கடல் தாயும் கர்வம் கொண்டாள், கடுமையாகச் சீற்றம் கொண்டாள். சொல்லியும் கேட்டிடாத, சொன்னாலும் புரிந்திடாத சுனாமி என்ற புதுப் பெயரில் சூறையாடிச் சீர்குலைத்தாள். நிலைகுலையா நெஞ்சம் கொண்ட எங்கள் அம்மா! மலைபோல மடிந்திட்ட மக்கள்தனைக் கண்டு விழி நீரை நிலம் சிந்தி, வேதனையை நெஞ்சம் தாங்கி, இரக்கமற்ற இயற்கையே என்று வசைபாடி வாளா இருந்திடாது, புது வேகம் கொண்டு புயலாகப் புறப்பட்டார். உலக நாடுகள் உளமார வாழ்த்தும்வண்ணம், இயற்கைச் சீற்றத்தை எதிர்கொள்ளும் வித்தைகளை எதிரிகூட கற்றுக்கொள்ள எடுத்துக்காட்டாய் விளங்கிட்டார் எம் அம்மா, எடுத்துக்காட்டாய் விளங்கிட்டார். கடலோர மக்களுக்கும் கடவுளாகத் திகழ்ந்திட்டார். ஒப்புயர்வற்ற முதலமைச்சராம் உங்களது பெருமுயற்சி கண்டு தேங்கிக் கிடந்த துறைகள் எல்லாம் இன்று ஓங்கி வளர்கின்ற அற்புதம் நடக்குது அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)



இந்தச் சாதனைக்குக் காரணம் என்ன? விதியை வெல்லும் அம்மா அவர்களின் விவேகமே காரணம் என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்? இத்தனை புகழ்மிக்க எங்கள் அம்மா! நித்திரை மறந்தாலும் முத்திரை பதிக்க ஆளும் பத்தரை மாற்றுத் தங்கத் தலைமை அம்மா நீங்கள்! நித்திரை மறந்தாலும் முத்திரை பதிக்க ஆளும் பத்தரை மாற்றுத் தங்கத் தலைமை அம்மா நீங்கள்! (மேசையைத் தட்டும் ஒலி) தாயே, இந்த நல்ல தருணத்தில் தாள் பணிந்து வணங்கி, என் உரையைத் துவங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் போக்குவரத்து மற்றும் எரிசக்தித் துறையினுடைய இந்த மானியக் கோரிக்கைகள் நடந்துகொண்டிருக்கின்ற இந்த பதிலுரை நேரத்தில், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். இங்கு இருந்திருந்தால், அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் போக்குவரத்துத் துறையும், மின் துறையும் எந்த அளவிற்குச் சீர்கெட்டிருந்தது என்பதையும், அவர்கள் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற பணிகளையும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததற்குப் பின்பு இந்த இரண்டு துறைகளிலும் செய்திருக்கின்ற அளப்பரிய சாதனைகளையும் ஒப்பிட்டுப் பார்த்து அவர்கள் புரிந்துகொள்வதற்கு வாய்ப்பாக இருந்திருக்கும். ஆனால், அவர்கள் இன்றைக்கு இந்தச் சபைக்கு வராமல் இருந்துவிட்டார்கள். சபைக்கு வந்தாலே, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் சொல்வதுபோல, இங்கே வருவது வெளியே செல்வதற்குத்தான் என்பதைப்போல, இங்கு வந்தாலும் வெளியே செல்லப் போகிறார்கள். இன்றைக்கு வராமலே இருந்துவிட்டார்கள். ஆனால் மக்களும் தீர்மானித்துவிட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே சொன்னதுபோல, அவர்களைத் தேர்ந்தெடுத்து சபைக்கு அனுப்பினாலும் அவர்கள் சபைக்குப் போகப் போவதில்லை, அவர்களுடைய ஜனநாயகக் கடமைகளை ஆற்றப் போவதில்லை. எனவே இனி வருங்காலத்தில் அவர்கள் சபைக்கே செல்ல வேண்டாம் என்று மக்களும் இன்றைக்குத் தீர்மானித்துவிட்டார்கள். இனிமேல் எப்போது தேர்தல் வந்தாலும், இனிமேல் அவர்களை அனுப்பினால்தான் அவர்கள் உள்ளே செல்வதில்லையே, ஜனநாயகக் கடமைகளை ஆற்ற மறுக்கிறார்களே, அவர்களை ஏன் அனுப்ப வேண்டும், சபைக்கு அனுப்ப வேண்டும் என்று மக்களும் இன்றைக்குத் தீர்மானித்துவிட்டார்கள்.

இன்றைக்குப் போக்குவரத்துத் துறையைப் பொறுத்த அளவிலே, இங்கு பேசிய நமது டாக்டர் விஜயபாஸ்கர் அவர்கள்கூட என்னுடைய வேலையைப் பெருமளவு குறைக்கின்றவண்ணம், அங்கு இருக்கின்ற,

நமது துறையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கிற சாதனைகளை ஓரளவுக்கு விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் துறை 18 ஆண்டு காலமாக--18 ஆண்டு காலத்திற்குப் பின்பு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் அவருடைய ஆளுமைத் திறமையால், அவருடைய நிர்வாகத் திறமையால், அவருடைய தொலைநோக்குப் பார்வையால் இன்றைக்கு 18 ஆண்டு காலத்திற்குப் பின்பாக முதன்முறையாக இலாபம் ஈட்டியிருக்கிறது என்பதைச் சென்ற மானியக் கோரிக்கையிலேயே நான் விரிவாக எடுத்துச் சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் அந்தத் தகவலைச் சொல்லியிருந்தாலும்கூட, இன்னும் சற்றுக் கூடுதல் தகவல்களாகச் சில தகவல்களை, சில செய்திகளை உங்களுக்கு நான் சொல்லிட விரும்புகின்றேன்.

பிற்பகல் 1–00

இன்னும் சொல்லப் போனால், சென்ற முறை இங்கிருக்கிற ஒரு எதிர்க்கட்சி உறுப்பினர், மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் முன்னால் இந்தத் துறையை நிர்வகித்தவர். அந்த அமைச்சர், முன்னாள் அமைச்சர், இங்கே நமது சட்டமன்றத்திலே ஒரு கேள்வியைக் கேட்டார். நமது நிதிநிலை அறிக்கையில் பேசுகின்றபோது, சென்ற ஆண்டு, 18 ஆண்டு காலத்திற்குப் பின்பு போக்குவரத்துத் துறை இலாபத்தை ஈட்டி இருப்பதாகப் பெருமையாகச் சொன்னீர்களே, வருகிற ஆண்டில் அந்தச் சாதனை தொடருமா, உங்களால் செய்ய முடியுமா என்று கிண்டலாகக் கேட்டார். அவருக்குத் தெரியும். ஏனென்று சொன்னால், நாம்தான் ஆட்சியை விட்டுப் போகின்றபோது ஏறத்தாழ 2,031 கோடி ரூபாயைக் கடனாக வைத்துவிட்டுச் சென்றோமே, இதற்குப் பின்பும் அவர்கள் இந்த இலாபத்தை எப்படித் தக்க வைத்துக்கொள்ள முடியும்; அதுவும்போக அவருக்கு ஒரு சந்தேகம். நமது ஆட்சி, மத்தியிலே இருக்கின்ற நமது ஆதரவோடு நடைபெறுகின்ற ஆட்சியிலும் இன்றைக்கு மாதா மாதம் அமாவாசை வருகின்றதோ, இல்லையோ, ஆனால் மாதா மாதம் டீசல் விலை உயர்வு வந்து கொண்டிருக்கிறது என்பது அவருக்கும் தெரியும். அப்படி மாதா மாதம் விலையை ஏற்றிக் கொண்டிருக்கிறோமே, இதற்குப் பின்பும் அவர்களால் எப்படி இலாபத்தை ஈட்ட முடியும் என்ற எண்ணத்திலேதான் அப்படிக் கேட்டார்; அப்படித்தான் நான் நினைக்கின்றேன். இருந்தாலும்கூட, இவர்கள் இவ்வளவு இடர்ப்பாடுகள் ஏற்பட்டதற்குப் பின்பும்கூட போக்குவரத்துத் துறையின்மீது ஒரு போர் தொடுத்ததுபோல, மாதா மாதம் மத்திய அரசு விலையைத் தன்னிச்சையாக ஏற்றிக் கொண்டிருக்கிறது; டீசல் விலையை ஏற்றிக் கொண்டிருந்தாலும்கூட,



புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததற்குப் பின்பு ஏறத்தாழ 10 ரூபாய் 84 காசு, இன்றைக்கு ஒரு லிட்டர் டீசலுக்கு விலை உயர்ந்து இருந்தபோதிலும்கூட, அந்த 10 ரூபாய் 84 காசுக்குப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏறத்தாழ ஆண்டிற்கு 560 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்பட்டதற்குப் பின்பும்கூட, சென்ற முறை 2.38 கோடி ரூபாய் இலாபத்தை ஈட்டிய போக்குவரத்துத் துறை, அதற்குப் பின்பும் பல முறை டீசல் விலையை ஏற்றியதற்குப் பின்பும், இந்தத் துறை 2004–2005 ஆம் நிதியாண்டில் ஏறத்தாழ 14 கோடி ரூபாய் அளவிற்குக் கூடுதலாக இலாபத்தை ஈட்டியிருக்கிறது என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மாவினுடைய நிர்வாகத் திறமைக்கு, ஆளுமைத் திறமைக்கு இது ஒரு சான்றாக இல்லையா? இன்றைக்கு நிர்வாகத் திறமை, நிர்வாகத் திறமை என்று சொல்கிறார்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்துக் கேட்கிறேன், ஏதாவது இப்படிப்பட்ட உதாரணத்தை அவர்களால் காட்ட முடியுமா? நிர்வாகத் திறமை என்பது என்ன? இப்படிப்பட்ட இடர்ப்பாடுகளுக்கிடையிலும் அந்தத் துறையை இன்றைக்கு வெற்றிகரமாக நடத்தி, மக்களுடைய தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்து மக்களுக்குச் சேவை செய்கின்ற ஒரு நிறுவனத்தில் இலாபத்தை ஈட்டியிருக்கிறார்கள் என்று சொன்னால், இதுதான் அவருடைய நிர்வாகத் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்றைக்கு நான் காலையிலே செய்தித்தாளிலே பார்த்தேன். நாளை நடைபெறுகின்ற மத்திய அரசினுடைய அமைச்சரவைக் கூட்டத்திலே மீண்டும் ஒரு லிட்டர் டீசலுக்கும், ஒரு லிட்டர் பெட்ரோலுக்கும் ஏறத்தாழ 4 ரூபாய் அளவிலே விலையை ஏற்ற இருக்கிறார்கள் என்ற செய்தியைப் பார்த்தேன். அதில்கூட, அந்த விலை ஏற்றத்தைப் பற்றி முடிவு செய்வதற்காக அந்தக் கூட்டத்தைக் கூட்டியிருந்தார்கள்; மத்திய அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டியிருந்ததாகச் சொன்னார்கள். ஆனால் மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் பொறுப்பு வகிக்கின்ற திரு. மணிசங்கர அய்யர் அவர்கள் வெளிநாட்டிற்குச் சென்றுவிட்டதால் அந்தக் கூட்டத்தைத் தள்ளி வைத்துவிட்டார்கள். அவர் வரும் வரை பெட்ரோல் விலை உயர்வு இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இதைப் பார்த்துவிட்டு மக்கள்கூட நினைக்கிறார்கள், பெட்ரோலியத் துறை அமைச்சர் மணிசங்கர அய்யர் வரும் வரை பெட்ரோல் விலை ஏறாது என்று சொன்னால், டீசல் விலை ஏறாது என்றால், அவர் வெளிநாட்டிலேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டு(மேசையைத் தட்டும் ஒலி) இங்கு வர வேண்டிய அவசியமும் இல்லை என்று



226618
சென்னை-600 009

[திரு. இரா. விசுவநாதன்] [2005 மார்ச் 29

மக்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு, அவர் வந்தவுடனே அடுத்து போர் தொடுத்ததுபோல ஏறத்தாழ 4 ரூபாய், 3 ரூபாய் ஏற்றுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், அந்த அளவிற்கு இப்படி தினந்தோறும், தினந்தோறும் ஏற்றி இருந்தாலும்கூட அதையும் தாண்டி இப்போது 14 கோடி ரூபாயை இந்தப் போக்குவரத்துத் துறை இலாபமாக ஈட்டி இருக்கிறது என்று சொன்னால், வெறும் 14 கோடி ரூபாயாக நீங்கள் இதைப் பார்க்கக் கூடாது. இந்த டீசல் விலை உயர்வு, அது ஒரு 560 கோடி ரூபாய். இந்த டீசல் விலையை உயர்த்தாமல் இருந்தால், இந்த 560 கோடி ரூபாய் நமக்குக் கிடைத்து இருக்கும். ஆக 560 plus 14 = 574 கோடி ரூபாயை இலாபமாக ஈட்டியிருப்பதாகத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) பொருள் கொள்ளவேண்டும் என்று அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–05

அதோடு மட்டுமல்ல. இன்னும் சொல்லப் போனால், சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, ஆண்டுக்கு 300 கோடி ரூபாய் என்ற அளவிலே அன்றைக்கு சராசரியாக நட்டத்தை ஏற்படுத்திக்கொண்டு வந்தார்கள். இப்போது நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்பு, ஆண்டுக்கு 300 கோடி ரூபாய் என்ற அளவிலே ஏற்பட்டு வந்த நஷ்டத்தை இன்றைக்குத் தடுத்து நிறுத்தியிருக்கின்றார்கள். அந்த 300 கோடி ரூபாய்க்கு மேல் இந்த 14 கோடி ரூபாய் வந்திருக்கிறது. ஆகவே, மற்றதைக் கணக்கில் எடுத்துக்கொண்டால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே—உதாரணத்திற்கு, பேச்சுக்காகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், அந்த ஆட்சியிருந்திருந்தால், 300 கோடி ரூபாய் நஷ்டத்திலேயிருந்திருக்கும். சராசரியாக 300 கோடி ரூபாய் ஆண்டுக்கு நஷ்டம் கொண்டுவந்தார்கள். ஆக, அந்த 300 கோடி ரூபாயைத் தடுத்து, புதியதாக இந்த 560 கோடி ரூபாயை சமாளித்து, மேற்கொண்டு 14 கோடி ரூபாய் என்று சொன்னால், 560 Plus 300, ஆக 860 கோடி ரூபாய் இலாபம் என்றுகூட இதை ஒரு கணக்கில் எடுத்துக்கொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி) வெறும் 14 கோடி ரூபாய் என்று நீங்கள் எடுத்துக்கொள்ளக் கூடாது. அந்த 14 கோடி ரூபாயை எட்டுவதற்குக் கடந்து வந்த பாதையை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவ்வளவு தடைகளை மீறி வந்திருப்பதை நினைக்க வேண்டும், இந்த நேரத்திலே. அதுதான் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆளுமைத் திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.



2005 மார்ச் 29] [திரு. இரா. விசுவநாதன்]

அதோடு மட்டுமல்ல. மற்றொன்றையும் நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். நமது பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருந்திருந்தால் பேசியிருப்பார்கள், அதற்குப் பதில் சொல்லியிருக்கலாம். இங்கு கவன ஈர்ப்புத் தீர்மானமாகக்கூட சில கோரிக்கைகளைக் கொடுத்திருந்தார்கள். ஆனால், நேரமில்லாத காரணத்தினால், அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கவில்லையென்று கருதுகிறேன். இருந்தாலும்கூட, அது பத்திரிகைகளிலெல்லாம் வந்துவிட்ட செய்தியென்பதால், அதற்கும் நான் இந்த நேரத்திலே பதில் சொல்ல விரும்புகிறேன்.

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், புரட்சித் தலைவி அம்மாவினுடைய ராஜ தந்திரத்திற்கும், நிர்வாகத் திறமைக்கும் இதுவும் ஒரு எடுத்துக்காட்டு என்பதை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள், சில தலைவர்களெல்லாம் வெளியிலேயிருந்து அறிக்கை விட்டார்கள். ஒரு தனியார் நிறுவனம்—Reliance நிறுவனத்திடம் போக்குவரத்துக் கழகங்கள், இப்பொழுது தனியாரிடம் டீசல் வாங்கியிருக்கிறார்கள். ஆகவே, போக்குவரத்துக் கழகங்கள் தனியாரிடம் வாங்குகிறார்கள் என்றார்கள். போக்குவரத்துத் துறை Indian Oil Corporation—இடம், அந்த அரசுத் துறையிடமிருந்து, மத்திய அரசுத் துறையிடமிருந்து வாங்காமல் Reliance என்ற தனியார் நிறுவனத்திடம் இப்பொழுது வாங்கியிருக்கிறார்கள்; ஆக, அவர்கள் ஏதோ போக்குவரத்துக் கழகத்தையே தனியாருக்குத் தாரை வார்ப்பதற்காக, ஒரு முன்னோடியாக இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று, வெளியிலே சில தலைவர்களெல்லாம் அறிக்கை விட்டிருக்கிறார்கள். அதோடு கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்து இருந்தார்கள். ஆனால், அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம், இந்த டீசல் விலையைப் பொறுத்த அளவிலே, சென்ற முறை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு ஆலோசனையை எங்களுக்கு வழங்கினார்கள். நீங்கள் போக்குவரத்துக் கழகத்தில் பெரிய அளவில்—இன்றைக்கு Indian Oil Corporation–ஐப் பொறுத்த அளவிலே, அந்த Corporation—இடம் அதிகமாக டீசல் கொள்முதல் செய்கின்ற வாடிக்கையாளர்களில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகமும் ஒன்று. இப்படி அதிகமான அளவிற்குக் கொள்முதல் செய்கின்ற நீங்கள், ஏன் அவர்களிடம் ஒரு பேரம் பேசி, bargain செய்து, அந்த விலையைக் குறைக்கக் கூடாது என்று ஒரு ஆலோசனையைச் சொன்னார்கள். இதைக்கூட நான் இந்தச் சட்டமன்றத்திலே சொல்லியிருந்தேன். அந்த அடிப்படையிலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்த சிறிய ஆலோசனையின் பேரில்—

ஆலோசனை ஒரு வார்த்தைதான் சொன்னார்—நீங்கள் Indian Oil Corporation–உடன் பேச்சுவார்த்தை நடத்தி, டீசல் விலையைக் குறைப்பதற்கு ஏதாவது முயற்சி நீங்கள் ஏன் செய்யக்கூடாது என்று சொன்னார்களே—அந்த ஒரு ஆலோசனையால் மட்டும், சென்ற முறை போக்குவரத்துக் கழகத்திற்கு 30 கோடி ரூபாய் மிச்சம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதற்காக அம்மாவினுடைய ஆலோசனையை ஏற்று, அந்த நிறுவனத்துடன் பேசிப் பார்த்ததில், பேச்சுவார்த்தை நடத்தி, ஏறத்தாழ ஒரு கிலோ லிட்டருக்கு 700 ரூபாயை அவர்கள் குறைத்துக் கொடுத்தார்கள். அதனால், சென்ற ஆண்டு ஏறத்தாழ 30 கோடி ரூபாய் மிச்சப்பட்டது. அதேபோல, இந்த ஆண்டும் அந்தத் துறையைக் கேட்டோம். அந்த 700 ரூபாய்க்கே தருவதாகச் சொன்னார்கள். இந்த ஆண்டும் நாங்கள் 700 ரூபாய் தள்ளுபடியாகச் செய்து, ஒரு கிலோ லிட்டருக்கு 700 ரூபாய் குறைத்து உங்களுக்கு supply செய்கிறோம் என்று சொன்னார்கள். சில தனியார் நிறுவனங்களில், இந்த Reliance நிறுவனம் எங்களை அணுகியது. நமது போக்குவரத்துத் துறையை அணுகியது. நாங்கள் 1,300 ரூபாய் ஒரு கிலோ லிட்டருக்கு, 1,300 ரூபாய் குறைவாகத் தருகிறோம் என்று அவர்கள் முன்வந்தார்கள். அப்பொழுதுகூட, போக்குவரத்துத் துறை அம்மா அவர்களிடம் சொன்னது. இவர்கள் Reliance நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் 1,300 ரூபாய் குறைத்துக் கொடுப்பதற்குத் தயாராகயிருந்த சூழ்நிலையிலும்கூட, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நாங்கள் முழுமையாக அவர்களிடம் வாங்குவதற்கு அனுமதிக்கவில்லை. பரிட்சார்த்தமாக ஒரு 5 சதவிகித அளவிற்குத்தான் இப்போது கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. 100 சதவிகிதம் அளவிற்கு 398 petrol bunk-களில் 20 petrol bunk–களில் மட்டும் Reliance நிறுவனத்திடம் வாங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. காரணம், அவர்கள் 1,300 ரூபாய்க்குத் தருவதாக ஒப்புக்கொண்டதன் காரணமாக— அந்த 1,300 ரூபாய் ஒரு கிலோ லிட்டருக்குத் தள்ளுபடி செய்து தருவதால், 20 நிறுவனங்களுக்கு மட்டும் கொடுத்திருக்கிறோம். அதேபோல அந்த 398 நிறுவனங்கள், முழுமையாக 398 petrol bunk–களிலும் நாம் கொள்முதல் செய்திருந்தால் நமது போக்குவரத்துக் கழகத்திற்கு ஏறத்தாழ 73 கோடி ரூபாய் மிச்சப்படும். ரூ.73 கோடி மிச்சப்படுத்துவதற்காக இந்த முயற்சியை எடுத்திருக்கிறார்கள். இன்னும்கூட Indian Oil Corporation நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறோம். Reliance நிறுவனம் கொடுத்திருக்கிற தள்ளுபடியை நீங்களும் தர வேண்டுமென்று, அம்மா அவர்கள் ஆலோசனையின்பேரில் அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்களும் பேச்சுவார்த்தைக்கு வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது Indian Oil Corporation–ம் Reliance நிறுவனம் கொடுத்த அதே



விலைக்குத் தள்ளுபடி செய்யக்கூடிய சூழலை, 1,300 ரூபாய் தள்ளுபடி கொடுக்க வேண்டிய கட்டாயச் சூழ்நிலையை இன்றைக்குப் போக்குவரத்துக் கழகம் அந்த நிறுவனத்திற்கு ஏற்படுத்தியிருக்கிறது. அதனால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய முயற்சியினால், அவர்களுடைய ஆலோசனையினால், இன்றைக்குப் போக்குவரத்துக் கழகத்திற்கு ஏறத்தாழ diesel கொள்முதல் செய்வதிலே 73 கோடி ரூபாய் மிச்சம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–10

இன்னொன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏதோ I.O.C. நிறுவனம் அரசு நிறுவனம், Reliance நிறுவனம் தனியார் நிறுவனம் என்று சொல்கிறார்களே, அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். I.O.C. நிறுவனம் ஒன்றும் முழுமையாக அரசு நிறுவனமல்ல. அதிலேயும் 82 சதவிகிதம் அரசுப் பங்கும், 18 சதவிகிதம் தனியார் பங்கும் இருக்கிறது. அதிலேகூட Internet–லே இன்றைக்குப் பார்த்தேன். கணினியிலே இன்னொரு செய்தி, அதே I.O.C. நிறுவனமே தங்களுடைய Website–லே சொல்லியிருக்கிறார்கள், 82 சதவிகிதத்தைக்கூட தனியாருக்கு விற்பனை செய்து 82 சதவிகிதப் பங்கை, 51 சதவிகிதப் பங்காகக் குறைக்க இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். I.O.C. பங்கையே தனியாருக்கு விற்பதற்கு அங்கே மத்திய அரசு அனுமதி அளித்திருக்கிறது. ஆனால், மத்திய அரசிலே இருப்பவர்கள், இவர்களுடைய ஆட்சியாளர்கள் அங்கே இருந்துகொண்டு இன்றைக்கு இப்படிப்பட்ட தவறுகளை,—தனியாருக்கு எப்படிக் கொடுக்கலாம் என்று சொல்கிறார்கள்.—அந்த I.O.C. பங்குகளையே இன்றைக்குத் தனியாருக்கு விற்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். மற்றொன்றையும் உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 2002–லே மத்தியிலே இருந்த பி.ஜே.பி. அரசு, அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியிலே இருந்த அந்த அரசு— அன்றைக்கு இந்த Reliance நிறுவனத்தை, பொதுத் துறை நிறுவனங்கள் மட்டும் செய்து வந்த வியாபாரத்தை, இந்த எண்ணெய் வர்த்தகத்தைத் தனியார் துறையும் செய்யலாம் என்று அனுமதி கொடுத்ததே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைமையிலே இருந்த பாரதிய ஜனதா கட்சி ஆட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மற்றொரு வேடிக்கையான விஷயம் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அந்த ஆட்சியிலே பெட்ரோலியத் துறை இணை அமைச்சராக இருந்தவர் பொன்னுசாமி என்பவர். அவர் பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்தவர். அப்போது பெட்ரோலியத் துறையினுடைய

இணை அமைச்சராக இருந்தாலும் தனிப் பொறுப்பை வகித்தவர். இன்றைக்கு அந்தக் கட்சியினுடைய தலைவர் ராமதாஸ் அறிக்கை விடுகிறார், Reliance நிறுவனத்திடம் போக்குவரத்துக் கழகம் 5 சதவிகித diesel-ஐ வாங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறாரே, அவரை இந்த நேரத்திலே நாங்கள் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம், அன்றைக்கு அரசுத் துறை மட்டுமே செய்து வந்த இந்த வியாபாரத்தில், எண்ணெய் வர்த்தகத்தில் Reliance நிறுவனத்தையும் அதிலே உள்ளே புகுத்தியது, Reliance நிறுவனமும் எண்ணெய் வியாபாரம் செய்யலாம் என்று அனுமதி அளித்ததே பொன்னுசாமி அவர்கள்தான் என்பதை இந்த நேரத்திலே நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் கட்சியிலே இருந்த அமைச்சர், பெட்ரோலியத் துறை அமைச்சர், Reliance நிறுவனத்தை— அரசு மட்டும் செய்து வந்த வியாபாரத்தை—தனியாரும் இந்த வியாபாரத்தை, எண்ணெய் வர்த்தகத்தைச் செய்யலாம் என்ற அனுமதியை வழங்கியதே அவர்கள், பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள். அவர்களுடைய தலைவர் இன்றைக்கு அறிக்கை விட்டிருக்கிறார், தனியாருக்கு, இன்றைக்கு Reliance நிறுவனத்திடம் வாங்குவதாக.

*பிற்பகல் 1–15*

அதேபோல, மற்றொரு தகவலையும் இந்த நேரத்திலே உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு மத்தியிலே இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அமைச்சர் தயாநிதி மாறன் பெரிய தியாகமெல்லாம் செய்து, அரசியல் பாரம்பரியத்தில் வந்து, ஏகப்பட்ட தியாகங்களைச் செய்து, கீழேயிருந்து பல்வேறு பதவிகளையெல்லாம் அனுபவித்து, அவர்களுடைய அனுபவத்தின், முதிர்ச்சியின் காரணமாக இன்றைக்கு நேரடியாக மத்திய அமைச்சரவையிலே Cabinet அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிற தயாநிதி மாறன், அவர் சொல்கிறார், அவர் செய்திருக்கிறார், போன வாரம் பார்த்திருப்பீர்கள். இந்தியாவிலே ஆயிரக்கணக்கான கிராமங்கள், தொலைத் தொடர்பு வசதியில்லாத கிராமங்களுக்குத் தொலைத் தொடர்பு வசதியை ஏற்படுத்துவதற்கு TATA நிறுவனத்திற்கும், Reliance நிறுவனத்திற்கும் அனுமதி வழங்கியிருப்பது தயாநிதி மாறன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக தயாநிதி மாறன், இதே Reliance நிறுவனத்திடம் டீசல் வாங்குவதற்கு, 5 சதவிகிதம் டீசல் வாங்குவதைக் குறையாகச் சொல்லுகின்றவர்கள், அங்கே கோடிக்கணக்கான ரூபாய்க்கு, இன்றைக்குத் தொலைத் தொடர்புத் துறையிலே, TATA-வையும், Reliance-ஐயும் அனுமதித்து இருக்கிறார்களே, இது இரட்டை வேடம் இல்லையா? டெல்லியிலே ஒரு கொள்கை, மாநிலத்திலே ஒரு



கொள்கையா? டெல்லியிலே தனியாருக்குக் கொடுத்தால், அவர்கள் பார்த்தால் கொடுக்கலாம், அவர்கள் ஒரு நிறுவனத்தையே கொடுக்கலாம். அவர்கள் ஒரு நிறுவனத்தையே அனுமதிக்கலாம். ஆனால் இங்கு இருக்கின்ற தனியார்களிடம் டீசல் வாங்கினால், உடனே தனியாருக்குப் போய்விட்டார்கள், தனியாருக்குப் போய்விட்டார்கள், தனியார்மயத்தை ஊக்குவிக்கிறார்கள் என்று சொன்னால், டெல்லியிலே ஒரு கொள்கை, மாநிலத்திலே ஒரு கொள்கையா? அரசியலில்தான் இரட்டை வேடம் போடுவார்கள் என்றால், நிர்வாகத்திலும் இரட்டை வேடம் போடுவதா? இல்லை, வாய்ப்புக் கிடைத்ததால் இரட்டை வேடம் போட்டு இருக்கிறார்கள். இன்னும் வாய்ப்புக் கிடைத்தால் பல வேடம்கூட போடுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவுக்கு அவர்கள் அரசியலிலே ஒரு நிரந்தரத் தன்மை இல்லாதவர்கள். ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள் அப்படி இல்லை. எந்த முடிவாக இருந்தாலும், வெட்டு ஒன்று, துண்டு இரண்டுதான். சொன்னால் சொன்னதுதான். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி இரட்டை வேடம் போடுகின்ற பழக்கம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இல்லை. ஆனால் இப்படிப்பட்டவர்கள் இன்றைக்கு எங்களைப் பார்த்துச் சொல்கிறார்கள்.

இன்னும் சொல்லப் போனால், இந்த Bus-ஐயே தனியாரிடமிருந்துதான் வாங்குகிறோம். எந்த Bus-ஆக இருந்தாலும், TATA–வாக இருந்தாலும் சரி, Leyland–ஆக இருந்தாலும் சரி, பேருந்து முழுவதுமே தனியார்கிட்டே இருந்துதான் வாங்குகிறோம். Tyre தனியாரிடம் வாங்குகிறோம், spare parts எல்லாம் தனியாரிடம் இருந்துதான் வாங்குகிறோம். ஆனால் டீசல் மட்டும் வாங்கியவுடன், உடனே தனியாருக்குக் கொடுக்கப் போகிறார்கள் என்று, உடனே எல்லாவற்றையும் தனியாருக்குக் கொடுக்கப் போகிறார்கள் என்று சொல்வது, ஒரு கற்பனையான வாதம். இன்னும் சொல்லப் போனால், கிராமத்திலே பழமொழி சொல்வார்கள், 'காக்காய் கருப்புதான், அதனால் கருப்பாக இருப்பது எல்லாம் காக்காய் என்று சொல்லவில்லை' என்று சொல்வார்கள். அதுபோல இன்றைக்குத் தனியாருக்கு டீசல் வாங்குவதற்காகக் கொடுக்கிறோம் என்று சொன்னால், இந்தத் துறையையே தனியாரிடம் ஒப்படைப்பார்கள் என்று சொல்வதெல்லாம் பைத்தியக்காரத்தனமான வாதம் என்பதை இந்த நேரத்திலே மக்கள் புரிந்துகொண்டு இருக்கிறார்கள் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் துறையிலே சாதனையை ஈட்டியிருப்பதோடு மட்டுமல்லாமல்,

அந்தச் சாதனையை ஈட்டுவதற்குப் பெரிதும் காரணமாக இருந்த தொழிலாளர்களின் நலனிலும் அக்கறை கொண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தொழிலாளர்களுக்குத் தாயுள்ளத்தோடு மாதம் ரூ.250/– இடைக்கால நிவாரணமாக வழங்கி, அவர்களுக்கு இன்றைக்கு வயிற்றிலே பால் வார்த்த தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்த நேரத்திலே நான் மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், இங்கே இருக்கின்ற தொழிற்சங்கங்கள் அனைத்தும் தொழிலாளர்களின் நலனுக்கு விரோதமாக இருக்கின்றன என்பதைப் பார்க்கின்றபோது உள்ளபடியே வேதனைப்படுவதைத் தவிர வேறு வழியே இல்லை. தொழிலாளர்களுடைய தோழர்கள், நண்பர்கள் என்று சொல்லிக்கொண்டு, தொழிலாளர்களுக்கு விரோதமான கொள்கையைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெளிவாக அறிக்கை விட்டிருக்கிறார்கள். தொழிற்சங்கங்களுடைய, தொழிலாளர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இந்த Wage settlement, ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தையைப் போக்குவரத்துக் கழகங்கள் நடத்துவதற்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். போக்குவரத்துக் கழகம், தொழிற்சங்கங்களைப் பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் என்று அழைக்கின்றது. ஆனால் இன்றைக்கு அவர்கள் வழக்குகளை வாபஸ் வாங்கிவிட்டு இந்தப் பேச்சுவார்த்தைக்கே வர மறுக்கிறார்கள். காரணம் என்னவென்று சொன்னால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே அந்த ஊதிய ஒப்பந்தம் நடைபெறக் கூடாது, ஊதிய ஒப்பந்தமே போடக் கூடாது, அந்தப் பெருமை புரட்சித் தலைவி அம்மாவிற்குச் சென்றுவிடக் கூடாது என்ற சுயநலத்தோடு இன்றைக்கு இருக்கின்ற தொழிற்சங்கங்கள் எல்லாம், தொழிலாளருக்கு விரோதமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கின்றன. பல முறை சொல்லிவிட்டோம். அம்மா அவர்கள் பல முறை அறிக்கை விட்டு இருக்கிறார்கள். பேச்சுவார்த்தைக்கு வாருங்கள், உங்களுடைய பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளுங்கள் என்று அவர்களுக்கு அழைப்பு விடுத்ததற்குப் பின்பும் தொழிற்சங்கங்கள் வர மறுக்கின்றன என்று சொன்னால், அவர்களுடைய தொழிலாளர் விரோதப் போக்கினை, அவர்களுடைய தொழிற்சங்கத்தினுடைய இரட்டை வேடத்தையும் தொழிலாளர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் சொல்லப் போனால், எந்தத் தொழிற்சங்கமும், எந்தத் தொழிலாளர்களும் இடைக்கால நிவாரணம் வேண்டும் என்று அம்மாவிடம் கேட்கவில்லை. ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள்



பார்த்தார்கள். இந்தத் தொழிற்சங்கங்கள் எல்லாம் தொழிலாளர்களுடைய நலனைப் பாதுகாப்பதற்காக பேச்சுவார்த்தைக்கு வர மாட்டார்கள், இவர்கள் வழக்குகளை வாபஸ் வாங்க மாட்டார்கள். எனவே அந்தத் தொழிற்சங்கங்களால் இந்தத் தொழிலாளர்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக, தானே முன்வந்து, தாயுள்ளத்தோடு மாதம் ரூ.250/- ரூபாயை வழங்கியவர்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவுக்கு இந்தத் துறையைச் சீரமைத்ததோடு மட்டுமல்லாமல், இந்தத் துறையிலே பணியாற்றிக்கொண்டிருக்கின்ற பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுடைய நலனிலும் அக்கறை கொண்ட தலைவியாகப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கிறார்கள் என்பதனால்தான், உழைக்கும் வர்க்கமான அந்தத் தொழிலாளர்கள் புரட்சித் தலைவி அம்மா பக்கம் இருந்து, இன்றைக்கு அம்மாவை வாழ்த்தி, வரவேற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, இன்றைக்குப் போக்குவரத்துத் துறையைப் பொறுத்தமட்டிலும் பல்வேறு சாதனைகளை அம்மா அவர்கள் நிகழ்த்தி இருக்கிறார்கள்.

பிற்பகல் 1–20

அதோடு மட்டுமல்ல. ஒன்றை இந்த நேரத்தில் நான் மீண்டும் ஒரு முறை குறிப்பிட விரும்புகிறேன். ஒரு முறை கும்பகோணத்திலே ஒரு குழந்தை பேருந்திலேயிருந்து கீழே தவறி விழுந்து இறந்துவிட்டது என்பதை அறிந்தவுடன், உள்ளபடியே சொல்கிறேன், அம்மா அவர்கள் அன்றைக்குப் பட்ட வேதனையை நான் கண்கூடாகப் பார்த்தேன். அந்தத் தாய் உள்ளத்தை அன்றைக்குப் பார்த்து உள்ளபடியே எல்லோரும் கண்கலங்காததுதான் பாக்கி. அந்த அளவுக்கு, ஒரு குழந்தைதானே இறந்தது என்று நினைக்காமல், அதுதான் அந்தத் தாய்ப் பாசம், தாய் உள்ளம், (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் மீதான அந்தக் கருணை. அதைச் சொல்லிவிட்டு, அந்தக் கருணையை மட்டும் காட்டியதோடு நின்றுவிடவில்லை. அதற்காக, உடனடியாக அந்தக் குழந்தைக்கு வேண்டிய நிவாரணங்களைச் செய்ததோடு மட்டுமல்லாமல், வருங்காலத்தில் இப்படிப்பட்ட சம்பவங்கள் எல்லாம் நடந்துவிடக் கூடாது என்பதற்காகப் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்கள். 4,884 பேருந்துகள் உடனடியாகப் பழுது நீக்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவுக்கு உத்தரவு போட்டு 4,884 பேருந்துகளைப் பழுது நீக்கியதோடு மட்டுமல்லாமல், புதிய பேருந்துகள் வாங்குவதற்கு, அதாவது 1,050 பேருந்துகளை அப்போதே, அந்த ஆண்டே வாங்குவதற்கு உத்தரவிட்டார்கள். இப்போது, இந்த முறை 1,325 பேருந்துகளை வாங்குவதற்கு உத்தரவிட்டு, வாங்குகின்ற அந்தப்

பணிகளும் இப்போது இறுதி செய்யப்பட்டிருக்கின்றன; அந்தப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. வருகின்ற ஆண்டிலே இதுபோக இன்னும் 2,000 பேருந்துகளை வாங்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் என்னவென்று சொன்னால், அந்த அளவுக்கு இந்தத் துறையின்மீது நேரடிப் பற்று; ஏனென்றால், மக்கள் அன்றாடம் பயன்படுத்திக் கொண்டிருக்கின்ற, சாதாரண, ஏழை, எளிய மக்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கின்ற ஒரு துறை என்பதால், இதன்மீது தனிக் கவனம் செலுத்தி, இந்த அளவுக்குப் பழைய பேருந்துகளை எல்லாம் மாற்றுவதற்கு வழிவகை செய்திருக்கிறார்கள். அதற்காக மக்கள் நன்றியோடு பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக இன்னொரு செய்தியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சாதாரண மக்கள் பயன்படுத்துகின்ற துறை என்பதால்தான், பல முறை டீசல் விலை உயர்ந்ததற்குப் பின்பும் ஒரு பைசாகூட கட்டணத்தை உயர்த்தவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு கிலோ மீட்டருக்கு ஒரு பைசா என்று சொன்னால், நீங்கள் சாதாரணமாக நினைக்கக்கூடும், ஒரு பைசாதானே என்று. ஆனால், ஒரு பைசா ஏற்றினால் போக்குவரத்துக் கழகத்திற்கு 100 கோடி ரூபாய் வருவாய் வரும். 100 கோடி ரூபாய் வருவாய் வந்தால் என்ன, 200 கோடி ரூபாய் வருவாய் வந்தால் என்ன, 500 கோடி ரூபாய் வந்தால் என்ன, அல்லது எத்தனை கோடியாக வந்தாலும், சாதாரண மக்கள், ஏழை, எளிய மக்கள் பயன்படுத்துகின்ற பேருந்துக் கட்டணத்தை உயர்த்தக் கூடாது (மேசையைத் தட்டும் ஒலி) என்று, மக்களுடைய நலனில் அக்கறை உள்ள தலைவியாக, இன்றைக்கு அதே கட்டணத்தில் பேருந்துகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றால், அதுதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இன்னும் சொல்லப் போனால், இந்தியாவிலேயே குறைந்த கட்டணம், ஒரு கிலோ மீட்டருக்கு 28 பைசா என்று மிகக் குறைந்த கட்டணம் இருப்பது இந்தியாவிலேயே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆளுகின்ற தமிழகத்தில்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்துச் சொல்ல விரும்புகிறேன். பக்கத்தில் இருக்கிற கர்நாடக மாநிலத்தில் 31.50 பைசா. நாம் 28 பைசா. 3.50 பைசா கட்டணம் கூட. 3.50 பைசா என்ற அளவுக்குக் கட்டணத்தை வசூல் செய்தால் நமக்கு 350 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் வரும். ஆனால், அந்த 350 கோடி ரூபாய் வேண்டாம் என்று அம்மா அவர்கள் சொல்லிவிட்டார்கள். அதோடு மட்டுமல்ல, பக்கத்தில் இருக்கின்ற ஆந்திர மாநிலத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால், 35 பைசா ஒரு கிலோ மீட்டருக்கு. ஆக



7 பைசா, நம்மைவிட கூடுதலாக. 7 பைசா என்று ஆந்திர மாநிலத்தில் வசூல் செய்வதைப் போல கட்டணத்தை நிர்ணயித்தால் நமது போக்குவரத்துக் கழகத்திற்கு 700 கோடி ரூபாய் வரும். வேண்டாம் 700 கோடி ரூபாய் என்று தாய் உள்ளத்தோடு மறுத்துவிட்டார்கள். அதேபோல, பக்கத்தில் இருக்கின்ற கேரள மாநிலத்தில் 42 பைசா. 14 பைசா வித்தியாசம். அந்த 14 பைசா கூடுதலாக கேரள மாநிலத்தைப்போல நமக்கும் கட்டணத்தை வசூல் செய்யுங்கள் என்று சொல்லி அனுமதித்திருந்தால் 1,400 கோடி ரூபாய் வந்திருக்கும். இந்த 1,400 கோடி ரூபாயும் வேண்டாம், 500 கோடி ரூபாயும் வேண்டாம், 700 கோடி ரூபாயும் வேண்டாம், ஆனால் எனக்குக் கோடி, கோடியாக இருக்கின்ற தமிழக மக்கள்தான் வேண்டுமென்று, (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பைசாகூட உயர்த்தாதது மட்டுமல்லாமல், அதை இலாபத்திலும் இயக்கிக் காட்டியிருக்கின்ற அற்புதத் தலைவிதான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்தில் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–25

அடுத்தபடியாக, இயக்கூர்திகள் சட்டத்தைப் பற்றி இந்த நேரத்தில் நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இயக்கூர்திகளைப் பொறுத்த வரையில், நமது வட்டாரப் போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்த வரையில், தமிழகத்திலேதான் சிறந்த நிர்வாகம் இருக்கின்றது. மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்தச் சட்டத்தின் ஆட்சி இந்தத் துறையைப் பொறுத்த வரையிலே இன்றைக்கும் நடந்துகொண்டிருக்கிறது என்று சொன்னால், அது தமிழகத்தினுடைய இயக்கூர்திகள் சட்டம், நமது மோட்டார் போக்குவரத்து அலுவலகங்களில்தான். அங்கே சிறு, சிறு குறைகள் இருந்தாலும்கூட, அந்தக் குறைகளை எல்லாம் களைவதற்குப் பல்வேறு முயற்சிகளை மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்திருக்கிறார்கள். அதற்காகப் பல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். இன்னும்கூடச் சொல்லப் போனால், இன்றைக்கு வாகனங்கள், தமிழகத்தைப் பொறுத்த அளவிலே இந்தியாவிலேயே கூடுதல், அதிகமான வாகனங்கள் இருக்கின்ற இடத்திலே 2–வது இடத்திலே தமிழகம் இருக்கிறது. முதலிடம் மகாராஷ்டிரா மாநிலம், 2–வது இடத்திலே தமிழகம் இருக்கிறது. இன்றைக்கு ஏறத்தாழ 72 இலட்சம் வாகனங்கள் தமிழகத்திலே இருக்கின்றன. அதிலே ஒரு நாளைக்கு சென்னை நகரிலே மட்டும் 600 வாகனங்கள் பதிவு செய்யப்படுகின்றன. மாநிலம் முழுவதும் தினந்தோறும் 5,000 வாகனங்கள் பதிவு செய்யப்படுகின்றன. நாளுக்கு நாள் வாகனங்கள் பெருகி வருகின்றன, மக்கள் தொகையும் பெருகி வருகிறது. இந்த வாகனங்களும்,

மக்கள் தொகையும் பெருகி வருவதைப் பார்க்கின்றபோது, அதற்குத் தகுந்தாற்போல இன்றைக்கு அதனால் பல்வேறு பிரச்சினைகள் வருகின்றன. வேலைப் பளு கூடுகிறது, அதனால் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. சுற்றுச்சூழல் பாதுகாப்பு கெடுகிறது. இன்னும் சொல்லப் போனால், விபத்துக்களும் நாளுக்கு நாள் கொஞ்சம் கொஞ்சமாகக் கூடுகின்றன. இருந்தாலும்கூட, இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிகமான வாகனங்கள், 72 இலட்சம் வாகனங்கள் இருக்கின்றன. இந்தியாவிலேயே 2–வது இடத்தில் தமிழகம் இருக்கிறது என்று சொன்னால், தமிழர்களுடைய பொருளாதார நிலையும் உயர்ந்திருக்கிறது என்று பொருள். வாகனங்கள் அதிகமாக இருந்தால், அந்த மாநிலத்திலே பொருளாதார நிலையும் உயர்ந்திருக்கிறது என்று பொருள். வாகனங்கள் கூடுகின்றபோது சில சமுதாயப் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. அதையும் மாண்புமிகு அம்மா அவர்கள், இன்றைக்கு தீர்க்க தரிசனத்தோடு, இப்படிப்பட்ட வாகனங்கள் பெருகுவதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன; அந்த விபத்துக்களைக் குறைக்க வேண்டுமென்பதற்காக இன்றைக்கு சில நடவடிக்கைகளை, சில கட்டளைகளை நமது மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையாக இட்டிருக்கிறார்கள். அந்த ஆணையின்பேரில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, ஓட்டுநர்களுக்குச் சிறப்புப் பயிற்சி எல்லாம் அளிக்கப்பட்டு, யோகா போன்ற பயிற்சிகள், சட்டப் பிரச்சினைகள், விதிமுறைகளைப் பற்றி எல்லாம் மீண்டும் அவர்களுக்குப் பயிற்சிகள் எல்லாம் அளிக்கப்பட்டு, விபத்தைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். ஆனால், விபத்தைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துவிட்டு, அதோடு இருக்கவில்லை--அங்கேதான் மனிதாபிமானத்தின், மகத்தான ம்னிதாபிமானத்தினுடைய நடவடிக்கைக்கு ஓர் உதாரணம் சொல்ல விரும்புகிறேன். இப்படிப் பெருகுகின்ற வாகனங்களால் விபத்துக்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதோடு மட்டுமல்லாமல்—அதையும் மீறி விபத்து நடந்துவிட்டால் அதை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்காக, அவசர விபத்து சிகிச்சை மையம் என்ற Trauma Care Centres என்ற சென்டர்களை, அவசர விபத்து சிகிச்சை மையத்தை உருவாக்கினார்கள். அந்த அவசர விபத்து சிகிச்சை மையத்தை இந்தியாவிலேயே முதல் முறையாக உருவாக்கியது புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்மூலமாக மட்டும்-- இன்றைக்கு அந்த விபத்து அவசர சிகிச்சை மையத்தை மாநில நெடுஞ்சாலைகளிலும், தேசிய நெடுஞ்சாலைகளிலும் ஏற்படுத்தியதன் விளைவாக, இன்றைக்கு 15,955 விலை மதிக்க முடியாத உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



இந்தியாவிலேயே முதல் முறையாக அவசர விபத்து சிகிச்சை மையத்தை உருவாக்கிய தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். அதற்குப் பின்புதான் மற்ற மாநிலங்கள் எல்லாம் இதைப் பார்த்து, வழிகாட்டியாக இன்றைக்குத் தமிழகத்தை எடுத்துக்கொண்டு பல மாநிலங்களிலே இந்த அவசர விபத்து சிகிச்சை மையங்கள் இன்றைக்குச் செயல்பட்டு வருகின்றன. இதிலே மட்டுமல்ல, இந்தத் துறையிலே மட்டுமல்ல, எல்லாத் துறைகளிலுமே மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்ற தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு மட்டுமல்ல. இந்த அவசர விபத்து சிகிச்சை மையத்தை மட்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்படுத்தாமல் இருந்திருந்தால், இந்த ஆண்டு மட்டும் 15,955 பேர்களுடைய மனித உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்குமா? இந்த 15,955 மனித உயிர்களும் இன்றைக்கு விலை மதிக்க முடியாத உயிர்கள். அந்த உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், அதற்கான பெருமை நமது தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களைத்தான் சாரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இன்றைக்கு உயிர் பாதுகாக்கப்பட்டு உயிர் பிழைத்த அந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் எல்லாம் அம்மா அவர்களை இன்றைக்குத் தெய்வமாக வணங்கி, போற்றி, பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு எந்தத் துறையாக இருந்தாலும் சரி, அதிலே ஒரு முத்திரையைப் பதிக்கின்ற, தனித் திறமையைக் காட்டுகின்ற அளவிற்கு இன்றைக்குச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற சிறப்பான ஆட்சிதான் நமது தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு மட்டுமல்ல. இந்த வாகன ஊர்திச் சட்டத்தைப் பொறுத்த அளவிலே, இந்தத் துறையைப் பொறுத்த அளவிலே, மத்திய அரசு புதிதாக ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. புதிய High Security Plate, பாதுகாப்பான High Security Plate, (குறுக்கீடு) High Security Plate, என்ற ஒன்றை உருவாக்கியிருக்கிறார்கள். அதாவது, அந்த High Security Plate–க்குப் புதியதாக, வருகின்ற மே மாதம் முதல் 2 மாதத்திற்கு...

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகின்றது.

[2005 மார்ச் 29

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** அதை இரண்டு மாதத்திற்குள் உருவாக்கி, 2 வருடங்களுக்குள் அனைத்து வாகனங்களுக்கும் அந்தப் புதிய High Security Plate பொருத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதை அமல்படுத்துவதன்மூலமாக, இன்றைக்கு போலி வாகனங்கள் தடுக்கப்படும். அதோடு மட்டுமல்லாமல், வரி ஏய்ப்பு தடுக்கப்படும். அந்தத் திட்டத்தை நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மிக விரைவில் அமல்படுத்துவதற்காக அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை மட்டும் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரம் அதிகமாகிவிட்டதன் காரணமாக, போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கைக்கான பதிலுரையை மட்டும் முடித்திருக்கிறேன். இன்னும் மின்சாரத் துறையைப் பற்றிய பதிலுரை இருக்கின்ற காரணத்தினால், நாளை அதற்கு அனுமதி தரவேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரின் பதிலுரை நாளை தொடரும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (30-3-2005) புதன்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

85. 2003-2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

86. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்)



2005 மார்ச் 29]

87. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆண்டுக் கணக்குகள் மற்றும் கணக்குகள்மீதான தணிக்கை அறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

135. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைமீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள், 2005-2006. (தமிழ், ஆங்கிலம்)

136. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின்மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள், 2005-2006. (தமிழ்)

137. கோரிக்கை எண் 13-எரிசக்தித் துறை-தமிழ்நாடு மின்சார வாரியம்-மின்சார ஆய்வுத் துறை-தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005-2006. (தமிழ், ஆங்கிலம்)

138. மானியக் கோரிக்கை எண் 24-உள் துறை-இயக்கூர்திகள் சட்டங்கள்-நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005-2006. (தமிழ், ஆங்கிலம்)

139. மானியக் கோரிக்கை எண் 46-போக்குவரத்துத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005-2006. (தமிழ், ஆங்கிலம்)

140. மானியக் கோரிக்கை எண் 46-போக்குவரத்துத் துறை-போக்குவரத்துக் கழகங்களின் செயல் திறன் ஆய்வு, 2005-2006. (தமிழ், ஆங்கிலம்)

141. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து ஆறாவது அறிக்கை. (2003-2005)

142. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்து ஐந்தாவது அறிக்கை. (2003-2005)

143. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்து ஆறாவது அறிக்கை. (2003-2005)

## இணைப்பு I

(62 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 13–எரிசக்தித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

## தமிழ்நாடு மின்சார வாரியம்

1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின்கீழ் 1–7–1957 அன்று நிறுவப்பட்ட தமிழ்நாடு மின்சார வாரியம் ஒரு சட்ட நிலையுடன் கூடிய அமைப்பாகும். மின் உற்பத்தி, அனுப்புகை மற்றும் பகிர்மானம் ஆகியவற்றைச் சீரிய முறையில் மேற்கொண்டு மின் பயனீட்டாளர்களுக்குத் தரமான மின்சாரத்தை வழங்குவது தமிழ்நாடு மின்சார வாரியத்தின் முதன்மையான குறிக்கோளாகும்.

31–12–2004 அன்றுள்ளபடி தமிழ்நாடு மின்சார வாரியம் கையாளும் மொத்த மின் உற்பத்தி நிறுவு திறன் 9,394 மெகாவாட்டாகும். இதில் வாரிய மின் உற்பத்தித் திறன் 5,381 மெகாவாட், தனியார் மின் உற்பத்தி 1,066 மெகாவாட், மத்திய மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து பங்கு 2,587 மெகாவாட் மற்றும் வெளிப்புற உதவியாக 360 மெகாவாட் ஆகியவை அடங்கும். இவை தவிர, தனியார் காற்றாலைகளிலிருந்து 1,664 மெகாவாட்டும், வாரியத்தின் காற்றாலைகளிலிருந்து 19 மெகாவாட்டும் கிடைக்கப் பெறுகிறது. மேலும் இணை மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து 275 மெகாவாட் மின்சாரமும், தாவர எரிசக்தித் திட்டங்கள்மூலம் (Bio–Mass) 31 மெகாவாட் மின்சாரமும் பெறப்படுகிறது.

இதுவரை எட்டப்பட்டுள்ள உச்ச மின் தேவை 7,408 மெகாவாட்டாகும். இது 23–02–2005 அன்று எட்டப்பட்டது. மின் பயனீட்டு அளவின் வளர்ச்சி ஆண்டொன்றிற்கு 6 விழுக்காடாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 2004–05 நிதியாண்டில் மின் பயனீட்டளவு டிசம்பர் 2004 வரை 38,462 மில்லியன் யூனிட்டுகள் ஆகியுள்ளது. ஒரு நாளின் உச்சப் பயனீடு 154.942 மில்லியன் யூனிட் என 23-02-2005 அன்று எட்டியுள்ளது.

[2005 மார்ச் 29

31–12–2004 நிலவரப்படி மொத்தம் 1,069 துணை மின் நிலையங்களும், 1.46 இலட்சம் கி.மீ. மிக உயரழுத்த/உயரழுத்த மின் கம்பிகளும், 4.75 இலட்சம் கி.மீ. தாழ்வழுத்த மின் கம்பிகளும், 1.59 இலட்சம் மின் பகிர்மான மின் மாற்றிகளும் மற்றும் 169.10 இலட்சம் மின் இணைப்புகளும் உள்ளன.

## I. மின் உற்பத்தித் திறனை அதிகரித்தல்

அதிகரிக்கும் மின் தேவையை நிறைவு செய்ய தமிழ்நாடு மின்சார வாரியம் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (2002–07) அதனுடைய மின் உற்பத்தித் திறனை 2,408.8 மெகாவாட் அளவிற்கு உயர்த்தவும், அதற்குத் தக்கவாறு மின் அனுப்புகை மற்றும் மின் பகிர்மானத்தை விரிவாக்கவும் திட்டமிட்டுள்ளது.

2004–05 ஆம் ஆண்டில், மத்தியத் துறையில், தேசிய அனல் மின் கழகத்தின் தால்ச்சர் மிகு திறன் அனல் மின் நிலையம்—நிலை II–விலிருந்து 500 மெகாவாட் திறனுடைய மூன்றாவது பிரிவு இயக்கி வைக்கப்பட்டதால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 135 மெகாவாட் மின்சாரம் பங்காகக் கிடைக்கப் பெறுகிறது. மேலும் மின்சாரம் தால்ச்சரிலுள்ள தேசிய அனல் மின் கழக நிலையத்திலுள்ள 500 மெகாவாட் திறனுடைய நான்காவது இறுதிப் பிரிவிலிருந்து 135 மெகாவாட் மின்சாரம் தமிழ்நாடு மின்சார வாரியப் பங்காகக் கிடைக்கப் பெறும். இவை தவிர, தேசிய அனல் மின் கழகத்தின் 500 மெகாவாட் திறனுடைய இராமகுண்டம் மிகு திறன் அனல் மின் நிலையம் நிலை II, இந்த ஆண்டில் வணிகச் செயலாக்கத்திற்கு வந்து, அதிலிருந்து பங்காக 118 மெகாவாட் மின்சாரம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கிடைக்கும்.

2004–05 ஆம் ஆண்டில் வாரியம் மற்றும் தனியார் துறையால் 263 மெகாவாட் திறன் நிறுவப்பட்டுவிடும். (வாரியம் 150 மெகாவாட் மற்றும் தனியார் துறை 113 மெகாவாட்) மின் வாரியத்தின் 150 மெகாவாட் திறன் கொண்ட பைக்காரா இறுதி நிலை புனல் மின் திட்டம் நீலகிரி மாவட்டத்தில் ரூபாய் 383 கோடி செலவில் இயக்கி வைக்கப்படும். தனியார் துறையில் எரிவாயுவை எரிபொருளாகக் கொண்ட 113 மெகாவாட் திறனுடைய மின் உற்பத்தித் திட்டம் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கருப்பூரில் அபான் பவர் நிறுவனத்தால் அமைக்கப்படும்.

2005–06 ஆம் ஆண்டில் 30 மெகாவாட் திறன் கொண்ட பவானி கட்டளை தடுப்பணை 1 புனல் மின் திட்டம் ரூபாய் 195 கோடி செலவில்



2005 மார்ச் 29]

ஈரோடு மாவட்டத்தில் இயக்கி வைக்கப்படும். தனியார் துறையில் எரிவாயுவை எரிபொருளாகக் கொண்ட 53 மெகாவாட் திறனுடைய மின் உற்பத்தித் திட்டம் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வளந்தரவியில் ஆர்.கே. எனர்ஜி என்ற நிறுவனத்தினால் இயக்கி வைக்கப்படும்.

## II. 2005–06–ல் மின் வினியோக நிலைமை

தமிழக அனல் மின் நிலையங்களின் செயல்பாட்டை மேம்படுத்தி அதன்மூலம் மின் உற்பத்தியை அதிகரித்தும், காயங்குளம் எரிவாயு மின் உற்பத்தி நிலையம் மற்றும் கிழக்கு மண்டல மின் நிலையங்களிலிருந்து கூடுதலாக மின்சாரம் பெற்றும், தனியார் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து பெறும் மின்சாரத்தைக் கட்டண விகிதாச்சார முறையில் பெற்றும், அரிய புனல் மின் இருப்பைச் சிறந்த முறையில் திட்டமிட்டுப் பயன்படுத்தியும், மின் வெட்டு/மின் தடை இல்லாத மின்சாரம் தமிழகத்திற்கு வழங்கப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு மின்சார வாரியத்திலுள்ள அனல் மின் நிலையங்கள் தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மேட்டூர், தூத்துக்குடி மற்றும் வடசென்னை ஆகிய அனல் மின் நிலையங்கள் 2001–02 மற்றும் 2002–03 ஆகிய ஆண்டுகளில் சிறப்பாகச் செயல்பட்டமைக்காக இந்திய அரசின் தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளது. மேட்டூர் மற்றும் தூத்துக்குடி அனல் மின் நிலையங்கள் 2003–04 ஆம் ஆண்டில் சிறப்பாகச் செயல்பட்டமைக்காக இந்திய அரசின் தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளது.

மேட்டூர் உட்பட 31–12–2004 அன்று வரை புனல் மின் உற்பத்தி 1,816 மில்லியன் யூனிட்டுகளாக இருந்தது. இது கடந்த வருடம் இதே நாளில் 787 மில்லியன் யூனிட்டுகள் என்ற அளவிலேயே இருந்தது. 2003–04 ஆம் ஆண்டின் புனல் மின் உற்பத்தி 2,067 மில்லியன் யூனிட்டுகளாகும். தற்போது நீர் இருப்பு நன்றாக உள்ளதால் 2004–05 ஆம் ஆண்டில் 4,500 மில்லியன் யூனிட்டுகள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

2005–06 ஆம் ஆண்டில் மின் தேவை 8,453 மெகாவாட்டாகவும், சராசரி மின் பயனீட்டளவு நாளொன்றுக்கு 145 மில்லியன் யூனிட்டுகளாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. கையிருப்பிலுள்ள நிறுவு திறன் மற்றும் திட்டமிடப்பட்டுள்ள மேற்சொன்ன கூடுதல் நிறுவு திறன் ஆகியவற்றைக் கொண்டும் மின் தேவையை நிறைவு செய்ய முடியும்.

[2005 மார்ச் 29

பத்தாவது திட்டக் காலத்தின் (2002–07) திட்ட மதிப்பீடு ரூ. 8,000 கோடியாகும். 2005–06 ஆம் ஆண்டிற்கான மூலதனத் திட்ட மதிப்பீடு ரூ. 1,495.30 கோடியாகும். வெவ்வேறு பிரிவுகளில் இப்பணிகளுக்கான திட்ட மதிப்பீடுகள் கீழே தரப்பட்டுள்ளன:

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | விவரம் | பத்தாவது திட்ட மதிப்பீடு (2002–07) | 2005–06 ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| 1. | உற்பத்தி | 1,212 | 115.00 |
| 2. | புதுப்பித்தலும், நவீனமயமாக்குதலும் | 364 | 61.65 |
| 3. | மின் அனுப்புகை மற்றும் மின் பகிர்மானம் | 5,914 | 1,003.87 |
| 4. | ஊரக மின்மயமாக்குதல் | 490 | 100.50 |
| 5. | நில அளவை மற்றும் ஆய்வுகள் | 20 | 2.50 |
| 6. | கட்டுமான காலத்தின் வட்டி அளவு | | 211.78 |
| | மொத்தம் | 8,000 | 1,495.30 |

மின் அனுப்புகை மற்றும் மின் பகிர்மான அமைப்பை மேம்படுத்தும் வகையில் 2005–06 ஆம் ஆண்டில் பல்வேறு மின் அழுத்தங்களில் 60 புதிய துணை மின் நிலையங்களும் சுமார் 800 சுற்று கிலோ மீட்டர் மிக உயரழுத்த மின் கம்பிகளும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பத்தாவது திட்டக் காலத்தில் மொத்தம் 315 புதிய துணை மின் நிலையங்களை அமைக்கவும், 4,000 சுற்று கிலோ மீட்டர் மிக உயரழுத்த மின் கம்பிகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.



2005 மார்ச் 29]

## III. மின் அனுப்புகை மற்றும் மின் பகிர்மான மேம்பாட்டுத் திட்டங்கள்

### 1. விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டம் (APDRP)

சென்னைப் பெருநகரிலுள்ள நான்கு மின் பகிர்மான வட்டங்கள், பிற மாவட்டங்களில் ஐந்து மின் பகிர்மான வட்டங்கள் மற்றும் பத்தொன்பது நகர்ப்புறப் பகுதிகள் அடங்கிய ஒன்பது மின் பகிர்மான வட்டங்களிலுள்ள மொத்தம் 25 துணை மின் அனுப்புகை மற்றும் மின் பகிர்மான மேம்பாட்டுத் திட்டங்கள் ரூபாய் 977 கோடி செலவில் விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டத்தின் (APDRP) கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத் திட்டங்களுக்காக 31-12-2004 முடிய ரூபாய் 462.89 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டங்களை 31-03-2005-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவை தவிர, மேற்சொன்ன திட்டத்தின்கீழ் ரூபாய் 40 கோடி செலவில் 20 மாவட்டங்களிலுள்ள மீதமுள்ள 54 நகராட்சிகளுக்கான புதிய மின் திட்டங்கள் இந்திய அரசின் மின் துறை அமைச்சகத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகள் 2005–06-ல் தொடங்கும்.

### 2. ஊரக வளர்ச்சிக்கான தேசிய விவசாய வங்கி (NABARD) திட்டங்கள்

ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி–IX–ன்கீழ் ஊரக வளர்ச்சிக்கான தேசிய விவசாய வங்கி, தருமபுரி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் கரூர் ஆகிய 5 மாவட்டங்களுக்கு ரூபாய் 63.48 கோடி அளவிற்கு நிதியுதவி அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டங்கள் 2005–06-ல் முடிக்கப்படும். 31–12–2004 வரை இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 16.21 கோடி செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூபாய் 47.27 கோடி 31–03–2006-க்குள் செலவிடப்படும்.

இவை தவிர, தேசிய விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அல்லது மின் நிதிக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெற்று ரூ.327 கோடி மதிப்பீட்டுச் செலவில் 19 மாவட்டங்களில் 20 திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

### 3. ஊரக மின்மயமாக்கல் நிறுவனம் (REC) உதவும் திட்டங்கள்

2003–2004-லிருந்து ஐந்தாண்டுத் திட்டச் செயல்பாடாக மின் கம்பித் தொடரில் ஏற்படும் மின்னிழப்பைக் குறைப்பதற்காகக் கடன் உதவி வழங்கி வரும் ஊரக மின்மயமாக்கல் நிறுவனம் (REC) கீழ்க்காணும் மாவட்டங்களில் அப்பணிகளுக்கு ஏற்கெனவே ஒப்புதல் வழங்கியுள்ளது.

[2005 மார்ச் 29

மதிப்பீடு (ரூபாய் கோடியில்)

| | |
|---|---|
| 1. கோயம்புத்தூர் (வடக்கு) | 87.86 |
| 2. திருச்சி (வடக்கு) | 138.92 |
| 3. திண்டுக்கல் | 109.35 |
| 4. மதுரை | 75.64 |
| மொத்தம் | 411.77 |

இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு 31–12–2004 வரை ரூபாய் 45.78 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**4. பிரதம மந்திரியின் கிராமப்புற வளர்ச்சித் திட்டங்கள் (PMGY)**

பிரதம மந்திரியின் கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தில் குக்கிராமங்களுக்கு மின் இணைப்புத் தர கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. செலவினங்கள் விவரம்:

| வ. எண் | திட்டம் | குக்கிராமங் களின் எண்ணிக்கை | மின்மயமாக்கல் செய்யப்பட்ட குக்கிராமங்களின் எண்ணிக்கை | 15–01–2005 வரையிலான செலவினம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | நாமக்கல் மாவட்டம்– முதல் கட்டம் | 21 | 21 | 161.34 |
| 2 | நாமக்கல் மாவட்டம்– இரண்டாம் கட்டம் | 7 | 7 | 159.89 |
| 3 | சேலம் மாவட்டம் | 20 | 20 | 128.33 |
| 4 | விழுப்புரம் மாவட்டம் | 12 | 12 | 94.93 |
| 5 | தருமபுரி மாவட்டம் | 55 | 54 | 123.23 |
| | மொத்தம் | 115 | 114 | 667.72 |



2005 மார்ச் 29]

**5. சென்னைப் பெருநகர்ப் பகுதிகளில் மேம்பாடு**

2005–06-ல் சென்னைப் பெருநகரப் பகுதியில் ரூபாய் 596 கோடி செலவில் பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன. இதில் மாநகராட்சிப் பகுதிகளிலும் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளிலும் துணை மின் நிலையங்களை நிறுவுதல், முக்கிய துணை மின் நிலையங்களை உயரழுத்தப் புதைவடங்கள்மூலம் இணைத்தல் மற்றும் உயரழுத்த மற்றும் தாழ்வழுத்த மேல்நிலைக் கம்பிகளைப் புதைவடங்களாக மாற்றுதல் ஆகிய பணிகள் அடங்கும்.

**IV. பொது**

**1. கணினிமயமாக்கப்பட்ட தாழ்வழுத்த மின் கட்டணப் பட்டியல் மற்றும் வசூல்**

பொது மக்கள் தங்கள் மின் கட்டணத் தொகையை எளிதாகச் செலுத்தும்பொருட்டு, கணினிமயமாக்கப்பட்ட தாழ்வழுத்த மின் கட்டணப் பட்டியல் மற்றும் வசூல் முறை சென்னைப் பெருநகரிலும், அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளிலும் ரூபாய் 120 கோடி செலவில் 31–03–2006-க்குள் முடிக்கப்படும்.

**2. கணினிமயமாக்கப்பட்ட மின் தடை நீக்கும் மையங்கள்**

கணினிமயமாக்கப்பட்ட மின் தடை நீக்கு மையம் சென்னையில் வெற்றிகரமாக நடைமுறையில் இருப்பதைத் தொடர்ந்து, கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய மாநகராட்சிகளில் இதைப்போன்ற மையங்கள் ரூபாய் 73 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இந்த வசதியை சேலம், திருநெல்வேலி, ஈரோடு மற்றும் நாகர்கோவில் ஆகிய பகுதிகளில் விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**மின்சார ஆய்வுத் துறை**

**முன்னுரை மற்றும் நிர்வாகம்**

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பொது அதிகாரப் பட்டியலில் மின்சாரம் உள்ளது. இந்திய மின்சாரச் சட்டம், 1910, மின்சார (வழங்கல்) சட்டம், 1948 மற்றும் மின்சார ஒழுங்குபடுத்துதல் ஆணையச் சட்டம், 1998 ஆகியவை நீக்கப்பட்டு, புதிதாக இயற்றப்பட்ட மின்சாரச் சட்டம், 2003 (2003-ன் 36-வது சட்டம்) 10–06–2003 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

[2005 மார்ச் 29

செப்டம்பர் 1961–லிருந்து அரசு தலைமை மின் ஆய்வாளரை துறைத் தலைவராகக் கொண்டு மின்சார ஆய்வுத் துறை உருவாக்கப்பட்டது. 1–8–1993 முதல் தலைமைச் செயலக எரிசக்தித் துறை தனித் துறையாக ஆக்கப்பட்டதிலிருந்து அத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது.

**செயல்பாடுகள்**

மின்சார ஆய்வுத் துறையிடம் கீழ்க்காணும் கடமைகளும், செயல்பாடுகளும் ஒப்படை செய்யப்பட்டுள்ளன:

1) மின்சாரச் சட்டம், 2003 (2003-ன் 36-வது சட்டம்)-இன்கீழ் ஒழுங்குமுறைகள் விதிக்கப்படும் வரையில், இந்திய மின்சார விதிகள் 1956–ன்கீழ் ஆய்வுகள் மற்றும் பணிகள் மேற்கொள்ளல்.

2) தமிழ்நாடு மின் தூக்கி சட்டம், 1997 (Tamil Nadu Lift Act, 1997) தமிழ்நாடு மின் தூக்கி விதிகள், 1997 (Tamil Nadu Lift Rules, 1997)- இன்படி செயல்படல்.

3) திரையரங்குகளில் நிறுவப்பட்ட மின் அமைப்புகள் குறித்துத் தமிழ்நாடு திரையரங்க (ஒழுங்குமுறை) விதிகள் 1957-ன்கீழ் குறிப்பிட்டுள்ள கடமைகள்.

4) மின்சாரத் தொழில்நுட்பம் தொடர்புடைய இந்தியத் தர நிர்ணயங்களை உருவாக்கும் இந்தியத் தர நிர்ணயக் குழுமத்தில் உறுப்பினராகப் பணிபுரிதல்.

5) இந்திய மின்சார விதிகள், 1956-ன் விதி 45–ன்கீழ் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு மின்சார உரிமம் வழங்கும் வாரியத்திற்கு அரசு தலைமை மின் ஆய்வாளர் பதவி வழியில் தலைவராகப் பணிபுரிதல்.

6) தமிழ்நாடு திரையரங்க (ஒழுங்குமுறை) விதிகள் 1957–ன்படி உருவாக்கப்பட்ட திரைப்படக் கருவி இயக்குநர்களுக்கான தேர்வுக் குழுமத்திற்கு அரசு தலைமை மின் ஆய்வாளர் பதவி வழியில் தலைவராகப் பணிபுரிதல்.

**இந்திய மின்சார விதிகள், 1956–ன்கீழ் வரும் செயல்பாடுகள்**

1) மின் உற்பத்திக் கழகங்கள், தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் உயர் மின்னழுத்த நுகர்வோர்கள் ஆகியோரால் நிறுவப்படும் உயர் மற்றும் மிக உயர் அழுத்த மின்னமைப்புகளுக்கு இந்திய



2005 மார்ச் 29]

மின்சார விதிகள், 1956–ன் 46-வது விதியின்படி ஒப்புதல் அளித்தல் மற்றும் அவற்றிற்கான கால முறை ஆய்வு செய்தல்.

2) இந்திய மின்சார விதிகள், 1956–ன் விதி 44ஏ–ன்கீழ் மின் உற்பத்தி, மின் வழங்கல் மற்றும் மின் உபயோகம் ஆகியவற்றில் ஏற்படும் மின் விபத்துக்கள் குறித்துத் தகவல்கள் பெறப்பட்டதும் விபத்து நடந்த இடத்தில் புலனாய்வு செய்தல் மற்றும் அறிக்கை தயாரித்தல்.

**தமிழ்நாடு மின்சார நுகர்வு அல்லது விற்பனைமீதான வரிச் சட்டம் மற்றும் விதிகள், 2003**

இம்மாநிலத்தில் ஏற்கெனவே நடப்பிலிருந்த தமிழ்நாடு மின்சார நுகர்வு வரிச் சட்டம், 1962 மற்றும் தமிழ்நாடு மின் தீர்வைச் சட்டம், 1939 ஆகியவற்றிற்குப் பதிலாக, "புதிதாக தமிழ்நாடு மின்சார நுகர்வு அல்லது விற்பனைமீதான வரிச் சட்டம் மற்றும் விதிகள், 2003" 16–06–2003 முதல் நடப்புக்கு வந்துள்ளது.

இச்சட்டத்தின்படி:

அ) சுயமாக உற்பத்தி செய்து பயன்படுத்திக் கொள்ளப்படும் மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு மின் வரி 10 காசுகள்.

ஆ) தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் ஏனைய உரிமதாரர்களால் விற்பனை செய்யப்படும் மின்சாரத்திற்கான நிகர கட்டணத்தின் மீது 5 சதவிகிதம் வரி ஆகும்.

இ) இந்த மின் வரி விதிப்பிலிருந்து கீழ்க்காணும் இனங்களுக்கு விலக்களிக்கப்பட்டது:

1) அனைத்து அரசுத் துறைப் பயன்பாடுகள்
2) இரயில்வே துறைப் பயன்பாடுகள்
3) உள்ளாட்சி அமைப்புகளின் பயன்பாடுகள்
4) வீடுகள், குடிசைகள் மற்றும் விவசாயப் பயன்பாட்டிற்கென வழங்கப்படும் மின்சாரம்

**தர நிர்ணய சோதனைக் கூடம் மற்றும் நடமாடும் ஆய்வுக் கூடங்கள்**

அரசு தர நிர்ணய மின் ஆய்வுக் கூடம், சென்னையிலுள்ள கிண்டியில் உள்ளது. நடமாடும் ஆய்வுக் கூடங்கள், சென்னை, சேலம், திருநெல்வேலி, மதுரை மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் இயங்கி வருகின்றன.

2005–2006 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டங்களின்கீழ் மின் ஆய்வுத் துறையில் மின் வழி நிருவாகம் (E-Governance) செயலாக்கப்படுத்துவதற்கென ரூ.15.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்

### முன்னுரை

தமிழ்நாட்டில் புதுப்பிக்கதக்க எரிசக்தி வளங்களை மேம்படுத்தவும், அவற்றின் பயன்பாட்டை ஊக்குவிக்கவும் 1985 ஆம் ஆண்டில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் அமைக்கப்பட்டது. இதன்மூலம், மாநில மற்றும் மைய அரசுகளின் உதவியுடன் மாற்று எரிசக்தி வளங்களைப் பொது மக்கள் பயன்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய முயற்சிகளின் விளைவாக, தமிழ்நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் பயன்பாடு பெருமளவில் அதிகரித்துள்ளது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்கள்மூலம் (சிறு அளவிலான நீர் மின் திட்டங்கள் நீங்கலாக) தமிழ்நாட்டில் 31–12–2004 வரை மொத்தம் 1,842 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் நிறுவப்பட்டுள்ளது; இது தமிழ்நாடு மின்சார வாரியக் கட்டமைப்பின் மொத்த மின் உற்பத்தித் திறனில் 16.5 சதவிகிதமாகும். ஆனால் அகில இந்திய அளவில் மின் கட்டமைப்பில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் அளவு சுமார் 4.5 சதவிகிதம் மட்டுமே உள்ளது. இவ்வாறு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களைப் பயன்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதல் மாநிலமாகத் திகழ்கிறது.

### புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்கள்

காற்றுச் சக்தி, சூரிய சக்தி, தாவர மற்றும் பிற உயிர்ச் சக்திகள், கடல் அலை மின் சக்தி, எரிபொருள் கலன், கடல் வெப்பச் சக்தி மற்றும் பூமியின் வெப்பச் சக்தி ஆகியவை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களில் முக்கியமானவை. இவற்றுள் முதல் மூன்று வகை ஆதாரங்களான காற்றுச் சக்தி, சூரிய சக்தி மற்றும் தாவர உயிர்ச் சக்தி ஆகியவற்றின் உற்பத்தி மற்றும் பயன்பாடு மட்டுமே இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் பெருமளவில் அதிகரித்திருந்தாலும் பிற வகை ஆதாரங்களை வணிகரீதியாகப் பயன்படுத்தும் நிலை இன்னும் ஏற்படவில்லை.

### மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15–அம்சத் திட்டத்தின்கீழ் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தின்கீழ், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களின் பயன்பாட்டை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.





இதில் 15 (VII)-வது அம்சத்தின்கீழ் சென்னை மற்றும் பிற நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் சில வகையான புதிய கட்டடங்களில் சூரிய சுடுநீர்ச் சாதனங்களை நிறுவுவதைக் கட்டாயமாக்கி அரசு ஆணை எண் 112, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 16–8–2002-லும் மற்றும் பிற மாவட்டங்கள். மாநகராட்சிகளைப் பொறுத்தமட்டில் அரசு ஆணை எண் 277, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 14–11–2002-லும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதனைத் தொடர்ந்து இப்புதிய விதிகளைச் செயல்படுத்துவதற்கான நெறிமுறைகள் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கும், செயல்படுத்தும் பிற துறைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

அவ்வாறே, 15 (IX)-வது அம்சத்தின்கீழ் காற்றுச் சக்தி, சாண எரிவாயு மற்றும் உயிரினக் கழிவுகளின்மூலம் எரிசக்தி உற்பத்தி செய்து வேளாண்மை, வீட்டுத் தேவைகளுக்குப் பயன்படுத்துவதற்கென பல திட்டங்கள் உள்ளன.

(அ) மின் வசதி இல்லாத தொலைதூரக் குடியிருப்புகளில் சூரிய சக்தியின்மூலம் மின் வசதி செய்து தரும் பணிகள்.

(ஆ) தாவர எரிசக்திமூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டங்களை ஊக்குவிக்கும் வகையில் 31–12–2004 வரை மொத்தம் 259 மெகாவாட் திறனில் 37 திட்டங்களைத் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் தெரிவு செய்து தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அனுமதிக்குப் பரிந்துரை செய்துள்ளது. இவற்றில் தமிழ்நாடு மின் வாரியம் மொத்தம் 145.5 மெகாவாட் திறனில் 15 திட்டங்களுக்கு இசைவு அளித்துள்ளது.

(இ) ஊராட்சிகள் தங்கள் பகுதிகளில், சூரிய ஒளித் தெரு விளக்குகள் நிறுவுவதற்கு அரசு ஊக்கமளித்து வருகிறது. 2003–2004 ஆம் ஆண்டில் மொத்தம் 3,387 சூரிய ஒளித் தெரு விளக்குகள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, இவ்விளக்குகள் நிறுவப்பட்டு வருகின்றன.

(ஈ) மேலும் தொழிற்சாலைகளில், வெப்பச் சக்தி மற்றும் மின்சாரப் பயன்பாட்டிற்குத் தாவர எரிசக்திக் கலன்களை நிறுவவும் அரசு உதவியளிக்கிறது. 31–3–2004 வரை மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட 11 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

[2005 மார்ச் 29

## புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்கள்

### 1. காற்றுச் சக்தி

#### 1.1. காற்று ஆய்வு மையங்கள் மற்றும் செயல்விளக்கக் காற்றாலைப் பண்ணைகள்

காற்றின் வேகம் மணிக்கு 18 கிலோ மீட்டருக்கும் அதிகமுள்ள பகுதிகளைக் கண்டறிய காற்று ஆய்வு மையங்கள் அமைத்து ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வின் அடிப்படையில் தமிழ்நாட்டில் 41 பகுதிகள் காற்று வளமிக்க பகுதிகள் எனக் கண்டறியப்பட்டு, அவற்றில் படிப்படியாக 19 மெகாவாட் திறன் கொண்ட செயல் விளக்கக் காற்றாலைப் பண்ணைகள் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் நிறுவப்பட்டன. மேலும், 1990 ஆம் ஆண்டிலிருந்து, முதன்முதலில் தமிழ்நாட்டில் தனியார் காற்றாலைப் பண்ணைகள் அமைக்கப்பட்டு, பின் பெருமளவில் நிறுவப்பட்டு வருகின்றன.

#### 1.2. தனியார் முதலீடு

தனியார் முதலீட்டின்மூலம் 20 பகுதிகளில் 31-12-2004 வரை மொத்தம் 1,664 மெகாவாட் மின் திறன் கொண்ட காற்றாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இது நாட்டின் மொத்தக் காற்றாலை மின் திறனில் 50 சதவிகிதத்திற்கு மேலாகும். 10-வது ஐந்தாண்டுத் திட்ட (2002-2007) இலக்கு 500 மெகாவாட் என்றுள்ள நிலையில், ஏப்ரல் 2002 முதல் டிசம்பர் 2004 வரையிலான முதல் மூன்று ஆண்டுகளுக்குள்ளாகவே 807 மெகாவாட் திறன் நிறுவப்பட்டுள்ளது. இந்தச் சாதனைக்கு முக்கியக் காரணம் 2001 ஆம் ஆண்டு முதல் அரசால் பின்பற்றப்படும் முதலீட்டாளர்களுக்கு இயைந்த கொள்கைகள்/நடவடிக்கைகள் ஆகும்.

#### 1.2.1. தனியார் மின்சாரத்தைத் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு விற்றல்/பயன்படுத்தல்

தனியார் முதலீட்டாளர்கள் தங்கள் காற்றாலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யும் மின்சாரத்தைத் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு ஒரு யூனிட்டிற்கு ரூ.2.70 என்ற கட்டணத்திற்கு விற்கலாம் அல்லது அந்த மின்சாரத்தைத் தங்களுடைய தொழிற்சாலைகளுக்குச் சில நிபந்தனைகளுக்குட்பட்டு அங்கேயே பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும் மாநிலத்தில் பிற இடங்களில் உள்ள தொழிற்சாலைகளுக்கும் கொண்டு சென்று பயன்படுத்த மின்சார வாரியத்தால் வசதி அளிக்கப்படுகிறது. இதற்குத் தமிழ்நாடு மின்சார வாரியம் 5 சதவிகிதம்



2005 மார்ச் 29]

கட்டணம் வசூலிக்கிறது. மேலும், குறிப்பிட்ட சில மாதங்களில் மட்டும் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைச் சேமித்து வைத்து அந்த நிதியாண்டின் இறுதிக்குள் தங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் வசதியையும் தமிழ்நாடு மின் வாரியம் வழங்குகிறது; இதற்காகவும் 5 சதவிகிதம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

#### 1.3, காற்றாலை நீர் இறைப்பான்கள்

காற்றின் வேகம் மணிக்கு 18 கி.மீட்டருக்குக் குறைவாக இருக்கும் இடங்களில் சிறிய காற்றாலைகளை அமைத்து, திறந்த கிணறு மற்றும் ஆழ்குழாய்க் கிணறு போன்றவற்றிலிருந்து நீரிறைக்கப் பயன்படுத்த முடியும். மார்ச் 2004 வரை இத்தகைய சிறு காற்றாலைகள் மாநில மற்றும் மைய அரசு மானிய உதவியுடன் 875 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு குதிரைச் சக்தித் திறன் பம்பு அமைப்பதற்கு ஆகும் செலவில் 50 சதவிகிதம் வரை மைய அரசிடமிருந்து தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மானியம் பெற்றுத் தருகிறது.

### 2. சூரிய சக்தி

சூரிய சக்தியினை இரு வழிகளில் பயன்படுத்தலாம். முதலாவதாக மின்சாரம் தயாரித்து விளக்கு மற்றும் பிற மின் தேவைகளுக்குப் பயன்படுத்தல்; இரண்டாவதாக, வெப்பச் சக்தியைச் சுடுநீர் தயாரிப்பதற்கும் வேளாண் பொருட்களை உலர்த்தவும் மற்றும் தொழிற்சாலைகளின் தேவைகள், சமையல் ஆகியவற்றுக்கும் பயன்படுத்தலாம்.

#### 2.1. சூரிய ஒளி மின் சக்தி

#### 2.1.1. சூரிய ஒளி விளக்குகள்

சூரிய ஒளிச் சக்தியைப் பயன்படுத்தி வீட்டு விளக்கு, அலுவலக மின் விளக்கு மற்றும் தெரு விளக்குகள் அமைப்பதற்கு மைய அரசால் 50 சதவிகிதம் வரை வழங்கப்படும் மானியத் திட்டத்தின் கீழ் மாநில அரசு ஊக்குவித்து வருகிறது. இதன்படி மைய அரசின் மரபு சாரா அமைச்சகம் ஒதுக்கீடு செய்த 3,387 சூரிய ஒளித் தெரு விளக்குகள் 28 மாவட்டங்களிலுள்ள 508 ஊராட்சிகள் மற்றும் 6 மாநகராட்சிகளில் அமைக்கப்பட்டு வருகின்றன. மேலும், 500 சூரிய ஒளி வீட்டு விளக்குகளும், 10 மாவட்டங்களில் ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் கட்டப்படும் தொகுப்பு வீடுகளுக்கும், தனியார் பயனாளிகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. 31-1-2005 வரை 3,124 சூரிய ஒளித்தெரு விளக்குகள்

[2005 மார்ச் 29

மற்றும் 355 சூரிய ஒளி வீட்டு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டக் காலத்தை மைய அரசு 31–3–2005 வரை நீட்டித்துள்ள நிலையில் மீதமுள்ள விளக்குகளும் வெகு விரைவில் அமைக்கப்படும். மேலும், 7,500 சூரிய ஒளித் தெரு விளக்குகள் மற்றும் 7,950 சூரிய ஒளி வீட்டு விளக்குகள் நிறுவ தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தால் சிறப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு மரபு சாரா எரிசக்தி அமைச்சகத்திடம் மானியம் கோரி அனுப்பப்பட்டுள்ளது.

### 2.1.2. தொலைதூரக் குடியிருப்புகளுக்கு மின் வசதி

மாநில அரசின் கொள்கைப்படி தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் குடியிருப்புகளுக்கும் 2005 ஆம் ஆண்டிற்குள் மின் வசதி அளித்திடும் வகையில், முதற்கட்டமாக மின் கட்டமைப்புடன் இணைக்கப்படாத 152 தொலைதூரக் குடியிருப்புகளுக்குச் சூரிய சக்தி விளக்குகள்மூலம் மின் வசதி செய்து தரும் திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்தது. இத்திட்டத்தின் திருத்தப்பட்ட மொத்த மதிப்பீடு ரூ.9.45 கோடி. இத்திட்டத்திற்கு மைய அரசின் மரபு சாரா எரிசக்தி அமைச்சகம் 90 சதவிகிதம் மானியம் அளிக்கிறது. மீதி 10 சதவிகிதச் செலவினைத் தமிழ்நாடு அரசு ஏற்கிறது.

மைய அரசின் ஒப்புதல் பெற்ற ஒரு நிறுவனம் மட்டுமே மரபு சாரா எரிசக்தி அமைச்சகம் நிர்ணயித்துள்ள விலையில் இப்பணிகளை மேற்கொள்ள முன் வந்துள்ளது. இன்னும் இதுபோன்ற நிறுவனங்களிடமிருந்து இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான இசைவு கோரப்பட்டுள்ளது, அவர்களிடமிருந்து பதில் கிடைத்த பின்னர் இத்திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மின் வசதியில்லாத 106 பிற குடியிருப்புகளுக்கும் இரண்டாம் கட்டமாக மின் வசதி செய்து தர மரபு சாரா எரிசக்தி அமைச்சகத்திடம் மானிய உதவி கோரப்பட்டுள்ளது.

### 2.2. சூரிய வெப்பச் சக்தி

### 2.2.1. சூரிய சுடுநீர்க் கலன்கள்

சூரிய வெப்பச் சக்தியைப் பயன்படுத்தி வீடுகள், விடுதிகள் மற்றும் மருத்துவமனைகள் ஆகியவற்றில் சுடுநீர் தயாரிக்கலாம். இதற்கான திட்டத்திற்கு மைய அரசு மானியத்தை நிறுத்திய பிறகு சூரிய சுடுநீர்க் கலன்களை அரசு நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் அமைப்பதற்கு 2003–2004 ஆம் ஆண்டில் மாநில அரசு 11.94 இலட்சம் ஒதுக்கீடு செய்தது.



2005 மார்ச் 29]

இதில் தலா 500 லிட்டர் அளவில் 12 அமைப்புகள் அரசு நிறுவனங்களில் நிறுவப்பட்டது. பிற நிறுவனங்களில் தலா 1,000 லிட்டர் அளவில் 10 அமைப்புகளுக்கு மானிய உதவியும் வழங்கப்பட்டுள்ளது. 2004–05 ஆம் ஆண்டிற்கு தலா 500 லிட்டர் அளவில் அரசு நிறுவனங்களில் 12 அமைப்புகளையும், பிற நிறுவனங்களில் தலா 1,000 லிட்டர் அளவில் 24 அமைப்புகளையும் நிறுவ அரசு ரூ.15.00 இலட்சம் ஒதுக்கி இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

### 2.2.2. சூரியச் சுடுகாற்று அமைப்புகள்

சூரிய வெப்பச் சக்தியினைப் பயன்படுத்தித் தானியங்கள், பழங்கள், தேயிலை, தோல் ஆகியவற்றை உலர்த்துவதற்குத் தேவையான புதிய தொழில்நுட்பம் முதல் முறையாக தமிழ்நாட்டில் பயன்பாட்டில் உள்ளது. இவ்வகையில் தமிழ்நாடு அரசு 2003–04 ஆம் ஆண்டில் 440 சதுர மீட்டர் பரப்பளவிற்கு களங்கள் அமைக்க ரூ.4.61 லட்சம் மானியம் ஒதுக்கியுள்ளது. 168 சதுர மீட்டர் பரப்பளவில் 2 அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. மீதமுள்ள அமைப்புகளுக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 2.2.3. சூரிய வெப்பச் சமைப்பான்கள்

பெட்டி வடிவிலான சமைப்பான்களில் 4 அல்லது 5 பேர்களுக்கு சூரிய வெப்பச் சக்தியைப் பயன்படுத்தி உணவு சமைக்கலாம். இச் சமைப்பான்களைப் பெற தற்பொழுது வங்கிகள்மூலம் குறைந்த வட்டியில் கடன் வசதி செய்து ஊக்கப்படுத்தப்படுகிறது. மேலும், தட்டை வடிவிலான சமைப்பான்கள் 10 அல்லது 15 பேர்களுக்கும், சூரிய வெப்பச் சக்தியைக் கொண்டு நீராவிமூலம் இன்னும் பலருக்குச் சமைக்கலாம். இத்திட்டத்திற்கு 50 சதவிகிதம் வரை மைய அரசு மானியம் வழங்குகிறது.

### 3. தாவர மற்றும் பிற உயிர்ச் சக்திகள்

தாவர மற்றும் பிற உயிர்ச் சக்திக் கழிவுகளிலிருந்து எரிவாயு மற்றும் மின்சாரம் தயாரித்து எரிசக்தித் தேவைகளை நிறைவேற்றும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 3.1. இணை மின் திட்டம்

சர்க்கரை ஆலைகளில் உயர் அழுத்த நீராவிக் கலன்கள் (Boilers) மூலம் கரும்புச் சக்கையிலிருந்து நீராவி உற்பத்தி செய்து அதிலிருந்து மின்சாரம் தயாரிக்கப்பட்டு உபரி மின்சாரத்தைத் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு விற்பதுடன், அழுத்தம் குறைந்த நீராவியைச் சர்க்கரை

[2005 மார்ச் 29

உற்பத்திக்குப் பயன்படுத்தும் திட்டம் தமிழ்நாட்டில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 31–12–2004 வரை மொத்தம் 275 மெகாவாட் அளவிற்கு உற்பத்தித் திறன் உருவாக்கி (மின் கட்டமைப்பிற்கு வழங்கப்படும் உபரி மின்சாரத்தின் அளவு 165 மெகாவாட்) இந்தியாவிலேயே தமிழ் நாடு முன்னணியில் உள்ளது.

**3.2. தாவரப் பொருள்/கழிவுகள்மூலம் மின் உற்பத்தி**

விறகு, பிற விவசாயக் கழிவுகள் மற்றும் மிஞ்சியிருக்கும் தாவரப் பொருள்கள்மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு ஊக்கமளித்து வருகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் பழையசீவரம் என்ற இடத்தில் 12 மெகாவாட் திறனில் செயல்பட்டு வந்த திட்டத்தை 18 மெகாவாட் அளவிற்கு அதிகரிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மேற்கொண்ட தாவரச் சக்திக் கழிவுகள் பற்றிய மதிப்பீட்டு ஆய்வின் அடிப்படையில் அரசின் கொள்கைப்படி புதிய தாவரச் சக்தி மின் திட்டங்களுக்கு மனுக்கள் கோரப்பட்டன. அதன் பேரில் பெறப்பட்ட மொத்தம் 109 விண்ணப்பங்களை அதற்கென அமைக்கப்பட்ட தொழில்நுட்பக் குழு பரிசீலித்து, அவற்றில் 37 மனுக்களைத் தேர்வு செய்து, தமிழ்நாடு மின் வாரியத்திற்கு மொத்தம் 259 மெகாவாட் திறனில் புதிய மின் திட்டங்களுக்கு இசைவு வழங்கப் பரிந்துரை செய்துள்ளது. அவற்றில் மொத்தம் 145.5 மெகாவாட் திறன் கொண்ட 15 திட்டங்களுக்குத் தமிழ்நாடு மின் வாரியம் இசைவுக் கடிதம் வழங்கியுள்ளது. இதில் பரமக்குடிக்கு அருகில் 20 மெகாவாட் திறன் கொண்ட புதிய திட்டம் 2004–05 ஆம் ஆண்டு முதல் செயல்படத் தொடங்கியுள்ளது. பிற திட்டங்களும் விரைவில் படிப்படியாக நிறைவேற்றப்படும்.

**3.3. தாவர எரிசக்தி வாயுக் கலன்கள்**

தொழிற்சாலைகள் மற்றும் பிற நிறுவனங்களுக்குத் தேவைப்படும் வெப்பச் சக்தி மற்றும் மின் சக்தியைப் பெற தாவர எரிசக்தி வாயுக் கலன்கள் நிறுவிட தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் ஊக்கம் அளிக்கிறது. இதற்கு மைய அரசின் மரபு சாரா எரிசக்தி அமைச்சகம் மானியம் அளிக்கிறது. இத்திட்டத்தின்கீழ் மைய அரசு வெப்பச் சக்திப் பயன்களுக்கான கலன்களுக்கு 10 சதவிகிதம் மானியமும், முழுவதும் வாயுவைப் பயன்படுத்தி (100%) மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கு இயந்திரங்களுக்கான செலவில் 50 சதவிகிதம் வரையிலும் மானியம் வழங்குகிறது. தற்பொழுது டீசல், உலை எண்ணை, சமையல் எரிவாயு



2005 மார்ச் 29]

ஆகியவற்றைப் பயன்படுத்தி வெப்பச் சக்தி பெறுவதற்குப் பதிலாக தாவர எரிசக்தி வாயுக் கலன்களை அமைக்கப் பரிந்துரை செய்யப்படும்.

தமிழ்நாட்டில் 31–12–2004 வரை, மொத்தம் 26 வெப்பச் சக்திக் கலன்கள் (3400 கி.வாட்) மற்றும் 11 மின் சக்திக் கலன்கள் (1686 கி.வாட்) நிறுவப்பட்டுள்ளன. மேலும் மரபு சாரா எரிசக்தி அமைச்சகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட 3 வெப்பச் சக்திக் கலன்கள் (450 கி.வாட்) மற்றும் 7 மின் சக்திக் கலன்கள் (2357 கி.வாட்) நிறுவப்பட்டு வருகின்றன.

2004–05 ஆம் ஆண்டில் 20 கி.வாட் திறன் கொண்ட 14 மின் சக்திக் கலன்களுக்குக் கூடுதல் மானியமாக ஆறு ஊராட்சிகளுக்கு ரூ 1.00 இலட்சம் வீதமும், 8 பிற நிறுவனங்களுக்கு ரூ. 75,000/– வீதமும், மொத்தம் ரூ. 12.00 இலட்சமும்; பள்ளிகளில் சத்துணவு மையத்திற்கு 7 வெப்பச் சக்திக் கலன்கள் அமைக்க மானியமாக ஐந்து பள்ளிகளுக்கு ரூ. 1.2 இலட்சம் வீதமும் இரண்டு பிற நிறுவனங்களுக்கு ரூ. 75,000/– வீதமும் வழங்க மொத்தம் ரூ. 7.50 இலட்சமும், ஆக மொத்தம் ரூ. 19.50 இலட்சம் வழங்க மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**3.4. கழிப்பறையுடன் இணைந்த வாயுக் கலன்கள்**

தமிழ்நாட்டில் சாண எரிவாயுக் கலன்கள் பெருமளவில் அமைக்கப்பட்டுள்ளன. பல்வேறு மாவட்டங்களிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில், கொளத்தூர் (சேலம்), பெருந்துறை (ஈரோடு), பெரியகுளம் (தேனி) ஆகிய இடங்களில் பரிசோதனையாக நிறைவேற்றப்பட்ட திட்டங்களின் அடிப்படையில் 2003–04 ஆம் ஆண்டில் கழிப்பறையுடன் இணைந்த வாயுக் கலன்களை அரசு மற்றும் பிற நிறுவனங்களில் அமைக்க அரசு ரூ.43.5 இலட்சம் நிதி ஒதுக்கியது. இத்திட்டத்தில் 25 அல்லது 35 கன மீட்டர் அளவுள்ள 16 கலன்களும், 15 க.மீ கலன்கள் இரண்டும், 10 க.மீ. அளவில் 36 கலன்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

**4. பிற திட்டங்கள்**

**4.1. கழிவுப் பொருள்களிலிருந்து எரிவாயு, மின்சாரம் தயாரித்தல்**

தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிபட்டியில் மரவள்ளிக் கிழங்கின் கழிவு நீரிலிருந்து எரிவாயு மற்றும் மின்சாரம் தயாரிக்கும் திட்டமும், நாமக்கல் மாவட்டத்தில் கோழி எச்சத்தில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டமும் முடிவுற்றுள்ளன. சென்னையில் கோயம்பேடு காய்கறி மொத்த விற்பனை வளாகக் காய்கறிக் கழிவுகளைக் கொண்டு

[2005 மார்ச் 29

மின்சாரம் தயாரிக்க மைய அரசு நிதி உதவி அளிக்க ஒப்புதல் தந்துள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சி நிறுவனத்திற்காக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**4.2. மின் கலத்தால் இயங்கும் வாகனங்கள்**

பெட்ரோல் மற்றும் டீசல் ஆகிய எரிபொருட்களைக் கொண்டு இயங்கும் வாகனங்கள் வெளியேற்றும் நச்சுப்புகை சுற்றுப்புறத்தை மாசுபடுத்துவதைத் தவிர்க்கும் வகையில் மின் கலத்தால் இயங்கும் வாகனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்தகைய வாகனங்களைப் பயன்படுத்தும் தகுதியான நிறுவனங்களுக்கும், பிற அமைப்புகளுக்கும் மைய அரசு, வாகன விலையில் 33 சதவிகிதம் வரை மானிய உதவி வழங்குகிறது. இவ்வாகனங்களை வனவிலங்குச் சரணாலயங்கள், சுற்றுலா முக்கியத்துவம்மிக்க பகுதிகள், மருத்துவமனைகள் ஆகிய இடங்களில் பயன்படுத்திச் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்துக் கொள்ளலாம். தமிழ்நாட்டில் இதுவரை 27 வேன்கள் மற்றும் 2 மூன்று சக்கர வாகனங்களுக்கு மைய அரசு மானியம் வழங்கியுள்ளது.

**4.3. விளம்பரம் மற்றும் விழிப்புணர்வுப் பணிகள்**

புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் பயன்பாட்டினை விரிவுபடுத்தவும், எரிசக்தி சிக்கனத்தைத் தொழிற்சாலைகள் மற்றும் பிற நிறுவனங்களில் செயல்படுத்தவும் இந்நிறுவனம் கருத்தரங்குகள் மற்றும் கண்காட்சிகளை நடத்துவதுடன், பிற அமைப்புகள் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்கிறது. 2003–2004, 2004–2005 ஆம் ஆண்டுகளில் முறையே 14 மற்றும் 10 மாவட்டங்களில் இத்தகைய கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. மேலும் 2004–2005-ல் தொழிற்சாலைகளுக்காக 2 கருத்தரங்குகளும், 3 கண்காட்சிகளும் நடத்தப்பட்டன. இதன்மூலம் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தொழில் முனைவோர் மற்றும் தன்னார்வ அமைப்புகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், 2004–05 ஆம் ஆண்டில் அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்குச் சூரிய சக்திக் கல்வி பயில்வதற்கான 230 கருவிகள் வழங்க 50 சதவிகித மானியமாக ரூ.7.00 இலட்சம் அரசு ஒதுக்கியுள்ளது. இதன்மூலம் பள்ளி மாணவர்களுக்குச் சூரிய சக்தியின் பல்வேறு பயன்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.



2005 மார்ச் 29]

**4.5. மாற்றியமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்**

மைய அரசு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தை நகர்ப்புறங்கள் தவிர்த்த எல்லா கிராமப்புற மாவட்டங்களிலும் செயல்படுத்தும் வகையில் மாற்றியமைத்துள்ளது. இதன்படி, மாநில அளவிலான பிரிவை இந்நிறுவனத்திலும், மாவட்ட அளவிலான அமைப்புகளை அந்தந்த மாவட்டத்தின் ஊரக வளர்ச்சி முகமையிலும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் சில தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் தொகுப்பு முறையில் (Cluster) அனைத்து மக்களுக்கும் பயன்படும் வகையில் செயல்படுத்தப்பட உள்ளது. அங்கு ஏற்கெனவே பயன்பாட்டில் இருக்கும் மரபு சார்ந்த எரிசக்தியில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவும், எளிதில் கிடைக்கக்கூடிய மரபு சாரா எரிசக்திகளின் பயன்பாட்டினை ஊக்குவிக்கும் வகையிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

மேலும், மாவட்டங்களிலுள்ள ஊராட்சி அமைப்புகள், கிராம எரிசக்தித் திட்டங்களைத் தயாரித்துச் செயல்படுத்துவதிலும், எரிசக்தி அமைப்புகளைப் பராமரிப்பதிலும் ஈடுபடுத்தப்படும். ஊராட்சியால் நியமிக்கப்படுவோருக்குப் பயிற்சியளிக்கவும் ஏற்பாடு செய்யப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்த மாநில அளவில் ரூ.5 இலட்சமும், மாவட்ட அளவில் தலா ரூ.10 இலட்சமும், மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்தால், அதே அளவு நிதி ஒதுக்கீட்டினை மத்திய அரசும் வழங்கும். இத்திட்டத்திற்கு மாநில அரசின் ஒப்புதல் விரைவில் அளிக்கப்பட்டு 2005–06 முதல் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**4.6. கடல் கொந்தளிப்பால் (சுனாமி) பாதிக்கப்பட்டவர்களுக்குப் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக் கருவிகள் வழங்குதல்**

சுனாமி கடல் கொந்தளிப்பால் கடலோர மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்கள் பயன்பெறும் வகையில் 4,000 சூரிய ஒளி லாந்தர் விளக்குகள் ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டு வருகிறது. 500 சூரிய வெப்பத் தட்டை வடிவ சமைப்பான்கள் மற்றும் 4,000 சூரிய வெப்பப் பெட்டி வடிவச் சமைப்பான்கள் ஆகியவற்றுக்குக் கோரப்பட்டுள்ள மைய அரசின் நிதி உதவி எதிர்பார்க்கப்படுகிறது.

[2005 மார்ச் 29

**4.7.** சேலம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் நிலைத்த எரிசக்திப் பாதுகாப்புத் திட்டம் பற்றி விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிப்பதற்காக மாநில அரசு ரூ.4.00 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது. இவ்வறிக்கை தயாரிக்கும் பணி அண்ணா பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## 5. 2005–06 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

### 5.1. பகுதி 2 – திட்டங்கள்

*2005–06 ஆம் ஆண்டில், புதுப்பிக்கவல்ல எரிசக்தி சார்ந்த கீழ்க்காணும் திட்டங்களுக்காக மொத்தம் ரூ. 205.94 இலட்சம் பகுதி–2 நிதியாக ஒதுக்கப்படவுள்ளது:—*



2005 மார்ச் 29]

| வ. எண் | திட்டப் பணிகள் | ஒதுக்கப்படவுள்ள தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | காற்றுச் சக்தி : | |
| | (அ) 3 இடங்களில் காற்றாலைகள் அமைப்பதற்கு வளமிக்க இடத்திற்கான நுண்ணாய்வு | 6.00 |
| | (ஆ) புதிதாக 3 காற்று ஆய்வு நிலையங்கள் நிறுவ மாநில அரசின் 20 சதவிகிதப் பங்கு | 4.50 |
| 2 | சூரிய சக்திச் சுடுநீர் அமைப்புகள்: | |
| | (அ) நிறுவனங்கள்/தொழிற்சாலைகளில் சூரிய சக்திச் சுடுநீர் அமைப்புகள் நிறுவுதல் (ஒன்றிற்கு மானியம் ரூ.25,000/- மற்றும் பிற செலவுகள் ரூ.2,500/-) | 5.50 |
| | (ஆ) மருத்துவமனைகள்/அரசு விடுதிகள் மற்றும் நிறுவனங்களில் 1,000 லிட்டர் அளவுள்ள சுடுநீர் அமைப்புகள் 5 அல்லது 500 லிட்டர் அளவுள்ள சுடுநீர் அமைப்புகள் 10 நிறுவுதல் | 7.50 |
| 3 | சூரிய சுடுகாற்று அமைப்புகள் நிறுவுதல், மீன் உலர்த்தல்/உணவு பதப்படுத்தல் மற்றும் தொழிற்சாலைத் தேவைகளுக்காகச் சூரிய சுடுகாற்று அமைப்புகளை 400 ச.மீ அளவில் நிறுவுதல் (மானியம் மற்றும் இதர செலவுகள் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.1,550/-) | 6.20 |
| 4 | காவல் துறைக்குச் சூரிய ஒளிக் கருவிகள்: | |
| | (அ) சூரிய ஒளிப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு விளக்கு அமைப்பு ஐந்திற்குரிய சூரிய ஒளித் தகடு மற்றும் மின் கலத்தின் முழுச் செலவு. (ரூ.1.5 இலட்சம் வீதம்) | 7.50 |
| | (ஆ) காவல் துறையின் கம்பியில்லா தொலைத் தொடர்புக் கருவிகள் ஐந்திற்கு சூரிய ஒளி மின் கலன்கள் அமைக்க. (மின் கலன்களுக்கு ஆகும் செலவு தவிர) | 12.50 |
| 5 | அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு 250 சூரிய ஒளிக் கல்விக்கான கருவிகள் வழங்கவும், பிற செலவினங்களுக்கும் ரூ.3,700/- வீதம் | 9.25 |
| 6 | அண்ணா பல்கலைக்கழகம்மூலம் மேற்கொள்ளப்படும் மூன்று ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்கான மொத்தச் செலவில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் 50 சதவிகிதப் பங்கு | 20.00 |
| 7 | மாநில அளவிலான எரிசக்திப் பூங்கா (கட்டடத்திற்கான கூடுதல் ஒதுக்கீடு) | 10.00 |
| 8 | மைய அரசின் கிராம எரிசக்திப் பாதுகாப்புத் திட்டத்திற்கு 10 சதவிகிதம் மாநில அரசின் பங்கு (கிராமத்திற்கு ரூ.2.00 இலட்சம் வீதம் 10 கிராமங்களுக்கு) | 20.00 |
| 9 | நலிவுற்ற 29 ஊராட்சிகளில் நீர் இறைக்கும் பம்புகள் மற்றும் தெரு விளக்குகள் அமைக்க, தாவர எரிசக்தி வாயுக் கலன்கள் நிறுவ மாநில அரசின் 50 சதவிகிதப் பங்கு | 46.40 |
| 10 | 106 தொலைதூரக் குக்கிராமங்களை மின்மயமாக்கும் இரண்டாம் கட்டத் திட்டம் | 50.59 |
| | மொத்தம் | 205.94 |

[2005 மார்ச் 29

## 2. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மொத்தம் 54.00 இலட்சம் செலவில் 5 திட்டங்களுக்கு 2004–05-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டப் பணிகள், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்ட இயக்குநரால் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் நிறைவேற்றப்படுகிறது. 2005–06 ஆம் ஆண்டிற்குப் புதுப்பிக்கத்தகக்க எரிசக்தி சாதனங்கள்/ கருவிகள் அமைக்க மொத்தம் ரூ.60.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு எதிர்பார்க்கப்படுகிறது.

## 3. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

2004–05 ஆம் ஆண்டிற்கான மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.30 இலட்சம் செலவில் தாவர எரிசக்தி வாயுக் கலன்கள், சூரிய ஒளி மின் பம்புகள், சூரிய ஒளித் தெரு விளக்குகள் ஆகியவை கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைமூலமாக நிறுவப்பட்டு வருகின்றன. மேலும், 2005–06 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு மின் விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு மின் விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் 27–06–1991 ஆம் தேதி அன்று நிறுவப்பட்டது. இந்நிறுவனம் பாரத ரிசர்வ் வங்கியில் வங்கி சாரா நிதி நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமானது, தமிழ்நாடு மின் திட்டங்களுக்கு, குறிப்பாக மின் உற்பத்தி, மின் பங்கீடு மற்றும் மின் வினியோகத் திட்டங்களுக்குத் தேவையான நிதியைத் திரட்டுவதாகும். இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.50 கோடியாகும். இதில் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.22 கோடி.

## வைப்பீட்டுத் தொகைகள்

இந்நிறுவன வைப்பீட்டாளர்களுக்குப் பரிவோடு சிறந்த சேவை புரிந்தும், தொடர்ந்து இலாபம் ஈட்டியும் வைப்பீட்டுத் தொகையை அதிகரித்ததோடு மட்டுமின்றி, வைப்பீட்டாளர்களின் மனதில் நிலையான இடத்தைப் பெற்றுள்ளது. இதன் பயனாக 1991–92 ஆம் ஆண்டில் ரூ.2.09 கோடியாக இருந்த வைப்பீட்டுத் தொகை 31–12–2004 அன்று ரூ.1,715 கோடியாக கணிசமான அளவிற்கு வளர்ந்துள்ளது. இதுபோன்று 1991–92 ஆம் ஆண்டில் 816 ஆக இருந்த வைப்பீடுகளின் எண்ணிக்கை 31–12–2004 அன்று 1,01,635 ஆக வளர்ந்துள்ளது.



2005 மார்ச் 29]

குறிப்பாக இந்நிறுவனம் கடந்த மே 2001 — டிசம்பர் 2004 காலத்தில் மட்டும் ரூ.958 கோடி நிகர வைப்பீட்டுத் தொகையாகத் திரட்டிப் புதிதாக 41,595 வைப்பீட்டாளர்களை வைப்பீட்டுத் திட்டங்களின்கீழ் கொணர்ந்துள்ளது. சிறப்பாக 2004–2005 ஆம் நிதியாண்டில், டிசம்பர் 2004 வரை இந்நிறுவனம் ரூ.240 கோடியை நிகர வைப்பீட்டுத் தொகையாகத் திரட்டி, புதிதாக 3,385 வைப்பீட்டாளர்களைச் சேர்த்துள்ளது.

## கடனுதவி

இந்நிறுவனத்தால் திரட்டப்படுகின்ற நிதி தமிழ்நாடு மின் வாரியத்தின் மின் உற்பத்தி/மின் பங்கீடு மற்றும் மின் வினியோகத் திட்டங்களுக்குக் கடனாக அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிறுவனம் தொடங்கிய நாள் முதல் 31–12–2004 வரை ரூ.4,589 கோடி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கடனாக அளித்துள்ளது. இதில் 31–12–2004 வரை நிலுவையில் உள்ள நிகர கடன் தொகை ரூ.2,092 கோடியாகும். மேலும் நிறுவனம் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் ஆகியவற்றிற்கு ரூ.32 கோடி கடன் அளித்துள்ளது.

2004–2005 நிதியாண்டில் டிசம்பர் 2004 வரை, இந்நிறுவனம் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு அளித்துள்ள ரூ.672 கோடியுடன் மொத்தம் ரூ.692 கோடியை தவணைக் கொள்முதல் கடன் மற்றும் நீண்ட காலக் கடனாக அளித்துள்ளது. இதில் நிகரக் கடன் நிலுவைத் தொகை ரூ.297 கோடியாகும். இத்தொகையில் தமிழ்நாடு மின் வாரியத்தின் நிகரக் கடன் தொகை ரூ.280 கோடி ஆகும்.

## அரசுத் திட்டங்கள் செயலாக்கம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிமுகப் படுத்தப்பட்ட பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இந்நிறுவனம் 2004–05-ல் டிசம்பர் 2004 வரை ரூ.8 கோடியை வைப்பீட்டுத் தொகையாக 5,093 பெண் குழந்தைகளுக்காகப் பெற்றுள்ளது. திட்டம் தொடங்கியதிலிருந்து இத்திட்டத்தின்கீழ் இந்நிறுவனம் ரூ.38 கோடியை வைப்பீட்டுத் தொகையாக 25,064 குழந்தைகளுக்காகப் பெற்றுள்ளது.

மேலும் இந்நிறுவனம், திருக்கோயில்களின் ஒருகால வழிபாடு திட்டத்தின்கீழ் 2004–05-ல் டிசம்பர் 2004 வரை ரூ.14 கோடியை 5,613

திருக்கோயில்களுக்கு வைப்பீட்டுத் தொகையாகப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ரூ.24 கோடியை 9,643 திருக்கோயில்களிடமிருந்து இதுவரை இந்நிறுவனம் வைப்பீட்டுத் தொகையாகப் பெற்றுள்ளது.

**இலாபம் மற்றும் ஈவுத்தொகை**

இந்நிறுவனம் துவக்கத்திலிருந்தே தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. செலுத்தப்பட்ட மூலதனத்தில் 20 விழுக்காட்டை ஈவுத்தொகையாக ஒன்பது ஆண்டுகளாகக் கடந்த 1995–96 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து அரசுக்கு வழங்கி வருகிறது. 2004–05 ஆம் ஆண்டில் வரி செலுத்தியது போக ரூ.25 கோடி நிகர இலாபம் ஈட்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

**எதிர்கால முயற்சிகள்**

1. ரூ.300 கோடியை நிகர வைப்பீட்டுத் தொகையாகப் பொது மக்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து திரட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.
2. ரூ.750 கோடியை மின் உற்பத்தி மற்றும் கட்டமைப்பு வசதித் திட்டங்களுக்குக் கடன் அளித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.



**இணைப்பு II**

(62 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

# மானியக் கோரிக்கை எண் 24–இயக்கூர்திகள் சட்டங்கள்–நிருவாகம்

# கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

## 1. சாலைப் போக்குவரத்தின் முக்கியத்துவம்

நமது நாட்டில் சாலைப் போக்குவரத்து மிக முக்கியமான போக்குவரத்து முறையாகும். இம்மாநிலத்தின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு சாலைப் போக்குவரத்து உறுதுணையாக அமைந்துள்ளது. பெரும்பாலான கிராமப்புறங்களைச் சென்றடைய சாலைப் போக்குவரத்தே பயன்படுகிறது. மேலும் உற்பத்திக் கூடங்களையும், துறைமுகங்களையும், நகர மற்றும் கிராமப் பகுதியிலுள்ள சந்தைகளோடு சாலைப் போக்குவரத்து இணைக்கிறது. எனவே, தமிழ்நாட்டில் மோட்டார் வாகனங்கள்தான் பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்தில் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. சாலைப் போக்குவரத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, தொழில்மயமாக்குதல் மற்றும் நகரமயமாக்குதல் ஆகியவற்றால் எழுந்துள்ள புதிய சவால்களை எதிர்கொள்ளும் வகையில், போக்குவரத்துத் துறையின் செயல்பாடுகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. பொது மக்களின் போக்குவரத்துத் தேவைகளை முன்கூட்டியே கணித்து, தேவையான சட்டபூர்வமான மற்றும் இதர நடவடிக்கைகளின் மூலமாக அத்தேவைகளை நிறைவு செய்வதே போக்குவரத்துத் துறையின் தலையாய பணியாகும். இதனைக் கவனத்தில் கொண்டு இதுகாறும் மேற்கொள்ளப்பட்ட மற்றும் வரும் ஆண்டுகளில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் பின்வரும் பத்திகளில் விளக்கப்பட்டுள்ளன.

## 2. நிருவாக அமைப்பு

போக்குவரத்துத் துறை உள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது. போக்குவரத்து ஆணையர் இத்துறையின் நிர்வாகத் தலைவராவார். அவரே மாநில போக்குவரத்து அதிகாரியாகவும் மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையராகவும் செயல்படுகிறார். அவருடைய பணியில் மூன்று இணை போக்குவரத்து ஆணையர்கள் துணைபுரிகின்றனர். சென்னை மாநகரைப் பொறுத்தவரை,

இணை போக்குவரத்து ஆணையர் (சென்னை சரகம்) மண்டலப் போக்குவரத்து அதிகாரியாகவும் செயல்படுகிறார். மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்கள் மண்டலப் போக்குவரத்து அதிகாரிகளாகப் பணியாற்றுகின்றனர். மோட்டார் வாகனங்கள் சட்டத்தின்கீழ் பெர்மிட் கோரும் விண்ணப்பங்கள்மீது அவர்கள் ஆணை பிறப்பிக்கின்றனர். மண்டலப் போக்குவரத்து அதிகாரிகள் மற்றும் மாநில போக்குவரத்து அதிகாரியால் பிறப்பிக்கப்படும் ஆணைகளின்மீதான மேல் முறையீடுகளும், மறு ஆய்வு மனுக்களும் சென்னை மாநில போக்குவரத்து மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தால் விசாரிக்கப்பட்டு முடிவு செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டில் 46 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், 40 பகுதி அலுவலகங்கள் மற்றும் 19 சோதனைச் சாவடிகள் இயங்கி வருகின்றன.

## 3. போக்குவரத்துத் துறையின் பணிகள்

1988 ஆம் ஆண்டு மத்திய அரசு மோட்டார் வாகனச் சட்டம், 1989 ஆம் ஆண்டு மத்திய அரசின் மோட்டார் வாகன விதிகள், 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள், 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்புச் சட்டம் மற்றும் விதிகள் மற்றும் இவை தொடர்பானவற்றைப் போக்குவரத்துத் துறை நிருவகிக்கின்றது. இத்துறையின் முக்கியப் பணிகள் பின்வருமாறு:—

(i) இயக்கூர்திகளைப் பதிவு செய்தல், போக்குவரத்து வாகனங்களுக்கு அனுமதிச் சீட்டுகள் (பெர்மிட்) வழங்குதல், அண்டை மாநிலங்களுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தங்களின் அடிப்படையில் அம்மாநிலங்களுக்கிடையே பயணிகள் போக்குவரத்து மற்றும் சரக்குப் போக்குவரத்துகளை இயக்குதல்;

(ii) போக்குவரத்து வாகனங்களின் ஓடும் திறனை உறுதி செய்தல், அதற்கான சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் புதுப்பித்தல், பன்னாட்டு ஓட்டுநர் உரிமங்கள் உட்பட ஓட்டுநர் உரிமங்கள் வழங்குதல், நடத்துநர் உரிமங்கள் வழங்குதல் மற்றும் சாலை விபத்துக்குள்ளான வாகனங்களை ஆய்வு செய்தல்;

(iii) வரிகள் மற்றும் கட்டணங்களை வசூலித்தல், வாகனங்கள் வெளியிடும் புகையினால் ஏற்படும் மாசினைக் கட்டுப்படுத்துதல், சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துதல், அவசர விபத்து நிவாரண சிகிச்சை மையங்கள் அமைப்பதில் துணை புரிதல் மற்றும் அவற்றின் செயல்பாடுகளைக் கண்காணித்தல்.



## 4. 1-1-2005 நிலவரப்படி மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை

(அ) போக்குவரத்துத் துறையால் மேற்கொள்ளப்படும் பணிகள் பற்றிய விவரங்களைப் பார்வையிடும் முன்னர், தமிழ்நாட்டில் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவ்வாகனங்கள் பெருகி வரும் வேகம் ஆகியவற்றை அறிந்து கொள்வதன்மூலமே இத்துறை மேற்கொள்ள வேண்டிய பணிகளின் அளவினை உணர இயலும். நமது நாட்டில், மகாராட்டிர மாநிலத்திற்கு அடுத்தபடியாக, தமிழ்நாட்டில்தான் கூடுதல் வாகனங்கள் உள்ளன. இரு சக்கர வாகனங்களைப் பொறுத்தவரை, தமிழ்நாடு முதலிடத்தை வகிக்கிறது.

| போக்குவரத்து வாகனங்கள் | | போக்குவரத்து அல்லாத வாகனங்கள் | |
|---|---|---|---|
| <u>பயணிப் பேருந்துகள்</u> | | <u>இரு சக்கர வாகனங்கள்</u> | |
| மாநில போக்குவரத்து (கழகங்களால் இயக்கப்படுபவை) | 17038 | மோட்டார் சைக்கிள் | 2134178 |
| | | ஸ்கூட்டர் | 975273 |
| தனியாரால் இயக்கப்படுபவை | 6285 | மொபட்டுகள் | 2830884 |
| சிற்றுந்துகள் | 3834 | **மொத்தம்** | 5940335 |
| **மொத்தம்** | 27157 | மூன்று சக்கர ஆட்டோ (தானியங்கி) | 4109 |
| <u>ஒப்பந்த வாகனங்கள்</u> | | மூன்று சக்கர வாகனங்கள் | 29847 |
| ஆட்டோ ரிக்ஷாக்கள் | 121561 | மோட்டார் கார் | 603082 |
| வாடகைக் கார் | 1187 | ஈப்பு | 39705 |
| மோட்டார் கேப் (மாநில அனுமதி) | 34482 | ஸ்டேஷன் வேகன் | 2473 |
| மோட்டார் கேப் (தேசிய அனுமதி) | 4838 | நான்கு சக்கர வாகனம் | 6675 |
| | | டிராக்டர் | 78854 |
| மேக்ஸி கேப் | | சாலை உருளை | 567 |
| (மாநில அனுமதி) | 23480 | மற்றவை | 17330 |

[2005 மார்ச் 29

| போக்குவரத்து வாகனங்கள் | | போக்குவரத்து அல்லாத வாகனங்கள் | |
|---|---|---|---|
| மேக்ஸி கேப் (தேசிய அனுமதி) | 741 | **மொத்தம்** | 782642 |
| ஆம்னி பேருந்து (மாநில அனுமதி) | 312 | **நிகர மொத்தம்** | 6722977 |
| ஆம்னி பேருந்து (தேசிய அனுமதி) | 147 | | |
| **மொத்தம்** | 186748 | | |
| **சரக்கு வாகனங்கள்** | | | |
| லாரிகள் (மாநில அனுமதி) | 108228 | | |
| லாரிகள் (தேசிய அனுமதி) | 26536 | | |
| டிராக்டர் மற்றும் டிரெய்லர் | 41027 | | |
| இலகு ரக வாகனங்கள் | 70105 | | |
| ஆர்டிகுலேட்டட் வாகனங்கள் | 9236 | | |
| **மொத்தம்** | 255132 | | |
| **இதர இனங்கள்** | | **சுருக்கம்** | |
| தனியார் சேவை வாகனங்கள் | 4298 | | |
| பள்ளி பேருந்துகள் | 5846 | போக்குவரத்து வாகனங்கள் | 482870 |
| அவசர ஊர்தி | 2885 | | |
| தீயணைப்பு வாகனங்கள் | 804 | போக்குவரத்து அல்லாத வாகனங்கள் | 6722977 |
| **மொத்தம்** | 13833 | | |
| **நிகர மொத்தம்** | 482870 | மாநில மொத்தம் | 7205847 |



2005 மார்ச் 29]

**(ஆ) தமிழ்நாட்டில் வாகனங்களின் வளர்ச்சி**

நமது மாநிலத்தில் வாகனங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கீழ்வரும் அட்டவணையில் அவற்றின் விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு | போக்குவரத்து வாகனங்கள் | போக்குவரத்து அல்லாத வாகனங்கள் | | மொத்த வாகனங்கள் |
|---|---|---|---|---|
| | | இரு சக்கர வாகனங்கள் | மற்றவை | |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1997–1998 | 344244 | 2816820 | 453184 | 3614248 |
| 1998–1999 | 368922 | 3214068 | 487744 | 4070734 |
| 1999–2000 | 399300 | 3679525 | 528403 | 4607228 |
| 2000–2001 | 421365 | 4163002 | 577715 | 5162082 |
| 2001–2002 | 432106 | 4600565 | 625426 | 5658097 |
| 2002–2003 | 457448 | 5073643 | 677946 | 6209037 |
| 2003–2004 | 472172 | 5547755 | 732546 | 6752473 |
| 2004–2005 (01–01–2005–ன் நிலவரப்படி) | 482870 | 5940335 | 782642 | 7205847 |

வாகன வளர்ச்சி விகிதம் ஓராண்டிற்கு ஏறத்தாழ 10 விழுக்காடு என்ற நிலை உள்ளது. சென்னை நகரில் மட்டும் நாளொன்றுக்கு 600 வாகனங்கள் பதிவு செய்யப்படுகின்றன. அதேபோன்று தமிழ்நாடு முழுமைக்கும் ஏறத்தாழ 5,000 வாகனங்கள் பதிவு செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டில் ஆண்டொன்றிற்கு ஏறத்தாழ 12,00,000 வாகனங்கள் பதிவு செய்யப்படுகின்றன.

**5. போக்குவரத்துத் துறையினைக் கணினிமயமாக்குதல்**

இடர்ப்பாடற்ற, விரைவான மற்றும் திறமையான சேவையினை வாகன உரிமையாளர்களுக்கும், பொது மக்களுக்கும் வழங்கும் நோக்கத்துடன் போக்குவரத்துத் துறையினைக் கணினிமயமாக்கும் பணியினை அரசு மேற்கொண்டுள்ளது. இது ஒரு பெரிய மின் ஆளுகை (e-governance)

முயற்சியாகும். இதற்கான மொத்த ஒதுக்கீடு சுமார் ரூ.20 கோடியாகும். இவற்றில் மென்பொருள் உருவாக்குதல், வன்பொருட்களை வாங்குதல், அலுவலகங்களை ஏற்ற முறையில் தயார் செய்தல், பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல் போன்றவை அடங்கும். இதற்கான திட்டம் இரு பகுதிகளாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. முதல் பகுதியின்கீழ் 17 அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. தற்போது இவ்வலுவலகங்களில், ஓட்டுநர் உரிமங்கள் வழங்குதல், பதிவுச் சான்றிதழ்கள் வழங்குதல், அனுமதிச் சீட்டு வழங்குதல், வரி வசூலித்தல் போன்ற பணிகள் கணினிகள்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்னும் சில மாதங்களுக்குள் எஞ்சிய அலுவலகங்களிலும் இப்பணிகள் நிறைவேற்றப்படும். இவ்வசதியின்மூலம் வாகன உரிமையாளர்களும், பொது மக்களும் காத்திருக்கும் நேரம் பெருமளவில் குறைந்துள்ளது. கணினிமயமாக்கும் திட்டம் நிறைவு பெற்ற பின்னர், சிறப்பு அட்டை (Smart Card) மூலம் ஓட்டுநர் உரிமங்கள் மற்றும் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கும் பணி அறிமுகப்படுத்தப்படும். பொது மக்கள் அதிகபட்சத் திருப்தியினை எய்தும்வண்ணம் தொழில்நுட்பம் சார்ந்த சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்த அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

## 6. ஓட்டும் திறனைப் பரிசோதித்தல்

தகுந்த சோதனைகளின்மூலம் விண்ணப்பதாரர்களின் வாகன ஓட்டும் திறனை ஆய்வு செய்து, திறமை வாய்ந்த ஓட்டுநர்களை உருவாக்குதல் இத்துறையின் முக்கியப் பணிகளில் ஒன்றாகும். பழகுநர் உரிமம் மற்றும் முறையான ஓட்டுநர் உரிமம் வழங்குவதற்குக் கடுமையான சோதனைகளும், நடைமுறைகளும் பின்பற்றப்படுகின்றன. மாநிலமெங்கும் நிறுவப்பட்டுள்ள பயிற்சிப் பள்ளிகள், விண்ணப்பதாரர்களுக்கு ஓட்டுநர் பயிற்சி அளிக்கின்றன. இப்பயிற்சிப் பள்ளிகள், பயிற்சிக்குத் தேவையான அனைத்துக் கருவிகளுடனும், தகுதி வாய்ந்த பயிற்சியாளர்களுடனும் இயங்குவதைப் போக்குவரத்துத் துறை உறுதி செய்கிறது. தேவையான கருவிகளும், தகுதி வாய்ந்த பயிற்சியாளர்களும் கொண்டிராத ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளின் அங்கீகாரம் ரத்துச் செய்யப்படுகிறது. இது தவிர, தருமபுரி, தஞ்சாவூர், இராமநாதபுரம், திருநெல்வேலி, காஞ்சிபுரம், விருதுநகர், நாமக்கல், திருவள்ளூர், திண்டுக்கல், தூத்துக்குடி, திருவண்ணாமலை, பெரம்பலூர், கரூர் மற்றும் வேலூர் ஆகிய நகரங்களில் தேர்ச்சித் தளங்களை அரசு நிறுவியுள்ளது. திருச்செங்கோடு, திருச்சிராப்பள்ளி, திருப்பூர், சிவகங்கை, மதுரை வடக்கு மற்றும் சேலம் ஆகிய இடங்களில் தேர்ச்சித் தளம் அமைக்கும் பணி விரைவாக



நடைபெற்று வருகிறது. சாலைப் போக்குவரத்து நிறுவனம், அனைத்து வசதிகளுடன்கூடிய நவீன தேர்ச்சித் தளம் ஒன்றினை சென்னை மாநகரில் உள்ள தரமணியில் நிறுவி வருகிறது. சென்னை மாநகரிலுள்ள 8 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களும் இத்தளத்தினைப் பயன்படுத்திக் கொள்ளும். தேனியில் மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் (Master Plan Complex), வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம் மற்றும் தேர்ச்சித் தளம் அமைப்பதற்காக 5 ஏக்கர் நிலத்தினை மாவட்ட ஆட்சியர் ஒதுக்கியுள்ளார். ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தபட்சம் ஒரு தேர்ச்சித் தளமாவது அமைக்கப்பட வேண்டுமென அரசு முயற்சிகளை எடுத்து வருகிறது. இம்முயற்சியின்மூலம் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே ஓட்டுநர் உரிமங்களை வழங்குவது இத்துறையின் நோக்கமாகும்.

## 7. சாலைப் பாதுகாப்பு

பல்வேறு துறைகளால் மேற்கொள்ளப்படும் சாலைப் பாதுகாப்புச் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் பணி போக்குவரத்துத் துறையைச் சார்ந்துள்ளது. இத்துறைக்கு இது ஒரு புதிய பணியாக இருந்தாலும், இப் பொறுப்பினை இத்துறை திறம்பட நிறைவேற்றி வருகிறது. இத்துறையின் அண்மைக் கால ஆய்வின்படி, அதிவிரைவாகவும், மற்றும் குடிபோதையிலும் வாகனங்களை ஓட்டுவதே விபத்துக்களுக்கான முக்கிய காரணங்கள் எனத் தெரிய வந்துள்ளன. இத்தவறுகளைக் கட்டுப்படுத்த ஒரு வலுவான விழிப்புணர்வுப் பிரச்சாரம் (campaign) ஏற்கெனவே தொடங்கப்பட்டு விட்டது. பொது மக்களுக்கு சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு மிகவும் அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, சென்னை மாநகரில் அதிக வேகமாகவும் மற்றும் குடிபோதையிலும் வாகனங்களை ஓட்டுவதனால் ஏற்படும் விளைவுகளைக் குறிக்கும் விளம்பரப் பலகைகள் சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பொருத்தப்பட்டுள்ளன. நெடுஞ்சாலைகளில் அதிவேகமாக ஓட்டிச் செல்லப்படும் வாகனங்கள் நெடுஞ்சாலைக் கண்காணிப்புப் பணியாளர்களால் பிடிக்கப்பட்டு, அவற்றின்மீது குற்றவியல் நடைமுறைகள் தொடரப்படுகின்றன.

மேலும் சாலை ஓரங்களும், சாலைச் சந்திப்புகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன. வாகனங்கள் தடையின்றிச் செல்வதற்காக சாலை ஓரங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கான சிறப்புப் பணிகள் அவ்வப்போது மேற்கொள்ளப்படுகின்றன. சாலை ஓரங்களில்

[2005 மார்ச் 29

வாகனங்களை நிறுத்துவது வாகனப் போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதால், வணிக வளாகங்களில் வாகனங்களை நிறுத்துவதற்கெனத் தனியாக இடம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டு வருகிறது. வாகனங்கள் நேருக்கு நேர் மோதிக் கொள்வதைத் தவிர்க்கும் பொருட்டு, தேவைப்படும் இடங்களிலெல்லாம் சாலையின் நடுவில் தடுப்புச் சுவர்கள் கட்டப்படுகின்றன. கண்களைக் கூசச் செய்யும் விளக்குகள் பொருத்தப்பட்ட வாகனங்கள்மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சாலைப் பாதுகாப்பு ஆணையர் தவிர, உள் துறைச் செயலரின் தலைமையிலான ஒரு குழு சாலைப் பாதுகாப்புத் திட்டங்களை ஆய்வு செய்து புதிய உத்திகளை நடைமுறைப்படுத்தப் பரிந்துரை செய்கிறது. சாலைப் பாதுகாப்பு செயல் திட்டங்களில் தன்னார்வக் குழுக்கள், அரசு சாரா சங்கங்கள், மோட்டார் வாகனம் தொடர்புடைய சங்கங்கள் மற்றும் நுகர்வோர் அமைப்புகளும் பங்கேற்கின்றன.

### 8. சாலைப் பாதுகாப்புக் குழு

1988 ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டம், பிரிவு 215-ன்கீழ் மாநில அளவிலான சாலைப் பாதுகாப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அண்மையில் இக்குழு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையின்கீழ் செயல்படும்வண்ணம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. சாலைப் பாதுகாப்பு தொடர்பான மாவட்ட அளவிலான பல்வேறு பிரச்சினைகளுக்கு இக்குழுக்கள் ஆலோசனை வழங்குவதோடு, சாலைப் பாதுகாப்புத் திட்டங்களையும் நிறைவேற்றி வருகின்றன.

### 9. சாலைப் பாதுகாப்பு நிதி

சாலைப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு நிதி ஒப்பளிக்க ஏதுவாக சாலைப் பாதுகாப்பு நிதி ஒன்றினை அரசு ஏற்படுத்தியுள்ளது. போக்குவரத்து மற்றும் காவல் துறையினரால் வசூலிக்கப்படும் இணக்கக் கட்டணம் (Compounding Fees) மற்றும் அபராதத் தொகை (Spot Fine) ஆகியவற்றிலிருந்து இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. உள் துறைச் செயலாளரின் தலைமையிலான பல்வேறு துறை சார்ந்த உயர் அலுவலர் குழுவால் இந்நிதி நிருவகிக்கப்படுகிறது.



2005 மார்ச் 29]

சாலைப் பாதுகாப்பு பணிகளுக்காக இதுவரை ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை பற்றிய விவரம் பின்வருமாறு:—

| ஆண்டு | ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 2000-2001 | 2.00 |
| 2001-2002 | 3.75 |
| 2002-2003 | 5.00 |
| 2003-2004 | 5.00 |
| 2004-2005 | 5.00 |

இந்நிதியிலிருந்து மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படும் சாலைப் பாதுகாப்புத் திட்டங்களுக்கும், குறிப்பாக மாவட்ட அளவில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2005-2006 ஆம் ஆண்டிற்கு ரூ. 6.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 10. சாலை விபத்தில் பாதிக்கப்படுவோருக்கான இழப்பீடு

விபத்துக்களால் பாதிக்கப்படுவோரின் வயது, வருவாய் ஈட்டும் திறன் மற்றும் விபத்துக்கான காரணம் ஆகியவற்றின் அடிப்படையில் சாலை விபத்துக்களில் பாதிக்கப்படுவோருக்கு நிவாரணம் வழங்க 1988 ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டம் வகை செய்கிறது. விபத்துக்கு யார் காரணமாயிருப்பினும், குறைந்தபட்ச நிவாரணம் வழங்கவும் இச்சட்டம் வகை செய்கிறது. ஈட்டுத் தொகையினை மாநிலம் முழுவதிலும் அமைந்துள்ள மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீட்டுத் தீர்ப்பாயங்கள் முடிவு செய்கின்றன. முதலமைச்சர் விபத்து நிவாரண நிதியிலிருந்தும் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. கீழ்க்காணும் அளவுகோல்களின்படி வருவாய்க் கோட்ட அலுவலர்களால் நிவாரணம் வழங்கப்படுகிறது.

ரூபாய்

| | |
|---|---|
| 1. இறப்பு | 10,000 |
| 2. நிரந்தரச் செயலிழப்பு | 6,000 |
| 3. ஒரு கண் அல்லது ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு | 4,000 |
| 4. இதர இனங்கள் | 500 |

[2005 மார்ச் 29

இது தவிர, பரிதாபத்திற்குரிய சாலை விபத்து நிகழ்வுகளில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கருணைத் தொகை வழங்கப்படுகிறது. இதன்படி விபத்துக்களில் இறந்தோரின் குடும்பத்தினருக்கு ரூ.50,000/-, பலத்த காயமுற்றோருக்கு ரூ.15,000/-, லேசான காயமுற்றோருக்கு ரூ.6,000/- வழங்கப்படுகிறது.

## 11. விபத்துக்களில் பாதிக்கப்படுவோருக்கு அவசர கால விபத்து நிவாரண மையங்கள்

மாநிலத்தில் வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் சாலை விபத்துக்கள் கூடியுள்ள நிலையில், ஒரு சாலைப் பாதுகாப்பு செயலாக்கத் திட்டம் அண்மையில் உருவாக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் சாலை விபத்துக்களில் பாதிக்கப்படுவோருக்கு உரிய நேரத்தில் முதலுதவி வழங்குவதற்காகவும், பாதிக்கப்பட்டோர் அல்லது அவர்களின் உறவினர்கள் விரும்பும் மருத்துவமனைகளில் அவர்களுக்குத் தொடர்ந்து மருத்துவ சிகிச்சை அளிப்பதற்காகவும், அனைத்து தேசிய நெடுஞ்சாலைகளிலும், மாநில நெடுஞ்சாலைகளிலும் 50 கி.மீ. இடைவெளிக்கு ஒன்றாக 100 விபத்து நிவாரண மையங்களை அமைக்க அரசு அனுமதி வழங்கி உள்ளது. இத்திட்டம், தனியார் மருத்துவமனைகள் மற்றும் ஆதரவாளர்கள் உதவியோடு மாநில அரசால் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும் ஓர் ஒப்பற்ற திட்டமாகும். நிர்ணயிக்கப்பட்ட 100 மையங்களில், 77 மையங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. இவ்வாறு தற்போது செயல்பட்டு வரும் மையங்களில், 41 மையங்கள் தனியார் மருத்துவ மனைகள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் ஆதரவோடும் எஞ்சிய 36 மையங்கள் அரசின் பகுதி ஆதரவோடும் செயல்பட்டு வருகின்றன. அரசின் ஆதரவோடு நடைபெறும் மையங்கள், ரூ.40,000/- நிதி உதவியோ அல்லது அவை செலவழிக்கும் தொகையையோ (ரூ.40,000/-க்கு உட்பட்டு) பெறுகின்றன. 2004 ஆம் ஆண்டு இம்மையங்கள்மூலம் உரிய நேரத்தில் மருத்துவ உதவி அளிக்கப்பட்டமையால் 19,595 நபர்கள் உயிர் இழப்பிலிருந்து காப்பாற்றப்பட்டனர். மேலும் பலத்த காயமுற்ற 6,400 நபர்களுக்கும், லேசான காயமுற்ற 13,195 நபர்களுக்கும் சிகிச்சையளிக்கப்பட்டது.



2005 மார்ச் 29]

## 12. மாசுக் கட்டுப்பாடு

காற்று மாசுபடுவதற்கு மோட்டார் வாகனங்கள் வெளியேற்றும் புகை ஒரு முக்கியக் காரணமாகும். வாகனங்களிலிருந்து வெளியேறும் புகை எந்த அளவுக்குள் இருத்தல் வேண்டும் என 1988 ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளன. அண்மையில் இவ்வரையறைகள் மாசினைத் தீவிரமாகக் கட்டுப்படுத்தும் வகையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. வாகனங்களின் எண்ணிக்கை மிக விரைவாக அதிகரிப்பதன் காரணமாக, காற்றில் ஏற்படும் மாசின் அளவு பெரிதும் பெருகியுள்ளது. சென்னை உட்பட 9 நகரங்களில் காற்றில் மாசின் அளவு அதிகமாக இருப்பதாக உச்ச நீதிமன்றம் கண்டறிந்து, இதனைக் கட்டுப்படுத்த மாநில அரசுகள் (தமிழ்நாடு உட்பட) ஒரு செயல் திட்டத்தினைப் பரிந்துரைக்க நீதிப் பேராணை எண் 13029/1985-ல் கோரியுள்ளது. இதற்கேற்ப, இவ்வரசு, வாகனப் புகையினால் ஏற்படும் மாசு அளவினைக் குறைப்பதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளைத் துவக்கியுள்ளது. தற்போதுள்ள மாசுக் கட்டுப்பாடு சோதனை மையங்கள் திறமையாகச் செயல்பட, கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன. சென்னை மாநகரிலுள்ள ஆட்டோ ரிக்ஷாக்களை 'திரவ பெட்ரோலிய எரிவாயு' (LPG mode) மூலம் மாற்றி இயக்குவது குறித்து அரசு ஆய்வு செய்து வருகிறது. தற்போது திரவ பெட்ரோலிய வாகன எரிபொருளை வினியோகிப்பதற்காக சென்னை மாநகரில் 13 விற்பனை நிலையங்கள் உள்ளன. சென்னை மாநகரில் உள்ள அரசு வாகனங்களில் திரவ பெட்ரோலிய எரிவாயு சாதனத்தைப் பொருத்துவது குறித்தும் அரசு ஆய்வு செய்து வருகிறது. அனைத்துக்கும் மேலாக, திரவ பெட்ரோலிய வாகன எரிபொருளைப் பயன்படுத்துவதன்மூலம் விளையும் நற்பயன்களை வாகன ஓட்டுநர்களுக்கு விளக்குவதற்காக விழிப்புணர்வுப் பிரச்சாரமும் நடைபெற்று வருகிறது. இம்முயற்சியின் விளைவாக சென்னை மாநகரத்தில் காற்றின் தூய்மை குறிப்பிடத்தக்க அளவிற்கு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 13. வருவாய்

அதிக வருவாய் ஈட்டும் மாநில அரசின் துறைகளில் போக்குவரத்துத் துறையும் ஒன்றாகும். கடந்த ஆறு ஆண்டுகளில் வரிகள் மற்றும்

[2005 மார்ச் 29

கட்டணங்கள் வாயிலாக இத்துறை ஈட்டிய மொத்த வருவாய் குறித்த விவரம் கீழேயுள்ள வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது:

1999–2000 ஆம் ஆண்டு முதல் வருவாய் வளர்ச்சி




## 14. வரி விதிப்பு

1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்புச் சட்டம் மற்றும் 1974 ஆம் ஆண்டு மோட்டார் வாகன வரி விதிப்பு விதிகளின்கீழ் வாகன வரி வசூலிக்கப்படுகிறது. ஒவ்வொரு வகையான வாகனத்திற்கும் எந்த அடிப்படையில் வரி விதிக்கப்படுகிறது என்பது குறித்து கீழ்க்காணும் அட்டவணை விளக்குகிறது. இதில் அரசு கையாளும் கொள்கை, எளிய மற்றும் அறிவியல் சார்பானது:—



2005 மார்ச் 29]

| வாகன வகை | வரி நிர்ணயிக்கும் முறை |
|---|---|
| **பேருந்துகள்**<br>மெட்ரோ சர்வீஸ்<br>நகரப் பேருந்துகள்<br>புறநகர்ப் பேருந்துகள்<br>விரைவுப் பேருந்துகள்<br>மாற்றுப் பேருந்துகள்<br>மினி பேருந்து<br>**ஒப்பந்த ஊர்தி**<br>ஆம்னி ஊர்தி<br>மேக்சி கேப்<br>தனியார் பணிப் பேருந்து<br>கல்வி நிலைய வாகனம் | இருக்கைகளின் அடிப்படையில் |
| **சரக்கு வாகனம்**<br>தேசிய அனுமதி சரக்கு வாகனம்<br>உழுவை, இழுவை வாகனம் | பதிவு எடையின் அடிப்படையில் |
| **உழுவை வாகனம்** | வெற்று வாகன எடை அடிப்படையில் |
| ரிக் மற்றும் கட்டிடம் கட்டும் உபகரண வாகனங்கள் | ஆண்டு வரி — நிர்ணயிக்கப்பட்ட தொகை அடிப்படையில் |
| நான்கு சக்கர (சொந்த உபயோகத்திற்கான) போக்குவரத்தல்லாத வாகனம் | ஆயுட்கால வரி — வாகன விலையின் அடிப்படையில் |
| இரு சக்கர வாகனம் | விசைத் திறன் அடிப்படையில் |
| சுற்றுலா சீருந்து<br>சீருந்து<br>ஆட்டோ ரிக்ஷா | அனுமதிக் காலத்துடன் தொடர்புடைய ஐந்து ஆண்டுகளுக்கான வரி |
| பசுமை வரி — போக்குவரத்தல்லாத வாகனங்கள் | முதல் பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து 15 ஆண்டுகளுக்கு மேலான வாகனங்கள் |
| பசுமை வரி — போக்குவரத்து வாகனங்கள் | முதலில் பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து 7 ஆண்டுகளுக்கு மேலான வாகனங்கள் |

[2005 மார்ச் 29

**15. பிற முயற்சிகள்**

பொது மக்களின் தேவைகளை நிறைவு செய்ய போக்குவரத்துத் துறை சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. சென்னையிலுள்ள அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், பகுதி அலுவலகங்கள், மீனம்பாக்கத்திலுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் செங்குன்றத்திலுள்ள வட்டாரப் போக்குவரத்துப் பகுதி அலுவலகம் ஆகியவை தனியார் வாகனங்கள் தொடர்பான பணிகளைக் கவனிப்பதற்காக 1-1-2005 முதல் சனிக்கிழமைகளிலும் செயல்பட்டு வருகின்றன. மாணவர்கள், அலுவலகம் செல்வோர் மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர், ஓட்டுநர் உரிமம் பெறுதல், நகல் ஓட்டுநர் உரிமம் பெறுதல், பதிவுச் சான்றிதழ்களில் மாறுதல் செய்தல் ஆகிய பணிகளைப் பெற இம்முறை உதவுகிறது. இம்முறையினை அனைவரும் வரவேற்றுள்ளனர். இத்திட்டத்தினைப் பிற போக்குவரத்து அலுவலகங்களுக்கும் விரிவுபடுத்துவது குறித்து அரசு ஆய்வு செய்து வருகிறது.

25–2–2005 அன்று தமிழ்நாடு அரசு ஆந்திர மாநில அரசுடன் மாநிலங்களுக்கிடையேயான போக்குவரத்து குறித்து ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இந்த ஒப்பந்தம்மீது ஆணை வெளியிட்டவுடன் தமிழ்நாட்டைச் சார்ந்த 115 பேருந்துகள் ஆந்திர மாநிலத்தில் ஓட்டப்படும். இதுபோன்று ஆந்திர மாநிலத்தைச் சார்ந்த 172 பேருந்துகள் தமிழ்நாட்டில் ஓட்டப்படும். இதன்மூலம் இரு மாநிலங்களும் பயனடையும்.

மேலும், பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், ஒரு சில அலுவலகங்களை நவீனப்படுத்துவதற்காகவும் கீழ்க்காணும் திட்டங்களை பகுதி-2 திட்டத்தின்கீழ் வரும் நிதியாண்டில் நிறைவேற்ற அரசு கருதியுள்ளது:



2005 மார்ச் 29]

தொகை (ரூபாய் இலட்சத்தில்)

| | |
|---|---|
| 1. நெருங்கிச் சுழலும் நிழற்படக் கருவிகளை சென்னையில் உள்ள நான்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு வாங்குதல் | 7.00 |
| 2. திருப்பூர் மற்றும் நாமக்கல் ஆகிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுதல் | 94.25 |
| 3. சென்னை (தெற்கு), கோவை, விருதுநகர் மற்றும் திருவள்ளூர் ஆகிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல் | 26.25 |
| 4. சென்னை (வடமேற்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு ஓட்டுநர் சோதனைத் தளம் ஏற்படுத்துதல் | 24.15 |
| 5. நிகரி இயந்திரங்கள்/ஒளியச்சு இயந்திரங்கள் மற்றும் பணத்திற்கு ஒப்புகை வழங்கும் இயந்திரங்கள் வாங்குதல் | 38.18 |

**16. முடிவுரை**

சாலைப் போக்குவரத்தினை முறைப்படுத்துதல் மற்றும் போதுமான அளவு பேருந்துகள் மற்றும் அதனைச் சார்ந்துள்ள சேவைகளை இயக்குதல் போன்றவற்றுடன் போக்குவரத்துத் துறையின் பொறுப்பு முடிந்து விடுவதில்லை. பாதுகாப்பு மற்றும் இடர்ப்பாடற்ற பயணத்தை உறுதி செய்யவும் இத்துறை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. போக்குவரத்து அலுவலகங்களை மக்கள் அணுகும்போது அவர்களுக்கு விரைவான மற்றும் திறமையான சேவை புரியவும் இத்துறை விரும்புகிறது. இச்சீரிய நோக்கங்களைக் கருத்திற்கொண்டு கணினிமயமாக்குதல், நவீனமயமாக்குதல் மற்றும் நடைமுறைகளை எளிதாக்குதல் போன்ற சீர்திருத்தப் பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்முயற்சிகள் வருங்காலத்திலும் அதிதீவிரமாகத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

[2005 மார்ச் 29

## இணைப்பு III

(62 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 46–போக்குவரத்துத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

### 1. முன்னுரை

"போக்குவரத்து", மக்களை இணைப்பதற்கு மட்டுமல்லாமல், அவர்களது முன்னேற்றத்திற்கும் ஒரு அத்தியாவசியமான தேவையாக உள்ளது. காலந்தொட்டு, மக்களின் முன்னேற்றம் என்பது, வசதியான, பாதுகாப்பான, விரைவான போக்குவரத்து வசதிகள்மூலமாகவே உறுதி செய்யப்பட்டுள்ளது. ஏனைய போக்குவரத்து சாதனங்களைவிட, மக்களை நெருங்கிப் பயனளிப்பதில், சாலைப் போக்குவரத்து ஈடு இணையற்ற நிலையில் உள்ளதால், உலக அளவில் முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது.

போக்குவரத்துத் துறையின் கட்டுப்பாட்டில் 7 போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு, சாலைப் போக்குவரத்து நிறுவனம் மற்றும் மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை உள்ளன.

இதைத் தவிர, மத்திய அரசுத் துறைகளான இரயில்வே, அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பு, விமானப் போக்குவரத்து ஆகிய துறைகள் தமிழ்நாட்டில் செயல்படுத்தும் திட்டங்கள் தொடர்பாக மாநில அரசின் ஒருங்கிணைக்கும் முகமையாகப் போக்குவரத்துத் துறை செயல்படுகிறது

### 2. அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்

*2.1.* தமிழ்நாட்டில் 1971 ஆம் ஆண்டு வரை அரசுப் போக்குவரத்து இயக்கம் தமிழக அரசின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தது. பின்னர், 1956 ஆம் ஆண்டின் இந்திய நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்பட்ட போக்குவரத்துக் கழகங்களிடம் 1971 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஒப்படைக்கப்பட்டது.

1976–ல் பட்டாபிராமன் குழுவும், 1990–ல் தில்லைநாயகம் குழுவும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களைச் சீரமைக்கத் தந்த பரிந்துரைகள் முடிந்த வரை செயல்படுத்தப்பட்டன.



2005 மார்ச் 29]

**2.2.** 31–1–2005 ஆம் நாள் நிலவரப்படி அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பணிகள் மற்றும் செயல் திறன்கள் ஆகியவை கீழே தரப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| சென்னை மாநகரப் பேருந்துகள் | 2554 |
| நகரப் பேருந்துகள் (மாவட்டங்களில்) | 5596 |
| புறநகர்ப் பேருந்துகள் | 5851 |
| விரைவுப் பேருந்துகள் | |
| மாநிலத்திற்குள் | 522 |
| வெளி மாநிலங்களுக்கு | 273 |
| மலைப் பகுதிப் பேருந்துகள் | 524 |
| மொத்தப் பேருந்துகள் | 15320 |
| உபரிப் பேருந்துகள் | 1453 |
| மொத்தப் பேருந்துகளின் எண்ணிக்கை | 16773 |
| 2. ஒரு நாளைக்கு இயக்கப்படும் மொத்த தூரம் (இலட்சம் கி.மீ) | 64.84 |
| 3. நாளொன்றுக்கு ஏற்றிச் செல்லப்படும் பயணிகளின் எண்ணிக்கை (இலட்சம்) | 166.19 |
| 4. பேருந்துகளின் உபயோகம் | 92.36% |
| 5. கிலோ மீட்டர் செயல்பாட்டுத் திறன் (சிறப்புப் பேருந்துகள் நீங்கலாக) | 97.90% |
| 6. கிலோ மீட்டர் செயல்பாட்டுத் திறன் (சிறப்புப் பேருந்துகளையும் சேர்த்து) | 102.49% |
| 7. பயணிகளின் பயன்பாடு | |
| அ) மாநகரம் மற்றும் நகரம் | 69.68% |
| ஆ) புறநகர் | 87.05% |
| இ) விரைவுப் பேருந்து | 78.60% |
| ஈ) மலைப் பகுதி | 99.04% |
| மொத்தத்தில் | 78.94% |

[2005 மார்ச் 29

| | |
|---|---|
| 8. பழுதுபடுதல் (10,000 கிலோ மீட்டருக்கு) | 0.15 |
| 9. விபத்துக்கள் (1,00,000 கிலோமீட்டருக்கு) | 0.31 |
| மொத்த விபத்துக்கள் | 6098 |
| உயிரிழப்பு விபத்துக்கள் | 1024 |
| இறந்தவர்களின் எண்ணிக்கை | 1151 |
| 10. எரிபொருள் செயல் திறன் (கி.மீ/லிட்டருக்கு) | |
| அ) மாநகரம் மற்றும் நகரம் | 4.42 |
| ஆ) புறநகர் | 4.81 |
| இ) விரைவு | 4.58 |
| ஈ) மலைப் பகுதி | 3.62 |
| **சராசரியாக** | 4.60 |
| 11. 10,000 கிலோ மீட்டருக்கு எஞ்சின் ஆயில் | 7.85 லிட்டர் |
| 12 கழிவு செய்யப்பட்ட உருளையின் ஓட்டம் | 1.57 இலட்சம் கி.மீ. |
| 13. புதுப்பிக்கப்பட்ட உருளைப் பட்டையின் விகிதம் | 3.96 |
| 14. ஒரு பேருந்துக்குப் பணியாளர்கள் (தொழிற்கூடங்கள் உட்பட) | 6.88 |

## 2.3. போக்குவரத்துக் கழகங்களை ஒருங்கிணைத்தல்

போக்குவரத்துக் கழகங்களின் நிர்வாகச் செலவினைக் குறைக்கவும் மற்றும் போக்குவரத்துக் கழகங்களிடையே பேருந்து இயக்கத்தில் தேவையற்ற போட்டியினைத் தவிர்க்கவும் 21 போக்குவரத்துக் கழகங்களை 7 போக்குவரத்துக் கழகங்களாக அரசு ஒருங்கிணைத்தது. மத்திய அரசும் போக்குவரத்துக் கழகங்களின் ஒருங்கிணைப்பினை அறிவிக்கை செய்தது. தற்போது தமிழ்நாட்டில் 7 போக்குவரத்துக் கழகங்கள் செயல்பட்டு வருகின்றன.



2005 மார்ச் 29]

## 3. அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் நிதிநிலை

3.1. நிர்வாக மற்றும் இயக்கச் செலவுகள் அதிகரித்தபோதிலும், நாட்டிலேயே கிலோ மீட்டருக்கான மிகக் குறைந்த பேருந்துக் கட்டணம் வசூலிக்கப்பட்டபோதிலும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் ஒட்டுமொத்தச் செலவு 2003–2004 ஆம் நிதியாண்டில் திறமையான நிர்வாக நடைமுறைகளால் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. 18 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு கடந்த 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.2.38 கோடி அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மொத்தத்தில் லாபம் ஈட்டியுள்ளன. ஆயினும், மார்ச் 2004 ஆம் ஆண்டு வரையில் ஏற்பட்டுள்ள மொத்த இழப்பு ரூ.2,131.88 கோடியாகும்.

2003–2004 ஆம் ஆண்டில் அடைந்த முன்னேற்றப் போக்கு தொடர்ந்து நிலைநிறுத்தப்பட்டது. 2004–2005 ஆம் ஆண்டில் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மொத்தத்தில் கூடுதல் லாபம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாண்டிற்கான எதிர்பார்க்கப்படும் லாபம் சுமார் ரூ.14 கோடியாக இருக்கும். போக்குவரத்துக் கழகங்களின் சீரிய நிர்வாகமே இதற்கு முதன்மையான காரணமாகும்.

## 3.2. அதிவேக டீசல் மற்றும் மசகெண்ணெய் பயன்பாடு

2003–2004 ஆம் ஆண்டில் ஒரு லிட்டர் அதிவேக டீசலுக்கு 4.45 கி.மீ. இயக்கப்பட்டது. எரிபொருள் சிக்கன நடவடிக்கை காரணமாக 2004–2005 ஆம் ஆண்டில் (ஜனவரி முடிய) 4.60 கி.மீ. ஆக அது உயர்ந்துள்ளது. டீசல் இயக்கத் திறன் மேம்பாடு காரணமாக 2004–2005-ல் சுமாராக ரூ.42.70 கோடி (ஜனவரி 2005 முடிய) சேமிக்கப்பட்டுள்ளது. என்ஜின் ஆயில் உபயோகம் 10,000 கி.மீ. இயக்கத்திற்கு 9.58 லிட்டரிலிருந்து 7.85 ஆக நடப்பாண்டில் (ஜனவரி முடிய) குறைந்துள்ளது. இதன் காரணமாக ஏற்பட்ட தோராயமான சேமிப்பு சுமார் ரூ.1.5 கோடியாகும். (ஜனவரி 2005 முடிய)

## 3.3. டீசல் விலை அதிகரிப்பு

உலக அளவில் பெட்ரோலிய எண்ணெய்ப் பொருட்களின் விலை மாறுபடுவதன் அடிப்படையில், டீசல் மற்றும் பெட்ரோலியப் பொருட்களின் விலையை மைய அரசு மாற்றி அமைக்கின்றது. ஆனால், அவ்விலை உயர்விற்கேற்ப, தமிழகத்தில் பேருந்துக் கட்டணங்கள் உயர்த்தப்படுவதில்லை. 2003–04 ஆம் ஆண்டில் ரூ.1,171.07 கோடியாக இருந்த டீசல் பயன்படுத்துவதற்கான செலவினம், 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.1,356.58 கோடியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது, கூடுதல் செலவினம் ரூ.185.51 கோடி ஆகும்.

[2005 மார்ச் 29

### 3.4. இந்தியன் ஆயில் நிறுவனம், பாரத பெட்ரோலிய நிறுவனம் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலிய நிறுவனம் ஆகியவற்றிடமிருந்து அதிவேக டீசல் எண்ணெய் கொள்முதல்

இந்திய ஆயில் நிறுவனம் மற்றும் இரண்டு இதர நிறுவனங்களுடன் தள்ளுபடி அடிப்படையில் அதிவேக டீசல் வழங்குவது தொடர்பாக 7 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களும் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன. ஒப்பந்தத்தில் உள்ள விதிமுறைகள் மற்றும் வரையறைகளின்படி எண்ணெய் நிறுவனங்கள் 1 கிலோ லிட்டருக்கு ரூ.700.00 என்ற தள்ளுபடி அடிப்படையில் 1-10-2003 முதல் அதிவேக டீசலை அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்க ஒப்புக்கொண்டுள்ளன. இந்த உடன்பாடு 31-3-2005 வரை செயல்பாட்டில் உள்ளது. மேற்கண்ட தள்ளுபடிகளினால் எரிபொருள் செலவில் ஏப்ரல் 2004 முதல் ஜனவரி 2005 வரை சுமார் ரூ.30.00 கோடி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு சேமிப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் 1-4-2005 முதல் ஆறு மாதங்களுக்குப் பரிசோதனை அடிப்படையில் 20 பணிமனைகளுக்கு ஒரு கிலோலிட்டருக்கு ரூ. 1,300/- வீதம் தள்ளுபடி விலையில் அதிவேக டீசல் எண்ணெய் வழங்குவதற்கு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ரிலையன்ஸ் பெட்ரோலிய மார்க்கெட்டிங் லிமிடெட் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன. இதனால், ரூ.1.23 கோடி அளவில் கூடுதல் சேமிப்பு ஏற்படும். மேற்குறிப்பிட்ட தள்ளுபடி விலையில் பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்களிடமிருந்தும் 1-4-2005 முதல் ஆறு மாத காலத்திற்கு அதிவேக எண்ணெய் பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 3.5. நிர்வாகச் செலவு அதிகரிப்பு

பணியாளர் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க உயர்வு இல்லையாயினும், நிர்வாகச் செலவினம் ஒவ்வொரு வருடமும் கடுமையாக உயர்ந்துள்ளது. 1991-92 ஆம் ஆண்டில் ரூ.388 கோடியாக இருந்த நிர்வாகச் செலவினம், 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.1,503.47 கோடியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர் மற்றும் பணியாளர்களுடனான நல்லுறவை மேம்படுத்த, கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன:



2005 மார்ச் 29]

(அ) வழக்கு காரணமாக ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை தொடர இயலவில்லை என்பதால், ஊதிய ஒப்பந்தத்திற்குட்பட்ட அனைத்துப் பணியாளர்களுக்கும் இடைக்கால நிவாரணமாக 1-9-2003 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் வழங்கப்படுகிறது.

(ஆ) 31-12-2000-க்கு முன் போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட காலத்தை குற்றவியல் நடவடிக்கைகள் நிலுவையில் உள்ள பணியாளர்களைத் தவிர மற்றவர்களுக்குத் தகுதியுள்ள விடுப்பாகக் கருத உத்தரவிடப்பட்டுள்ளது.

(இ) 2003-2004 ஆம் ஆண்டிற்கு உச்சவரம்பின்றி 8.33 சதவிகித போனஸ் மற்றும் 1.67 சதவிகித கருணைத் தொகையும் சேர்த்து அனைத்துப் பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

(ஈ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு சிறப்பு நிகழ்வாக ஓர் ஆண்டில் தங்கள் கணக்கில் உள்ள ஈட்டிய விடுப்பில் 15 நாட்கள் விடுப்பில் செல்லாமல் சரண் செய்து அதற்கு ஈடாக ரொக்கத் தொகையை ஏற்கெனவே உள்ள சுழற்சி முறையில் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

### 3.6. செலவினத்தை உள்ளடக்கும் அளவு

இந்திய அரசு காலமுறையாக எரிபொருள் விலையினை உயர்த்தி வருகிறது. ஆனால் கடைசியாக 2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குப் பிறகு பேருந்துக் கட்டணம் உயர்த்தப்படாததால் நாட்டிலேயே மிகக் குறைவான கட்டணமாக தமிழ்நாட்டில் இருந்து வருகிறது. இருந்தபோதிலும் நிர்வாகம், டீசல் எண்ணெய் மற்றும் இதர உதிரி உட்பாகங்கள் ஆகியவற்றால் ஏற்படும் கூடுதல் செலவினங்கள், சிறந்த பராமரிப்பு முறைகள், முன்னேற்றமான இயக்கத் திறன் ஆகியவற்றால் எதிர்கொள்ளப்பட்டதன் விளைவாக, வருவாயை அதிகரிக்கவும், செலவினங்களைக் கடுமையாகக் குறைக்கவும் முடிந்துள்ளது.

### 3.7. நிலுவையில் உள்ள கடன் பொறுப்புக்கள்

முற்பட்ட காலங்களில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்பட்ட தொடர் நட்டங்களின் விளைவாக 31-1-2005 ஆம் நாளில் உள்ள கடன் பொறுப்புக்கள் பின்வருமாறு:-

[2005 மார்ச் 29

| விவரம் | ரூபாய் கோடியில் |
|---|---|
| உயர் வேக டீசல் எண்ணெய் மற்றும் மசகு எண்ணெய் | 98.06 |
| உதிரிப் பாகங்கள், உருளிகள், மற்றவை வழங்கியவர்களுக்குச் செலுத்த வேண்டியது | 25.73 |
| விபத்து இழப்பீடாக நீதிமன்றங்களில் செலுத்த வேண்டியது | 102.84 |
| சட்டரீதியாகச் செலுத்தப்பட வேண்டிய வருங்கால வைப்பு நிதி, பணிக்கொடை மற்றும் தொழிலாளர் களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட தொகை | 364.28 |
| இதர இனங்கள் | 4.71 |
| மொத்தம் | 595.62 |

மேற்குறிப்பிட்ட கடன் பொறுப்புக்களைக் குறைத்திட சிறப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 4. பழைய பேருந்துகளைக் கழிவு செய்தல் மற்றும் அவற்றிற்குப் பதிலாக புதிய பேருந்துகள் வாங்குதல்

31–1–2005 அன்று மேதகு ஆளுநர் உரையில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், நடப்பாண்டில் 1,325 பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளை வாங்குகின்றன என்றும், அடுத்த நிதியாண்டில் மேலும் 2,000 பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகள் வாங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. 4,848 பழுதடைந்த பேருந்துகள் ரூ.30.48 கோடி செலவில் சரி செய்யப்பட்டு சாலைப் போக்குவரத்திற்கும், பாதுகாப்பான பயணத்திற்கும் உகந்தவையாக மாற்றப்பட்டுள்ளன. இதன்மூலம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் சேவை முழுமையாக மேம்படுத்தப்பட்டுள்ளது. மத்திய அரசு டீசல் விலையைக் கடுமையாக உயர்த்தியதால்,.தாங்க முடியாத நிதிச் சுமை ஏற்பட்டுள்ளபோதிலும், பயணக் கட்டணங்களை உயர்த்தாமலேயே சேவைகளின் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

#### 4.1. பேருந்து அடிச்சட்டங்கள் வாங்குதல்

2004–2005 ஆம் ஆண்டில் (ஜனவரி முடிய) 975 பேருந்துகளுக்கான அடிச்சட்டங்கள் பெறப்பட்டுள்ளன. அதில் 798 அடிச்சட்டங்களில்



2005 மார்ச் 29]

பேருந்துகள் கட்டுமானப் பணிகள் முடிவுற்றுள்ளன. ஏனைய 177 அடிச்சட்டங்களில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 5. மற்ற மாநிலங்களில் உள்ள பேருந்துப் பயணக் கட்டண அமைப்புடன் ஒப்பீடு

கிலோமீட்டருக்கான பேருந்துக் கட்டணம் நாட்டிலேயே தமிழகத்தில்தான் மிகக் குறைவானதாகும். புறநகர் சேவைக்கான தமிழ் நாட்டின் தற்போதைய பேருந்துக் கட்டண விகிதம் அண்டைய மாநிலங்களின் பேருந்துக் கட்டண விகிதத்துடன் ஒப்பிடப்பட்டு அதன் விவரம் கீழே தரப்பட்டுள்ளது:

(ஒரு கி.மீ. கட்டணம் பைசாவில்)

| மாநிலம் | கட்டண விகிதம் அமுலுக்கு வந்த தேதி | புறநகர் (சாதாரணம்) | புறநகர் (விரைவு) | சொகுசு | அதி சொகுசு |
|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு | 6–12–2001 | 28 | – | 32 | 38 |
| ஆந்திரா | 4–2–2003 | 35 | 40 | 45 | 52 |
| கேரளா | 16–9–2004 | 42 | 46 | 54 | 63 |
| கர்நாடகம் | 15–10–2004 | 31.50 | 38.50 | 48 | 57 |

தமிழ்நாட்டில்தான் பேருந்துக் கட்டணங்கள் மிகவும் குறைவாக உள்ளன என்பது மேற்கண்ட அட்டவணையிலிருந்து தெளிவாகிறது. மற்றும் பயணிகளின் நலன் கருதி டிசம்பர் 2001-க்குப் பிறகு கட்டண விகிதம் உயர்த்தப்படவில்லை.

### 6. சாலைப் பாதுகாப்பு மற்றும் விபத்துக்களைத் தவிர்த்தல்

போக்குவரத்துக் கழகங்கள் வழங்க வேண்டியுள்ள விபத்து இழப்பீட்டுத் தொகை 1991–92 ஆம் ஆண்டில் ரூ.16.03 கோடியாக இருந்தது. 2004–2005 ஆம் ஆண்டில் (ஜனவரி 2005 வரை) ரூ.113 கோடியாக உயர்ந்துள்ளது. எனவே, அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்துக்களைக் குறைப்பதற்கு முக்கியத்துவம் தரப்பட்டு, தக்க மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பொது மக்களுக்குப் பாதுகாப்பான, சிக்கனமான, சிறப்பான போக்குவரத்து இயக்கத்தை

அளிப்பதற்கு அரசு முக்கியக் கவனம் செலுத்துகிறது. விபத்துக்களைத் தடுப்பதில் ஓட்டுநர்களின் பங்கு மிகவும் இன்றியமையாததாகும். முறையான புத்தொளிப் பயிற்சி, யோகா பயிற்சி, பாதுகாப்பு மருந்தகங்கள், ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளில் பாதுகாப்பு குறித்து அறிவுறுத்தும் வகுப்புகள், பாதுகாப்பாக ஓட்டுதலுக்கு பரிசுத் திட்டங்கள், தொடர்ந்து 10 ஆண்டு காலத்திற்கு விபத்தில்லாமல் பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கு ஒரு சிறப்பு ஊதிய உயர்வு முதலியன, விபத்தினைத் தவிர்த்து பாதுகாப்பாக ஓட்டுநர்கள் இயக்குவதை உறுதி செய்யும்பொருட்டு, அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் எடுத்த சில நடவடிக்கைகளாகும். பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற திறமை வாய்ந்த இளைஞர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்கு 12 வாரங்களுக்கு கனரக மோட்டார் வாகனங்களை இயக்குதல், பேருந்தில் ஏற்படும் பழுதுகளைச் சரிபார்த்தல் மற்றும் முதலுதவி அளித்தல் ஆகியவற்றில் தீவிர பயிற்சிகள் ஆகியவற்றை சாலைப் போக்குவரத்து நிறுவனம் அளிக்கின்றது. அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் ஏற்படும் வேலைவாய்ப்புகளில் இப்பயிற்சி பெற்ற ஓட்டுநர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் கனரக வாகன ஓட்டுநர்களாக நியமனம் பெறுவதற்குரிய குறைந்தபட்சக் கல்வித் தகுதியை 8 ஆம் வகுப்பிலிருந்து எஸ்.எஸ்.எல்.சி/பத்தாம் வகுப்புத் தேர்ச்சி என உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. சில போக்குவரத்துக் கழகங்களில் நெடுந்தூரப் பேருந்துகளில் இரவுப் பணியில் ஈடுபடும் ஓட்டுநர்களின் சிரமத்தினையும், பயணிகளின் பாதுகாப்பினையும் கருதி, தேவையான தடங்களில் இரண்டு ஓட்டுநர்களைப் பணியில் ஈடுபடுத்தும் முறை கடைப்பிடிக்கப்படுகிறது.

## 7. விபத்துக் குறைவு விவரம்

பாதுகாப்பான இயக்கத்திற்கு தொடர்ந்து எடுத்த பல்வேறு நடவடிக்கைகளால் விபத்துக்கள் விழுக்காடு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

| விவரம் | 2002–2003 | 2003–2004 | 2004–2005 (ஜனவரி முடிய) |
|---|---|---|---|
| மொத்த விபத்துக் குறியீடு (ஒரு இலட்சம் கி.மீ இயக்கத்திற்கு) | 0.31 | 0.32 | 0.31 |
| உயிர் இழப்பு விபத்து | 1,242 | 1,269 | 1,024 |
| இறந்தவர்களின் எண்ணிக்கை | 1,488 | 1,446 | 1,151 |



## 8. பயணிகளுக்கான வசதிகள்

சென்னையிலும், இதர முக்கிய நகரங்களிலுள்ள பல பேருந்து நிறுத்தங்களிலும், பேருந்து நிலையங்களிலும் இரவு நேரப் பயணிகளின் பாதுகாப்புக் கருதி மின்னொளி விளம்பரப் பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன. இரண்டு சக்கர வாகனங்களை பேருந்து நிலையங்களில் நிறுத்தி, பேருந்துப் பயணத்தைத் தொடர்வதற்கு இயலும் வகையில், சில பேருந்து நிலையங்களில் போதுமான இடங்களை மாநகரப் போக்குவரத்துக் கழகம் ஒதுக்கியுள்ளது. சென்னையிலிருந்து புறநகர், வெகுதூரப் பேருந்துகள் இயக்கப்படுதல், புதிதாக கோயம்பேட்டில் அமைக்கப்பட்ட சென்னைப் புறநகர்ப் பேருந்து நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, பயணிகளின் நலன் கருதி, புதிய பேருந்து நிலையத்தை சென்னையிலுள்ள அனைத்துப் பகுதிகளுடன் இணைக்கும் வகையில், பல புதிய வழித்தடங்கள் தொடங்கப்பட்டு, பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, இதுவரை சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தைச் சுற்றி போக்குவரத்துக்கு இடையூறாக சாலைகளில் நிறுத்தப்பட்டிருந்த மாநகரப் பேருந்துகள் அனைத்தும், பழைய வெளியூர் மற்றும் மாநில விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையங்களுக்குள் நிறுத்தப்பட்டு பயணிகளின் பாதுகாப்பும், நலனும் மேம்படுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் மிகுந்த அளவு குறைக்கப்பட்டுள்ளது.

## 9. பயணச் சலுகைகள்

தமிழ்நாட்டில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்ய பின்வரும் தரப்பினருக்குப் பயணச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன:

1. நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள், முன்னாள் சட்டப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்கள்.
2. மாணவர்கள்
3. அரசினால் தெரிவு செய்யப்பட்ட பத்திரிகை நிருபர்கள்
4. மத்திய/மாநில ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் எல்லை/மொழிப் போராட்ட வீரர்கள், விடுதலைப் போராட்ட வீரர்களின் விதவை மனைவியர் மற்றும் வாரிசுதாரர்கள், தமிழ் மொழியினைக் காக்கும்பொருட்டு மொழிப் போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக அரசிடமிருந்து மொழிக் காவலர் நிதி உதவி பெறுபவர்களின் மனைவி அல்லது கணவர் மற்றும் வயதடையாத வாரிசுதாரர்கள்.

[2005 மார்ச் 29

5. புற்று நோயாளிகள், உடல் ஊனமுற்றோர், காது கேளாதோர் மற்றும் பார்வையற்றவர்கள், மன வளர்ச்சி குன்றியவர்கள் மற்றும் வலிப்பு நோயாளிகள்

6. நாடகக் கலைஞர்கள்.

**9.1. மாணவர் பயணச் சலுகை**

அனைத்து மாணவர்களுக்கும் பயனளிக்கும் நோக்குடனும், அனைவருக்கும் கல்வி என்ற திட்டத்திற்கு உண்மையான பொருள் கொடுக்கும் நோக்குடனும், 2004 ஜூன் மாதம் முதல் தொடங்கும் கல்வியாண்டு முதல், முதல் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை தனியார் பள்ளிகள் உள்பட அனைத்துப் பள்ளிகளிலும் பயின்று வரும் மாணவர், மாணவியர்கள் அனைவருக்கும் அவர்கள் வீட்டிலிருந்து பள்ளிக்கும், பள்ளியிலிருந்து வீட்டிற்கும் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய இலவசப் பேருந்துப் பயணச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன. இலவசப் பேருந்துப் பயணச் சீட்டுகள், எல்லா விடுமுறை நாட்களும் உட்பட அனைத்து நாட்களுக்கும் செல்லுபடியாகும். இதேபோன்று, தனியார் கல்லூரிகள் உட்பட அனைத்துக் கல்லூரிகளிலும் பயிலும் எல்லா மாணவர்களுக்கும் வீட்டிலிருந்து கல்லூரிக்கும், தொழில்நுட்பப் பயிலகம், தொழிற்பயிற்சி நிலையம், தனியார் கலைக் கல்லூரிக்கும், பின் அவ்விடத்திலிருந்து வீட்டிற்கும், போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்ய 50% சலுகைக் கட்டண பேருந்துச் சீட்டுகள் 2004ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1 முதல் வழங்கப்படுகின்றன. இந்தச் சலுகை விடுமுறை நாட்கள் உட்பட எல்லா நாட்களுக்கும் பொருந்தும். மேலும், சென்னை மாநகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் கல்லூரி மாணவர்களுக்கு, அவர்கள் நூலகத்திற்குச் சென்று பின் வீட்டிற்குப் பயணிக்க 60 மாற்று அனுமதிச் சீட்டுகள் வரை வழங்கப்படுகின்றன.

மாணவர் பயணச் சலுகையினால் 2004–2005 ஆம் ஆண்டில் சுமார் 24 இலட்சம் மாணவர்கள் பயன் பெற்றனர். இத்திட்டத்தின்கீழ் போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசு அளிக்கவேண்டிய உதவித் தொகை ரூ.270 கோடியாகும். மாணவர்களிடமிருந்து போக்குவரத்துக் கழகங்கள் வசூலிக்கும் தொகை ரூ.17 கோடியாகும். போக்குவரத்துக் கழகங்கள் சலுகைக் கட்டணமாக வசூலிக்கும் தொகை மற்றும் அரசு வழங்கும் இழப்பீடு போக, மீதமுள்ள சலுகைக் கட்டணச் செலவுத் தொகையினை அக்கழகங்களே சமுதாயச் சேவையாக ஏற்றுக் கொள்கின்றன.



2005 மார்ச் 29]

**10. பயணிகளுக்குச் சலுகைகள்**

பேருந்துகளில் பயணம் செய்யும் பொதுப் பயணிகளின் நலன் கருதி, மாதாந்திரப் பயண அட்டைகள் வழங்கப்படுகின்றன. இதற்குப் பெருநகர் மற்றும் நகரப் பேருந்துகளில் மாதத்தின் எல்லா நாட்களிலும், இருப்பிடத்திலிருந்து செல்லுமிடத்திற்குச் சென்று வர குறிப்பிட்ட நிறுத்தத்தில் நிறுத்தும் பேருந்துகளில் 40 நடைகளுக்குரிய கட்டண விகிதம் மாதாந்திரக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

**10.1. விருப்பம்போல பயணம் செய்யும் கட்டணச் சீட்டுகள் (மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் மட்டும்)**

கீழ்க்கண்ட கட்டண விகிதத்தில் பயணிகள் தங்கள் விருப்பம்போல் மாநகரத்தில் எங்கு வேண்டுமானாலும் பயணச் சீட்டில் அச்சிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டுப் பயணம் செய்யலாம்:-

1) ஒரு நாள் பயணச் சீட்டு – ரூ. 30
2) வாராந்திரப் பயணச் சீட்டு – ரூ. 160
3) மாதாந்திரப் பயணச் சீட்டு – ரூ. 600

**10.2. குழுவினருக்கு முன் பதிவுக் கட்டணச் சலுகை**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் 8 நபர்கள் மற்றும் அதற்கு மேலும் கொண்ட குழுவினர் முன் பதிவு செய்யும்போது பயணக் கட்டணத்தில் 10 சதவிகிதம் சலுகை அளிக்கப்படுகிறது.

**10.3. மூத்த குடிமக்களுக்குப் பயணச் சலுகை**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் 60 வயது நிரம்பியவர்கள் பயணம் செய்ய, முன் பதிவு செய்யும்போது பயணக் கட்டணத்தில் 10 சதவிகிதம் சலுகை அளிக்கப்படுகிறது.

**11. தொழிலாளர் நலத் திட்டங்கள்**

போக்குவரத்துக் கழகங்கள், அதன் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் நலம் பேண, கீழ்க்கண்ட நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன:

1. பணி அடிப்படையிலான சிறப்பு சம்பள உயர்வு
2. தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு இலவசப் பயண அனுமதிச் சீட்டு வழங்குதல்

[2005 மார்ச் 29

3. சலுகைக் கட்டண சிற்றுண்டி வசதிகள்
4. கல்விப் படிகள்
5. ஊதியம் சார்ந்த படிகள்
6. வழக்குக் கட்டணம் ஈடு செய்தல்
7. சீருடைகள்
8. குடும்ப நல நிதி
9. திருமணக் கடன்
10. திருப்பான் படி (Steering Allowance)
11. விருப்ப ஓய்வூதியத் திட்டம்
12. விடுப்புப் பயன்கள்
13. விடுமுறை விடுதி
14. சிறப்பு நல நிதித் திட்டம்
15. ஊழியர்களின் பிள்ளைகளுக்காக மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி மற்றும் தொழில்நுட்பப் பயிலகங்கள்
16. அரசுப் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்
17. தொழிலாளர் ஓய்வுக் கால சேம நல நிதித் திட்டம்
18. இறுதிச் சடங்குச் செலவுகள்

**12. பேருந்து இயக்கத்தினைப் படிப்படியாகத் தாராளமயமாக்குதல்:**

2002–2003 ஆம் ஆண்டில் சில குறிப்பிட்ட தடப் பேருந்துகள் மற்றும் இயக்கம் படிப்படியாகத் தாராளமயமாக்கப்படும் என்று அரசு கொள்கை முடிவு அறிவிக்கப்பட்டது.

தாராளமயமாக்குவதற்குரிய நடைமுறைகளைக் கண்டறிய அமைக்கப்பட்ட உயர் மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களிடமிருந்து தனியார் உரிமையாளர்களுக்குத் திறந்த ஒப்பந்தப்புள்ளிகளின் அடிப்படையில் மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள உரிமங்கள், தேசியமயமாக்கப்படும் பகுதித் திட்டத்திலிருந்து தவிர்க்கப்படும் வகையில் பகுதித் திட்டத்தை



2005 மார்ச் 29]

மாற்றியமைக்க பகுதித் திட்டத்தின் திருத்தப்பட்ட வரைவு அறிவிக்கை 12–11–2002 ஆம் நாளிட்ட அரசிதழில் வெளியிடப்பட்டது. சிலர் இந்த வரைவு அறிவிக்கையை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனுக்கள் தாக்கல் செய்து உள்ளனர். அவை நிலுவையில் உள்ளன. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்குப் பிறகு உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**12.1. சிக்கன நடவடிக்கைகள்**

நிர்வாகச் செலவைக் கட்டுப்படுத்தும்பொருட்டு போக்குவரத்துக் கழகங்களால் பல்வேறு சிக்கன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1. புதிதாகப் பணியாளர்களைப் பணியில் அமர்த்துவது (ஓய்வுபெற்ற பணியாளர்கள் இடத்திற்கு பணியாளர் அமர்த்துவது உட்பட) நிறுத்தப்பட்டுள்ளது.
2. புதிதாகப் பணியிடங்களை உருவாக்குவது எல்லாப் பிரிவுகளிலும் நிறுத்தப்பட்டுள்ளது.

**12.2. பேருந்து இயக்கச் சாதனை**

அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை 15,320 மற்றும் மாற்றுப் பேருந்துகள் எண்ணிக்கை 1,453 ஆகும். 2004–2005 (ஜனவரி முடிய) ஆண்டு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் மொத்த இயக்க தூரம் 198.40 கோடி கி.மீ. ஆகும். முந்தைய ஆண்டுடன் இதனை ஒப்பிடுகையில் 3.72 கோடி கி.மீ. அதிகம் இயங்கியுள்ளது. 2003–2004-ல் 101.74 சதவிகிதமாக இருந்த மொத்த கி.மீ. செயல்பாட்டுத் திறன், 2004–2005-ல் (ஜனவரி முடிய) 102.49 சதவிகிதமாக உயர்ந்தது.

**12.3. பேருந்து ஒன்றிற்கான பணியாளர் விகிதத்தில் திருத்தம்**

பேருந்து ஒன்றிற்கான பணியாளர் குறித்த நிலை விகிதம் 7.50-லிருந்து 6.50 ஆகக் குறைக்கப்பட்டது. 31–1–2005 ஆம் நாளன்று பேருந்துப் பணியாளர் விகிதம் 6.88 ஆக உள்ளது.

**12.4. மக்கள் நீதிமன்றம்**

விபத்து இழப்பீட்டுச் செலவினைக் கட்டுப்படுத்தவும், விரைவாக இழப்பீடு வழங்கவும் லோக் அதாலத் முறையில் இரு தரப்பினரும் சம்மதித்து இழப்பீட்டுத் தொகை வழங்கும் முறை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இம்முறையின் காரணமாக அனைத்துப் போக்குவரத்துக்

கழகங்களுக்கும் 31-01-2005 வரையில் ரூ.3.75 கோடி செலவினம் குறைந்துள்ளது.

### 12.5. கடல் கொந்தளிப்பால் (சுனாமி) பாதிக்கப்பட்ட மக்களுக்கு போக்குவரத்துத் துறையின்கீழ் இயங்கும் கழகங்கள், நிறுவனங்கள் மற்றும் பணியாளர்கள் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கிய நன்கொடை

அண்மையில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பு காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு உடனடியாக மதிப்பளித்து, தமிழக அரசின் பல்வேறு போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், சாலைப் போக்குவரத்து நிறுவனம் மற்றும் பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழுமம் ஆகியவற்றில் பணிபுரிகின்ற பணியாளர்கள் தங்களது ஒரு நாள் ஊதியத் தொகையான மொத்தம் ரூ.2,81,57,000/– (ரூபாய் இரண்டு கோடியே எண்பத்தியொரு இலட்சத்து ஐம்பத்தியேழாயிரம் மட்டும்) நன்கொடையாக 31-12-2004 அன்றே மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்கியுள்ளனர். இதைத் தவிர, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் தனது பங்காக ரூபாய் ஒரு கோடியும், கும்பகோணம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் ரூபாய் ஒரு கோடியும், சேலம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் ரூபாய் ஐம்பது இலட்சத்தையும் தங்களது நிறுவனங்களின் பங்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நன்கொடையாக வழங்கியுள்ளன. நன்கொடை விவரம் பின்வருமாறு:

**(அ) பணியாளர்களின் ஒரு நாள் ஊதியம்**

(ரூபாயில்)

| | |
|---|---|
| மாநகரப் போக்குவரத்துக் கழகம், சென்னை. | 44,55,000 |
| அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், சென்னை. | 16,45,000 |
| தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர். | 41,00,000 |
| தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம். | 25,49,000 |
| தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், மதுரை. | 61,86,000 |
| தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம். | 42,47,000 |
| தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கும்பகோணம். | 46,73,000 |
| தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், சென்னை. | 20,000 |
| சாலைப் போக்குவரத்து நிறுவனம், சென்னை. | 2,75,000 |
| பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு, சென்னை. | 7,000 |
| மொத்தம் | **2,81,57,000** |



**(ஆ) நிறுவனங்களின் நன்கொடை**

| | |
|---|---|
| தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், சென்னை. | 1,00,00,000 |
| தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கும்பகோணம். | 1,00,00,000 |
| தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம். | 50,00,000 |
| மொத்தம் | **2,50,00,000** |
| (அ) +(ஆ) = மொத்தம் | **5,31,57,000** |

இத்தொகையான ரூ.5,31,57,000/- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் 4-1-2005, அதாவது சுனாமியால் பாதிக்கப்பட்ட 9 ஆம் நாள் அன்றே அளிக்கப்பட்டது.

### 12.6. ஆழ்கடல் பேரலைப் பேரழிவு – தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் மீட்பு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுச் செயல்பாடுகள்

26-12-2004 அன்று, ஆழ்கடல் பேரலையினால் ஏற்பட்ட சீர்குலைவினை அறிந்ததும், இவ்வியற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட

[2005 மார்ச் 29

கடலோரப் பகுதிவாழ் மக்கள், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறைக் கண்காணிப்பாளர்களால், தேர்வு செய்யப்பட்ட பாதுகாப்பான இடங்களுக்கு உடனடியாக அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மூலம் கொண்டு செல்லப்பட்டனர். மேலும், பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருந்த முகாம்களைப் போக்குவரத்துக் கழக அதிகாரிகள் நேரிடையாகப் பார்வையிட்டு, அவர்களின் தேவையறிந்து, அம்முகாமிலிருந்து மருத்துவமனைக்கும், அவர்களது கடலோர கிராமக் குடியிருப்புகளுக்கும் சென்று வர, உரிய போக்குவரத்து வசதிகள் செய்து தரப்பட்டன. மேலும், நிவாரண உதவிப் பொருட்கள் அரசுப் பேருந்துகளில் இலவசமாகக் கொண்டு செல்லப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்கள் உள்ளூர்ப் பேருந்துகளில் இலவசமாகப் பயணிக்கவும் அனுமதிக்கப்பட்டனர்.

ஆழ்கடல் பேரலையால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு சென்றதைத் தவிர, 29-12-2004 முதல் 9-1-2005 வரையிலான காலத்தில், அந்தமான் தீவிலிருந்து இப்பாதிப்பினால் தமிழகம் வந்தவர்கள் அவர்களது சொந்த இருப்பிடங்களுக்கு அரசுப் பேருந்துகளில் இலவசமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

## 13. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் 1975 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் துவக்கப்பட்டு, தமிழகத்தில் உள்ள அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்குப் பேருந்து அடிச்சட்டங்கள் வாங்குதல், அதன்மீது கூண்டு கட்டுதல், பணிமனைகள் நிறுவுதல் மற்றும் நடைமுறைச் செலவுகளுக்கு நீண்ட கால நிதி உதவியைப் பொது மக்களிடமிருந்து வைப்பீடுகள் பெறுவதன்மூலம் பூர்த்தி செய்து வருகின்றது. இந்த நிறுவனம் இந்திய ரிசர்வ் வங்கியிடம் வங்கியல்லாத நிதி நிறுவனமாகப் பதிவு செய்து தவணைக் கொள்முதல் நிறுவனமாகப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது.

### 2) நிதிச் செயல்பாடு

போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் தொடங்கப்பட்ட 1975 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டிலும் தொடர்ந்து ஆதாயம் ஈட்டி வருகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் ஈட்டிய ஆதாயம் பின்வருமாறு:–



2005 மார்ச் 29]

(ரூபாய் இலட்சங்களில்)

| ஆண்டு | வட்டித் தள்ளுபடிக்கு முந்தைய ஆதாயம் | வட்டித் தள்ளுபடி செய்தது | வட்டித் தள்ளுபடிக்குப் பின்பும் ஆனால் வருமான வரிக்கு முன்பும் ஆதாயம் | வருமான வரி | வருமான வரிக்குப் பிந்தைய ஆதாயம் |
|---|---|---|---|---|---|
| 2000–2001 | 1821.38 | – | 1821.38 | 800.00 | 1021.38 |
| 2001–2002 | 3408.40 | 2223.00 | 1185.40 | 490.00 | 695.40 |
| 2002–2003 | *2576.62 | 1781.00 | 795.62 | 255.82 | 539.80 |
| 2003–2004 | 2897.42 | 2400.00 | 497.42 | 200.72 | 296.70 |
| 2004–2005 ஜனவரி 2005 வரை (தணிக்கைக்கு உட்பட்டது) | @916.76 | – | 916.76 | 327.28 | 589.48 |

*தற்போதைய கடன் நிலுவைகள் அனைத்தும் மறு சீரமைப்பு செய்யப்பட்டபோது கடன்களின் வட்டி வீதங்கள் 1–4–2002 முதல் குறைக்கப்பட்டதாலும், காலங்கடந்த செலுத்தாத வட்டிமீது வட்டியும் அபராத வட்டியும் வசூலிப்பது கைவிடப்பட்ட காரணத்தாலும் இத்தொகை மாறியுள்ளது.

@ 2004–05 ஆம் ஆண்டு (ஜனவரி 2005 வரை) இலாபம் குறைந்ததற்கான காரணங்கள்:

1. போக்குவரத்துக் கழகங்களை ஒருங்கிணைத்த பின், புதிய மற்றும் பழைய கடன்களுக்கான வட்டி வீதங்கள் 1–4–2004 முதல் குறைக்கப்பட்டன.
2. ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து பெறப்பட்ட நீண்ட காலக் கடனுக்கான வட்டி வீதம் 11 சதவிகிதத்திலிருந்து 8 சதவிகிதமாக குறைக்கப்பட ஒப்புக்கொள்ளப்பட்டதால் ரூ. 4.37 கோடி வட்டிக் குறைப்புக் கட்டணமாகச் செலுத்தப்பட்டது.

[2005 மார்ச் 29

31-1-2005 ஆம் நாளன்று இந்நிறுவனத்திலுள்ள வைப்புத் தொகை ரூ.680.67 கோடியாகும். தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 31-01-2005 வரை ரூ.5,468.34 கோடி நிதி உதவி அளித்திருக்கிறது. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் உதவியுடன் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் இதுநாள் வரை 33,846 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டுள்ளன.

**14. பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு**

பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ரூ 5 இலட்சம் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்துடனும், ரூ.2 இலட்சம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்துடனும் தமிழக அரசின் வரையறுக்கப்பட்ட நிறுவனமாகத் தொடங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, 2000 ஆம் ஆண்டு மே மாதம் இந்நிறுவனத்திற்காக செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ 10 இலட்சமாகவும், அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ 50 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இந்நிறுவனம் தற்போது அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ஏழு இயக்குநர்கள் கொண்ட குழுவின் மேற்பார்வையில் இயங்குகிறது. இப்பணிக் குழு முழுநேரத் தொழில் முறை நிர்வாக இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு, கணினி மென்பொருள் தயாரித்தல், நிர்வாகச் சேவை, போக்குவரத்துப் பணி, தகவல் மற்றும் தொழில்நுட்பவியல் ஆகிய துறையிலும் ஆலோசனை வழங்கும் பணிகளை மேற்கொண்டு செயல்படுகிறது. இந்நிறுவனம் அந்தந்த துறைகளில் தகுதியும், அனுபவமும் கொண்ட சிறந்த ஆலோசகர்களின் ஆதரவோடு இயங்கி வருகிறது. மேலும் இந்நிறுவனம் சிறந்த தேர்ச்சி பெற்ற வல்லுநர்களின் ஆலோசனையின் அடிப்படையிலும், தனது சகோதர சாலைப் போக்குவரத்து நிறுவனம் மற்றும் மாநில நெடுஞ்சாலைத் துறையில் பணிபுரியும் பணியாளர்களிடமிருந்து தனது ஆலோசனைப் பணித்தன்மைக்கேற்ப தேர்ந்தெடுத்துக் கொள்வதோடு, அண்ணா பல்கலைக்கழகத்திலுள்ள பேராசிரியர்கள்/விரிவுரையாளர்களின் சேவையையும் பயன்படுத்தி செயல்பட்டு வருகிறது. இதுமட்டுமின்றி அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற அனுபவம் மிக்க அலுவலர்களையும் தேவைக்கேற்றபடி இந்நிறுவனம் ஈடுபடுத்திக் கொள்கிறது. பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு புதிய பணிகளைப் பெறுவதற்கான முன் அனுபவமும், மற்றும் திறமையும் வாய்ந்த ஆலோசனை நிறுவனங்களுடன் கூட்டு முயற்சியாகப் பணிகளை மேற்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்று வருகிறது.



2005 மார்ச் 29]

போட்டிகளுக்கிடையேயும் பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழு தனது தொடக்க காலமான 1984 ஆம் ஆண்டு முதல் படிப்படியாக முன்னேறி வந்துள்ளது. கணினிமயமாக்குதல் மற்றும் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்கள், நிர்வாக சேவை போன்ற துறைகளில் பணிகளை விரிவாக்கும் திட்டங்கள் பெற நல்ல வாய்ப்பு உள்ளது.

பல்வேறு தடைகளுக்கிடையேயும் இந்நிறுவனத்தின் செயலை விரிவாக்கவும், வருவாயை அதிகரிக்கவும், மிகப் பெரிய அளவில் பணிகளைப் பெறுவதற்கான ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விலைகள் உயர்வான ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்பதற்கு ஏதுவாக பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக் குழுவிற்குச் செலுத்தப்பட்டுள்ள பங்கு மூலதனத்தை அதிகரிக்க வேண்டிய அவசியம் உள்ளது.

**15. சாலைப் போக்குவரத்து நிறுவனம்**

சாலைப் போக்குவரத்து நிறுவனமானது சங்கங்களின் பதிவுச் சட்டம், 1860-ன்கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். இந்நிறுவனம் 2004-2005 ஆண்டில் தனது 29-வது ஆண்டு பணியில் அடியெடுத்து வைத்து தொடர்ந்து பணி செய்து வருகின்றது. மேலும் சாலைப் போக்குவரத்து தொடர்புள்ளவற்றைப் பற்றி ஆய்வு மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகளையும், அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் கொள்முதல் செய்யப்படும் பொருட்களின் தரக் கட்டுப்பாட்டிற்காகப் பரிசோதித்து மதிப்பீட்டறிக்கை தருவது மற்றும் பலதரப்பட்ட பயிற்சி அளிக்கப்படுவதில் மிகப் பெரிய அளவில் இந்நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

சாலை மற்றும் போக்குவரத்து பொறியியல் கல்லூரி எனும் தானியங்கி ஆராய்ச்சி சார்ந்த பொறியியல் கல்லூரி 1984 ஆம் ஆண்டில் ஈரோட்டில் துவக்கப்பட்டது. இதுவரை 3,845 பொறியாளர்களும் (பி.இ), 215 கணினிப் பயன்பாட்டியலில் முதுகலைப் பட்டம் (எம்.சி.ஏ) பெற்றவர்களும் இந்தப் பொறியியல் கல்லூரியிலிருந்து பட்டம் பெற்றுள்ளனர். இக்கல்லூரியில் இந்த வருடம் கட்டடவியல் மற்றும் இயந்திரவியல் பிரிவுகளில் ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் (Ph.D) வழங்க அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. மேலும் இவ்வருடம் வெப்பவியல் பிரிவில் முதுகலைப் பட்டப் படிப்பு தொடங்கப்பட்டுள்ளது. இக்கல்லூரியில் நடத்தப்படும் கட்டடவியல், இயந்திரவியல் மற்றும் ஊர்தியியல் துறைகளுக்கு தரச் சான்று (Accreditation) பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 29

1986-ல் தீட்டப்பட்ட திட்டத்தின்படி பெருந்துறை மருத்துவக் கல்லூரி துவக்கப்பட்டு, 1992-93 ஆம் கல்வியாண்டிலிருந்து பெருந்துறையில் சொந்த வளாகத்தில் செயல்பட்டு வருகின்றது. இதுவரை இக்கல்லூரி 705 மருத்துவர்களை உருவாக்கியுள்ளது. இது தவிர, சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின்கீழ் மூன்று தொழில்நுட்பக் கல்லூரிகள், குரோம்பேட்டை (சென்னை), பர்கூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 1992-93 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகின்றன.

பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் பயிலகங்களில் 50% இடங்களைத் தமிழக அரசும், மீதமுள்ள இடங்களை அனைத்துப் போக்குவரத்துக் கழக பணியாளர்களின் குழந்தைகளுக்காக ஒதுக்கப்பட்டு, தகுதியின் அடிப்படையில் சாலைப் போக்குவரத்து நிறுவனத்தினால் கீழ்க்கண்ட அட்டவணையின்படி சேர்க்கப்படுகின்றனர்:

| பிரிவுகள் | மொத்த இடங்கள் | நிர்வாக ஒதுக்கீட்டு இடங்கள் | அரசு ஒதுக்கீட்டு இடங்கள் |
|---|---|---|---|
| பொறியியல் கல்லூரி | | | |
| (அ) இளங்கலை பொறியியல் பட்டப் பிரிவு | 360 | 180 | 180 |
| (ஆ) முதுகலைப் பட்டம் 1. வடிவமைப்பியல் 2. வெப்பவியல் | 36 | 10 | 26 |
| (இ) கணினிப் பயன்பாடு(MCA) | 60 | 30 | 30 |
| தொழில்நுட்பப் பயிலகங்கள் | 500 | 250 | 250 |

பெருந்துறை மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையில் மொத்தமுள்ள 60 இடங்களில் 36 இடங்களைத் தமிழக அரசும், மீதமுள்ள 24 இடங்கள் அரசு போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு தகுதியின் அடிப்படையிலும் ஒதுக்கப்படுகிறது.



2005 மார்ச் 29]

அனைத்துப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள் வழங்கிய வட்டியில்லாக் கடனை வைப்புத் தொகையில் வைத்து அதன்மூலம் கிடைக்கும் வட்டி வருமானத்தில் அனைத்துக் கல்வி நிறுவனங்களும் இயங்கி வருகின்றன. மேலும் மேற்கண்ட அனைத்து கல்லூரிகளுக்கும் தேவையான மூலதனச் செலவு, அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிடமிருந்து பெறப்படும் சிறப்பு பங்குத் தொகையைக் (Special Contribution) கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சாலைப் போக்குவரத்து நிறுவனம், கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிக்காக கும்மிடிப்பூண்டியில் ஒன்றும், திருச்சியில் ஒன்றும், மற்றும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுடன் இணைந்து மதுரை, சேலம் மற்றும் பொள்ளாச்சி ஆகிய இடங்களில் உள்ள 3 வட்டாரப் பயிற்சி மையங்கள்மூலமாகவும் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சியை அளித்து வருகிறது. 2003-2004 ஆண்டு வரை 38,295 மாணவர்களுக்கு ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2004-2005 வருடத்தில் 1,027 மாணவர்கள் ஓட்டுநர் பயிற்சி பெற்றுள்ளனர். மேலும் இரு சக்கர வாகன ஓட்டுநர் மற்றும் சிறு வாகன ஓட்டுநர் பயிற்சி மையம் ஒன்று சென்னை, தரமணியிலும், மற்றும் திருச்சிராப்பள்ளியில் ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. மேலும் புதியதாக இந்த வருடம் திருநெல்வேலியில் வாகன ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியை ஆரம்பிக்க 10.17 ஏக்கர் நிலம் ரூ.19.92 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளது.

அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் தேவையான முக்கியப் பொருட்களாகிய பேருந்து அடிச்சட்டங்கள், பயணச் சீட்டு அச்சிடல், டயர் புதுப்பிக்கத் தேவையான அடிப்படைப் பொருட்கள், பிஸ்டன் அசெம்பிளி, லூப்ரிகன்ட்ஸ் ஆகியவற்றின் விலை மற்றும் ஒப்பந்த விதிகளை முடிவு செய்ய, சாலைப் போக்குவரத்து நிறுவனம் முகமை நிறுவனமாகச் செயல்படுகிறது.

சென்ற ஆண்டு 29-7-2004 அன்று போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையின்போது அறிவித்ததற்கிணங்க, சாலைப் போக்குவரத்து நிறுவன இயக்குநருக்கு, கீழ்க்கண்ட பணிகளை நடைமுறைப்படுத்த அரசு அனுமதி அளித்து ஆணையிட்டுள்ளது.

(அ) ஈரோடு சாலைப் போக்குவரத்து நிறுவன பொறியியல் கல்லூரியில் ரூ.20 இலட்சம் செலவில் கலந்தாய்வுக் கூடம் மற்றும் விருந்தினர் மாளிகை கட்டுவது.

(ஆ) ஈரோடு சாலைப் போக்குவரத்து நிறுவன பொறியியல் கல்லூரியில் ரூ.200 இலட்சம் செலவில் பார்வையாளர் அரங்கம் கட்டுவது.

[2005 மார்ச் 29

**16. தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை, சென்னை**

தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை அரசுத் துறை வாகனங்களின் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு ஆகிய பணிகளை மேற்கொண்டு வரும் ஒரு சேவை புரியும் துறையாகும். அவ்வாறு இத்துறையின் பராமரிப்புக் கட்டுப்பாட்டில் வரும் அரசுத் துறை வாகனங்களின் எண்ணிக்கை சுமார் 10,000 ஆகும். இத்துறையில் இப்பணிக்கென மாவட்டத் தலைநகரங்களில் 20 தானியங்கிப் பணிமனைகளும், சென்னை, தலைமைச் செயலக வளாகத்தில் ஒரு சேவை நிலையமும் செயல்பட்டு வருகிறது. மேலும் இச்செயல்பாடுகளை மேற்பார்வையிட மூன்று மண்டலத் துணை இயக்ககங்கள் சென்னை, சேலம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

அரசுத் துறை வாகனங்களுக்கு எரிபொருள் வழங்கும்பொருட்டு சென்னையில் இரண்டு எரிபொருள் வழங்கு நிலையங்கள் (ஒன்று நந்தனம், பிறிதொன்று சென்னை, தலைமைச் செயலக வளாகத்தில்) மற்றும் தஞ்சாவூர், மதுரை, சேலம், கோவை, திருச்சி, தருமபுரி, கடலூர், நாகர்கோவில் ஆகிய இடங்களில் ஒரு எரிபொருள் வழங்கு நிலையம் என மொத்தம் பத்து எரிபொருள் நிலையங்கள் இயங்கி வருகின்றன.

**17. இரயில்வே மற்றும் அஞ்சல் துறை ஆகியவற்றின் ஒருங்கிணைக்கும் முகமை.**

மத்திய அரசுத் துறைகளான இரயில்வே, அஞ்சல், தொலைத் தொடர்பு மற்றும் விமானப் போக்குவரத்து ஆகிய துறைகள் தமிழ்நாட்டில் செயல்படுத்தும் திட்டங்களை மாநில அரசின் ஒருங்கிணைக்கும் முகமையாகப் போக்குவரத்துத் துறை செயல்படுகிறது. அத்துறைகள் தமிழகத்தில் செயல்படுத்தும் திட்டங்களுக்குத் தேவையான நிலங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர், நில நிர்வாக ஆணையர் ஆகியோருடன் ஒருங்கிணைந்து கையகப்படுத்தப்பட்டு, அத்துறைகளுக்கு வழங்கப்பட்டு திட்டங்கள் செயல்பட உறுதுணையாகப் போக்குவரத்துத் துறை இயங்குகின்றது.

தமிழ்நாட்டில் ஏற்கெனவே இரயில்வே துறையால் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் தவிர, கீழ்க்குறிப்பிட்ட திட்டங்கள், திட்டச் செலவுகளில் 50 : 50 என்ற விகிதத்தில் தமிழக அரசு தனது பங்கினை ஏற்று செயல்படுத்தப்படுகின்றன.



2005 மார்ச் 29]

| இரயில் பாதை மாற்றம் | திட்டத்திற்கான தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|
| கடலூர்–சேலம் (வழி) விருத்தாச்சலம் | 43.00 (கடலூர்–விருத்தாச்சலம் பிரிவில் டிசம்பர் 2003 முதல் போக்குவரத்துக்காக திறக்கப்பட்டது. விருத்தாச்சலம்–சேலம் பிரிவில் வேலைகள் நடைபெற்று வருகின்றன). |
| **புதிய வழித்தடம்:** | |
| அதிவேகப் போக்குவரத்து வசதி | |
| (சென்னை கடற்கரை–வேளச்சேரி) | சென்னை கடற்கரை–திருவான்மியூர் பிரிவில் பயணிகள் போக்குவரத்து ஏற்கெனவே நடைபெற்று வருகிறது. தற்பொழுது திருவான்மியூர்-வேளச்சேரி பிரிவில் வேலைகள் நடைபெற்று வருகின்றன. |
| கரூர்–சேலம் (85 கி.மீ.) | மொத்தப் பணியில் 38% பணிகள் முடிவடைந்துள்ளன. மேலும் நிலங்களைச் சீரமைத்தல் மற்றும் சிறு பாலங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 58 கிராமங்களில் உள்ள 343.78 ஹெக்டேர் நிலங்களில் 333.845 ஹெக்டேர் நிலங்கள் இத் திட்டத்திற்குக் கையகப்படுத்தப் பட்டுள்ளன. |

சென்னை சென்ட்ரல்–எழும்பூர் இரயில் நிலையங்களை உயர்த்தப்பட்ட இருப்புப் பாதைமூலம் இணைக்க இரயில்வே துறை முடிவெடுத்துள்ளது. இதற்காகும் திட்டச் செலவு ரூ.90.44 கோடியாகும். இத்திட்டத்திற்காக சுமார் 7,300 சதுர மீட்டர் நிலத்தினை இலவசமாக தமிழ்நாடு அரசு அளிப்பது பற்றிய செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது. சென்னை, மாவட்ட வருவாய் அலுவலர் சிறப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

[2005 மார்ச் 29

அதிவேகப் போக்குவரத்து வசதித் திட்டத்தினை தரமணியிலிருந்து மகாபலிபுரத்திற்கு பங்கிங்காம் கால்வாய் வழியாக நீட்டிப்பு செய்ய வேண்டும் என, தமிழக அரசு இரயில்வே அமைச்சகத்திடம் கேட்டுக் கொள்ளவிருக்கிறது. இத்திட்டத்திற்குத் தேவைப்படும் நிலத்தினை இலவசமாக இரயில்வேக்கு வழங்கவும் தமிழக அரசு தயாராக உள்ளது.

தமிழ்நாட்டில் இரயில்வே திட்டங்களுக்காக 2005–2006 ஆண்டிற்கு கீழ்க்கண்டவாறு நிதி இரயில்வே துறையால் ஒதுக்கப்பட்டுள்ளது:

| வரிசை எண் | விவரங்கள் | 2005–2006 ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| | **புதிய பாதைகள்** | |
| 1. | கரூர்–சேலம் | 2.00 |
| | **அகல இரயில்பாதையாக மாற்றுதல்** | |
| 2. | கடலூர்–சேலம் (வழி) விருத்தாச்சலம் | 43.00 |
| 3. | திருச்சி–நாகூர்–காரைக்கால் | 4.79 |
| 4. | தஞ்சாவூர் – விழுப்புரம் | 50.00 |
| 5. | கொல்லம் – திருநெல்வேலி – திருச்செந்தூர் மற்றும் தென்காசி – விருதுநகர் | 31.00 |
| 6. | விழுப்புரம் – காட்பாடி | 10.00 |
| 7. | விழுப்புரம் – பாண்டிச்சேரி | 1.00 |
| 8. | மதுரை – இராமேஸ்வரம் | 25.00 |
| 9. | திருச்சி – மானாமதுரை | 50.00 |
| | **இருவழிப்பாதை அமைத்தல்** | |
| 10. | இருகூர்– கோயம்புத்தூர் | 1.00 |
| 11. | அத்திப்பட்டு–கொருக்குப்பேட்டை | 20.00 |
| 12. | பட்டாபிராம்–திருவள்ளூர்–நான்காவது மற்றும் திருவள்ளூர்-அரக்கோணம்–மூன்றாவது வழிப் பாதை அமைத்தல் | 15.80 |
| 13. | அம்பாத்துறை–கொடை ரோடு | 2.21 |
| 14. | சென்னை கடற்கரை–கொருக்குப்பேட்டை மூன்றாவது வழிப் பாதை அமைத்தல் | 10.00 |
| 15. | மதுரை–திண்டுக்கல் இருவழிப் பாதை அமைத்தல் | 15.00 |
| 16. | சென்னை கடற்கரை–அத்திப்பட்டு நான்காவது பாதை அமைத்தல் | 10.00 |
| | **மாநகர போக்குவரத்துத் திட்டம்** | |
| 17. | திருமயிலை–வேளச்சேரி (திட்டம்–II) | 3.39 |
| 18. | சென்னை கடற்கரை–தாம்பரம்–செங்கல்பட்டு அகல இரயில் பாதையாக மாற்றுதல் | 3.03 |



2005 மார்ச் 29]

திருமயிலை–திருவான்மியூர் பிரிவில் பயணிகள் போக்குவரத்து ஏற்கெனவே தொடங்கப்பட்டுவிட்டது. திருவான்மியூர்–வேளச்சேரி பிரிவில் வேலைகள் நடைபெற்று வருகின்றன. சென்னை கடற்கரை–தாம்பரம் பிரிவில் புறநகர்ப் பகுதியில் அகல இரயில் பாதையாக மாற்றும் பணி முடிவுற்று, 1–11–2004 முதல் போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

**17.1. விமான தள விரிவாக்கம்**

மாநில அரசின் தொடர் முயற்சியின் காரணமாகவும், போக்குவரத்து வளர்ச்சியின் காரணமாகவும், இந்திய விமான நிலைய ஆணையம், கோயம்புத்தூர் விமான நிலையத்தின் ஓடுபாதையை விரிவுபடுத்தவும்,

[2005 மார்ச் 29

ஓடுபாதையில் வழிகாட்டி விளக்கு வசதியை ஏற்படுத்தவும் தக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. இதன்மூலம் ஏர் பஸ், போயிங் வகை பெரிய விமானங்களை இவ்விமான நிலையத்தில் இயக்க முடியும். விமான தளத்தின் ஓடுபாதையை விரிவுபடுத்த 45.96.00 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தும்படி சென்னையிலுள்ள இந்திய விமான நிலைய ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது. நிலத்தினைக் கையகப்படுத்தும் பணிகள் அரசால் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருச்சி விமான நிலையத்தின் ஓடுபாதையை விரிவுபடுத்தவும் மற்றும் வழிகாட்டி விளக்குகள் அமைக்கவும் 19.12.5 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, திருச்சி விமான நிலைய இயக்குநரிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. மதுரை விமான நிலையத்தைப் பன்னாட்டு விமான நிலையமாக மாற்றுவதற்குத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்கென தஞ்சாவூரில் புதிய விமான நிலையம் அமைக்கப்பட வேண்டுமெனவும் இவ்வரசு மைய அரசை அணுகி உள்ளது.

### 17.2. சென்னை விமானப் பறக்கும் குழாம்

சென்னை விமானப் பறக்கும் குழாம் 1930 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, பல ஆண்டுகளாக மாணவ, மாணவியர்களுக்கு விமானப் பறக்கும் பயிற்சி மற்றும் விமானம் பராமரிக்கும் பயிற்சியும் அளிக்கப்பட்டு இக்குழாமில் பயிற்சி பெற்ற பல விமானிகளும், பொறியாளர்களும் விமானப் போக்குவரத்துத் துறையில் தற்போது பணிபுரிந்து வருகின்றனர்.

தமிழக அரசு சென்னை விமானப் பறக்கும் குழாமிற்கு நிர்ணயிக்கப்பட்ட உதவித் தொகையாக ஓர் ஆண்டிற்கு ரூ.3.80 இலட்சமும், விமான எரிபொருள் உதவித் தொகையாக ஓராண்டிற்கு ரூ.3.72 இலட்சமும் வழங்கப்படுகிறது.

### 18. நிறைவுரை

தமிழ்நாடு மாநிலம் முழுமையான பொருளாதார வளத்தையும், செழுமையையும் அடையவேண்டுமெனில், நவீனமான, திறமையான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து வசதிகள் அவசியம் என இத்துறை நம்புகிறது. பல்வேறு கட்டுப்பாடுகள் உள்ள நிலையிலும் மக்களுக்கு மேம்பாடடைந்த போக்குவரத்து வசதிகளை அளிக்கும் முயற்சியில்



2005 மார்ச் 29]

தொய்வின்றி இத்துறை தொடர்ந்து செயல்படுகிறது. 2003-2004 மற்றும் 2004-2005 ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து லாபம் ஈட்டியதன்மூலம், இத்துறையின் திறமையான நிர்வாகம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

## மானியக் கோரிக்கை எண் 46

## போக்குவரத்துத் துறை

## வரவு—செலவுத் திட்ட மதிப்பீடு

## 2005-2006

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | துறைத் தலைமையகம் | வருவாய் | மூலதனம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | தலைமைச் செயலகம் | 244,29,83 | 10 | 244,29,93 |
| 2 | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை | 25,21,73 | 2 | 25,21,75 |
| | மொத்தம் | 269,51,56 | 12 | 269,51,68 |

[2005 மார்ச் 29

**மானியக் கோரிக்கை எண் 46**

**போக்குவரத்துத் துறை**

**வரவு—செலவுத் திட்ட மதிப்பீடு**

**2005—2006**

*(ரூபாய் ஆயிரத்தில்)*

| வ. எண் | துறைத் தலைமையகம் | வருவாய் | மூலதனம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| *1* | தலைமைச் செயலகம் திட்டத்தில் சேராதது | 244,29,83 | – | 244,29,83 |
| | மாநிலத் திட்டம் | – | 10 | 10 |
| *2* | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை திட்டத்தில் சேராதது | 22,49,25 | – | 22,49,25 |
| | மாநிலத் திட்டம் | 2,72,48 | 2 | 2,72,50 |
| | மொத்தம் | 269,51,56 | 12 | 269,51,68 |

226618
சென்னை-600 00

**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 112, Anna Salai, Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Special Commissioner and Commissioner of Stationery and Printing, Chennai-600 002.